உ

கணபதி துணை.

சங்கமருவிய எட்டுத்தொகை நூல்களுள்

ஆறாவதாகிய

கலித்தொகை

(நெய்தற்கலி) Vo = 3

மூலமும்

மதுரையாசிரியர்

பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும்.

இவை

இடையாற்றுமங்கலம்

வைத்தீச்சுவரையரவர்கள் குமாரரும்

சென்னை,

பிரஸிடென்ஸி காலேஜ் Retired தமிழ்ப் பண்டிதருமாகிய

இ. வை. அனந்தராமையரால்,

நன்கு பரிசோதித்து,

தாம் எழுதிய பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும்

ஆசிரியர் வரலாறு, அரும்பத அகராதிகளுடனும்

சென்னை

நோபில் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றன.

பிரஜோத்பத்தி௵ கார்த்திகை௴

ரிஜிஸ்டர்ட் காபிரைட்] 1931 [விலை ரூ. 6—4—0.



கணபதி துணை.

மூன்றாஞ் சம்புடத்தின் முகவுரை.

———:o:———

இந் நூலையும் இப்பதிப்பையும் பற்றிய செய்திகள் பலவும் இதன் முதற் சம்புடத்தின் தலைப்பில் எழுதப்பெற்றுள்ளன.

இம் மூன்றாஞ் சம்புடத்தில், நெய்தற்கலியும் அரும்பத முதலியவற்றின் அகராதியும், நூலாசிரியர் உரையாசிரியர்களின் வரலாறுகளும், முன்னிரண்டு சம்புடங்களிலின்றி இச்சம்புடத்தில் எடுத்துக் காட்டப்பெற்ற நூற்பெயர் முதலியவற்றின் அகராதியும், இப் பதிப்பைப்பற்றிய அபிப்பிராயங்களில் முன் வெளிவாராதவையும் அடங்கியிருக்கின்றன. இச் சம்புடத்தோடு இந்நூல் நிறைவேறிற்று.

இச் சம்புடத்துள்ள நெய்தற்கலியும், இதன் இன்ன பகுதி இன்ன நூலின் இன்ன பகுதியில் இன்னதற்கு மேற்கோளென்பதும் இதன் இன்ன பகுதிக்கு ஒப்புமைப்பகுதி இவையென்பதும் முதலிய குறிப்புக்களோடு, இரண்டாஞ் சம்புடத்தைப்போலவே சொற்களையும் விலங்கு பிறவை மரஞ் செடிகொடிகளையும்பற்றிய பல வகைக் குறிப்புக்களும் சேரப்பெற்றது. இக் குறிப்புக்கள் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுவனவாயிருக்கும்.

அரும்பத முதலியவற்றின் அகராதியில் பழைய செய்திகளை அறிவிக்கவேண்டிப் பல தொடர்மொழிகளும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. சில அரும்பதங்களுக்குப் பொருள்களும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. அவ்வகராதியில் மெய்ப்பாடு என்னுமிடத்து அவற்றின் பெயர்களைமட்டும் ஓர் அகராதிபோகக் குறித்திருக்கிறேன். அதற்குக் காரணம் பொருளதிகாரம் உணர்ந்தவர் சிலரென்பதும், அவருள்ளும் இம் மெய்ப்பாட்டைப்பற்றிய செய்திபைத் தெளிவாக உணர்த்தவல்லவரிலரென்பதும், தாமே பயின்றுணர விரும்புவார்க்கு இது கருவியாயுதவுமென்பதுமாகும். இம் மெய்ப்பாட்டுப் பெயர்களுள், சில பெயர் ஒவ்வொரு மெய்ப்பாட்டுக்குக் காரணமான குறிப்புக்கள் அல்லது பொருள்களின் பெயரென்றும், சிலபெயர் மெய்ப்பாட்டுக்குக் காரணமான பொருட் பெயரோடு சேர்த்தெழுதப்பட்டன வென்றும், சில பெயர் பரியாயப் பெயர்களென்றும், சில பெயர் பிழைபட்டிருக்கக்கூடுமென்றும் தோற்றுகின்றன.

இந் நூல்போல முழுமைக்கும் பண்டை யுரையாசிரியரால் உரையோடு மெய்ப்பாடு குறிக்கப்பெற்ற நூல் திருக்கோவையா ரொன்றுமே. சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், தொல்காப்பிய முதலிய இலக்கணம் இவற்றினுரைகளில் மெய்ப்பாட்டுக் குறிப்புச் சிலவுண்டு. அவற்றாலும் இம் மெய்ப்பாட்டுச் செய்திகள் விளங்குவனவாக இல்லை. தமிழிற் சிறந்த நூல்களைப் பாடமாக்கி அவற்றைச் சிறு பொருட்செலவில் பல வருடமாகக் கற்பித்து வரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலோ, தக்க பொருட்செலவுசெய்து சில வருடமாகக் கற்பித்து வரும் சிதம்பரம் அண்ணாமலைச் சருவகலா சங்கத்திலோ, வேறிடத்திலோ நுண்ணறிவும் உலையா முயற்சியுமுடைய தமிழ்ப்புலவர் போதகாசிரியராயிருந்து பல்லாண்டு உழந்தால் நாளடைவில் விளங்கக்கூடுமென்பதும் அதற்கும் ரஸபாவ முதலியவற்றை நுண்ணிதி னறியும் வடநூலுணர்ச்சியாவது அவற்றை அறிந்தவ ருதவியாவது இன்றியமையாததென்பதும் என் கருத்து.

இம்மூன்றாஞ் சம்புடத்தைப் பதிப்பிப்பதற்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்ற என் வேண்டுகோளை அங்கீகரித்து, சென்னைச் சருவ கலாசங்கத்தார் இந்நூலை நிறைவேற்றி எ௫௦ ரூபாய் பெறும்படி உத்தரவளித்தார்கள். முன்பு பிரஹ்மஸ்ரீ மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள் க௫௦ ரூபாய் அளித்தபோது அத்தொகை இத்தொகையிலுள்ள செய்யுள் (கலித்தொகையிலுள்ள செய்யுள் க௫௦) ஒவ்வொன்றையும் தாம் பாராட்டுவதற்கு அறிகுறியாகத் தோற்றுகிற தென்று குறித்திருந்தேன். இச் சருவகலா சங்கத்தார் உத்தரவிட்ட தொகை, அத்தொகைபோல ஐந்து மடங்கு கொண்டதா யிருத்தலால், ஐந்திணை நெறியளாவிய இக்கலித்தொகைக்கு அத்தொகை போல ஐந்து மடங்கு இணைந்த தொகை அளித்தலே ஏற்ற நெறியாகுமென்று கருதினர் எனக் குறிக்கும்படி இருக்கிறது.

ஆறாந்தொகையீ தாதலினால் ஐயரவர்க ளளித்ததினும்
வீறாம் வண்ணம் நூறாக மேவுந் தொகையில் ஆறுறழ்ந்து
கூறாந்தொகைநூற் றைம்பதொடுங் கூட்டினார்கொல்.

இவ்வுதவியைச் செய்த அவர்கட்கு என் நன்றியறிதலைக் கூறுகிறேன்.

பின்பு சிதம்பரம் அண்ணாமலைச் சருவகலா சங்கத்தாருக்கு ஒரு மனுச் செய்துகொண்டேன். அச்சங்கத்தார் ௩௦௦ ரூபாயை முன்னதாகவே அனுப்பித் தங்களுக்குப் பத்துப் பிரதி போதுமானவை யென்றும் தெரிவித்தார்கள். இது காலத்தாற் செய்த உதவியாய் மகிழ்வித்தது.

திருப்பனந்தாள் ஆதீன கர்த்தர்களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிநாத ஸ்வாமிகளவர்களைப் போய்ப் பார்த்து 'நான் இதனைப் பதிப்பிக்கத் தொடங்கியிருக்கிறேன், நிறைவேறவேண்டும்' என்று சொன்னபோது அவர்கள் ரூ00 ரூபாய் உவந்தளித்து 'இன்னும் அவசியமானபோது முட்டுப்படாவண்ணம் வேண்டிய உதவியைச் செய்வோம்' என்றும் வாக்களித்தார்கள். அஃது எனக்கு இக்காரியத்தை இடையூறின்றி முடித்து விடலாமென்ற இன்பத்தையும் தைரியத்தையும் தந்தது. அவர்கள் தமிழபிமானம் என்னை மகிழ்வித்ததனால் அதனை இம் முகவுரையின் இறுதியில் (பக்கம் அ) 'தமிழ் வளர்க்கு முயற்சி' என்பதில் தெரிவித்திருக்கிறேன். இப்போது பல்கலையும் வளர்க்கக் கருதித் தமிழ் வளர்த்தற்காகச் சென்னைச் சருவகலாசாலைத் தனித் தமிழ்ப் பரீக்ஷையில் ஒவ்வோராண்டிலும் முதன்மையாகத் தேறும் வித்துவானுக்கு ரூ000 ரூபாய் பரிசளிப்பதாக (Fund) மூலதனம் ஏற்படுத்தி இப்போது சிலவருடமாக வழங்கிவரும் வள்ளன்மை உலகம் அறிந்ததே.

இத்தொகை ஒவ்வோராண்டிற் பெறுபவர் ஒவ்வொருவரேயாயினும் இவ்வேற்பாடு ஒவ்வோராண்டிலும் பல மக்களை நன்றாகத் தமிழ் ஞானம் உறுவித்தற்கு ஏதுவாகு மென்பது ஒருதலை. ஸ்ரீ குமர குருபரர் ஈட்டிய செல்வம் தமிழ் வளர்ச்சி செய்யாதிருக்குமா!

இப்போது தமிழ் நாட்டினுள் மிக்க செல்வமுடைய தமிழர்கள் பலரிருப்பினும் அவர்களுள் யாரேனும் தம் பாஷையில் அபிமானம் வைத்து அதனை வளர்த்தற்கு எவ்வகையாகவாவது முன் வந்தார்களா? அவர்கள், 'எமக்குத் தமிழில் அபிமானம் அதிகம்' என்று தம்மைப்பற்றித் தாமே சொல்லிக்கொள்ளுஞ் சொல் பொருளுரையாகுமா? அதனாற் பயன் யாது?

உண்மையில் ஒருவர் தம் பாஷையில் அபிமான முள்ளவராயிருந்தால், தாம் அதனைப்பயின்று அரியபொருளை அறியாதிருப்பாரா? அறியாவிட்டால் அம்மொழிவாணரது தாரதம்மிய மறியச் சக்தியுடையராவாரா? பயில இயலாவிட்டாலும் அதனை வளர்த்தற்கு வேண்டிய முயற்சி செய்யாதிருப்பாரா? அதனை நன்கு அறிந்தவர் பால் அன்பு செய்தலும் அவரைப் பாராட்டுதலும் அவர்க்கு உபகரித்தலுமில்லாதிருப்பாரா?

மற்றைச் செல்வர் பாஷாபிமானமற்ற நிலைமையிலிருக்கும் இக்காலத்தில் பணையாதீன கர்த்தரவர்கள் இப்பரிசிலை ஏற்படுத்தியது மிகவும் கொண்டாடத்தக்க தமிழபிமானச் செய்கையென்பதை யாரே

னும் மறப்பார்களா? தமிழில் உண்மை யன்புள்ள இவ்வுபகார சீலர் இங்ஙனமே உலகத்திற்கு நன்மை புரிந்து கொண்டு நீடூழி வாழ வேண்டு மென்று,

திருப்பனந் தாளுறை செஞ்சடை யப்பர்தஞ் சேவடிக்கட்
சுருப்பனந் தாமலர் சேர்த்தி னுள்ளஞ் சுலாவி யுறைம்பண்
புருப்பனந் தாமணி யாஞ்சாமிநாத வுயர்முனிபா
லிருப்பனந் தாவதென் றருமெங் கோன்புக மேழுறவே.

ஸ்ரீமான் திவான் பஹதூர் பவானந்தம் பிள்ளை அவர்களிடம் நான் பதிப்பித்த கலித்தொகை முதலிரண்டு சம்புடங்களைக் கொடுத்து, அதில் நான் சிரமப்பட்டுச் செய்திருக்கும் வேலைகளிற் சிலவற்றையுஞ் சொன்னேன். அவர்கள்,

'சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விதித்தொழிதல்
நல்லினை கோறலென் வேறன்ம'

என்றபடி, அதற்கு உதவி செய்யவேண்டும் என்று கருதி, அச் சம்புடங்களைப்பற்றிச் சென்னை School Book and Literature Society யாருக்குச் சிபாரிசு செய்து கலித்தொகை வெளிவரும் செலவிற்கு உபயோகிக்கும்படி இருநூறு ரூபாய் நன்கொடையாக அளிக்கச் செய்வித்தார்கள். இவ்வாறு உதவி செய்யுந் தமிழபிமானிகளிருந்தால் அரிய காரியத்தை மேன்மேலுஞ் செய்ய ஊக்க முண்டாகும். அத் தொகையை அளித்த அச் சங்கத்தாரிடத்தும் அதற்குக் காரணராயிருந்த ஸ்ரீமான் பவானந்தம் பிள்ளை யவர்களிடத்தும் நன்றியறித லுள்ளவனாக இருக்கின்றேன்.

எனக்கு இந் நூல் முதலிலிருந்து முழுவதும் பதிப்பித்தற்கு மிக்க உதவியாயிருந்தவர், என் சிறுவனாகிய சிரஞ்சீவி முத்துக்குமார ஸ்வாமியும், சென்னை, மயிலாப்பூர், P. S. High School உபாத்தியாயரும் என் மாப்பிள்ளையும் ஆகிய சிரஞ்சீவி வே. ராமநாதையரும் ஆவர்.

இடையே உதவி செய்தவர் அன்பர் ஸ்ரீமத் உ. வே. சு. சி. பாஷ்யம் அய்யங்கார் அவர்கள், B. A., L.T.

இப்போது அரும்பத முதலியவற்றின் அகராதியை ஒழுங்கு படுத்துவதற்கும், ஆசிரியர் வரலாற்றை எழுதுவதற்கும் தக்கமக்கு அவகாச முள்ளபோது உடனிருந்து உதவி புரிந்தவர்கள் சென்னை யூனிவர்ஸிடி ஓரியண்டல் ரிசர்ச் இன்ஸிடிடியூட் ஸ்டூடெண்டுகளாக இருந்த சிரஞ்சீவிகளாகிய கே. வி. சேஷாசல சர்மாவும், மு. குஞ்சித பாத தேசிகரும், ந. சிவப்பிரகாச தேசிகரும் ஆவர்.

ஆசிரியர் வரலாற்றையும் இன்னும் சில ஆராய்ச்சிகளையும் விரிவாக எழுத நினைத்திருந்தேன். அவையும் முன் பெரும்பான்மைக் குறித்தவற்றுள் இன்னுஞ் சிலவும் சில காரணங்களால் இப்போது செய்தற்கியலவில்லை. இந்த வுளவில் இதனை நிறைவேற்றிய இறைவனுக்கு என் வந்தனத்தைச் சேர்ப்பிக்கிறேன்.

மயிலாப்பூர்,
பிரஜோத்பத்தியூ
கார்த்திகைமீ.

இங்ஙனம்,

இ. வை. அனந்தராமையன்.

தமிழ் வளர்க்கு முயற்சி.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்களாக விளங்கும் கௌரவம் பொருந்திய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிநாத ஸ்வாமிகளவர்கள், தமிழ்ப் புலமை மிக்கு, தஞ்சை சரபோஜி மஹாராஜாவின் அவைக்களத்தில் ஆஸ்தான பண்டிதராயிருந்தவரும், கோமுக்சுரக்கோவை தஞ்சைப் பெருவுடையாருலா முதலியவற்றை இயற்றியவரும், சென்னை இராசதானிக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்து புகழ்பெற்றவரும் ஆகிய கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகரவர்கள் மரபில் ஜனித்தவர்கள். தமிழ்மணங்கமழும் அம்மரபில் தோற்றத்திலேலா, டில்லித் துலுக்க அரசனையும் தம் தெய்வசக்தி காட்டி வசப்படுத்திய அருட்புலமை வாய்ந்த தமிழ்ப் பெரியாரான ஆதிகுமரகுருபர ஸ்வாமிகள் பீடத்தின் ஏற்றத்திலேலா அவர்கள் தமிழபிமான மிகுந்து அதனைப் பல வழியாலும் வளர்க்க முயன்று வருகிறார்கள். அம் முயற்சி தமிழுலகத்திற்கு அரும் பயனையும் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளவர்களுக்குப் பெரும் புகழையும் தந்து நிறுத்தத்தக்கவை.

சென்னைச் சருவ கலா சங்கத்தாரால் நடத்தப்பெறும் வித்துவான் பரீக்ஷையில், வருடந்தோறும் தமிழில் முதல் வகுப்பில் முதல் வராகத் தேர்ச்சிபெற்ற மாணாக்கருக்கு அவ் வருடத்து 5000 ரூபாய் கன்கொடையளிப்பதாக ஏற்பாடு செய்து மூன்றுவருடமாக அளித்து வருதல் யாவருமறிந்ததே. இஃது என்றும் நிலைபெற்று நடந்து வருவதற்காக 1928-ஆம்வரு ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்கா கண்டத்து டாரண்டோ என்னும் நகரத்திலுள்ள "தி மானுபாக்ச்சரர்ஸ் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி" (The Manufacturers Life Insurance Company)யில் தங்கள் ஆயுளை ரூபாய் நாற்பதினாயிரத்துக்கு இன்ஷ்யூர் செய்து, 4,46,416 என்னும் எண்ணுள்ள பாலிஸியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் இப்போது பலர் தமிழைச் சிரத்தையோடு படிக்கிறார்கள்.

இவர்களது நுண்ணறிவும் பயனுறுவினை செய்யும் நோக்கமும் அரியன அறிந்துரைக்கும் ஆற்றலும் தமிழபிமானமும் பல வருடங்கட்கு முன்பே எனக்கு மகிழ்வை உண்டாக்கின. அவை நாளுக்கு நாள் வளர்ந்து இப்போது பயனளிக்கத் தொடங்கியிருக்கின்றன. இன்னும் சில நாளில் நல்ல பயனை மிக வளிக்கு மென்பது நிச்சயம்.

ஆசிரியர்கள் வரலாறு.

க. பாலைபாடிய பெருங்கடுங்கோ.

இக்கலித்தொகையில் முதற்பகுதியாகிய பாலைத்திணைக்குரிய 35 கலிப்பாக்களையும் பாடியவர் பெருங்கடுங்கோ அல்லது பெருங்கடுங்கோன்* என்னும் பெயரால் வழங்கப் பெற்றவர்; இவரது இயற்பெயர் இன்னதென்று துணியக்கூடவில்லை. கடுங்கோ என்பது கடியென்னுமுரிச்சொல் ஈறுதிரிந்து கோவென்னும் பெயர்ச் சொல்லோடு புணர்ந்துள்ளது; காரணம்பற்றிய பெயரென்னத் தக்கது. ஆனாலும், சேரமான் மாந்தரன் பொறையன் கடுங்கோ, சேரமான் கடுங்கோ வாழியாதன் என்பன முதலிய சில தொடர் மொழிப்பெயர்களிற் கடுங்கோ வென்பது சேரபரம்பரையினர் களுக்கு வந்திருத்தலாலும் இவர் அப்பரம்பரையினரொன்று தெரி தலாலும் அவர்களுக்குப் பிற்காலத்தவர் இவரென்று துணிந்து அப் பெயர் இவர்க்கு இடப்பெற்றதனின் கடுங்கோ வென்பது இவரது இயற்பெயராம்.

இந்தக் கடுங்கோ வென்பதன் முன் பெருமை யென்னும் பண்புப்பெயர் புணர்ந்து பெருங்கடுங்கோ வென நிற்கின்றது. அப் பண்புப்பெயர் இவர் இளங்கடுங்கோவுக்குக் கமையனாரென்பது பற்றிப் புணர்க்கப்பெற்றதென்று சிலர் ஊகித்தனர். அவ்வாறு இருப்பினும் இருக்கலாம். அவர் மருதத்திணைபைச் சிறப்பித்துப் பாடியிருத்தலால் மருதம்பாடிய இளங்கடுங்கோ என வழங்கப் பெறுகின்றனர். அவர் ஒரு சோழவேந்தனால் ஆசரிக்கப்பெற்றுச் சோணாட்டிலிருந்து மருதத்திணையிலே பயின்றவரென்று தோன்று கிறது. அவர் செய்தி இங்கே இம்மட்டில் நிற்க,

பெருங்கடுங்கோ என்பதன்முன் பாலைபாடிய என்னும் அடை மொழி வந்தற்றது இவர் இக்கலிப்பாக்களைப் பாடியது பற்றியே

---

* 'கடுங்கோன்' என்னும் பெயர் பாண்டியர் மரபிலுமுண்டு. 'காய் சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக' என வருதல் காண்க.

என்னலாம். இவரது பெயர் * பாலபாடிய பெருங்கடுங்கோ என்றே பல இடத்தும் உள்ளது. கலி † (உ) 4-8, (ச) 3-6, (ஞ) 1-3, (கூ) 1-6, (எ) 1-3, (அ) 2-6, (கo) 1-7, (கக) 6-7, (கஉ) 1-7, (கஙூ) 1-9, 12-13, 20-21, (கஞ) 1-9, (கசூ) 6-8, 10-12, 14-16, (உo) 1-8, 20-21, (உஙூ) 3, (உச) 10-11, (உஞ) 9-11, இப்பகுதிகளில் இவர் பாலைத்திணையைப் புனைந்துரைத்திருத்தலை நோக்குக.

மற்றும் இவர் பாடியனவாக அகப்பொருட் செய்யுட்களுள், நற்றிணையில் (9, 48, 118, 202, 224, 256, 318, 337, 384, 391) பத்தும் குறுந்தொகையில் (16, 37, 124, 135, 137, 209, 231, 262, 283, 398) பத்தும் அகநானூற்றில் (5, 99, 111, 155, 185, 223, 261, 267, 291, 313, 337, 379) பன்னிரண்டும் ஆக ‡ 32 ஆசிரியப்பாக்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொன்று ஐயத்துக் கிடமாயிருப்பினும் மற்றவையெல்லாம் பாலைத்திணைக்குரியவையே. அவற்றுள்ளும் நற் (சஅ) 3-9, (உடுசு) 3-4, 9-11; (கூகஅ) (கூஅச) 1-6. குறுந்(கஉச) (உஅகூ) 5-8. அகம் (ஞ) 8-15; (கூகூ) (கஙக) 4-15; (கடுடு) 7-16; (கஅடு) 5-13; (உஉகூ) 3-8; (உகூக) (உசூள) 5-13; (உகூக) 1-21; (கூகங) 11-17; (கூகூள) 5-18; (கூளகூ) 18-26 இக்கப் பகுதிகளில் பாலைத் திணையைப் புனைந்துரைத்திருத்தல் நோக்கற் பாலது.

'பாலபாடிய' என்னும் இவ்வடைமொழியின் முன் 'சேரமான்' என்னும் குடிப்பெயர் சேர்க்கப்பெற்று, 'சேரமான் பாலபாடிய பெருங்கடுங்கோ' என்று புறநானூறு 11 ஆம் செய்யுளின் பின் இன்ன தலைவரை இன்னவர்பாடியது என்புழிக்காணப்படுகின்றது. அச்செய்யுள் சேர வேந்தனையே தலைவனாகக்கொண்

---

* ஒவ்வொன்றைச் சிறப்பித்துப் பாடியதனால் சிலர் பாராட்டப் பெற்றனென்பது, மருதம் பாடிய இளங்கடுங்கோ, மடல் பாடிய மாதங்கீரனார், வெறி பாடிய காமக் கண்ணியார், கொடை பாடிய அல்லது கோடை பாடிய பெரும் பூதனார் என்பவற்றாலும் கோப் பாடியார் அல்லது கோப் பாடியார் என்பதனாலும் அறியப்படுகின்றது.

† ( ) இங்ஙனவளவி னுட்பட்ட எண்கள் பாட்டுகளையும் பின்னுள்ள எண்கள் அடிகளையும் குறிப்பன.

‡ புறப்பொருளிலும் ஓர் ஆசிரியப்பா உண்டு; புறம்-282.

டிருப்பது. அச்செய்யுளும் அதன் பின்னுள்ள குறிப்புமே இவர் சேரர்குடிக் குரியோரென்பதை அறியக் கருவியாயிருக்கின்றன.

இவரை அப்பாடலாற் புகழ்ந்தவர் பெயர் 'பேய்மகள் இளவெயினி' என்று பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அந்நூலுரையாசிரியர் அப்பாடலுக்குப் பொருளெழுதிய பின் 'பாடினி இழை பெற்றாள்; பாணன் பூப்பெற்றான்; யான் அது பெறுகின்றிலேனெனப்பரிசில் கடாநிலையாயிற்று' எனத் துறைச்செய்திபைத் தம் கோட்பாடாக விளக்கிவிட்டு, "இனி இவள் பேயாயிருக்கக் கட்புலனுபதோர் வடிவு கொண்டு பாடினளொருத்தி யெனவும், 'இக்களத்து வந்தோர் யாவரும் பரிசில் பெற்றார்கள்; எண்டு கின்னோடு எதிர்ந்து பட்டோ ரில்லாமையால் எனக்கு உணவாகிய தசை பெற்றிலேன்' எனத் தான் பேய்மக ளானமை தோன்றப் பரிசில்கடாயினளெனவும் கூறுவாரு முளர்" என்று பிறர் கருத்தையும் எழுதியிருக்கிறார். இப் பிறருரையைப் புனைந்துரையென்று கொள்ளுவதன்றி மெய்யுரை யென்று அறிஞர்கொள்ளார். ஆதலின் பின்னுள்ள பிறருரையை விட்டு முன்னுள்ள இவருரையே கொள்ளத்தக்கதாகும்.

இதில், 'பாடினி இழைபெற்றாள்; பாணன் பூப்பெற்றான்' என்பதை, அவர் பரிசில் வாழ்நரென்பதையும் அவர் இவை பெற்று ரென்பதையும் உணர்த்துகின்றன. அவரைப்போலவே இதனைப் பாடியவரும் பரிசில் பெறுதற்குரிய தகுதியினரென்றால் பாட்டின் பொருள் சிறக்கும். அத்தகுதியும் இசைபற்றியதெனின் இன்னும் சிறக்கு மென்பது கூறுமலே விளங்கும். இவர் பெயர் அத் தகுதியின ரென்பதைக்குறிக்கும் பெயரென்றே இப்போது என்னால் ஊகிக்கப்படுகின்றது. அஃது என்னெனின், 'இளவெயினி' என்பதை 'இளவேயினி' என்று கொளுதலே. கொண்டால் அது குறிப்புமொழியாகி, புல்லாங்குழலாகிய இளவேயால் பஞ்சம ஸ்வரமாகிய இளியென்னும் இசையைச் சுவைபட வாசித்தலிற் சிறந்தவளெனப் பொருள்பட்டு இசைத்திறத்தால் பரிசில் பெறுதற் குரியளெனப் பொருள் சிறக்கும். எட்டுச்சுவடிகளில் 'இளவேயினி' என்பது 'இளவெயினி' யென்றும்படிக்குப்படி வேறுபாடுவிளங்கா திருக்குமென்பது எடாள்வார்க்குத் தெரியாததொன்றன்று. ஆதலால் யான் ஊகிப்பதை அறிஞர் தண்ணிதினாய்ந்து பொருந்து

மெனிற் கொள்ளவும் பொருந்தாதெனின் கள்ளவும் உரியர். இது தவலருங் தொல்கேள்வியான் வருவதன்று. ஆதலால், பதிப்பிப் பவர்க்கு யான் ஊகித்ததே சிறந்ததென்று தீதாற்றின் மறுபதிப் பில் இளவேயிளியென்று வெளிவருதலுங்கூடும். அவர்கள் பதிப் பித்தவற்றுள் முற்பதிப்புக்கு மாறுகப் பிற்பதிப்பிற் சில இருக் கற்கு இஃதும் ஒரு காரணமென்க. அஃது அவர்கள் ஆராய்ந்து பதிப்பிக்கும் பல நூலுள்ளும் காணப்படும்.

இப்பெயரின் முன்னுள்ள பேய் மகளென்பது பேயென்பானின் மகள், அல்லது பேயென்பாளின் மகள் என்று * பொருள்படும். பேயென்பது பேயாழ்வாரைக் குறிக்குங்கால் ஆண்பாலையும் காரைக்காற் பேயாரைக் குறிக்குங்கால் பெண்பாலையும் உணர்த்தி வருதலே நோக்குக. ஒரு பெண்ணின் பெயருக்கு முன் ஈன்றாள் பெயரைப் புணர்க்குமிடத்துத் தாயார் பெயரைப் புணர்த்தியதாக ஒன்றும் விளங்காமையானும் பெருங்கோழி நாய்கன் மகள் நக் கண்ணையார், கழார்க்கீரனெயிற்றியா ரென்பவை முதலியவற்றுல் தகப்பனார் பெயரைப் புணர்த்துவ தண்டென்பது அறியப்படுத லானும் பேயென்பானின் மகளென்று பொருள் கொள்ளலாமென்று தோற்றுகிறது.

இவராற் பாடப்பெற்றவர் சேரர் மருமானுனுல் இவர் தம்பி யின் பெயரோடு சேரமானென்பது யாண்டும் காணப்படவில்லேயெனின், சேரமானென்பது சேரநாட்டரசுரிமை பெற்றவர்க்கே சிறப்பாக வழங்கப்படுவதென்றும் பெருநார்க்கு வழங்கப்படுவ தன்றென்றும் அவ்வுரிமையைப் பெற்றவர் இவ்வென்றும் பெருதவர் அவரென்றும் ஊகிக்கவேண்டியதா யிருக்கிறது.

இவர், மக்கள் இவ்வாறுழுகவேண்டும் இவ்வாறுழுகக் கூடா தெனப் பொதுவான நீதிகளே அறிவித்தலால் அறநூலிலும் இவ் வாறே அரச நீதிகளையும் அமைச்சு தூது ஒற்று போர் முதலிய வற்றையும் பற்றிக் கூறுதலால் பொருணூலிலும் நானூற்றுள் அகத்தனவாகிய மூன்நூறு இந்நூல் இவற்றில் இன்பத்தைச் சுவைபட அமைத்திருத்தலால் காமநூலிலும் சிறந்த அறிவுடையவ ரென்பது விளங்கும்.

---

* வேறு பொருள் கூறுவாருமுளர்.

அன்றியும் இவர் புராணம் விலக்குநூல் காவநூல், நிமித்த நூல் ஓவியநூல் இசைநூல் முதலியவற்றையும் அறிந்தவரென்றும் இயற்கை நவிலுதல், உறுதி புகலுதல், மெய்ப்பிக்கும் நிறம்பகருதல் இவற்றில் வல்லுநரென்றும் தாம் ஆளும்நாட்டிற்கு உரித்தாகக் கூறப்படும் யானையினியல்பை யறியுங் திறம், அது மதம்பட்ட காலத்தில் அதனை அடக்கவல்ல யாழ்ப்பயிற்சி இவற்றையும் தெய்வ பத்தி, வைதிகவழியில் நம்பிக்கை, கொடை, வீரம், சேர்ந்தவர் பாலன்பு, நன்றியறிதல் முதலிய நற்பண்புகளையு முடையவரென்றும் இவர் ஆங்காங்குக் கூறியிருப்பவை நினைப்பிக்கும்.

இப்பாலைக் கலியிற் சிலஇடத்தும் முல்லைக்கலியிற் சிலஇடத்தும் பாண்டியன் புகழ் கூறப்படுகிறது. அதனை நோக்கி ஓரசர் மற்றோரரசரைப் புகழாரென்று தமக்குத் தோன்றுங் கருத்தையே ஓராதாரமாகக் கொண்டு இப்பகுதிகள் சேரசோழர் பாடியன அல்ல; நூல் முற்றுமே நல்லந்துவனர் பாடியதென்று சிலர் வரைகின்றனர்.

எட்டுத் தொகையுள் இஃதொழிந்த ஏழும் பலர் செய்புட்களையுடையனவா யிருத்தலால் இது மட்டும் அவ்வாறன்றென்பதற்கு என் மனம் அஞ்சும். நான் காட்டிய இக்காரணமன்றியும் இன்னு மூன்று காரணங்களைக் கொண்டும் அவர் கருத்தும் கூற்றுமாகிய இரண்டும் ஒன்றுவென்று நினைக்கிறேன்.

மூன்று காரணம்.

1. அரசர் பிறரைப் புகழக் கூடாதென்னும் விதி எங்கேனு முள்ளதா? நற்பண்புடைய அரசர், புகழத் தக்கவராய்ப் பிறரிருப்பின் அவரைப் புகழாது இகழ்வாரா? முடியுடை வேந்தர்தங் குடியொரு மூன்றினும், உறந்தை சாண்டிவண் மதித்த மேன்மையினர் அப்பான்மையிலரைப் பாராட்டியுள்ளா ரென்பது இச்சேரனே கொண்கானத்து நன்னனையும் (நற். 391) சோழன்குள முற்றத்துத் தலை[illegible]ன்னிவளவன் சிறு குடிகிழான் பண்ணனையும் (புறம். 173.) ஓல்லூர் நிலை[illegible]டியன் மையன் மாவன் முதல் நண்பர், ஐவர் தமையும் (புறம். 71) புகழ்ந்ததன்றிப், பொதியிற் செல்வன் நிதியனையும் (அகம். 25) புகழ்ந்தா ரென்று நிகழ்ந்திடின் அவர் கருத்துப் பொருந்தாமை.

2. 'பெருங்கடுங்கோன் பாலை..... ..... அருஞ்சோழ, னல் லுக்கிரன் முல்லை' என்னும் வெண்பா, இன்ன இன்ன திணையை இவரிவர் பாடினரென்று கூறுதல்.

3. இந்நூலுரையில் நல்வந்துவனாரைப் பற்றியுள்ள வாக் கியங்களும் 'நாடும் பொருள்சான்ற' என்னும் வெண்பாவும் அவர் செய்தலைப்பாடினரென்பதற்கும் இந்நூலைத் தொகுத்தாரென்பதற் குமே பொருத்தமாதல்.

இவற்றுள் எட்டுத்தொகையுள் ஒருவருரைத்த தொகை நிலைச் செய்யுள் ஒன்றுமின்றென்பதும் அவர் கருத்து ஆதாரமற்றதென் பதும் இவை முறையே சேர சோழர்களாற் பாடப்பெற்று நூல் முற்றும் நல்வந்துவனாரால் தொகுக்கப்பெற்றதென்பதும் புலனும்.

இவர் இந்நூலில் பாண்டியனைப் புகழ்ந்திருத்தலன்றியும் அவ னுட்டிலுள்ள வையையாறு மதுரைமாநகர் பாங்குன்று முதலிய இடங்களையும் அந்நாட்டுக்குச் சிறப்பாகக்கூறப்படும் முத்து, சந்தன முதலிய பொருள்களையும் மதுரையில் தமிழாராயும் செய்தி யையும் பாராட்டிக்கூறுதலால் இவர் இளமையில் பாண்டியனால் அன் புடன் ஆதரிக்கப்பெற்று அங்கிருந்து பழகியவரென்று ஊகிக் கலாம். நற்றிணையில் கொண்கானத்து நன்னனுட்டு எழிற்குன்றம் சிறப்பிக்கப் பெற்றிருத்தல் ஆராய்து அதற்கேற்ற பெற்றித்தாதல் கருதியென்று தோற்றுகிறது.

இவர் வரலாற்றில் இன்னும் கூறத்தக்க செய்திகள் பலவுள வேனும் அதற்கு இப்போது அவகாச மின்மையால் இம்மட்டோடு நிறுத்தலானேன்.

உ. கபிலர்.

இந்நூலின் இரண்டாம் பகுதியாகிய குறிஞ்சிக் கலியின் 29 செய்யுட்களையும் யாத்தவர் மிகச் சிறந்த புலவராகிய கபிலர். இவர் பிறந்த ஊர் இன்னதென்பது பண்டை நூல்களால் தெரிய வில்லை. அது திருவாரூரென்று கபிலரகவலும் திருவாதவூரென்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும் கூறும். அவ் வகவல் முற்றும் பொய்யுரை யென்பதும் இப்புராணம் அத்தகைத் தன்றென்பதும் ஆராய்ச்சியாளர் துணிபு.

இவர் பெயராகிய கபிலரென்பது பண்டைத் தமிழ் நூலில் உருத்திரமூர்த்திக்கு வழங்கும் பெயராயிருத்தலாலும் இவர் சிவ பெருமானையும் முருகனையும் பல இடத்தும் புகழ்ந்த கூறுதலாலும் இவர் சைவப்பற் றுடையவரென்று கருதப்படுகிறார். ஆனாலும் பலராமன், கண்ணன் இவர்களையும் புகழ்ந்திருத்தலால் வீரசைவ ரல்லரென்றும் வைதிக சமயத்தவரென்றும் துணியலாம்.

இவர் அந்தணரென்பது புறநானூற்றுச் செய்யுட்களால் தெளி யப்பட்ட செய்தி. இவர் அகத்திணையுள் குறிஞ்சித் திணையையும் புறத்திணையுள் பல துறைகளையும் பாடியிருக்கிறார்.

இவரது பாடலை, பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும், பத் துட னெட்டெனப் பயில் கீழ்க் கணக்குமா, முத்திற நாலினும் வைத்துளர் பெரியோர்.

இவருடைய பாடல்களெல்லாம் சொற்பொருள்களால் தூயனவா யிருத்தலோடு பல பாடல்கள் உள்ளுறை முதலியவற்றாலும் சிறந் திருத்தலால் மிக இனியனவென்று மதிக்கப்பெற்றவை. இதனாலே பலருரைகளில் ஆரும் வேற்றுமைச் செய்யுட்கிழமைக்கு, 'கபிலரது பாட்டு' என்பது உதாரணமாகக் காட்டப்பெற் றிருக்கிறது.

பிறபுலவர் பலரால் நினைந்தும் செய்தற்கரிய பொருட் செறி வினை யுடையனவாகும் செய்யுட்களை இவர் ஒரு கொடியிலே எண்ணு திசைக்க வல்லவரென்றும் கற்றலிலும் கன்றிய கேள்வி மிக்கவ ரென்றும் புகழ்ந்து, நான்பகை வென்ற வெற்றியைப் பாட இப் போது அவரிலையே யென்று ஓரரசன் வருந்தினனென்று அவன்

பகைவென்றதனைப் பாடும் புலவரே கூறினரெனில், இவர் கல்வி கேள்விகளானும் அவற்றுல் உள்ள புகழானும் மேலாக மதிக்கப் பெற்றவ ரென்பதற்கு வேறோர் கட்டுரையும் வேண்டுமோ?

மகளிருட் புலமைசான்ற ஒருவர், 'இவர் மக்களுட் குற்ற மற்ற அறிவினர்' என்றும், 'தாம் புகழத்தொடங்கியதைப் பிறர் புகழ இடமின்றி முற்றும்புகழ வல்லுநர்' என்றும், 'பொய்யா நாவினர்' என்றும் இவரைப் பாராட்டி யிருக்கிறார்.

மற்றொரு புலவர் 'இவர் விளங்கச் சொல்லுகின்ற நாவினையும் உள்ளே கவலை இல்லாத நெஞ்சினையும் மெய்ம்மை பாடுதலையும் நல்ல புகழையு முடையவர்' என்று இவரைச் சிறப்பித்திருக்கிறார்.

வேறொரு புலவரும் 'இவரது புகழ் உலகமுள்ள அளவும் அழியாது' என்றும் 'இவர் வாய்மைமொழிபவர்' என்றும் புகழ்ந் திருக்கிறார்.

இவரைப் பற்றிச் சங்கத்துச் சான்றோரான பலர் கூறியுள்ள இச்செய்திகளால் இவரது கல்வியும் பாடுந் திறமையும் கேள்வியும் அறிவினுண்மையும் சொல் வன்மையும் வாய்மையும் மன ஒருமையும் புகழ் முதலியவை வெள்ளிடைமலையென விளங்குகின்றன.

சிலாசாதனம் இவரை 'முத்தமிழ்க் கபிலன்' என்று புகழ் கின்றது.

அன்றியும் இவர் குறிஞ்சிப் பாட்டை இயற்றி ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவுறுத்தினரென்ப. இஃது இவர் நிரந்த இனிது சொல்லுதல் வல்லுநரென்பதை அறிவிக்கும். அவ்வர சனே ஆரியவரசன் யாழ்ப் பிரமதத்தனென்பதும் அவனே பின்பு தமிழ்ப் புலமை சான்று பாடினனென்பதும் அவன் பாடிய செய்யுள் குறுந்தொகையுள் கோக்கப்பட்டுள்ள தென்பதும் சிலரது மதம்.

'கபிலபரணர் தங்களில் வாது செய்தார்' என்று வீரசோழிய வுரையிற் காணப்படும் வாக்கியம் இவர் வாதாடுதலிலும் வல்லவ ரென்பதைக் காட்டும்.

உயர்திணை உம்மைத்தொகைக்கு உதாரணமாகக் காட்டப் பெற்ற 'கபிலபரணர்' என்பது இராம லக்ஷ்மணர் என்பதுபோல நட்புப் பற்றியதோ, இராம ராவணர் என்பதுபோலப் பகை பற்றி யதோ, வாலி சுக்கிரீவர் என்பதுபோல மூன் நட்பும் பின் பகையும்

பற்றியதோ வென்று ஐயுறத்தக்க பொருளினதேனும் இவர் இந்நூலின் கண்ணே 'நட்டார்க்குத் தோற்றலை நாணாதோன் குன்று' என்று நட்பைப்பற்றிப் பாராட்டிக் கூறுதலானும், புறத்தின் கண்ணே பாரியைப்பற்றிக் கூறியிருக்கும் பல பாடல்களானும் நட்புக் குணத்தில் மேம்பட்டவரென்று விளங்குதலால் நட்புப் பற்றிய தென்றே கொள்ளவேண்டும்.

இவ்விருவரும் அக்காலத்தே கடவுண்மை யுடையவரென நக்கீரனாரலேயே மதிக்கப்பெற்ற ஒளியுடையவர்கள்.

இவர் மதுரைத்தமிழ்ச் சங்கப்புலவர்களுள் ஒருவரேயாயினும் பெரும்பாலும் அங்கே வதிந்தவரல்லர். பாவலர்க்கிருக்கவேண்டுமென்னும் நூறியலையும் அடைதலில் ஊக்கத்தாலும் பண்புடையாரொடு பழகுதலில் நோக்கத்தாலும் வியன்மலைகாடெல்லாம் இயலுவாராயினர். அப்போது பறம்பு மலை கொல்லி மலை தோட்டிமலை முள்ளூர் மலை ஆங்காங்குள்ளகாடுகள் இவற்றிலுள்ள சிறப்புக்களைக் கண்டறிந்துள்ளார்.

இவர் கடையெழுவள்ளல்களுள், அஞ்சி ஆய் அல்லாத ஐவரையும் தம்பாடலில் எடுத்துக்கூறியிருக்கிறார். அவ்வைவருள் ஓரி, நள்ளி என்ற இருவரையும் நேரிற் பார்த்ததாகத் தெரியவில்லை. பேக னென்பவனைக் கண்டு நீ நின்மனைவிக்கு அருளவேண்டும் என்று ஒரு பாடல் பாடியிருக்கிறார். காரியென்பவனைக்கண்டு வரிசையறிந்து ஈயவேண்டுமென்று கழறியும் அவனுடைய வரையாக் கொடையையும் புரையாத்திறலையும் பாராட்டியும் சில பாடல்கள் பாடியிருக்கிறார். பாரியென்பவனோடு நண்புற்று, பறம்புமலையின் கண்ணே பலயாண்டிருந்து குறிஞ்சி வளத்தையும் அக்குரிசிலுளத்தையும் நன்கறிந்தார். அவை அவர்க்கு மகிழ்ச்சி விளைத்ததனால் பெரும்பாலும் அங்கே வதிவாராயினர். இவர் அவனைக்குறித்துப் பாடிய பாடல்கள் பல.

பாரி, தான் சிற்றரசனே யானாலும், பேரரசர் கொடைமுரசு முழங்கக் கொடுப்பதினும் மிகுதியாகவே இரவலர்க்குக் கொடுத்து வந்தான். அதனால், மூவுலகத்தாலும் அவன் கொடைப்புகழே கேட்கப்பட்டது. தமிழ் நாட்டு மூவேந்தரும் அவன் புகழுறுதலைப் பொறாராய்ப் பறம்புமலையை முற்றினார்கள். பறம்பு மலைக் கோட்டை வாயிற் கதவு அடைக்கப்பட்டது. அம்மூவரும் பல

யாண்டு போர் புரிந்தனர். அப்போது கபிலர், 'இவ்வரணை உங்களால் அழித்தற்கியலாது. இம்மலையோ உழவருழாமலே இங்குள்ளவர்க்கெல்லாம் வேண்டிய உணவுகளையளிக்கும். ஆதலால் இம்முயற்சி பயனின்றும். நீர் பாணராயும் நும்மனைவியர் விறலியராயும் வந்து பாடி யாடினுற் பெறலாம்' என்று அவனைபிகழ்ந்தும் பல படியாகப் பாரியைப் புகழ்ந்தும் பாடினர்.

இறுதியில் மூவரசரும் வஞ்சித்துப் பாரியைக் கொல்லலானார்கள். அந்நிலைமையில் இவர் பெருந்துயருழந்து தம்முயிரைத்துறக்கத் துணிந்தார். துணிந்தும் பாரிதடுத்ததனால் துறவாதிருந்தார். பின்பு அவன் உயிர்துறந்தான். மூவரசரும் பறம்பு மலையைக் கைப்பற்றினார்கள். கபிலர் பாரியின் மகளிரோடு அம்மலையை விட்டுப் பெயர்ந்து அதன் முன்னை நிலையையும் அப்போதை நிலையையும் குறித்து வருந்திச் சில பாடல் பாடினர். பாரியிறந்த துயரைப்பொருளாய்க் கலங்கி யிரங்கி மெலிந்து கழிவிரக்கத்திற் பயனில்லை யென்று பின்பு தெளிந்து அவன் மகளிருக்கு மணம்புரிவிக்கத் தக்க காலத்தையும் தக்க கணவரையுங்கருதி வந்தார்.

சிலயாண்டு சென்ற பின் அம்மகளிரை அவர் மரபிலே வாழ்க்கைப்படுத்த நினைந்து விச்சிக்கோன் இருங்கோவேள் என்ற இருவரையுங் கொள்ளவேண்டியும் அவர் உடம்படாமையால் அம்மகளிரை அவர் மரபினும் உயர்ந்த மரபிலே வாழ்க்கைப்படுத்திப் பெண்ணையாற்றங்கரையிலே திருக்கோவலூர்ப்பக்கத்தே நாற்புறமும் தீச்சூழ வடக்குநோக்கியிருந்து பாரியை நினைந்து வீழ்வினை மறுபிறப்பிலும் என்னை நின்னொடு கூட்டுவதாகவென்று தவம் புரிந்து உயிர் நீத்தார்.

இவர் வரலாற்றைப் பலரெழுதியுள்ளார். பாரியை வஞ்சித்த விதம் இன்னதென்று விளங்கவில்லை. மூவேந்தர் பாரியைப் பகைத்தகாரணமும் அவன் மகளிர் மணத்தைக்குறித்த வரலாறும் கபிலர் உயிர்விடுத்த செய்தியும் கபிலதேவ நாயனார் இவரா மற்றொருவரா என்பதும் கூறுவதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. கபிலதேவநாயனார் இவரின் வேறென்பதே என் கருத்து. என்னால் விரிவாக எழுதப்பெற்று வரும் இவர் வரலாற்றில் எல்லாம் ஆதாரத்தோடு விளக்கப்பெறும்.

ரு. மருதனிள நாகனார்.

இக் கலித்தொகையுள் மூன்றும் பகுதியாகிய மருதக்கலி 35 பாடல்களையும் பாடியவர் மருதனிளநாகனா ரென்பவர். 'மருதனிள நாகன் மருதம்' என்பதும் காண்க. இவரது இயற்பெயர் நாக னென்பது: நாகனென்னும் பெயரைப்பூண்ட தமிழ்ப்புலவர் பலர். அவர்களுள், பல புலவர்கள் பெயரினீற்றில் உயர்வுப் பொருளைக் காட்டும் 'ஆர்' என்னும் இடைச்சொல், சேர்ந்து 'நாகனார்' என்றே வழங்கும். அவர்களுள் இன்னவரைக் குறிக்கிறாரென்று கேட்பவர் உணருவதற்காகச் சொல்லுபவர் அப்பெயரின் முன் தாம் குறிக்கும் அப்புலவரது ஊர், தொழில், நிறம், குணம், சிறப்பு, அவர் பாடிய பொருள், அவரது பருவம், அவர் தந்தையார் பெயர் முதலியவற் றுள் ஒன்றையோ பலவற்றையோ சேர்த்துக் கூறுவாராயினர். இது வெள்ளைக்குடி நாகனார், விரிச்சியூர் நன்னாகனார், மதுரைப் பொன் செய்கொல்லன் வெண்ணாகனார், தங்கால் பொற்கொல்லன் வெண் ணாகனார், பொன்னாகன், அம்மெய்ப்பனாகனார், நன்னாகனார், நந்நாகனார், புறத்திணை நன்னாகனார், இளநாகனார், கண்ணனாகனார், மதுரைப் பூத னிளநாகனார், மதுரைக் கடையத்தர் மகன் வெண்ணாகன், மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார், இனிசந்த நாகனார், என்பவை முதலியவற்றால் அறியலாகும்.

இளநாகனாரென்று மற்றும் சில புலவர் இருந்தமையின் தகப்ப னார் பெயரை முதலிற்சேர்த்து இவரை * மருத னிளநாகனாரென்று வழங்குவா ராயினர். இப்புலவர் மருதனென்பவர் புதல்வரெனின். மருதனென்றது தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய னைப் பாராட்டப் பெற்றவரும் மதுரைக்காஞ்சி நூலாசிரியருமான மாங்குடி மருத னென்பவரையோ மற்றொருவரையோ என்ற ஐயம் நிகழலாமன்றே! அதனின் நீக்குதற்கு இவர் தந்தையாருக்கு

---

* பாலை பாடுதற்குப் பெருங்கடுங்கோவும் குறிஞ்சி பாடுதற்குக் கபிலரும் போல, மருதம் பாடுதற்கு இளநாகனார் சிறந்தவரென்று கொண்டு, மருத னென்பது மருதத்திணையைப் பாடுதலிற் சிறந்தவ னென்னும் பொருட்டாய் இளநாகனையே சுட்டி இருபெயரொட்டாய் நிற்கிறதென்று கருதுவாரும் உளர்.

மதுரை என்று அடைகொடுக்கு அவரை மதுரைமருத னென்று கூறி இவரை மதுரை மருத னிளநாகனென்று கூறுவாராயினர். அவ்வாறாயின் வேர்ப் பெயரைமட்டும் முன்வைத்து வெள்ளைக்குடி நாகனை சென்றாற்போல மதுரை இளநாகனை என்றல் சாலாதோ வெனின், மதுரையின் கண்ணே இளநாகனென மற்றுமொருவர் இருந்தமையின் அது சாலாதென்று அவரை மதுரைப் பூதனிள நாகனை சென்றும் இவரை மதுரை மருதனிளநாகனை சென்றும் வழங் கினரென்று தோன்றுகிறது. மதுரைப் பெருமருதிளநாகனை சென் பதும் இவரது பெயராயிருப்பினும் இருக்கலாம். இளநாகனை சென் பதற்கு முன் நிறுத்திய 'மருதன்' 'மதுரை மருதன்' மதுரைப் பெருமருதன்' என்னும் அடைமொழிகள், அவர் மூவரென்பதை அறி விக்கவே வந்தன என்று கொள்ளுவாரு முளர். இக்கொள்கை யினைக்கும் யுக்தி கூறி அமைக்கலா மாதலின், அவரவர் உள்ளத் தாற் றுணிந்தவே முடிவென்க. மதுரைப் பெருமருதிளநாகனைசென் பதை மற்றொருவரைக் குறிப்பதாயினும் மருதனிளநாகனென் பதும் மதுரை மருதனிளநாகனை சென்பதும் ஒருவரையே குறிப் பன வென்பது என் கருத்து. சிலர் ஒருகால் இவ்விதமாகவும் மற் றொருகால் மற்றொரு விதமாகவும் வரைந்துள்ளார். அதற்குக் கா ணங் குறிப்பிடவில்லை.

இவர் சிவபெருமானையும் முருகக் கடவுளையும் பல இடத்துப் புகழ்தலால் இவரைச் சைவ சமயத்தவ சென்னலாம். இவர் தேசாபி மானம் பாஷாபிமானம் தெய்வபக்தி முதலிய நற்குணங்களும் அவ் வழிப்பட்ட புலவர்பால் மிக்க மதிப்பு முடையவர் :—

"கார்முற்றி யிணருழ்க்க கமழ்தாட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலம்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில்பொருஉம் பகையல்லால் நேரதார்
போர்முற்றென் றறியாத புரிசைசூழ் புனலூரன்".—கலி. 67.

"கதிர்ஞிரியா வைகலிற் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போல".—கலி. 96.

"வல்லவர், செதுமொழி சித்த செஞ்சொறு வாக
முதுமொழி நோப் புலனு வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர".—கலி. 68.

"ஈரஞ்சி நேற்ற வொடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற் பாடி".—கலி. 93.

"காழ்சேர் வெண்டலைப் புணரி யலைக்குந் சொற்கில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறை".—புறம். 55: 19-21.

"சூர்மருங் கறுத்த கூடாவிலை நெடுவேலற்
சீர்மிகு முருகன் றண்பரங் குன்றத்
தந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
யின்றீம் பைஞ்சுனை பிரமிப் பொலிந்த
தண்ணறுங் கழுநீர்".—அகம். 59: 10-14.

இவற்றில் வையையாறு, மதுரை, திருப்பரங்குன்று, திருச்செந்தூர் முதலியவற்றைச் சிறப்பித்தலால் இவர் தேசாபிமானமும் புலவர்களுடைய புகுமொழி கூட்டுண்ணுதலே நன்கு எடுத்துரைத்தலால் இவரது பாஷாபிமானமும் முருகக் கடவுளைப் புகழ்ந்து கூறுதலால் இவருடைய தெய்வபக்தியும் திருப்பரங்குன்றை நல்லந்துவனார் பாடியதென்று பாராட்டுதலால் அப்புலவர்பால் இவருக்குள்ள பெருமதிப்பும் நன்கு புலனாகும்.

இவர், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனையும் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியையும் காஞ்சில் வள்ளுவனையும் சேரசெனுபதி பிட்டனையும், கழுவுளையும் பாடியிருக்கிறார்.

இந்நூலில் 35-ம் நற்றிணையில் 12-ம் குறுந் தொகையில் 4-ம் அகநானூற்றில் 23-ம் ஆகக் காணப்படும் இவருடைய பாடல்களால் இவர் அகவினத்திணையையும் புனைந்து பாடுதலில் வல்லவ ரென்பதும் புறநானூற்றிற் காணப்படும 3 பாடல்களாலும் இவர் புறத்திணையையும் புனைந்துபாடும் ஆற்றலுடையவ ரென்பதும் விளங்கும்.

பிறிதொன்றாலும் அறியப்படாத அரிய பொருள்கள் சிலவும் இவர் பாடலால் அறியப்படுகின்றன. அவையாவன:—

1. பிள்ளைப்பணி:

"பூண்டவை, எறியா வாளும் எற்ற மழுவும்
செறியக் கட்டி ஈரிடைத் தாழ்ந்த
பெய்புல மூகாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய வானேற்று அவிர் பூண்".—கலி. 85.

"பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட
நலங்கிள ரொண்பூண் நனைத்தகும் அவ்வாய்".—கலி. 86.

"தொடக்கத்துத் தாயுழை புக்காற்கு அவளும்
மருப்புப்பூண் கையுறை யாக அணிக்க".—கலி. 82.

இப் பாடல்களால் இளம்பிள்ளைகளுக்கு வைணவமாகிய ஐம்படைத் தாலியேயன்றிச் சைவமாகிய தாலியொன்று மார்பில் அணிவ

தண்டென்பதும் அஃது இடப இலச்சினை யென்பதும் அப்பூணில் பவளத்தாற் செய்த இடபவுருவும் பொன்னற்செய்த மழு வாள்களி னுருவு முளவென்பதும் தெரிகின்றன. இச்செய்தி வேறெங்கும் கண்டதில்லை. இதனானே இவரைச் சைவ சமயத்தருக்கு ஓர் அரும் பொருளளித்தவ ரென்னலாம்.

2. உள்ளிவிழவு :

"கொங்கர், மணிஅரை யாத்த மறுகின் ஆயம்
உள்ளி விழவி னன்ன"—அகம். 368: 16-18.

இதனால், இவ்விழாவிலே கொங்கர், தம்மிடையிலே மணிகளைக் கட்டிக்கொண்டு வீதியிலே ஆடுவரென்ற செய்தி அறிவிக்கப்படுகிறது. இவ்விவரம் வேறெங்கும் காணப்படவில்லை.

3. பரசுராமன் வேள்வி செய்த இடம் செல்லூர் என்பது:

"கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் குழூஉச்சமந் ததைய
மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன் றரிநினின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல யாவரும்
காண லாகா மாணெழி லாகம்"—அகம் 220: 3-9.

இப்பகுதியால் பரசுராமன் மன்னவரை அழித்து மிகமுயன்று அரிதாக வேள்வி செய்தானென்றும் அவ்வேள்வி செய்த இடம் செல்லூரென்றும் அவ்வேள்வியின் யூபத்தம்பத்தின் இடைப்பகுதி யாருக்குந் தெரியாதவாறு தருப்பைக்கயிற்றால் மறைத்துக் கட்டப் பட்டிருந்ததென்றும் தெரியவருகின்றன.

4. மதுரைவீதிகள் தூயனவாயிருந்தன வென்பது:

"கதிர்விரியா வைகலிற் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமூற்றம் போலநின் மெய்க்கட்
குதிரையோ வீறியது"—கலி. 96.

இவ்வடிகளால் மதுரையிற் பெரிய வீதிகளெல்லாம் விடியற் காலத்தே அலகால் சீத்துக் குப்பை வாரித் தூயனவாக்கப்பட்டு வந்தனவென்பது அறியப்படுகின்றது.

5. வியாழமும் வெள்ளியும் அரசியலால் இயற்றின ரென்பது :

"கறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கும் அவையெடுத்
தறவினை யின்புறூஉ மந்தண ரிருவருங்
கிறம்வீழ்பு செய்தியி னானெறி"—கலி. 99.

இதனால், கள்ளுண்டலை நீக்குதலையே அறமாகக்கொண்டு தேவகுரு தேவருக்கும் நீக்காமையையே அறமாகக்கொண்டு அசுரகுரு அசுரருக்கும் நூலறிவுறுத்தின ரென்று தெரிகின்றது.

6. ஒட்டகம் வெள்ளென்பைத் தின்று பசிதீரு மென்பது:

"குறும்பொறை யுணங்குந் ததர்வெள் ளென்பு
கடுங்கா லொட்டகத் தல்குபசி தீர்க்குங்
கன்னெடுங் கவலைய கானம்" —அகம். 245: 17-19.

இதன்பொருள் ஆராயத்தக்கது.

இவையன்றியும் இவர் பாடலால் திருமாவுண்ணி என்பவள் ஒரு நகிலறுத்தாளென்பதும் காழூரில் ஒரு பூதம் வேங்கை தந்ததென்பதும் முதலிய மற்றுஞ் சில அரிய செய்திகளும் மகளிர் கூந்தலை ஆடவர்களுள் அவர் கணவரே தீண்டுதற்குரிய ரென்பதும் போர்க்களம் வென்றவர்க்கே உரியதென்பது முதலிய சில மரபுகளும் குதிரையுடலிற் சேதிகை குத்துதல், மார்பிற் பொறி யொற்றிக்கொண்டாளுதல், கூந்தற்குத் தகரமும் நானமும் பூசுதல் முதலிய பழைய வழக்கங்களும் அறியப்படுகின்றன.

அந்தணர் மணம் புரியுங்கால் எரிவலஞ்செய்தல், ஒருவன் தன் பிள்ளைக்குத் தன் தகப்பனார் பெயரை யிடுதல், குழந்தைகளுக்கு உணவு கூறிட்டு ஊட்டுதல், குழந்தைகளைக் கோயில்களுக்கு விளையாடச்செய்துவர அனுப்புதல், தெய்வத்தால் தெளிவித்தல், காமனுக்கு வேனிற்காலத்து விழா அயர்தல், ஓலைக்கு முத்திரையிடுதல் முதலியன பண்டேயுள்ள வழக்கமென்றும் விளங்குகின்றன.

வேறு காரியத்தை விட்டிருத்தலென்னும் பொருளில் வழங்கும் 'மினக்கெடுதல்' அல்லது 'மெனக்கெடுதல்' என்பதின் உண்மையுருவம் மினைக்கெடுதல் என்பதெனவும் 'திலகம்' என்பது ஓர் அணிகலனுக்கும் பெயரெனவும்* 'நோதிறம்' என்பது ஒரு பண்ணெனவும் அரியசொற் பொருள்களை இவர் தெளிவாகும்படி கூறியிருக்கிறார்.

மேலும் இவர் இயற்கையாகவும் செயற்கையாகவும் ஒவ்வோருறுப்பிலும் மனத்திலு நிகழுஞ் செயல்களை நுனித்தறிந்து ஆங்காங்கு உணர்த்துவார்; அதனை

"நெடிதுசே ணிகந்தவை காணினுந் தானுற்ற
வடுக்காட்டக் கண்காணா தற்றாகும்".—கலி. 99.

"இறந்த களியா னிதழ்மறைந்த கண்ணள்".—கலி. 92.

"ஓர்த்த திசைக்கும் பறைபோனின் னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனா".—கலி. 92.

---

* நேர்திறமென்று வழங்கும் பண்ணின் பெயர் நோதிறமென்று திருந்த வேண்டுமென்று தோற்றுகிறது.

" முகந்தானை, கொட்டிக் கொடுக்குங் குறிப்பு ".—கலி. 95.
என்பவை முதலியவற்றுல் உணரலாகும்.

இவர், தாம் கூறும் பொருளைக் கேட்போர் அதனைக் கண் டோர்போல இன்புறும்படி தன்மையை நவிலுதலில் மிக்க திற முடையவர்; இதனை

" மையற விளக்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெறு மழலையின் விளங்குபூ ணினைத்தாப்
பொலம்பிறை புட்டாழ்ந்த புனைநிலை யுருள்கலன்
நலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர
உருவெஞ்சா நிலைகாட்டு முடைகழ லத்துகில்
அரிபொலி கிண்கிணி யார்ப்பபோலா லடிதட்டப்
பாலோ டலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வரைர் கையி னியக்கி நடைபயிற்று
ஆலமர் செல்வ னனிசால் பெருமிறல்
மீபால வருமென் னுயிர் ".

என்பது முதலியவை புலப்படுத்தும்.

இவர் நுண்ணுணர்வுடையவர் ஓர்த்து இன்புறத் தக்க உள் ளுறை யுவமை கூறுதலில் வல்லவரென்பதை (66, 69, 78) ஆம் பாடல்களால் அறியலாம். மேலும் பிறர் கூறுதனவும் விபக்கத் தக்கனவுமான உவமைகளைப பற்பல இடத்து மிக்க பொருத்த முடையனவாக இசைத்திருக்கிறார். இதனை அடியிற் குறிக்கும் பாடற் பகுதிகளிற் காண்க.

(68) 24-25. (70) 20-21. (71) 24-26. (72) 1-8. (73) 1-5. (74) 8-9. (78) 15-16, 19-21, 25-26. (81) 25-27. (82) 26-27. (83) 26-31. (84) 10-11, 38. (86) 32-34. (88) 10-11. (89) 4-5, 8-9. (92) 27-29. (96) 22-24,27-29. (98) 1-3. (99) 4-5, 18-21. நகவளவி னுட்பட்டவை பாடலினெண். மற்றவை அடியினெண்.

இவருடைய பாடல்களில் மற்றும் பல அணிகளும் நகைச் சுவையுமுண்டு. இவரது பாடற்கருத்தைத் திருவாசகவடிகள் வாக் கிலும் வைத்துள்ளது.

இவர் இங்ஙனம் பல நயமுமுறச் செய்யுளியற்றலி லன்றியும் பொருள் கூறுதலிலும் பலரினு மேம்பட்டவரென்பது இறையனு ரகப்பொரு ளுரையின் முற்கூற்றிலுள்ள வாக்கியத்தால் விளங்கும்.

ச. சோழ னல்லுருத்திரன்.

இந்நூலின் நான்காம் பகுதியாகிய முல்லைக்கலி 17 பாடல் களையும் பாடிய ஆசிரியராகியற் பெயர் உருத்திரனென்பது. உருத் திரனெனப் பட்டார் தமிழ் நூல்களுள் இன்னும் சிலருளர். அவர் சேரன் செங்குட்டுவனோடு பொருத வீரனான உருத்திரனும் கம்ப ரால் புகழப்பெற்ற ஓரங்கனுட்டுப் பகைப்பணிப் பகைஞனாகிய உருத் திரனுமாவர். இவ்வாசிரியர் சோழர்குடியிற் றோன்றியவரும் தமிழ்ப் புலமை சான்றவருமாவர்.

உருத்திரனென்னும் பெயராலும் முல்லைத் திணையைப் பாடு மிடத்து உவமைமுகத்தால் இந்திரன் பிரமன் முருகன் பலராமன் முதலியவரை ஒவ்வோரிடத்திற் கூறியிருத்தல்போலாது அந்நிலத் துக்குத் தெய்வமாகிய திருமாலைக் (கண்ணனை) கூறியிருத்தல் போலவே பலஇடத்தும் சிவபெருமானைப் புகழ்ந்து எடுத்துக் கூறுத லாலும் இவர் சிவபெருமானருளால் தோன்றியவ ரென்றும் சிவ பெருமானிடத்துப் பத்திமையுள்ளவ ரென்றும் ஊகிக்கலாம்.

குறுந்தொகை 274-ஆவது செய்யுளின் பின் அதனை இயற்றிய ஆசிரியர் பெயரைக் குறிக்குமிடத்து. உருத்திரன் என்ற பெய ரொன்று காணப்படுகின்றது. அஃது இவரைக் குறிப்பதென்பர். ஆனாலும் உருத்திரனென்பது அழிக்கற் கடவுட்கே பெரும்பாலும் வழக்காதல்பற்றி இவன் அத்திய தொழினனல்லன் என்றற்கு நன்மையென்னும் அடைமொழியை முன்சார்த்தி கல்லுருத்திர னென்று வழங்கினர் போலும். புறம் 190-ஆவது செய்யுளின்பின் இஃது இன்னவர் பாட்டு என்னுமிடத்து, 'சோழன் கல்லுருத்திரன் பாட்டு' என்று காணப்படுதலால் இவர் சோழர்குடியிற் றோன்றியவ ரென்று தெரிகின்றது. 'அருஞ்சோழ, னல்லுத் திரன்முல்லை' என வருதலுங்காண்க. இவர் செய்யுளென்று தெரிந்தவை இந்தப் பத் தொன்பதுமே.

ருத்திரனென்பது, உருத்திரனென்று ஆதலன்றியும் ருதிரம் ரேகையென்பன முதன் மெய்யொழிந்து உதிரம் ரேகையென்றதல் போல உத்திரன் என்றுமி, அடைமொழியொடு சேர்ந்து கல்லுத் திரன் எனவும் இவரது பெயர் வழங்கும்.

இவர் சோழர்குடியிற் றோன்றியவரே யானாலும் இவர் அரசுரிமை பெற்றிருந்தாரென்று துணிய இயலவில்லை. இவர் பாடல்களைப் பொதுவாக நோக்காது கூர்ந்துநோக்கின் அவற்றுட் சில, இவர் அரசுரிமை பெற்றிருந்த சோழன் முதலியவரால் துன்புறுத்தப்பட்டு அவர் பால் வெறுப்பும் பாண்டியனால் இன்புறுத்தப்பட்டு அவன் பால் விருப்புமுடையவரா யிருந்தாரென்ற உணர்ச்சியை உண்டாக்கும்படி இருக்கின்றன.

"விளைபதச் சீரிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொடு
இயைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ விடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற் றொருத்த ன்ல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைக லுளவா கியரோ."

என்னும் புறநானூற்றுச் (190) செயயுள் குறிக்கும் பொருளையும்,

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்".

என்னும் இந்நூற் செய்யுட்பகுதி கூறும்பொருளையும் சேர்த்து உய்த்துணர்பவர்க்கே இச்செய்தி புலனாம். இவ்வூகத்திற்குக் காரணம் சோழன் முதலியவரிடத்து வெறுப்புத் தோன்றாவிடின் பாண்டியனைப் புகழுதற்குப் பல செய்திக ளிருப்பவும் சோழசேரர் நிலத்தை அவன் கைப்பற்றினானென்று இயன்மொழி கூறுதல் இன்றியமையாததன் றென்பது முதலியவை.

பாண்டிநாடு, வன்புலக் காட்டு நாட்டை மிகவுடையதாயிருந்தமையின் இவர் அங்கே பழகி முல்லைவளங்களை நன்கறிந்தார்.

இவர் முல்லைக்கருப்பொருளைக் கூறுமிடத்து ஆயர், துவராடையுடுப்பவரென்றும் காயாம்பூங் கண்ணியையும் பல மலர்களாலாகிய கண்ணியையும் சூடுபவரென்றும் பசுவினத்தையும் ஆட்டினத்தையும் மிக்குடையவரென்றும் அதனை மேய்த்தற்கு அந்நிரை முன்

கோலனென்றி நிற்பவனென்றும் ஏறு தழுவும் விழாவைக் கொண் டாடுபவனென்றும் அதற்குப் பறையறைவிப்பவ னென்றும் அவ் விழாவில் தழுவவிடும் ஏறுகளின் கொம்புகளை மிகக் கூரியனவாகச் சீவிவிடுபவ னென்றும் மிருந்த சினமுடைய வலிய கொல்லேறுகளை யும் அஞ்சாது தழுவுபவனென்றும் தழுவுங்கால் ஈர்த்துறைகளிலும் மரத்தினடிகளிலுமுள்ள தெய்வங்களை முறையாகத் தொழுபவ னென்றும் கறத்தற்கரிய பசுக்களைக் கறத்தற்குரிய கழ னென்னுங் கருவியையும் சூட்டுக்கோல் உறி முதலியவறறையும் உடையவ னென்றும் கொன்றைக் குழல் ஆம்பற்குழல் முதலியவற்றை வாசிப பவனென்றும் மணஞ்செய்யுங் காலத்தில் வீட்டிற்குச் செம்மண்பூசி இளமணல் பாப்பிப் பெண்ணெருமைக் கொம்பைத் தெய்வமாக வழி படுபவ னென்றும் காதெருமன்றத்துக் குரவை ஆடுபவனென்றும் தெய்வ பத்தியும் இராசபத்தியு மிக்கவனென்றும் கூறியிருக்கிறார்.

ஆயச்சிறுமியர், நீலவாடையுடுத்துக் குழைமுதலிய அணிகளை அணிந்த தோட்டங்களில் ஆயத்தோடு சிற்றிலிழைத்து முல்லைமலர் முதலியவற்றைக் கொய்து கோதையும் இழையும் கழையும் புனைந்து இன்பமாக விளையாடி வந்தனரென்றும் கன்றுகளை மேய்த்துக் கட்டினரென்றும் தமக்கு உணவு முதலியன கொண்டுபோய்க் கொடுப்பவனென்றும் கொல்லேற்றை அஞ்சாது தழுவும் வீரமுடைய ஆயரையே மணக்கவிரும்பி அவர் ஏறு தழுவுதலைப் பரண்மீதிருந்து பார்த்து வந்தனரென்றும் தாம் மணக்கவிரும்பியவரது மாலையைத் தாம் மறைவாகச் சூடினரென்றும் தம்முடைய களவொழுக்கம் தாயர்க்குந் தெரியக்கூடாதென்று அஞ்சி மறைத்துவந்தன ரென் றும் தாம் விரும்பின கணவனைத் தம்மையீன்றவர்களின் உடம்பாடு பெற்றே மணப்பரென்றும் இருமணங் கூடாரென்றும் தெய்வங் களுக்குப் பால்மடைகொடுப்பவ னென்றும் தயிர் கடைபவனென்றும் வெண்ணெய் தேய்த்துக்கொள்பவ னென்றும் தயிர்மோர் விற்பவ னென்றும் கூறியிருக்கிறார்.

வெள்ளை, சில்லை, சேய் (செந்நிற ஏறு), காரி (கருநிற ஏறு), குரால் (= செங்காரி), புகர் (கபிலநிறவேறு) புள்ளி வெள்ளை (=புள்ளி களையுடைய வெள்ளேறு, ஆகிய வேறுகளையும் பலநிறங்கலந்த ஏறு களையும் அவற்றின் சினமும் விரைந்துவருகையும் மேம்பாடும் இயல்புந் தோன்றக்கூறிப் பாராட்டியிருத்தல் படித்து இன்புறற் பாலது.

கொல்லேறு தழுவுஞ் செய்தியைப் பழைய நூல்களுள் இந் நூலிற்போல வேறு நூல்களால் அறிய இயலாது.

மா ஆல் கடம்பு கொன்றை குருந்து காஞ்சி வெட்சி காயா பிடவு குல்லை கோடல் தோன்றி பாங்கர் நறவு மூல்லை தளவு முதலிய மரஞ் செடிகொடிகளை இவர் எடுத்துரைத்திருக்கின்றார்.

அன்றியும் இவர் பாடல்களால் நிலத்தின் தென்பாகத்தைக் கடல்கொண்ட தென்னும் பழஞ்செய்தியும் பாலைத் தயிராகத் தோய்த்தல் முதலியன இன்றியே அதிலிருந்து நெய்கடைந் தெடுத்தல் உண்டென்பதும் அப்பாலை நூல்களால் பயன் சிறிதுமில்லை யென்பது முதலாகிய அரிய செய்திகளும், ஆயர் மணஞ்செய்யுங் காலத்துப் பெண்ணைருமையின் கொம்பை வைத்து வழிபடுவரென் னும் பழைய மரபும், ஓரசன் பிறவரசரை வென்று அவரிடத்தைக் கைப்பற்றியதற்கு அறிகுறியாகத் தன்கொடியை அவ்விடத்திற் பொறித்தலும் கடன் கொடுத்தவர் கடன் வாங்கினவருடைய பொருள்களை விசாரித்தலும் காணுமற்போன தம்பொருளை மறுபடி பெற்றவர் மகிழ்ச்சியுறுதலும் முதலானவை முன்பேயுள்ள வழக் கங்க ளென்பதும் அறியப்படுகின்றன.

இவர் இந்நூலில் ஆயர் ஆய்ச்சியர் கூற்றுகளுள்ள இடத்து,

"மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு". (110)

"கொடுந்தொழுவி னுட்பட்ட கன்றிற்குச் சூழுங்
சடுஞ்சூலா நாகுபோ னிற்கண்டு நாளும்
நடுக்கஞ ருற்றதென் னெஞ்சு". (110)

"தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டுங்
கடுவய நாகுபோ லேக்கித் தொடுவாயில்
நீங்கிச் சினவுவாய்". (116)

"கன்றுசேர்ந் தார்கட் கதவிற்றுச் சென்றுங்கு
லன்கண்ண ளாய்". (116)

"கனைபெய லேற்றிற் றலைசாய்த்து". (116)

என அவர் கூற்றுக்குத் தக அவர் இயல்பாக அறியும் பொருள்களை இவர் உவமையாகக் கூறியிருத்தல் மிக்க இன்பந் தருவதாகும். மற்றும் இவர் கூறும் உவமையும் அத்தகையதே.

ஒருவர் பரபரப்புற்றுக் கையை உதறிக்கொண்டு வெளியே செலவதற்கு,

"கெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு"—என்றும்,

தாம் ஒளித்த பொருள் தம்மிடத்திருந்து வெளிப்பட்டதற்கு,

"காணுமை யுண்ட கடுங்கள்போ மெய்கூர
காணுது சென்று நடுங்க வுரைத்தாங்கு"

என்றும் வருவன முதலியவற்றை நோக்குக.

இவர் பாடல்களில் சாமுத்திரிகா லக்ஷண நூற்செய்தியும் நிமித்த நூற்செய்தியும் ஆங்காங்குப் பல புராண கதைகளும் வந்துள்ளன. குடஞ்சுட்டு என்பது பசுவுக்குப் பெயராயும் வழக்கு வீழ்ந்தன என்னுஞ் சொற்களுள் 'இதோளி' என்பது முதனீண்டும் வந்திருக்கின்றன.

ரு. நவ்வந்துவனார்.

இந்நூலின் ஐந்தாம் பகுதியாகிய நெய்தற்கலி 33 செய்யுட்களையும் செய்தவரது இயற்பெயர் 'அந்துவன்' என்பது இவர் கல்வி யறிவொழுக்கங்களாற் சால்புற்றபின் சிறப்புப்பொருளை யுணர்த் தும் 'ந' என்னும் இடைச்சொல்லை முதலிலும் உயர்வு குறித்துவரும் 'ஆர்' என்னும் இடைச்சொல்லை ஈற்றிலுஞ் சேர்த்து *நவ்வந்துவனாரென்று வழங்கப் பெற்றார். இப்பெயரின் முன் 'ஆசிரியன்' என்பதும் † 'மதுரை யாசிரியன்' என்பதும் சேர்ந்தும் இவர் பெயர் வழங்கும்.

இவர் மதுரையாசிரியர் என்று சிறப்பிக்கப் பெறுதலானும் மதுரையையும் அதனையடுத்த திருப்பரங்குன்றத்தையும் மதுரையின்கண் ஒழுகும் வையையாற்றையும் அதன் கரைக்கண்ணதாகிய திருமருதந் துறை முதலியவற்றையும் புகழ்ந்து கூறுதலானும் இவருடைய ஊர் மதுரையென்று தோற்றுகிறது.

இவருடைய பெயர் ஆசிரியரென்ற சிறப்புப் பெயரை அடைமொழியாகக் கொண்டு வருதலால் இவரை அந்தணரென்பர்.

இவர், (பரி. 8:2; கலி. 1; 129:1-3; 133:3-5; 142:24-28; 150.) சிவபெருமானையும், (பரி. 6:55,69;8) முருகக் கடவுளையும், (பரி. 8:1-2; கலி. 119:3; 123:3; 127:4; 145:64) திருமாலையும், (கலி. 145:64) திருமகளையும், (கலி. 124:1-3;) நம்பி மூத்தபிரானையும், (கலி. 124:1; 134:1-3) கண்ணனையும், (பரி. 8:3) பிரமனையும், (பரி. 8:7) திசை காவலரையும், (பரி. 8:4-7) முப்பத்து மூவரையும் உயர்த்துப் புகழ்தலாலும் (பரி. 11:78;) அந்தணர்கள் விழவுதொடங்குதலையும் (பரி. 11:84-85; கலி. 130:9) ஆவுதி பண்ணுதலையும்; (கலி. 126:3-5) அந்தணத் துறவிகள் மாலைக் காலத்தில் முதுமொழி நினைந்து ஒலியும் அசைவுமின்றி நிட்டையிலிருத்தலையும் (பரி. 11: 81-83,91) கன்னியர் தைந்நீராடுந் தவத்தையும் எடுத்துரைத்தலானும் மற்றும் சில காரணங்களாலும் இவரை வைதிக சமயத்தவரென்று துணியலாம்.

---

* 'நன்மை' என்னுஞ்சொல்லை முதலிற்சேர்த்ததாகக் கொண்டு 'நல்லந்துவனார்' என்றே வழங்குவாரும் உளர். † 'மதுரை யாசிரியர்' என்றும் பாடம்.

இவர், (பரி. 8.) திருப்பரங்குன்றத்துக் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் முருகப்பெருமானைத் தரிசிப்பதற்காக முப்பெருந் தேவரும் முப்பத்துமூவரும் எண்டிசை யிறைவரும் விண்டிகழ் முனிவரு முதலானவர்கள் மண்மிசை வந்தனரென்றும் மக்கள் அங்கு வந்து தாம்தாம் விரும்பும் வரங்களைப் பெறவேண்டி வழி படுவாரென்றும் அத்தெய்வ சம்பந்தமாக உறுஞ் சூளுறவுக்கு அஞ் சுவரென்றும் பலவகையாகப் பாராட்டிக் கூறுதலால் இவர் முருகக் கடவுளிடத்து மிக்க பத்திமை யுடையவரென்பது வெள்ளிடை மலையென விளங்கும்.

இவரே இந்நூற் கடவுள் வாழ்த்துச் செய்யுளையும் பாடி இந் நூலைத் தொகுத்தவரென்பது முதற் சம்புட முகவுரைக்கண் கூறப் பெற் றிருக்கிறது.

அம்முகவுரையிலுள்ள * 'நாடும் பொருள்சான்ற' † 'பெருங் கடுங்கோன் பாலை' என்னுமுதலியுடைய வெண்பாக்களானும் இந்த லுரையில் நச்சினார்க்கினியர் இவ்வாசிரியரைக் குறிக்குமிடத்து நெய்தற்றிணையில் மாத்திரம் ‡ 'செய்யுள் செய்தார்' என்றும் மற் றைத் திணைகளிலெல்லாம் ‖ கோத்தார் என்றும் விதந்தோதுதலா லும் இவர் பாடியவை இவையென்பதும் தொகுத்தது இவரென்ப தும் வலியுறும். (தொல். அகத். சூ. 13. நச். உரையும் பார்க்க.)

இவர் பாடல்கள் இந்நூலில் (1, 118-150) முப்பத்து நான்கும் நற்றிணையில் (88) ஒன்றும் பரிபாடல் முதலிருபத்திரண்டனுள் (6, 8, 11, 20) நான்கும் அகத்தில் (43) ஒன்றுமாக நாற்பது பாடல்கள் காணப்படுகின்றன. இவையன்றித் திருவள்ளுவ மாலையி லுள்ள 'சாற்றிய பல்கலியும்' (18) என்னும் வெண்பாவும் இவரியற் றிய தென்பர்.

இவர் (கலி.139:1-4; 140:17-18) சான்றோரியல்பையும், (கலி. 140:21-22) சான்றோரவையி னன்மையையும் புகழ்ந்து கூறுதலால் இவருக்கு அவர்பாலுள்ள நன்மதிப்புப் புலனாகின்றது. இவர், (கலி. 138: 30-31) மக்கள் அருந்தவஞ் செய்தலால் சுவர்க்கமுறுவ ரென்று தவத்தைச் சிறப்பித்தும், (கலி. 149:1-7, 10-11) ஊழ் வினை ஊட்டாது விடாதென்பதனால் தீவினை செய்யலாகாதென்றும்,

* பக்கம் 7. † பக்கம் 9. ‡ பக்கம் 893. ‖ பக்கம் 11, 12, 347, 575.

(கலி. 149:4-5,) ஒருவன் கற்பித்தவர் நெஞ்சுவருந்தக் கொடுத் தண்ணு தொழுகின் அவன் கல்லிக்குக் கேடுண்டாமென்றும் வலி யுறுத்தியும் கூறுகின்றார். இவர் (கலி. 133: 6-14) நீதிகளைச் சுருக் கித் தெளிவாகக் கூறுதலிலும் (கலி. 125:1-4; 142: 6-8; 144: 70-73.) இயற்கையை எடுத்துரைத்தலிலும், (கலி. 138: 15-17, 21-23; 141:7-8; 146: 49-55.) சிறப்பாக உவமை கூறுதலிலும் வல்லவர்.

இவர் (கலி. 146:52-55) வானம்பாடி மழைத்துளிக்கு அல மந்து அதனைப் பெற்றபோது அல்லல் தீருமென்றும் (கலி. 143: 10-13) வேடர் வஞ்சனையாக யாழை வாசித்து மான்களை மனமகி ழும்படி செய்து பின்பு பறையறைந்து அவற்றினுயிர் நீங்கச் செய்வ தென்றும் (கலி. 121: 7-9) சுரும்பருப்புப் பலகையைக் கோத்து ஒரு வகையாழ் செய்வதுண்டென்றும் கூறியிருக்கிறார்.

(கலி. 147:8-9) மகளிருக்கு உயிரினும் நாண் சிறந்ததென்றும், (கலி. 142-147) அவர் மிக்க காமத்தால் வருந்துங்கால் அறிவழிந்து அங்ஙன் முதலியவற்றையு மிறந்து பலபொருளையும் விளித்துக் கலங்கி மொழிவரென்றும், (கலி. 142:24) அவர் தம் கணவர் பிரிந் திருக்குங் கால் அவர் வருகையை அறிய விரும்பிக் கூடற்சுழி யிழைப்பரென்றும், (கலி. 138-141) ஆடவர் மிக்க காமத்தால் மட லூர்தல் முதலியன செய்து தாம் விரும்பிய கன்னிபரை அடைவ தென்றும் இவர் உரைத்துள்ளார்.

(கலி. 138-141.) இவர் மடலேறுதற் செய்தியை மிகப் புனைந் துரைத்திருத்தலும் (பரி. 11:1-15) வானநூற் செய்தியையும், (பரி. 6;11;20) நீர் விளையாட்டுச் செய்தியையும் (கலி. 136) சூதாட் டச் செய்தியையும் ஒவ்வோரிடத்துக் கூறியிருத்தலு முதலியவை இவர் பலவற்றையும் சுவைபடப் பாடும் ஆற்றலுடையவ ரென்ப தற்குச் சான்றும்.

(கலி. 118:1-20; 119; 120:1-9; 121:1-5; 126:1-5; 129: 1-7; 130:1-16; 134:1-10; 143:36-41; 148:1-19.) இவர் பாடி யிருக்கும் மாலைக்கால வருணனை மிக்க நயமுடையது.

இவர் பாடல் இசைக்கு முரியனவான பரிபாடலின் கண்ணும் இந்நூலின் கண்ணும் பல காணப்படுதலானும் இவரை மதுரை

மருதனிள நாகனார் (அகம். 59.) தம் பாடலுட் கூறிப் பாராட்டுதலாலும் இவர் கூறிய கார்கால வருணனையைக் கல்வியிற் சிறந்தவனெனப் பெற்ற கம்பர் தாமும் அப்படியே கொண்டு கார்காலப் படலத்து அமைத்திருத்தலாலும் சில சொற்களின் பொருள்களை அறிவுறுத்தற்கு, திருக்குறளுரையில் பரிமேலழகரும் தொல்காப்பிய வுரையில் பேராசிரியர் முதலியவர்களும் இவர் ஓவ்வோரடியிலமைத்துள்ள சொல்லையும் பொருளையுமே எடுத்துக்கொண்டு விரித்துக் கூறி விளக்குதலாலும் இவரை இந்நூலுக்கு உரைகண்ட மதுரை யாசிரியராகிய நச்சினார்க்கினியர் (கலி. பக். 893) மிகுத்துப் புகழ்தலாலும் இவருடைய பாடலைச் சிறந்த புலவர் பலரும் மிகமேலாக மதித்தனரென்பது தெற்றென விளங்கும்.

நச்சினார்க்கினியர்.

இக் கலித்தொகைக்குப் பொருள் கண்டவர் நச்சினார்க்கினியரென்பவர். இவரது ஊர் பாண்டிநாட்டதாகிய மதுரை; இவர் அந்தணர் மரபில் பாரத்துவாசர் குடியில் தோன்றியவர். இவ்வுரை * மிகச் சிறந்ததென்பர். இவர் தம் பரந்த அறிவாலும் ஒழியா முயற்சியாலும் இந்நூற்கன்றியும் பத்துப்பாட்டு, சீவக சிந்தாமணி † தொல்காப்பியமாகிய பல துறைப்பட்ட தமிழ்ச் செய்யுணூல்கள் முழுவதற்கும் ‡ உரைகண்டு தமிழ் மக்கட்குப் பேருதவி செய்தவர். தமிழ் விளங்குவதற்காக இவர் பல்லாண்டு நிலவுலகத்தில் வாழ வேண்டுமென்று உலகத்தால் வேண்டப்பெற்றவர். இவற்றால், இவர் வாணாளை வீணாளாக்காத பெரியாரென்று புகழத் தக்கவரே.

சிறந்த அறிவினரான பேராசிரியர், தம் கல்வியறிவை உலக மறிந்து மதிக்க நினைந்து பொருளெழுதி வந்த குறுந்தொகைக் கண் இருபது பாட்டிற்குப் பொருளெழுதாதொழிய இவர் அந்தப் பகுதிக் கெல்லாம் ஏற்பப் பொருளுரைத்திருத்தல், பிறவுரையாசிரியர் 'தொல்காப்பிய வுரைக்கண் வந்துழிக்காண்க' என்று மேற்கோள் காட்டாது விட்ட பகுதிகட்கு இவர் மேற்கோள் காட்டியும் விளக்கியுமிருத்தல் முதலியவையும் தமிழ்க் கல்வி மிக்கவர் பலரினும் இவரே மிக்கவரென்பதற்குத் தக்க சான்றாகும். இவர் சிறந்த தமிழ்ப் பாவமுதங்களைச் சுவை தெரிந்துண்டு மனத்தே தேங்க வைத்தவர். இவர் தொல்காப்பிய வுரை முதலியவற்றில் தமிழ் நூல்கள் பற்பலவற்றிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிறார். அந்நூல்களின் பெயர் பிரஹ்மஸ்ரீ மஹா மஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாதையரவர்களால் பத்துப்

---

* உரைச்சிறப்புப் பாயிர அகவல் 17-30 அடி பார்க்க.

† திருக்கோவையாருரை இவரதென்னும் தவறான கொள்கை இப்போது மாறிவிட்டது.

‡ இவர் தம்முரையை மீட்டும் பார்த்து மாற்றியதில் சிற்சில தடுமாற்றங்கள் உள்ளன.

பாட்டுசிவக சிந்தாமணி இவற்றில் எழுதப்பெற்றிருக்கும் நச்சினார்க்கினியர் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளன. அன்றியும் இவர் வடமொழிப் பாலவாகிய வேதங்களின் பொருளையும் பலவகைக் கலைகளையும் அறிந்தவர்.

திருக்குறளுரைகாரருள் ஒருவராகிய நச்சரென்பவரும் இவரும் ஒருவரே யென்று நினைப்பார் சிலரும், மற்றொருவராகிய பரிமேலழகரும் இவரும் ஒரு காலத்தவரென்றும் 'குடம்பை தனித்தொழிய' என்னுந் திருக்குறளில் குடம்பை யென்பதற்கு அவரைத்த பொருளே சிறந்த தென்றும் தமக்கு அது தோன்றவில்லை யென்றும் கூறி இவர் வருந்தினரென்றும் கூறுவார் சிலரும், திருநாவுக்கரசு நாயனாரைப்போல இவரும் இடையே சைன சமயத்தராயிருந்தாரென்று ஊகிப்பார் சிலரும், மாயனாரியாரைப்போல இவரும் தம் மாணாக்கர் பலரையும் ஏவி அவர்களைக்கொண்டு செய்விக்க வரைகளைக் கேட்டுச் செப்பஞ் செய்து அவற்றைத் தம் முரையாகக் கொண்டா ரென்றிசைப்பார் சிலரும், இவர் கூறும் உரையில் சிற்சில இடத்து மாட்டேறுமிகக் காணப்படுதலாலும், சிற்சில இடத்து கருத்து மிக்க ஆழமுடைத்தாதலால் அறிதலரிதாயிருந்தலாலும், இதனில் வெறுப்பும் மற்றொன்றில் விருப்புங் கொடலாலும், இவர்மேற் கூசாமல் குற்றமேற்றுவார் சிலரும் உளர்.

இவருரைகளில் பயிலுங்காலத்தில், அவற்றிலுள்ள நன்மை புன்மைகளைப் பலருமறியக் காரணத்தொடு விளக்கி 'நச்சினார்க்கினியருரை யாராய்ச்சி' என ஒன்று எழுதவேண்டு மென்ற கருத்துண்டாகின்றது. எவரேனும் அதனைச் செய்வதற்கு இன்றியமையாத உதவிகளைச் செய்து ஊக்கமளிப்பின் இறைவனருளியிருக்கும் அறிவாற்றலால் அஃது இனிது நிறைவேறும்.

கலித்தொகையின் அபிப்பிராயம்.

சென்னைப் பிரஸிடென்ஸிக் காலேஜுத் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஶ்ரீ இ. வை. அனந்தராமையரவர்கள் நன்கு ஆராய்ந்து வெளியிட்ட 'கலித்தொகை' என்னும் அரிய பெரிய செந்தமிழ் நூலைப் பார்த்தேன். முன்னைப் பதிப்பினும் இவர்கள் பதிப்பு, பலநிறப்பட்ட ஆராய்ச்சி விளக்கமும் பெற்று ஒத்த சொல்லையும் பொருளையும் ஆங்காங்குப் பிறசங்கநூல்களினின்றும் வேறு தொன்னூல்களினின்றும் எடுத்துக்காட்டிச் சேறலால் எத்தனையோ முறையிற் திருத்தமும் மேம்பாடும் கொண்டு சிறந்துள்ளது. கல்வி வல்லார் கண்ட தமிழ்ப் பெருநிதியாகிய இவ்வகத்திணைநூல் உச்சிமேற் புலவர்கொணைச்சினர்க்கினியருரையுடன் இங்ஙனம் செவ்விதாக வெளியிடப் பெறுவதுதான் நூற்பெருமைக்கேற்ப தொன்றுகும். இப்பெருங் காரியத்தை இனிது நிறைவேற்றிய இவர்கள் நற்றமிழறிவு கற்றோரான் மிகவும் உயர்த்திப் பாராட்டத்தக்கது. இவர்கள் மேற்கொண்ட நூற்பதிப்புக்கு வேண்டும் பொருளைத் தமிழபிமானமுள்ள செல்வர்கள் உபகரித்து இவர்கட்கு ஊக்கமளிப்பது தமிழிற்குச் செய்யும் பேருதவியாகும்.

இங்ஙனம்:

ரா. இராகவையங்கார்,

ஸேது ஸமஸ்தான வித்வான்.

இராமநாதபுரம்.
டு - ச - ககூஉக.

புத்தக விளம்பரம்.

(இ. வை. அனந்தராமையர் பதிப்பு.)

(பெதர் வெய்ட்பேபர்.)

		ரூ. அ.
கலித்தொகை உரையுடன்,		
1-ஆம் சம்புடம் (பாலை, குறிஞ்சி)	....	5 0
2. ஆம் சம்புடம் (மருதம், முல்லை)	....	5 0
3-ஆம் சம்புடம் (நெய்தற்கலி, ஆசிரியர் வரலாறு அரும்பத ஆகராதிகளுடன்)	....	6 4

(இளைஸ் பேபர்.)

கலித்தொகை மூலம்.	....	....	1 4
களவழி நாற்பது (பழைய உரையோடும் புதிதாக எழுதிய குறிப்போடும் ஒப்புமைப் பகுதியோடும் பிரயோக விளக்கத்தோடும் அரிய முகவுரை யோடும் கூடியது.)	...	....	0 8
ஐந்திணை யெழுபது 66 செய்யுளும் அவற் றுள் 24 செய்யுட்குப் பழையவுரையும் குறிப்புக்களும்; கைந்நிலையும்.	....	...	0 6

இவை கிடைக்கும் இடம்:—

வே. ராமகாதையர்,

3/6 பஸார் லேன்,

மயிலாப்பூர், சென்னை.

கோயில் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

கலித்தொகை

மூலமும்

நச்சினார்க்கினியருரையும்.

ஐந்தாவது நெய்தற்கலி.

(கக௪.) வெல்புகழ் மன்னவன் விளங்கிய வொழுக்கத்தா
னல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்றுய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போற்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
நி வானுது கலுழ்கொண்ட வுலகத்து மற்றவ
னேனையா னளிப்பான்போ லிகலிருண் மதிசீப்பக்
குடைநிழ லாண்டாற்கு மாளிய வருவாற்கு
மிடைநின்ற காலம்போ லிறுத்தந்த மருண்மாலை ;

கூ மாலைநீ, தூவறத் துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த
போதுபோற் குவிந்தவென் னெழினல மெள்ளுவா
யாய்நிறை வண்டார்ப்பச் சினைப்பூப்போற் றளைவிட்ட
காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய் ;

கஙு மாலைநீ, தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்
செவ்வழியாழ் நரம்பன்ன கிளவியார் பாராட்டும்
பொய்தீர்ந்த புணர்ச்சியுட் புதுநலங் கடிகல்லாய் ;

சஎ மாலைநீ, தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்பப்
பகைமிக்க நெஞ்சத்தேம் புன்மைபா ராட்டுவாய்

• தகைமிக்க புணர்ச்சியார் தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகந் திறந்தன்ன முறுவலுங் கடிகல்லாய் ;

எனவாங்கு;

உஉ மாலையு மலரு நோனு தெம்வயி
னெஞ்சமு மெஞ்சுமற் றில்ல வெஞ்சி
யுள்ளா தமைந்தோ ருள்ளு
முள்ளி லுள்ள முள்ளு ருவந்தே.

இது பிரிவிடையாற்றத தலைவி மாலைப்பொழுது கண்டு அதனெடு புலம்பிந் தோழிகேட்ப அதனெடு புலந்தது.

இதன் பொருள்.

(க)வெல்புகழ் மன்னவன் விளங்கிய வொழுக்கத்தா
னல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் (உ)தான்செய்த
தொல்வினைப்*பயன் றுய்ப்பத் துறக்கம்வேட்†டெழுந்தாற்போற்
(ரு)பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலிசேர
ரு வானது ‡கலுழ்கொண்ட வுலகத்து மற்றவ
னேனையா னளிப்பான்போ லிகலிருண் ‖மதிசிப்பக்

க. (அ) "வென்றிப் பல்புகழ்" மலை. நெசை. (ஆ) "மறம் வீங்கு பல்புகழ்" பதிற். கஉ: அ. என்பவைகளும் (இ) இந்நூற்பக்கம் கசரு: ச - ஆம் குறிப்பும் ஒப்புநோக்குக.

உ. (அ) "அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார், சிறந்தோ ருலகம் படருநர் போல" பரி. ககஃ: கo - கக. (ஆ) "வினைந்தார் வினையின் விழுப்பயன் றுய்க்குந், தளங்கா விழுச்சீர்த் துறக்கம்" பரி. 'வானூர்' சசு - சஎ. (இ) "புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க மென்னுமீ தருமறைப் பொருளே" (ஈ) "எண்ணிய வின்ப மன்றித் துன்பங்க ளில்லை யான, புண்ணியம் புரிந்தோர் வைகுந் துறக்கமே போன்ற தன்றே" (உ) "மாண்டதோர் நலத்திற் ருமென் றுணர்த்துதல் வாய் மைத் தன்ருல், வேண்டிய வேண்டி னெய்தி வெறுப்பின்றி விழைந்த துய்க்கு, மீண்டரும் போக வின்ப மீதில தியாண்டுக் கண்டா, மாண் டது துறக்க மஃதே யருமறைத் துணிவு மம்மா" கம்ப. நகரப். டு. சவரிபிறப்பு. க. கடருவு. கசு.

ரு. "கல் சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு" அகம். கஉo: டு.

(பிரதிபேதம்) * பயன்றுய்ப்பான், † உழந்தாற், ‡ கலிழ்கொண்ட, ‖ மதியேய்ப்ப, மதி நிறைப்ப.

குடைநிழ (க)*லாண்டாற்கு மாளிய வருவாற்கு
மிடைநின்ற காலம்போ லிறுத்தந்த மருண்மாலை

எ - து: (உ)பகைவரிடத்துப் போர்த்தொழில்கிழத்த வல்ல வினைய ஒழுக்கத்தாலே வெல்கின்ற புகழையுடைய அரசன் கல்ல தருமநூனெறி யாலே (ங) பல்லுயிர்களையும் பாதுகாத்துத் தீவினையால் உளதான நடுக்கம் மனத்திலில்லையாம்படி தான்செய்த பழவினையின்பயனை நுகர்தற்குச் சுவர்க் கத்தை விரும்பிப் போனதுபோல பலகதிரையுடைய (ச) ஞாயிறு தனக்குப் பகையாகிய இருளைக் கெடுத்து உலகத்திற்குப் பகற்பொழுதை முறை மையாற் செலுத்தி மலையிலே சென்று சேராநிற்க, அமையாதே கலக்கங் கொண்ட உலகத்தினிடத்தே பின்னை †அவ்வரசனுக்குப்பகைவனெனிய அரசன் வந்து அவ்வுலகைச் சிறிதே அளிப்பான்போல, தனக்கு மாறுபாட்டை யுடைய இருளை மதி போக்காநிற்க, அந்தக்குடையால் நிழல்செய்து ஆண்ட அரசனுக்கும் அவ்வுலகை ஆளவரும் அரசனுக்கும் நடுவுநின்ற வருத்தந்தரு கின்ற காலம்போல வந்துவிட்ட மாலாய்! நீ மருட்சியையுடைய மாலையாய் இருந்தாயென்றாள். எ - று.

கூ மாலைநீ, (ச)‡தூவறத் துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த
போதுபோற் குவிந்தவென் னெழினல மெள்ளுவா

க. "புற்கென்ற ரந்தி புலைமலர்க்க ணீரரும்ப, நிற்கின்ற தந்தோ நிலங் காப்பான்-முற்கொண்,டடைகின்ற வேந்தர்க்கு மாண்டஞ்சி னேர்க்கு, மிடைநின்ற காலம்போ லின்று" நள. சுயம்வர. கoo.

உ. "விரியிருட் பகையை யோட்டித் ,திசைகளை வென்று மேனின், றெருதனித் திகிரியுந்தி யுயர்புகழ் நிறுவி நாளு, மிருநிலத்தெவர்க்கு மூள்ளத் திருந்தன னென்ன வீந்த, செருவலி வீர னென்னச் செங்கதிர்ச் செல்வன் சென்றான்" கம்ப. கங்கைப். ஈஎ.

ங. "மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப, தன்னுயி ரஞ்சும் வினை" குறள். உசூ.

ச. (அ) "விரிகதிர்பரப்பி.....மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென.....
.....அந்திவானத்து வெண்பிறை தோன்றிப், புன்கண்மாலைக் குறும் பெறிந்தோட்டி" சிலப். சு: க - உo.

ஞ. (அ) "இனந்தூய்மை தூவா வரும்" (குறள். சுஞஞ.) என்பதன் விசேட வுரையில், தூவென்பது பற்றக்கோடென்னும் பொருளில் வருதற்கு, 'தூவறத் துறந்தாரை' என்பதனை மேற்கோள் காட்டுவர், பரி. 'தாவென்பதையன்றித் தூவென்பதும் வலியென்னும் பொருளில் வருமென்பதை, (ஆ) "தூவறுத்தலின்" மது. கசஅ. (இ) "தூவெ திர்ந்து" பதிற். அக: கூசு. (ஈ) "தூவாகாது" (உ) "தூவறத் துறந்த னன்" (ஊ) "தூவற நீப்ப" கலி. கஎ: உo, கஉசு: கூ, கசக: கசு.

(பிரதிபேதம்) * லுண்டோற்கும், லுண்டார்க்கும். †அசனுடபகைவனெனிய. ‡தாவற.

யாய்சிறை வண்டார்ப்பச் சினைப்பூப்போற் றளைவிட்ட
(க)காதலர்ப் *புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்

எ * து: அதற்குக் காரணம் என்னெனில், நமக்கு வலியில்லையாம்படி நம்மைத் துறந்தவரை நினைக்கையினுலே (உ)கயங்கள்பூத்த போதுபோலே நின்னைக்கண்டு மனங்குவிந்த என்னுடைய அழகினையுடைய நலத்தை இகழ்கின்ற நீ அழகிய † சிறகினையுடைய வண்கேள் ஆரவாரிக்கும்படி முறுக்கு நெகிழ்ந்த கோட்டுப்பூப்போலே மன ‡நெகிழ்ந்த காதலரைக் கூடியிருக்கின்ற மகளிருடைய அழகைப் போக்கமாட்டாயென்று அதன் மருட்சி கூறினள். எ - று.

‖இதனுல், நீ வருந்தினவர்களை வருத்தியே விடுவையென்றும் × மகிழ்ந்தவர்களை மகிழப்பண்ணியே விடுவையென்றும் அதன் அருளின்மைநோக்கி மருட்சியையுடைய மாலையாய் இருந்தாயென்றுள்.

இறுத்தந்தமாலாய்! நீ மருண்மாலையாய் இருந்தாயென மேல்வரும் 'மாலைநீ' என்பனவற்றையும் இங்ஙனங்கூட்டிப் பொருள்கூறிக்கொள்க.

கஙூ (ங)மாலைநீ, தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்
(ச)செவ்வழியாழ் நரம்பன்ன =கிளவியார் பாராட்டும்
பொய்தீர்ந்த புணர்ச்சியுட் புதுநலங் கடிகல்லாய்

எ - து: கோவலருடைய தனித்தகுழலோசை தையென்னும் ஓசைப்பட ஒலிப்ப அதுகேட்டுக் குறைந்த நெஞ்சத்தை ÷யுடையேம் பக்கத்தேநின்று

என வருபவையும் வலியுறுத்தும். (எ) "தாவறத் துறத்தல்" கலி. கஉக: கூ-ஆம் அடிக்குறிப்புப் பார்க்க.

க. "தாழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்தக், காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்த,.....மாலைவந் நிறுத்தென" சிலப். சு: கஙூ - உ0.

உ. (அ) "கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது, வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட, கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற் கூம்பு வார்சை, நயப்பாரு நட்பாரு மில்" நாலடி. உகஙூ. (ஆ) "உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங், கூம்பலு மில்ல தறிவு" குறள். சுஉஙூ. (இ) "நலமிக வுயர்ந்தோர் தம்மை நண்புறத் தழுவிக்கொள்க, நிலவிய கயத்துப் பூவை நிகர்தரா துயர்ந்த கோட்டி, னலரென வவர்பானிற்க வாக்கமிக் கடுத்த காலை, மலர்வதும் வறங்கூர் காலைக் கூம்பலு மொழிக மைந்த" விநாயக. அரசியற்கை. ஙக.

ங. ஞாயிறு முதலியன சொல்லுந போலவும் கேட்குந போலவும் சொல்லி யமையப் பெறுமென்புழி, கேட்குந போலப் பொழுதொடு

(பிரதிபேதம்) *புணர்ந்தவர்க்காரிகை, †நெய்யினையுடைய, ‡ நெகிழ்ந்து காதலரை. ‖ இதனுல் வருந்தின. × மகிழ்ந்தவரை, = கிளவியார்ப் பாராட்டும், ÷ உடையேமுடைய பக்கத்தே.

உயிரைக்கொள்ளாதே விளையாடுகின்ற நீ தங்கணவர் பிரிந்த காலத்துச் (க) செவ்வழியென்னும் பண்ணையுடைய யாழினது சுரம்போலை போலவருந்திக்கூறும் மொழியினையுடையமகளிர்அக்கணவர்(?)*வருந்தினை எம் போற் (உ) கனவிற் புணர்ச்சியின்றிப் பாராட்டப்படும் கனவிற்புணர்ச்சியிற் பெற்ற புதியகலத்தைக் கடியமாட்டாய். எ - று.

கள மாலீ, †தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்பப்
‡பகைமிக்க நெஞ்சத்தேம் ‖புன்மைபா ராட்டுவாய்
தகைமிக்க ÷புணர்ச்சியார் தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகந் திறந்தன்ன முறுவலுங் கடிகல்லாய்

எ - து: அழகு மிக்க தாழ்ந்த சினைகளில் தமக்கிருப்பிடத்தே(கூ)பேடுஞ் சேவலுமாகச் சேர்ந்து பறவைகள் ஆரவாரியாநிற்க, 'மற்றுள்ள பகைகளாலும் வருத்தமிக்க நெஞ்சத்தினை ×யுடையேம் புன்மையையாக்கள் இறந்துபடாத படி பண்ணி விளையாடுகின்றனீ அழகு மிக்ககூட்டத்தையுடைய + மகளிரது தாழ்ந்த கொடியினையுடைய நறிய முல்லையினுடைய முகையின் முகத்தை வண்டுகள் திறந்தாற்போல ஆடவரால் திறக்கப்படும் முறுவலையுங் கடியமாட்டாய். எ - று.

**எனவாங்கு அசை.

உஉ ††மாலையு மலரு நோனு தெம்மயி
னெஞ்சமு மெஞ்சுமற் றில்ல வெஞ்சி
‡‡ யுள்ளா தமைந்தோ ருள்ளு
முள்ளி யுள்ள முள்ளு ளுவந்தே

கூறியதற்கு, "மாலீ, தையெனக் கோவலர்.....பக்கம்பா ராட்டு வாய்" என்பதுமேற்கோள்; தொல். செய். சூ. ககo. 'ஞாயிறு' இளம்.

க. "நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே, கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றே" கலி. நக: நடு - நசு.

உ. (அ) "என் இளவிபோற் செவ்வழி யாழிசை" கலி. கசஉ: நஅ. (ஆ) "செவ்வழி நல்யா, ழிசையோர்த் தன்ன வின்றீங் கிளவி, யணங்குசா லரிவையை" அகம். உகஉ: சு - அ.

கூ. பேடென்பது பெண்பறவையென்னும் பொருளில் இவருரைகளிலும் கம்பர் வில்லிபுத்தூராழ்வார் குமரகுருபர சுவாமிகள் சேகாழி அருணாசலக் கவிராயர் முதலியவர் செய்யுட்களிலும் வந்துள்ளது.

(பிரதிபேதம்) * வருந்தின் எம்போற். † தகைமிகத்தாழிசை, ‡ புரிமிக்க, ‖ பன்மைபாராட்டுவாய், ÷ புணர்ச்சியாற்றுழ், புணர்ச்சியொய்தாழ், × உடையேமுடைய பன்மையை, + மகளிருடைய தாழ்ந்த, ** ஏக்க. மாலீ, †† மலையுமலரு, ‡‡ உள்ளஞ்சமைந்தோருள்ள முள்ளினுள்ள.

எ - து: நம்மைப் பிரிந்து உள்ளில்லாத உள்ளத்தாலே நம்மை நீங்
• யாமல் அமைந்திருந்தோரை உள்ளே உள்ளே உவந்து உள்ளும் நம்முடைய நெஞ்சமும் இம் *மாலையையும் ஊரார் கூறும் அலரையும் பொருதே நம்மை விட்டுப் போகாநின்றது; இனி என்செய்வேமென வருந்திக் கூறினாள். எ-று.

இதனால், தலைவிக்கு இழிவு பிறந்தது.

இது "நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி" (க)என்ற இலக்கணஞ் சிதைய இடையிடை சொற்சீரடி வருதலின் ஒத்தாழிசையாகாது எண்ணிடை யிட்டுச் சின்னங்குன்றிய(உ)கொச்சகமாயிற்று.

இது முதலிய மூன்றுபாட்டும் (ங)மாலைக்காலத்தைக்கூறினமையின் "காரு மாலையுமுல்லை" என்னும் (ச) பொதுவிதிபற்றி முல்லையுட் கோத்தல்வேண்டு மெனின், அது பெரும்பான்மைபற்றிக்கூறியது; மாலை எற்பாட்டின் பின் நிகழுங் காலமாதலின் அதற்கியைபுபட்டு நெய்தற்கும் உரித்தாயிற்று. அது

க. தொல். செய். சூ. கஉடு.

உ. (அ)இச்செய்யுளை 'தாழிசைதோறும் தனிச்சொற்பெற்றுவந்த நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா' என்றுகூறி, "வெல்புகழ்.....மருண் மாலை" இது தரவு "மாலைநீ, தாவறத்.....காரிகை கடிகல்லாய்" "மாலைநீ, தையெனக்.....புதுநலங் கடிகல்லாய்" "மாலைநீ, தகை மிக்க.....முறுவலுங்கடிகல்லாய்" இவை மூன்றுந்தாழிசை. ஆங்க- தனிச்சொல் "மாலையு.....ளுவந்தே" இது சுரிதகம் என்று விளக்கினர் இளம்; (தொல். செய். சூ. கஉக. 'போக்கியல்') பேராசிரி யர்க்கும் நச்சினார்க்கினியர்க்கும்இது உடம்பாடன்றென்பது.(ஆ)பேரா சிரியர் இச்செய்யுள் தரவுந் தாழிசையும் போக்கும் முறையானே வந்த தாயினும் 'இடைநிலைக்கிளவி தாழிசைப்பின்னர், நடைநவின்றொழுகு மாங்கென் கிளவி' (தொல். செய். சூ. கஉடு.) என்னும் இலக்கணஞ் சிதைய[ரத் தரவிறுதியினுக்] தாழிசை[யிறுதி]களோறுஞ் சொற்சீர்பல வருதலான் ஒத்தாழிசையெனப்படாது அதன்வகைத்தாய் எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியதாஉ(கொச்சக)மாயிற் றென்பதாலும் நச்சி னார்க்கினியர் அதனையே தழுவி, "இது 'நடைநவின் றொழுகு மாங் கென் கிளவி' என்னும் இலக்கணஞ் சிதைய இடையிடை சொற்சீரடி பலவருதலின் ஒத்தாழிசையாகாது எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றிய கொச்சகமாயிற்று" என்று எழுதுவதாலும்விளங்கும். தொல். செய். சூ. கஉடு.

ங. "கலியுள், மாலைக்காலம் நெய்தலின்கண் வந்தது"; தொல். அகத். சூ. அ. நச்.

ச. தொல். அகத். சூ. கூ.

(பிரதிபேதம்) * மாலையுமிவ்வூர் கூறும்.

"தினைமயங்குறுதலும்" என்னும் (க) சூத்திரத்து "நிலனொருங்குமயங்குத *லின்று" என்றதனாற் காலமொருங்கு மயங்குமென்றது கொண்டு சான்றோர் பலருஞ் செய்யுள்செய்தார். "கானன் மாலைக் கழிப்பூக் †கூம்ப" என்னும் (உ)அகப்பாட்டும் நெய்தற்கண் மாலைவந்தது. "தொல்லூழிதடுமாறி" என்னும் (ங) நெய்தற்கலியுட் கங்குலும் மாலையும் முன்பனியும் வந்தவாறுகாண்க. இங்ஙிலத்து மாலைவந்த பாட்டுக்கள் ‡பலவுமுள. பிற சான்றோர்செய்யுட்களுட் காலம் மயங்குமாறு பலவுங் கண்டுகொள்க. (க)

(ககசு.) அகன்ஞாலம் விளக்குந்தன் (சு)பல்கதிர் வாயாகப்
பகலுங்கி யதுபோலப் (ஙு)படுசுடர் கல்சேர
விகன்மிகு நேமியா னிறம்போல ‖விருளிவர
(சூ)நிலவுக்காண் பதுபோல வணி × மதி யேர்தரக்
ஙு கண்(எ)பாயல் பெற்றபோற் (அ)கணைக் ÷ கால மலர்கூம்பத்
(சூ)தம் + புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரந்துஞ்ச

க. தொல். அகத். சூ. கஉ.

உ. அகம். சஅ.

ங. கலி. கஉசு.

சு. "பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய" தநிஞ்சி. உகசு.

ஙு. "ஒண்சுடர் கல்சேர" கலி. கஉக: க.

சூ. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி முன்னத்தான் உவமை கூறுதற்கு இவ்வடியை மேற்கோள்காட்டி, இது காணப் பிறிதாகிய பொருளோடு உவமை கூறுமையிற் பிறிதொடுபடாதாயிற் றென்றும், மதியின தெழுச்சியை நோக்குதலிற் பிறப்பொடுநோக்கிற்றென்றும் கூறுவர், இளம்; தொல். உவமை. சூ. உங. 'பிறிதொடு'

எ. "பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப" கலி. கங.சு: அ.

அ. கணைக்காலென்பது, நீர்ப்பூக்களுள் நற். உஙஅ,ஐங்.சுஅ; ஆம்பலுக்கும், நற். உசஉ, குவளைக்கும், நற். கஙஅ, குறுந். கூ. நெய்தலுக்கும் வருதலோடு தினைமொழி. ஙஉ - இல் மருதக்கும் அடையாக வந்துள்ளது.

கூ. (அ) "சான்றோர், புகழு முன்னர் நாணுப" குறுந். உஞஉ. (ஆ) "கோவெனப் பெயரிய காலை யாங்கது, தன்பெயராகலி ஞாயி" (இ) "பரந்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந், திறைஞ்சியோனே" புறம். கஞஉ: உக-உஉ, உஅஞ: கங -கச. (ஈ) "பிறர் தன்னைப் பேணுங்கா ணுணலும் .....ஊராண்மை யென்னுஞ் செருக்கு" திரிகடுகம். சு.

(பிரதிபேதம்) * இலவென்றதனால், †கூம்பும், கம்பும். ‡பலவுமுளவென்றுணர்க. பிறசான், ‖ இருள்வர, × மதிபோதரக், ÷ காலவலர், காலலர். + புகழக்கேட்டார்.

முறுவல்*கொள் பவைபோல முகையவிழ்பு புதனந்தச்
சிறு (க)வெதிர்ங் குழல்போலச் சுரும்பிமிர்ந் (உ)திம்மெனப்
(௩)பறவைதம் பார்ப்புள்ளக் (௪)கறவைதம் பதிவயிற்
௧௦ கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர
மாவதி சேர மாலை வாள்கொளா
(௫)வந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து
செந்தீச் செவ்வழ †றொடங்க வந்ததை
(௬)வாலிழை மகளி ‡ருயிர்பொதி யவிழ்க்குங்

க. "ஆரும் வெதிரும்.....மெல்லெழுத்து மிகுதன் மெய்பெறத் தோன்றும்" (தொல். புள்ளிமயங். சூ. ௬௮.) என்பதனால். வெதிர்ங் குழலென வந்தது.

உ. "இம்மென" கலி. ௩௬: ௫; ௧௨௩: ௩.

௩. பார்ப்பென்பது பறவையின் இளமைப் பெயராய் வருதற்கு, "பறவை தம்பார்ப்புள்ள" என்பது மேற்கோள்; தொல். மரபி. சூ. ௪. 'பார்ப்பும்' இளம். இச்சொல் பார்வலெனவும் வழங்கும்.

௪. (அ) "ஆன் கணங், கன்றுபயிர் குரல மன்று நிறைபுகுதர" குறிஞ்சி. ௨௧௭ - ௨௧௮. (ஆ) "மதவுநடை நல்லான், வீங்குமாண் செருத்த நீம்பால் பிலிற்றக், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு, மாலையும்" அகம். ௧௪: ௬ - ௧௨. (இ) "சேதா, முலைபொழி தீம்பாலெழுதுக ளவிப்பக், கன்று நினைகுரலமன்றுவழிப்படர" மணி. ௫: ௧௩௦ - ௧௩௨. (ஈ) "கறவை கன்று வயிற்படர" குறுந். ௧௦௮.

௫. (அ) "அந்தியந்தண ரயர" குறிஞ்சி. ௨௨௫. (ஆ) "அந்தி யந்தணர் செந்தீப்பேண்" மணி. ௫: ௧௩௩. (இ) "கருதி யந்தணர் யாவருந் தங்கடன் கழிப்பச், சுருதியென்னும் வெஞ் சாபமே லம்புகை தொடுத்துப், பருதி தன்பெரும் பகைவர்மேல் விடுத்தலிற் பரந்த, குருதி யாமென நிவந்தெழச் சிவந்தது குடபால்" வில்லி. கிருட்டினன்றூது. ௮௬. (ஈ) "(மறையவன்) வாம்பரித் தடந்தேர்ப் பரிதிவா னவன்போய் மறிதிரைக் குடகடல் குளிப்ப, வாம்பல்வா யவிழு மாலையங் காலத் தந்திவந்தனைத்தொழின் முடித்துத், தீம்புனற் றுறைநின் றகன்று" பிரமோத்தர. உமாமகேசுவரபூசை. எ.

௬. "மாலையோவல்லை" என்னுங் குறளின் விசேடவுரையில் "வாலிழை மகளிருயிர்பொதி யவிழ்க்குங், காலை" என்றாற்போல ஈண்டுப் பொது மையாற் கூறப்பட்ட தென்பர் பரி; குறள். ௧௨௨௧.

(பிரதிபேதம்) * கொள்பவர்போல, †றுடங்க, ‡ உயிர்ப்பொதி.

௧௫ காலை யாவ தறியார்

(க)மாலை (உ)யென்மனார் மயங்கி யோரே.

இது பிரிவிடை மாலைப்பொழுது கண்டு ஆற்றாத தலைவி தோழிக்கு உரைத்தது.

க. மன் அசைநிலைக்கண் வந்ததற்கு, "மாலை யென்மனார் மயங்கியோரே" என்பது மேற்கோள்; நன். இடை. சூ. ௧௩. மயிலை. இவ்வடியே குறுந். உ௩௪ - ஆம் செய்யுளிலும் மூன்றாம் அடியாக வந்துள்ளது.

உ. (அ) என்மனா ரென்பது, இடைச்சொல் தான்சாரப்படுஞ் சொல்லிற்கு வேறாய் வருதலே யன்றி அதற்கு உறுப்பாயும் வருமென்பதற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. க. சே. (ஆ) "என்மனா ரென்பது செய்யுண் முடிபெய்தி நின்றதோ ராரீற்று எதிர்கால முற்றுச்சொல்,.....என்ப என்னு முற்றுச் சொல்லினது பகரங் குறைத்து மன்னும் ஆருமென இரண்டிடைச்சொற்பெய்து விரித்தாரென்று உரையாசிரியர் கூறினாரா லெனின்;-என்மனாரென்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது, நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும், இசை நிறையென்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார் பின்னும் இசை நிறையென்றல்மேற்கோண்மலைவாதலானும் அவர்க்கு அதுகருத்தன்றென்க. மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்த்துணரவைத்தல் அவர்க்கு இயல்பாகலாற் செய்யுண்முடி பென்பது கூறாராயினார்" (தொல். கிளவி. சூ. க.) என்றும் (இ) இதனை வினைத்திரிசொல் லென்பாருமுள ரென்றும். (தொல். எச்ச. சூ. க.) கூறுவர் சேனாவரையர்; (ஈ) "என்பவென்னு முற்றுச்சொல் 'குறைக்கும்வழிக் குறைத்தலும்' என்பதனாற் பகரங்குறைத்து, 'விரிக்கும்வழி விரித்தல்': என்பதனால் 'மன்' 'ஆர்' என்பன இரண்டிடைச்சொற் பெய்து விரித்து, என்மனா ரென்றாயிற்று" என்று (இறை. சூ. க.) இறையனா ரகப்பொரு ளுரைகாரரும் (தொல். கிளவி. சூ. க) கல்லாடனாரும் (உ) என்பவென்னுமொழி, ஈற்றுப் பகரங்கெட்டு மன் ஆரென்னும் இடைச்சொற்களைப்பெற்று என்மனா ரென முடிந்ததென்று (யா - வி. சூ. உ௪.) யா - வி. உரைகாரரும் உரையாசிரியரெனப் பேர்பெற்ற இளம்பூரணர் கொள்கையையே பின்பற்றுவர்; (ஊ) "என்மனாரென்பது செய்யுண்முடி பாயதோ ராரீற்று முற்றுச்சொல்; மன் எதிர்காலவிடைநிலை. அது 'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரைய ருரையானுமறிக" என்று கூறுவர் சிவஞானமுனிவர்; சிவஞான போத மாபாடியம். சூ. க. உரை.

இதன் பொருள்.

அகன்ற (க)உலகத்தை எவ்வுயிர்க்குந் தோற்றுவிக்கும் தன்னுடைய பல இரணங்களைத் தனக்கு வாயாகக்கொண்டு (உ)கான்ற பகற்காலத்தை மீண்டும் அவ்வாயாலே விழுங்கினாற்போல அவற்றைச் சுருக்கிக்கொண்டு படுகின்ற சுடர் அத்தகிரியைச் சேர்கையினாலே போரின்கண் மிகுகின்றசங்கரப்படையையுடைய மாயோனிறம்போல இயல்பாகவுள்ள இருள் பரந்துவாராநிற்க, அதனைப் பொருதே தன் நிலவாலே ஓட்டிப் புறங்காண்பானைப்போலே அழகினையுடைய மதி தோன்ற, கணவரைக் கூடித் துயிலப்பெற்ற கண்கள் போலே இரண்ட தண்கதிரையுடையவாகிய தாமரை (ங) முதலியன குவிய, தம்புகழ்களைக் கேட்ட சான்றோரைப்போலே தலையைச் சாய்த்து மரங்கள் துயில, சிறுதூறுகள் பிரிந்த மகளிரை (ச)இகழ்ந்து சிரிப்பவைபோலே முகைகள் அவிழ்ந்து விளங்க, சிறிய மூங்கிலாகிய குழல்போலச் சுரும்புகள் ஆர்ப்பரவஞ்செய்து பாட, புட்கள் தம் பார்ப்புக்களை நினைத்துக் குடம்பையைச் சேரப், பசுக்கள் தாந் தங்கும் ஊர்களிடத்திற் கன்றின்மேல் அமர்த்த விருப்பத்தோடே மன்றுக ணிறையப் புகுதலைச்செய்ய, மாக்கள் தாந் தங்குமிடத்தே சென்று தங்க, அந்தணர் தாஞ் செய்யுந் தொழில்களைச் செய்து அந்திக் காலத்தை எதிர்கொள்ள, (ஞ)மகளிர் செந்தியால் உண்டான விளக்கை எற்றத் தொடங்க, மாலை விளக்கங்கொள்ள வந்ததனை அறிவுகெட்டோர் வாலிய இழையினையுடைய மகளிருயிரை அதனைப் பொதிந்துநின்ற உடலினின்றும்

க. "இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தா லன்றிக், கருதுநிலப்பல்பொருளுங் காண்டலரிதாம்" நீநெறிதற்றலப். நூற்பயன். க.

உ. (அ)"வெயில்கான் றிருள்சீத் தெழுவெங்கதிர்ச் செல்வன் மைந்தன்" கூர்ம. இராவணவதை: கள. (ஆ) "பாயிருள் பருகுபு பகலெக்கான் றெழுங், காயெரிக் கதிரவன்" நீநவாணெக்கா. தீர்த்தவிசேடப். சுசு.

ங. முதலியனவென்றது, குவளை நெய்தல்களை; இவை காலை மலர்ந்து மாலைக் குவிவனவென்றே பண்டைநூல்கள் கூறுகின்றன; இதற்கு மாறுக, குவளை மாலை மலர்ந்து காலைக் குவியுமென்று பிற்காலத்து நூல்கள் கூறுகின்றன. இவற்றின் உண்மை நோக்கி அறியத்தக்கது.

ச. "முல்லைத், தொகுமுகை யிலங்கெயி றுக, நகுமே தோழி" குறுந். கஉசு.

ஞ. (அ),"வளமனைப், பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி, யந்தியந்தண ரயர" குறிஞ்சி. உஉங - உஉஞ. (ஆ) "உள்ளினே னல்லலே யானே யுள்ளிய, வினைமுடித் தன்ன வினியோண், மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே" நற். ங: எ - கூ. (இ) "எல்வளை மகளிர் மனிவிளக் கெடுப்ப, மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென" சிலப். சு: கக - உ0.

போக்குங் காலத்தினது இயல்பாவதறியாராய் மாலைக்காலமென்று அதுவும் ஒருகாலமாகக் கூறாநிற்பரென ஆற்றாளாய்த் தோழிக்குக் கூறினாள். எ - று.

கல்சேர்கையினாலே * இருள் இவராநிற்க † அதுபொறாது மதிதோன்ற என ஒருவினையாகமுடிக்க. "பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் ‡ பருதி" (க) என்றார் பிறரும்.

|| மதியேர்தர என்பது முதலிய செயவெனெச்சங்களெல்லாம் நிகழ்கால முணர்த்திநின்று ÷ மாலைவாள்கொள[ா] என்னுஞ்செய[யா]வெனெச்சத்தோடு முடிந்தன. அது பின் வந்ததை என்னுந் தொழிற்பெயர்த்திரிசொல்லோடு முடிந்தது.

மயங்கியோர் என்றது தோழியைக்கருதி. × "திணைமயங்குறுதலும்"(உ) என்றதனாற் கருப்பொருண்மயங்குதலும் அமைத்தாம்.

இனி மாலை + வாழ்கொளவென்று பாடமாயின் அப்பாடத்திற்கு, மாலை தான் வாழ்தல்கொள்ள வந்ததனை என்க.

** அளறுடங்க என்பதும் பாடம்.

இதனால், தலைவிக்கு இழிவுபிறந்தது.

இஃது அடக்கியலின்றி அடிநிமிர்ந்தோடிய கொச்சகவொருபோகின் பகுதியாய்த் தனிச்சொல்லும் அடக்கியலுமின்றிச் சுரிதகம் பெற்று அடி நிமிர்ந்தோடிய †† அகநிலைக்கொச்சகம். (உ)

(கஉ0.) அருடீர்ந்த காட்சியா னறனோக்கா னயஞ்செய்யான்
வெருவுற வுய்த்தவ னெஞ்சம்போற் பைபய
விருடூர்பு புலம்பூரக் கனைசுடர் கல்சேர
வுரவுத்தகை மழுங்கித்தன் னிடும்பையா லொருவனை
௫ யிரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறிக்
கரப்பவ னெஞ்சம்போன் மரமெல்லா மிலைகூம்பத்
தோற்றஞ்சால் செக்கருட் பிறைநுதி யெயிறாக
நாற்றிசையு நடுக்குறூஉ மடங்கற் காலைக்
கூற்றுநக் கதுபோலு முட்குவரு கடுமாலை;

க. பெரும்பாண். உ.

உ. தொல். அகத். சூ. கஉ.

(பிரதிபேதம்) * இருள்வாராநிற்க, † அது பொறாமதி, ‡ பரிதி. || மதிபோதர, ÷ மாலை வளர்கொளா வென்னுஞ் செய்யாவென்னு மெச்சத். × திணைமயக்குறுதலும் என்பதனாற் றரும்பொருண், + வாழ்கொளவென்ற பாடத்திற்கு மாலைதான் வாழ்தல், ** அழறுடங்க. †† வகைநிலைக்.

க0 மாலைநீ,உள்ளங்கொண்டகன்றவர் துணைதாராப்பொழுதின்கண்
வெள்ளமா னிறநோக்கிக் கணைதொடுக்குங் கொடியான்போ
லல்லற்பட் டிருந்தாரை யயர்ப்பிய வந்தாயோ ;

கஙு மாலைநீ, ஈரமில் காதல ரிகந்தருளா விடலைக்கிப்
போர்தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போ
லாரஞ ருற்றுரை யணங்கிய வந்தாயோ ;

கசு மாலைநீ, கந்தாதல் சான்றவர் களைதாராப் பொழுதின்கண்
வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு துழைப்பான்போற்
காய்ந்தநோ யுழப்பாரைக் கலக்கிய வந்தாயோ;

எனவாங்கு;

உ0 இடனின் றலைத்தரு மின்னுசெய் மாலை
துனிகொ டுயர்தீரக் காதலர் துணைதர
மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
யொல்லென நீக்கி யொருவாது காத்தோம்பு
நல்லிறை தோன்றக் கெட்டாங்
கில்லா கின்று விருளகத் தொளித்தே.

இது பிரிவிடையாற்றத தலைவி மாலைப்பொழுதுகண்டு கழிய வூற்ற ளாயின இடத்துத் தலைவன்வரவும் அவளது அகமலர்ச்சியுங் கவிடார் கூறியது.

இதன் பொருள்.

அருமூர்ந்த காட்சியா னறனேக்கா * னயஞ்செய்யான்
வெருவுற வுய்த்தவ னெஞ்சம்போற் பைபய
விருடீர்பு புலம்பூரக் (க)கணைசுடர் கல்சேர
வுரவுத்தகை (உ)மழுங்கித்தன் னிடும்பையா லொருவனை
நு யிரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறிக்
கரப்பவ னெஞ்சம்போன் மரமெல்லா மிலைகூம்பத்

க. (அ) "கணைசுடர் கல்சேர்பு மறைய" அகம். சள: கூ. (ஆ) "படுசுடர் கல்சேர" (இ) "ஒண்சுடர் கல்சேர" (ஈ) "கல்சேர்பு ஞாயிறு கதிர் வாங்கி மறைதலின்" கலி. ககக: உ, கஉக: க, கஙூ: ச.

உ. மழுங்க லென்பது 'மழுகல்' எனவும் 'மாழ்கல்' எனவும் வழங்கும். (பிரதிபேதம்) * அறஞ்செய்யான், பயஞ்செய்யான்.

தோற்றஞ்சால் செக்கருட் (க)பிறைநுதி யெயிறுக
நாற்றிசையு நடுக்குறூஉ மடங்கற் காலைக்
கூற்றுங்க தறுபோலு முட்குவரு கடுமாலை

எ - து: (உ)அருள் ஒருகாலத்தும் இல்லையான அறிவாலே (கூ) அதஞ் செய்தல் இருமைக்கும் பயன்தருமென்று கருதாஞய், பண்புஞ்செய்யாஞய், எல்லாரும்வெருவுதலுறும்படி தனக்குள்ளதாளைப் பயன்படாமற்செலுத்தினவனுடைய நெஞ்சின் மருட்சிபோலே, மெத்தென மெத்தென இருளாலே உலகம் நிறைந்து கணவரைப் பிரிந்தோர்க்குத் தனிமைமேலிடும்படி செறிந்த சுடரையுடைய ஞாயிறு *அத்தகிரியைச்சேர, மிடியாலே இரத்தற்கஞ்சினவன் வலியின்றகைமை கெட்டுச்சென்று ஒருவனை வேண்டுகின்றவனுடையநெஞ்சு போலே, மரமெல்லாம் முதற் பொலிவழிந்து, பின்பு அம்மரமெல்லாம் இரப்பாரைக்கண்டஇருந்தவிடத்தினின்றும் எழுந்திருந்துபோய் மறைகின்றவனெஞ்சு கண்ணோடாதுகுவியுமாறுபோல,இலைகளெல்லாங் குவிய வருகின்ற மாலாய்! நீதான் காலுதிக்குஞ் சேர நடுக்கமுறும் ஊழிமுடிவாகிய காலத்திலே கூற்றுவன் விளக்கம் அமைந்த ,செக்கர்வானிடத்துத் தோன்றின நுதியையுடைய பிறை தனக்கு எயிறுகக்கொண்டு(ச)பல்லுயிரையுஞ் சேரக்கோடற்கு நக்காற்போலும் உட்குதலையுடைய கடியமாலையா யிருந்தாய். எ - று.

க. (அ) "ஒன்றேயெயிற்ற தொருபெரும்பே யுலகம் விழுங்க வந்தாற்று, நின்முற்போல நிழலுமிழ்ந்துநெடுவெண்டிங்க ளெயிறிலங்க, வின்றே குருதி வானவா யங்காந் தென்னை விழுங்குவா, னன்றே வந்த திம்மாலை யளியே னுவி யாதாங் கொல்" சீவக. கசுசு. (ஆ) "விரி மலர்த் தென்றலாம் வீசுபாசமு, மெரிதிறச் செக்கரு மிருளுங் காட்டலா, லரியவட் கனறரு மந்தி மாலையாய், கருதிறச் செம் மயிர்க் காலன் ரேன்றினன்" கம்ப. மிதிலைக்காட்சிப். கூ. (இ) "கூற்றங் கரந்து கொடியபுன் மாலை வடிவுகொண்டு, தோற்றஞ் சிறு பிறை யேயெயி றாகத் துறையிருந்து, தேற்றந் தரும்பெடை யன்ன முஞ் சேவலுஞ் சேக்கைபுகு, மாற்றந் திறமறி யேனவ ரோசென் றகன்றனரே" அம்பிகாபதிகோவை. கசுசு.

உ. (அ) "மெல்லெ, னருளிற் பிறக்கு மறநெறி" நான்மணி. எ. (ஆ) "அறனு, மருளுடையான் கண்ணதே யாகும்" சிறுபஞ்ச. கூ.

ங. (அ)"தருமமென் றொருபொரு ளுளது தாவிலா, விருமையி னின்பமு மெளிதி னுக்குமால்" கந்த.....(ஆ) "அறமே, யிருமை யுந்துணை யாகுவ தன்றிமற் றில்லை"

ச. (அ) "மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையு, நின்னெஞ் தூக்கிய" புறம். கசுஎ - ச. (ஆ) எருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த் தொகை, யொருபக லெல்லையி னுண்ணு மென்ப, தாரிய வரச

(பிரதிபேதம்) * அத்தமலையை.

முன்னர் நின்றமாலை உட்குதலையுடைய மாலையெனப் பின்னர் வந்த * மாலை விசேடித்துநின்றது.

கo மாலைநீ, உள்ளங்கொண்டகன்றவர் துணைதாராப்பொழுதின்கண் வெள்ளமா (க)னிறநோக்கிக் கணைதொடுக்குங் கொடியான்போ லல்லற்பட் டிருந்தாரை யயர்ப்பிய வந்தாயோ

எ - து: இவ்வனங் கடிய நீ என்னெஞ்சத்தைத் தம்மிடத்தே கொண்டு நீங்கினவர் எனக்குத் துணையாந்தன்மையைத் தாராத காலத்திலே வெள்ளத்திலே அகப்பட்டுக் கரையேற மாட்டாத மானினது மருமத்தைப் பார்த்து அம்பைத் தொடுக்குங் கொடியவனைப்போல அல்லலிலே அழுந்தியிருந்த என்னைக் கையறவெய்துவிக்க வந்தாயோ ? எ - று.

மாலை நீ என வருகின்றவற்றையும் தரவொடு கூட்டி முற் கூறியவாறே பொருளுரைக்க.

கஙூ மாலைநீ, ஈரமில் காதல ரிகந்தருளா (உ)விடலைக்கிப் (ஙூ)போர்(ச)தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போ லாரஞ் சுற்றுரை யணங்கிய வந்தாயோ

எ - து: இவ்வனங் கடிய நீ அருளில்லாத காதலர் விட்டுநீங்கி அருளாதிருந்த காலத்தைப் பார்த்துப் (ஙு) போரிலே தோற்றிருந்தவர்களை அவர்கள் பட்ட தோல்வியை இகழ்ந்து சிரிப்பாரைப்போலே பொறுத்தற்கரிய வருத்தமுற்ற என்னை வருத்துவிக்கவந்தாயோ ? எ - று.

ரமர்க்களத் தறிய, தூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்" சிலப்: உசு: உகடு - உகஅ.

க. (அ) "சிலைமாண் கடவிசை கலிதிறத் தழுத்தி" (ஆ) "வரிமர ணெஞ்ஞாண் வன்சிலைக் கொளீஇ, யருநிறத் தழுத்திய வம்பினர் பலருட, னண்ணல் யானை வெண்கோடு கொண்டு" (இ) "வெள்வே, லாத னெழினி யருநிறத் தழுத்திய, பெருங்களிற் றெவ்வம் போல" என்பவையும் இந்நூற்பக்கம் நகசு: க - ஆம் குறிப்பும் பார்க்க.

உ. இடன் - காலம். கலி. கஉக: உங.

ங. "போர்.....வந்தாயோ" என்பது செய்கை யல்லாத மாலைப் பொழுதினைச் செய்யாமரபிற் றொழிற்படுத்தடக்கி உவமவாயிற்படுத்த தென்பர், நச்; தொல். பொருளி. சூ. உ.

ச. "ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும், புதுவ தன்று" புறம். எசு: க - உ.

ஙூ. (அ) " தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே " புறம். உஎச: அ; (ஆ) "வானக மண்ணு மெல்லா நகுநெடு வயிரத் தோளா, னனகும்

(பிரதிபேதம்) * மாலையை விசேடித்த.

போர்தொலைந்திருந்தார், தொழிலின்மையில் தொழிலுடையதன்மேல் நின்றது.

கசு (க)மாலைநீ, கந்தாதல் சான்றவர் களைதாராப் பொழுதின்கண்
(உ) வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நமைப்பான்
காய்ந்தனோ யுழப்பாரைக் கலக்கிய வந்தாயோ [போற்

எ - து: இங்ஙனம் *கடிய நீ எனக்குப் பற்றுக்கோடாதலை அமைந்தவர் என் வருத்தத்தைப் போக்குதலைச்செய்யாத காலத்தே முன்பேவெந்ததொரு புண்ணிலே பின்பு ஒருவேலைக்கொண்டு சொருகுவாரைப்போலே மெய் வெதும்புதற்குக் காரணமான காமநோயிலே அழுந்துகின்ற என்னையுள்ளி உள்ள அறிவையுங் கலங்குவிக்க வந்தாயோ ? எ - று.

† எனவாங்கு

எ - து: என்று அவள் கூறும்படியாக. எ - று.

ஆங்கு, அசை.

உ0 இடனின் றலைத்தரு மின்னுசெய் மாலை
துனிகொ டுயர்தீரக் காதலர் தூனத்ர
(ங) மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பசை
யொல்லென நீக்கி யொருவாது ‡ காத்தோம்பு
நல்லிறை தோன்றக் கெட்டாங்
கில்லா கின்று விருளகத் தொளித்தே

பகைவ ரெல்லா ருவரென் றதற்கு நாணுன்" கம்ப. கும்ப. சக. (இ) "முன்னே வைகலின் முரிந்தன னென்றே, பன்னு மோர்வசை பரந்ததுமன்றிப், பின்னு மிப்பகல் பிழைத்தன னென்று, லென்னை யாவர்களு மெள்ளுவர் மாதோ" கந்த. மூன்றுநாட்பாலு. கசஅ.

க. பொழுதொடு கேட்குபோலக் கூறியதற்கு, "(மாலைநீ.....) காய்ந்த நோயுழப்பாரைக் கலக்கிய வந்தாயோ [.....மாலை]" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. உ00. நச்.

உ. (அ) "மாலை, வெந்தயர்க் கண்ணின் வேலிட்டதுபோல், வந்திறுத் தன்றுல் வலியெனக் கில்லென" (பெருங். (க) ங்ஙு: கூச - கூக.) என்பதும் (ஆ) "வெந்தபுண் வேலெறிந் தற்றுல்" (கலி. அங: கூ0) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. "நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி, னல்லது மலைந்திருந் தற நெறி நிறுக்கல்லா, மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர, வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருன்மாலை" கலி. கஉங: ச-எ.

(பிரதிபேதம்) *கூடியநீ, † எனவாக்கென்றதில் ஆங்கை. ‡ காத்தாற்று கல்லிறை.

*எ-து: ஆற்றுதற்கோரிட மின்றாக அலைத்தலைச்செய்யும் பொல்லாங்கே செய்யும் மாலைக்காலத்தாலே வெறுப்புக்கொண்ட வருத்தந்தீரும்படி காதலர் விரைந்து வருகையினாலே, அம்மாலை இராக்காலத்திடத்தே சென்றொளித்து, நாற்படையாலே இளைத்த †அரசன் இளைத்த பருவத்தே அவனுக்கு மேலாய் வந்த ‡கடியபகையானது அந்தப் பகைமையை விரையப்போக்கி நீங்காமல் நின்று காத்து நடத்தும் நல்ல இறைவன் வந்து தோன்றக் கெட்டுப்போனாற் போலே, இல்லையாகாநின்றதெனக் கண்டோர் கூறினார். எ - று.

|| பகை கெட்டாங்கு மாலை ஒளித்து இல்லாகின்றதென்க.

இதனால், கண்டோர்க்கு ஆக்கம்பற்றிய மருட்கை பிறந்தது.

(க)இஃது இடையிடை சொற்சீரடிவந்து எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றிய கொச்சகம். (௩)

(கஉக.) ஒண்சுடர் கல்சேர வுலகூருந் தகையது
தெண்கட லழுவத்துத் திரைநீக்கா வெழுதரூஉந்
தண்கதிர் மதியத் தணிநிலா நிறைத்தரப்
புள்ளின மிரைமாந்திப் புகல்சேர வொலியான்று
வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழி
பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப;

எ தாங்கருங் காமத்தைத் தணந்துநீ புறமாறத்
தூங்குநீ ரிமிழ்திரை துணையாகி யொலிக்குமே
யுறையொடு வைகிய போதுபோ லொய்யென
நிறையானா திழிதரூஉ நீர்நீந்து கண்ணாட்கு;

கக வாராய்நீ புறமாற வருந்திய மேனியாட்
காரிருட் டுணையாகி யசைவளி யலைக்குமே

க. (அ) இச்செய்யுளுக்கு (தொல். செய். சூ. கருரு. நச்.) இக்குறிப்பே சிறிது வேறுபடக் காணப்படுகின்றது; (ஆ) பேராசிரியரும் "அருடீர்ந்த காட்சியா னறனோக்கா னயஞ்செய்யான்" எனவும்..... அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியது போலும் கொச்சகம் வருங்கால், ஒத்தாழிசையும் வண்ணகமும்போலத் தனிச்சொற்பெற்றும் பெறாதும் வரும்" என்று கூறி, இதனைத் தனிச்சொற் பெற்று வந்ததற்கு உதாரணங்காட்டினர்; தொல். செய். சூ. கருரு.

(பிரதிபேதம்) * எ-து என்று அவள் கூறும்படியாகஆற்றுதற்கு, † அரசினிளைத்த, ‡ கடியபகையறிந்து, அப்பகை, கடியபகையான அந்தப்பகை, || பகைகெட்டாங்கென்க மாலை.

கமழ்தண்டா துதிர்ந்துக வூழுற்ற கோடல்வீ
யிதழ்சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு;

௧௫ இன்றுணை நீநீப்ப விரவினுட் டுணையாகித்
தன்றுணைப் பிரிந்தயாஅந் தனிக்குரு குசவுமே
யொண்சுடர் ஞாயிற்று விளக்கத்தா னொளிசாம்பு
நண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணியாட்கு;
எனவாங்கு;

௨௦ எறிதிரை தந்திட விழிந்தமீ னின்றுறை
மறிதிரை வருந்தாமற் கொண்டாங்கு நெறிதாழ்ந்து
சாயினள் வருந்தியா ளிடும்பை
பாய்பரிக் கடுந்திண்டேர் களையினோ விடனே.

இது தலைவன் ஒருவழித் தணந்தவிடத்துத் தலைவி ஆற்றமைகூறி வரையக் கருதினாயாயின் இஃதிடமெனச்சொல்லியது.

இதன் பொருள்.

ஒண்(க)சுடர் கல்சேர வுலகூருந் தகையது
தெண்(உ)கட லழுவத்துத் திரை *நீக்கா வெழுதரூஉந்
தண்கதிர் மதியத் தணிநிலா †நிறைத்தரப்
புள்ளின மிரைமாந்திப் புகல்சேர வொலியான்று
(௩) வள்ளிதழ் கூம்பிய (௪)மணிமரு ளிருங்கழி
பள்ளி‡புக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப

எ - து: ஒள்ளிய ஞாயிறு அத்தகிரியைச் சேர்தலானும் உலகெல்லாந் தன் ஒளிபரக்குந் || தன்மையதாகித் தெளிந்த கடற்பரப்பிற் றிரையைநீக்கித்

க. இந்நூற்பக்கம் எ௫௬: க - ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ) "கடலழுவ நீந்தி" சீவக. ௫௦௬. (ஆ) "கருங்கட லழுவத்து" பெருங். (க) ௪௫: அஅ.

௩. பிறிது பொருளோடு உவமை கூறாது பொருள்தோற்றிய விடத்தோடு நோக்கி முன்னமரபால் உவமை கூறியதற்கு, "வள்ளிதழ்.....தண் சேர்ப்ப" என்பது மேற்கோள்; தொல். உவமை, சூ. உ௩. 'பிறிதொடு' இளம்.

௪. "இனமீ னிருங்கழி யோத முலாவ, மணிநீர் பரக்குந் துறைவ" திணைமொழி. ௪௪.

(பிரதிபேதம்) * நீங்காவெழுதருந். †நிறுத்தர, நிலத்தர. ‡ புக்கபோலும், ||தகைமையதாகி.

தோன்றுந் தண்ணியதாகிய கதிரையுடைய மதியத்தினது அழகையுடைய நிலாமிகுதலேச்செய்கையினாலும் (க)பறவைகள்இரையை நிறையத்தின்று தாந் தங்கும்(உ)புகல்களேச் சேர்கையினாலே தன்னிடத்து ஆரவாரம் அடங்கப்பட்டு வளைய இதழ்களுங் குவிந்த நீலமணியென்று மருளும் பெரியகழி துயில் கொண்ட தன்மையை யொக்குங் கடலையுடைய குளிர்ந்த சேர்ப்பனே! எ-று.

தகையதாகி எழுதரும் மதி. ஞாயிறு படுதலும் மதியந் தோன்றுதலும் பறவைகள் புகல்சேர்தற்குக் காரணமென்றுகொள்க.

அவை சேர்கையினாலே ஒலியவிந்து *போயதைப் பள்ளிபுக்காற்போலே இருந்தென்றது தன்குறிப்பை அதன்மேலேற்றிக்கூறியதோர்உவமவிசேடம். இஃது "ஒரீஇக்கூறலுமரீஇயபண்பே" என்னும்(ங)உவம†வியற்சூத்திரத்தில் அடக்கினும். இதழ் கூம்புதலும்துயிற்கு அடையாய் நின்றது.

ஞாயிறு கல்சேர்ந்ததனைத் தலைவன் இட்டுப்பிரிந்து தன் மனையிலே சேர்ந்திருத்தலிற் களவு புலப்படாத தன்மையாகவும் மதியத்தின் நிலாப் பரந்ததனை அவ்விடத்துக் காவலின் விளக்கமாகவும் பறவைகளின் ஆரவாரங் கெட்டதனை இவ்விரண்டினாலும் அலர்தூற்றுகின்ற மகளிரொலி அவிந்து இவ்வூர் துயில்கின்றாற்போலிருந்த தன்மையாகவும்உள்ளுறை யுவமங்கூறுக.

எ தாங்கருங் காமத்தைத் தணந்துநீ புறமாறத்
தூங்குநீ ரிமிழ்திரை தூணையாகி யொலிக்குமே
(ச)யுறையொடு வைகிய போதுபோ லொய்யென
(டு)நிறையானு திழிதருஉ (ஙு)நீர்நீந்து கண்ணுட்கு

எ - து: நீ இட்டுவைத்துப் பிரிந்து நின்னூரிடத்தே உறைந்து முன்பு நின்னெஞ்சில் தாங்குதற்கரிதாய்ப் போந்த காமத்தை நின்னிடத்தினின்றுங் கைவிடுகையினாலே தூளியோர்டே தங்கின பூப்போலே நிறுக்குமளவில் அமையாதே விரைய விழும் நீரிலேகிடந்து நீந்துகின்ற கண்ணையுடையவட்கு

க. "பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே" சிலப். எ: சஉ.

உ. புகலென்றது, புகுமிடமாகிய மரப்பொந்து கூடு முதலியவற்றை.

ங. தொல். உவம. சூ. ஙஙு.

ச. "நீலங் காரெதிர் பவைபோ, லினைநோக் குண்கண் ணீர்நில் லாவே" (கலி. எ: கக - கஉ) என்பதும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

டு. "நிறைநிலா நோய்கூர நெடுங்கணீ ருகுத்தனவே" சிலப். எ: சஉ.

ஙு. (அ)"உள்ளம்போன் றுள்வழிச் செல்கற்பின் வெள்ளநீர், நீந்தலமன்னே வென் கண்" தநள். ககஎ0. (ஆ) "நெடும்பெருங்க ணீந்தின நீர்" பு - வெ. பெருந்திணைப். பெண்பாற். அ.

பிழைதிருத்தம்) * பொய்கைபள்ளி, † இயலிலடக்கினும்.

அசைகின்ற கடலிலே எழுந்து முழங்குகின்ற திரைதான் துணையாகி நின்று ஆரவாரியாநிற்கும். எ – று.

(க) *வருத்துகின்ற திரை தான் துணையாக †ஒலிக்குமென்று அஃது (உ)இறந்துபடத்தாது நின்றமைபற்றிக் கூறினள்.

கக (ங)வாராய்நீ புறமாற வருந்திய மேனியாட்
காரிருட் டுணையாகி யசைவளி யலைக்குமே
கமழ்தண்டா துதிர்ந்துக (ச)ழுழுற்ற கோடல்வீ
யிதழ்‡சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு

எ – து: நீ ஈண்டு வாராயாய் நின்மனையிடத்தே இருந்து வருந்திய மேனியையுடையவட்கு நீ வைத்த வேட்கை நின்னிடத்தினின்றுங் கைவிடு கையினுலே கமழ்கின்ற தண்ணியதாது உதிர்ந்து சிந்தும்படி முறைமையுற்ற இதழ்கள்வீழுங் குலையினையுடைய கோடல்வீபோல இறையினின்றுங் கழலும் வளையினையுடையாட்கு நிறைந்த இராக்காலத்தே அசைந்து வருகின்ற காற்றுத்தான் துணையாகிநின்று வருத்தாநிற்கும். எ – று.

இனி மேனியாட்கு வருந்திய நீ வாராயாய்ப்புறமாற என்றுமாம்.

கடு இன்றுணை நீநீப்ப விரவினுட் டுணையாகித்
தன்றுணைப் ||பிரிந்தயா அன் தனிக்(டு)குரு குசவுமே

க. "கத்துங் கடலும்.....பெரும்பகை யாய்விட்ட வாமொரு பைந் தொடிக்கே" என்பது இங்கே கருதற்பாலது.

உ. இறந்து படுத்தல் – இறந்துபடச் செய்தல்.

ங. வேற்றுமையடுக்கினுள் ஒருருபு ஒருபொருண்மேற் பலவடுக்கிவந்து ஒரு வினையான் முடிதற்கு, "வாராய்நீ.....வளையாட்கு" என்னும் பகுதியை மேற்கோள்காட்டி, 'இதனுள் நான்காவது அடுக்கிவந்து அலைக்குமென்பதனோடு முடிந்தவாறு கண்டுகொள்க' என்பர், தெய்; தொல். வேற்றுமைமயங்கி. சூ. கஅ. 'உருபுதொடர்ந்து'

ச. "அலங்கிதழ்க் கோடல் வீயுகுபவைபோ, லிலங்கே ரெல்வளை யிறைபூ ரும்மே" (கலி. எ: கடி – கசு) என்பதும் அதன் குறிப்பும் இந்நூற் பக்கம் சுகக: சு-ஆம் குறிப்பும் பார்க்க.

டு. குருகு: நெய்தனிலத்துக்குரித்தாகக் கூறப்படும் ஒருபறவை; கரிய காலையும் வெண்ணிறத்தையும் உடையது; பனைமடலிற் கூடுகட்டிக் கொண்டு வதிவது; மீன் யாமை முதலிய நீர்வாழுயிர்களையுண்டு உயிர் வாழ்வது; துணைபிரிந்திருப்பின் வருந்தி அதனை அழைக்கும் இயல் பினது; கள்ளிரவில் உயவுவது; இதற்குச் சங்கும் இதன் காலுக்குத்

(பிரதிபேதம்) * வருத்தகின்றதான். †ஒலிக்குமென்றது மறந்து. ‡சேரும். ||பிரிந்தயாம்

யொண்சுடர் * ஞாயிற்று விளக்கத்தா னெளிசாம்பு
† நண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணிபாட்கு

தினையரிதாளும் வெண்டாழம்பூவுக்கும் வெண் கூதாளம்பூவுக்கும் இதுவும் உவமையாகக் கூறப்படும்; இதனிறகும் தாவியென்று அருகி வழங்கும்; இதனைக் கொக்கென்பாரும் நாரையென்பாரும் அன்ன மென்பாருமுளர்; இப்பெயர் நீர்வாழ் பறவைக்கெல்லாம் பொதுவாய் வருமாயினும் (அ) "கொக்கினங்காள் குருகினங்காள்" என வேறு வேறு விளிக்கப்படுதலின், கொக்கு அன்றென்றும் கருங்கால் கூறப் படுதலின் நாரையும் அன்னமும் அன்றென்றும் துணியலாகும். இதன் இன்குரலுக்கு யாழொலியும் இதன் கூட்டத்தின் ஆர்ப்புக்குத் தேர்மணியொலியும் உவமையாகக் கூறப்படுகின்றன. இது வெண் ணிறமுடைமையால் வெள்ளாங்குருகென்றும் வழங்கும். அதனோடு சிறுமையென்னும், அடையுமதித்துச் சிறுவெள்ளாங் குருகென்றும் வழங்கும்; அது யானையங் குருகினும் இது சிறிதென்பது பற்றிப் போலும். (ஆ) "புன்னை, வாவிணர்ப் படினைக் குருகிறை கொள்ளு, மல்குறு கான லோங்குமண லடைகரை" (இ) "கருங்கால் வெண் குருகு"(ஈ)"பெண்ணை, வீங்குமடற் குடம்பைப் பைதல்வெண் குருகு, நள்ளென் யாமத் துயவுதோ றுருகி" (உ) "பெண்ணைத் தோடுமட லேறிக், கொடுவாய்ப் பேடைக் குடம்பைச் சேரிய, வுயிர்செலக் கடைஇப் புணர்துணைப், பயிர்த லாலு பைதலங்குருகே"(ஊ)"நெய்த் தலைக் கொழுமீ னருந்த வினக்குருகு, குப்பை வெண்மண லேறி" (எ) "குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை" (ஏ) "கோடுதுணர்ந் தன்ன குருகொழுக்கு", (ஐ) "தினைத்தா ளன்ன சிறுபசுங் கால, வொழுகுநீ ராரல் பார்க்குங், குருகுமுண்டு" (ஒ) "தாழை குருகினுந் தண்ணந் துறைவனே" (ஓ) "தாழை வெண்பூக், குருகென மலரும் பெருந்துறை" (ஔ)"பிணர்மூடத் தாழை விரிமலர் குருகென, நெடுங் கழிக் குறுங்கயல் நெய்தலுண் மறைந்தும்" (ஃ) "குருகிருந் தன்ன, வண்பிணி யவிழ்ந்த வெண்கூ தாளத், தலங்குகுலை யலரி" (அஅ) "துறைபோ கறுவைத் தாமடி யன்ன, நிறங்கிளர் தாவிச் சிறு வெள்ளாங் குருகே" (ஆஆ) "யாழ், நரம்பிசைத் தன்ன வின்குரற் குருகின்" (இஇ)"விருந்தின் வெண்குரு கார்ப்பின்.....பண்ணமை நெடுந்தேர்ப் பாஅய் னெலிக்குந், தண்ணந் துறைவன்" (ஈஈ)"வெள் ளாங்குருகின் பிள்ளை" (உஉ) "யானையங் குருகின் கானலம் பெருந் தோ, டட்ட மள்ள ராரப்பிசை வெரூஉங், குட்டுவன் மரந்தை" என வருபவை இங்கே அறிதற்பாலன. வடமொழியில் 'க்ரௌஞ்சகிரி' என்பது தமிழில் 'குருகுபெயர்க் குன்றம்' என்று கூறப்படுதலானும்

(பிரதிபேதம்) * ஞயிற்றுவிளக்கத், † நன்பகல்.

எ - து: இனிய துணையாகியநீ கைவிட்டு உன்மனையிடத்தே இருக்கையி னலே ஒள்ளிய சுடரையுடைய (க)ஞாயிற்றினது மிக்க ஒளியாலே தன் ஒளி கெடுகின்ற உச்சிக்காலத்து மதிபோலே நன்மைகெட்ட முகத்தினையுடை யாட்கு இராக்காலத்திடத்தே தன் சேவலைப் பிரிந்து வருந்தும் *தனிக்குருகு தான் துணையாகி உசாவாநிற்கும். எ - று.

எனவாங்கு, அசை.

உ0 எறிதிரை தந்திட விழிந்தமீ னின்றுறை
மறிதிரை வருந்தாமற் கொண்டாங்கு நெறிதாழ்ந்து
சாயினள் வருந்தியா னிடும்பை
பாய்பரிக் கடுந்திண்டேர் களையிலே விடனே

எ - து: இனிய துறையிடத்தே எறிகின்ற திரை எறக் கொண்டுவந்து †போகுகையினால் எக்கரிலேகிடந்த மீனை மீள்கின்ற அத்திரை வருந்தாதபடி கைக்கொண்டுபோன தன்மைபோலே நீ முன்பு நடத்தின நெறி தாழ்கையி னலே மெலிந்தனளாய் வருந்தினவளுடையவருத்தத்தைப் பாய்ந்துசெல்லும் பரிபூண்ட கடிய நிண்ணிய தேர் வெளியாக வரைவோடே வந்து களை யுமாயின் நல்லகாலமென வரைவுகடாயினள். எ - று.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக் கலி. (சு)

(கூஉ.) கோதை யாயமு மன்னையு மறிவுறப்
போதெழி லுண்கண் புகழ்நல னிழப்பக்
காதல்செய் தருளாது துறந்தார்மாட் டேதின்றிச்
சிறிய தனித்தனை தன்னுசெய் தமர்ந்தனை
பலவுநூ றடுக்கினை யிலைபேங்கி யழுதனை
யலவலை யுடையை யென்றி தோழீ ;
கேளினி;

க்ரௌஞ்சமென்பது அன்றிலின் பெயரென்பராதலானும் அன்றி லுக்கு(ஊஊ)"தடவுநிலைப்பெண்ணைக், கொழுமடலிழைத்தசிறுபொற் குடம்பைக், கருங்காலன்றிற் காமர் கடுஞ்சூல், வயவுப்பெடை யகவும் பாலுட்கங்குல்"எனப் பனைமடல்வாழ்க்கையும் கருங்காலுடைமையும் துணைபிரியா வியல்பும் கூறப்படுதலாலும் குருகென்பது அன்றிலா விருக்கலாமென்று தோற்றுகிறது; இன்னும் ஆராய்தற்பாலது. அன்றிலின்செய்தி கலி. கூஉ: கூ-ஆம் அடிக்குறிப்பிற் காணலாகும்,

க. (அ) "பகலாங்கட் பையென்ற மதியம்போல்" கலி. கசஙூ: உ; (ஆ) "விரிகதிர்ப் பரிதி முன்னர் வெண்மதி மழுங்கும்" நைடத. போர். உ.

(பிரதிபேதம்) * தனிக்குருகுதனை. †போடுகையினலே.

அ மானைழின் மாதர் மகளிரோ டமைந்தவன்
காணும்பண் பிலனுத லறிவேன்மன் னறியினும்
பேணி யவன்சிறி தளித்தக் காலென்
னுணி னெஞ்ச நெகிழ்தலுங் காண்பல் ;

கஉ இருளுற ழிருங்கூந்தன் மகளிரோ டமைந்தவன்
றெருளும்பண் பிலனுத லறிவேன்மன் னறியினு
மருளி யவன்சிறி தளித்தக் காலென்
மருளி நெஞ்ச மகிழ்தலுங் காண்பல் ;

கசு ஒள்ளிழை மாதர் மகளிரோ டமைந்தவ
னுள்ளும்பண் பிலனுத லறிவேன்மன் னறியினும்
புல்லி யவன்சிறி தளித்தக் காலென்
னல்ல னெஞ்ச மடங்கலுங் காண்பல் ;

உ0 அதனால்;

யாம நடுநாட் டுயில்கொண் டொளித்த
காம நோயிற் கழீஇய நெஞ்சந்
தானவர் பாற்பட்ட தாயி
னுமுயிர் வாழ்தலோ நகைநனி யுடைத்தே.

இது காமஞ்சாலா இளமையோள்வயிற் பின் களவொழுக்கம் ஒழுகிய தலைவன் இடையிட்டுப் பிரிந்து தோன்முறை மனைவியரோடு புணர்ச்சி யெய்தி இருந்தானுக, அதனையறிந்து ஆற்றளாய தலைவி *ஆற்றுமையைக் கண்டு வினய தோழிக்த அத்தலைவி அவனுழைதகின்றவாறுந் தன்னெஞ்சு அவன் வயத்ததாயவாறுங் கூறியது. "மறையின் வந்த மனையோள் செய்வினை, பொறையின்று பெருகிய †பருவாற் கண்ணும்" (க) என்பதனுலும் "பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவை" என்னும் (உ) சூத்திரத்தானு முணர்க.

இதன் பொருள்.

கோதை யாயமு மன்னையு மறிவுறப்
போதெழி லுண்கண் புகழ்நல னிழப்பக்
காதல்செய் தருளாது துறந்தார்மாட் டேதின்றிச்

க. தொல். கற். சூ: கo.

உ. தொல். கற். சூ. நக.

(பிரதிபேதம்) * தூற்றுமைகண்டு, † பருவரற்கண் என்பதனுலும்.

சிறிய தனித்தனை துன்னுசெய் தமர்ந்தனை
பலவுறு றடுக்கினை யினைபேங்கி யழுதனை
யலவலை யுடையை யென்றி தோழீ
கேளினி

எ-து: (க) கோதைபோல ஒழுங்குவிட்டு விளையாடும் ஆயத்தாரும் தாயும் அறிதலுறும்படி பூவினது அழகையுடைய கண்கள் புகழ்ந்த நலத்தை இழக்கும்படி முன்னர் நம்மிடத்தே மிக்க காதலை நிகழ்த்திப் பின்னர் நமக்கு அருளாதே ஒருகாரண*மின்றி நம்மைத் துறந்தாரிடத்தே முன்னர்ச்சிறியவாக வெறுத்தனை; பின்னர் அவர் நமக்குப் பொருந்தாக் குறைகளைச் செய்கையினலே அக்குறைகள் பல நூறுமாக அடுக்கிக்கூறி அதிலே அமர்ந்தனை; அதுவேயுமன்றி வருந்தியெங்கி அழுவதுஞ்செய்தாய்; ஆகலான் நீ (உ) அலமருதலை யுடையையாயிருந்தாயென்று சொல்லாநின்றாய்; தோழீ! இனி அலமரலைக் கேளென்றாள். எ - று.

எது, வடமொழி திரிந்து விகாரமாய் நின்றது.

அ (ங)மானெழின் மாதர் மகளிரோ டமைந்தவன்
காணும்பண் பிலனுத லறிவேன்மன் னறியினும்
பேணி யவன்சிறி தளித்தக் காலென்
ணணி னெஞ்ச நெகிழ்தலுங் காண்பல்

க. (அ) "திணிநிலைக் கடம்பின் நிரளரை வளைஇய, துணையறை மாலையிற் கையிணி விடேளம்" குறிஞ்சி. களசு-களள. (ஆ) "கோதை யாயமொ டோரை தழீஇ" அகம். சுக: கசு. (இ) "கடம்பு குடிய கன்னிமாலை போற், றொடர்ந்து கைவிடாத் தோழி மாரொடும்" சீவக. கூசுஅ.

உ. அலவல்-அலமருதல் போலும்; "அலவுற்று" (குறிஞ்சி. எ) என்பதற்கு, 'அலம் வந்து' என்று பொருளெழுதப் பட்டிருத்தலும் காண்க. 'அலவலை' எனின் மனத்திற் றோன்றியதை ஆராயாது செய்தலாம்; "அலவலை யில்லாக் குடியும்" திரிகடுகம். கூ. "அலவலைச் செய்திக் கஞ்சினன்" மணி. எ: நுக. "அலவலை நீர்த்தா லத்தைநின் னலரென" பெருங். (க) கூசு: கூஅசு. எனவருதல்காண்க. "அலவலைத்து வாழ்பவர்" பழ. கூஉசு. என்பதற்கு, 'நாணமில்லாததன்மையைச் செய்து வாழ்பவர்' என்று பொருள்செய்திருப்பது நோக்கி அலவலை யென்பதற்கு, நாணமின்மை யென்று பொருள் கொள்வாரு முளர். பின் "நாணி னெஞ்சம்" என வருதலும் நோக்குக.

ங. கலி. சுஎ - ஆம் செய்யுட்டாழிசைகள் இங்கே ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * இன்றியே நம்மை.

எ - து: மாட்சிமையையுடைய அழகினையுங் காதலையுமுடையமனைவியரோடே அவன் பொருந்தி நம்வருத்தத்தைப் பார்க்குங் குணமிலனையிருத்தலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் அவன் வந்து என்னைப் (க) பேணிச் சிறிதாக அளிக்க என்னுடைய நாணமில்லாத நெஞ்சம் என்வயத்ததன்றி அவனிடத்தே நெகிழ்ந்து செல்லுதலையுங் கண்டிருப்பேன். எ - று.

கஉ (உ)இருளுற ழிருங்கூந்தன் மகளிரோ டமைந்தவன்
றெருளுமம்பண் பிலனுத லறிவேன்மன் னறியினு
மருளி யவன்சிறி தளித்தக் காலென்
மருளி நெஞ்ச மகிழ்தலுங் காண்பல்

எ - து: இருளோடே மாறுபடுகின்ற கரிய கூந்தலையுடைய தொன்முறை மனைவியரோடே அவன் பொருந்தி நம் வருத்தத்தைத் தெளியுங் குணமிலனுயிருத்தலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் ஒருகால் அருள் பண்ணி அவன் சிறிதாக அளிக்க என்னுடைய மருளியாகிய *நெஞ்சம் அதற்கு மகிழ்தலையுங் கண்டிருப்பேன். எ - று.

கசு ஒள்ளிழை மாதர் மகளிரோ டமைந்தவ
னுள்ளுமம்பண் பிலனுத லறிவேன்மன் னறியினும்
புல்லி யவன்சிறி தளித்தக் காலென்
னல்ல னெஞ்ச மடங்கலுங் காண்பல்

எ-து: ஒள்ளிய இழையினையுங் காதலையுமுடைய தொன்முறைமனைவியரோடே அவன் பொருந்தி நம்மை நினைக்குங் குணமிலனுதலை †மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் அவன் சிறிதாகப்புல்லி அளிக்க என்னுடைய வருத்தத்தையுடைய நெஞ்சம் வருத்தமீளுதலுங் கண்டிருப்பேன். எ - று.

உ0 அதனால்
(ரு)யாம நடுநாட் டுயில்கொண் டொளித்த
காம நோயிற் கழீஇய(சு)நெஞ்சந்

க. "துனிசிறந் திழிதருங் கண்ணினீ ரறல்வார, வினிதமர் காதல னிறைஞ்சித்தன் னடிசேர்பு, நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம் போல" கலி. எக: ச - சு.

உ. "இருளுற ழிருங்கூந்த லிவண்மாட்டு" கலி. சக: கஅ.

ரு. "யாமத்துந் துயிலல ளலமரு மென்றோழி" (கலி. சஙி: கஅ.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

சு. கலி. சுஎ: கக-உக, எஎ: உக-உச-ஆம் அடிகளும் அவற்றின் குறிப்புக்களில் இவ்விடத்துக்குப்பொருந்துவனவும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * நெஞ்சமிழ்தலையும், † மிகவழிவேன்.

* தானவர் பாற்பட்ட தாயி
னுழையிர் வாழ்தலோ நகைநனி யுடைத்தே

எ - து: ஆகையினுலே காமநோயாலே மிக்க நெஞ்சந்தான்(க)நடுநாள் யாமத்தில் நாங்கொள்ளுந் துயிலெவாங்குக் கொண்டு ஒளித்தவர் பகுதியிலே பட்டுவிட்டதாயின், இனி நாமிருந்து உயிர்வாழ்கையோ மிகப் பிறர் சிரித்தலே யுடைத்தென்று தோழி வரைவுகடாவுதற்குக் கூறினுள். எ - று.

இதனுல், 'தன்வயினுரிமையும் அவன்வயிற் பரத்தையும்' (உ) கூறினுள்.

இதனுல், தலைவிக்கு †இழிவு பிறந்தது.

இது, கேளினி எனச் சொற்சேரடிவந்தமையிற் கொச்சகம். (இ)

(கஉங.) (ங)கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசைதொறுஞ்
சுரும்பார்க்குங் குரலினே டிருந்தும்பி யியைபூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போற்
பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்;

ஈ காணுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
மாணுநோய் செய்தான்கட் சென்றுய்ம்மற் றவனேடீ
காணவும் பெற்றுயோ காணுயோ மடநெஞ்சே;

கூ கொல்லேற்றுச் சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனெய் செய்தான்கட் சென்றுய்ம்மற் றவனேடீ
புல்லவும் பெற்றுயோ புல்லாயோ மடநெஞ்சே;

கஉ வெறிகொண்ட புள்ளினம் வதிசேரும் பொழுதினுற்
செறிவளை நெகிழ்த்தான்கட் சென்றுய்ம்மற் றவனேடீ
யறியவும் பெற்றுயோ வறியாயோ மடநெஞ்சே;

எனவாங்கு;

க. நடுநாள் - இடையாம்ம்; "நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்" புறம். கஅக: ங.

உ. தொல். கள. சூ. உ0.

ங. இச்செய்யுள், தரவுகப்பட்ட மரபிற்றுகித் தாழிசை வந்ததற்கும் (தொல். செய். சூ. கஙஉ. பேர்.) தரவிற்கு அடியைந்தாகச் சுரிதகம் நான்கடியாய்ச் சுருங்கி வந்ததற்கும் (தொல். செய். சூ. கஙஎ. பேர்) மேற்கோள்.

(பிரதிபேதம்) * தாமலர், † இளிவு.

கசு எல்லையு மிரவுந் துயிறுறந்து பல்லூ
ழுரும்பட சவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் றடுமாறி
வருந்தினை யளியவென் மடங்கெழு நெஞ்சே.

இது காப்புமீதழிக்கன் ஆற்றத தலைவி தலைவன்பாற்சென்ற நெஞ் சினை நோக்கி அழிந்து கூறியது.

இதன் பொருள்.

(க)கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை *மிசைதொறுஞ்
சுரும்பார்க்குங் குரலினை (உ)டிருந்தும்பி †யியைபூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண்மரபின்மால்(ங)‡யாழ்கேளாக் கிடந்தான்போற்
பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்

எ - து: கரியகொம்பினையுடைய ||புன்னையின்' சிறிய சினையில் நறிய தாகிய ÷மலர்தோறும் (சு)மலருஞ்செவ்வி பார்த்து நுகருதற்குச் சுரும்பினம் ஆரவாரிக்கும் ஒசையோடே +கரிய தும்பிகளும் ஒருங்கியைந்து ஊத'எழுந்த குரலுஞ் சேர இம்மெனும் ஒசைபட ஒலிக்கையினாலே அவற்றைக்கேட்டு யாவராலும் பெறுதற்கரியபொருளாகிய மூறைமையினையுடைய திருமால்

க. (அ) "இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை" (ஆ)"கருங்கோட்டுப் புன்னை மலரிற் றூதருந்தி, யிருங்களிப் பிரசமூத" நற். உசுக: க, ஙகக: கூ - கo; (இ) "கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில்" குறுந். கஉங. (ஈ) "கருங்கோட்டுப் புன்னைத் தங்குந் துறைவற்கு" ஐங். ககக; (உ) "பெருங்காற் புன்னைக் கருங்கோட்டு" பெருங். (க) சo: சுஅ. (ஊ) "இரும்புகலைத் தன்ன கருங்கோட்டுப் புன்னை" கல். ஙசு: ககஎன்பவற்றுல் புன்னை கருங்கோட்டதென்பது விளங்கும். அம்மரத்தைப்பற்றிய மற்றைச் செய்திகள் கலி. கஙசு: கஙஆம் அடிக்குறிப்பிற் காணலாகும்.

உ. (அ) "இருந்தும்பி யியைபூத" கலி. கஉஎ: ஙக. (ஆ) "திருந்தி னிளிவண்டு பாட விருந்தும்பி, யின்குழ லூதும் பொழுது" கார். கடு.

ங. யாழ் கேட்டா னென்னு மிடத்து யாழிற் பிறந்த இசையை யாழென் றலால், அது பிறந்தவழிக் கூறலென்னும் ஆகுபெயரென்பர் தெய் வச்; தொல். வேற்றுமைமயங்கி. சூ. ஙo. 'முதலிற்'

சு. "மலராக்காற், செல்லாவாஞ் செம்பொறி வண்டினம்" நாலடி. உஅங.

(பிரதிபேதம்) *மீமிசைச் சுரும்பார்க்குங் குழலினை, † இசைபூத, ‡ யாழ்கொளக்கிடந், ||புன்னையினுடைய சிறிய, ÷ மலர்மிசைதொறும், + கரியதாகிய.

பாட்டோடே யாழையுங்கேட்டுப் பள்ளிகொண்டவனைப்போலப் பெரிதாகிய கடலும் ஒலியவிந்து உறக்கத்தைக்கொள்ளும் வண்டு ஒலிக்கின்ற கானலின் கண்ணே. எ - று.

நெஞ்சே சென்றாய் என மேலே கூட்டுக.

ஓதம் வடிந்தகாலத்து மிக்க ஒலியின்மை பற்றிக் கூறிற்று.

புன்னை மலருஞ் செவ்விபார்த்து அவற்றை நுகர்தற்குரியன நுகர்கின்றமையுங் கண்டு யாமுங் காமச்செவ்வி அறிந்து நந் தலைவர் நுகரப்பெற்றிலே மேயென்று வருந்தியும், பாட்டையும் யாழையும்போலும் ஓசைகேட்டுக் கடலுட்படத் துயில்கின்ற காலத்தே யாமும் அவற்றைக் கேட்டுத் தலைவனிடத்தே துயிலப் பெறுகின்றிலேமேயென்று வருந்தியும், நெஞ்சுசென்றதென மேலே வருகின்ற இரங்கற்பொருட்கு முன்னின்ற கருப்பொருள் இறைச்சிப் பொருளாய் நின்று உபகாரப்பட்டு நின்றது. இஃது, "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" (க) என்பதனான் உணர்க.

சூ (உ)காணாமை யிருள்பரப்பிக் கையற்ற * கங்குலான்
(ங)மாணாநோய் செய்தான்கட் சென்றாய்மற் றவனை(ச)நீ
காணவும் பெற்றாயோ காணாயோ மடநெஞ்சே

எ - து: அறியாமையுடைய நெஞ்சே! கானலின்கண்ணே பொருள்களைக் கண்கள் காணாதபடி இருளைத்தான் பரப்பி உயிர்களெல்லாஞ் செயலறுதற்குக் காரணமான கங்குலிடத்தே ஒரு மருந்தாலும் மாட்சிமைப்படாத காமநோயைச் செய்தவனிடத்தே †போனாய்; போன நீ பின்னை அவனைக் கண்ணாற் காண என்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ, அவனைக் காணாதிருந்தாயோ கூறென்றாள். எ - று.

உம்மை இழிவுசிறப்பு. ‡இனிக் காணப்பெற்றாயோ இல்லையோ என ||ஓகாரத்தைஐயமாக்கி உரைத்ததுநிற்க, நீஅவனாற் காணப்பட்டாயெனக்கூறி ÷ஓகாரத்தினை இரக்கமாக்கிக் கூறலுமாம்.

இது +நடுயாமத்துச் சென்றமை கூறினாள்.

க. தொல். பொருளி. சூ. ௩௫.

உ. "காணாமை.....காணாயோ மடநெஞ்சே" என்பது தாழிசையெனவும் இடைநிலைப் பாட்டெனவும் படுமென்பர் பேராசிரியர்; தொல். செய். சூ. கங௨. நச்சினார்க்கினியரும் அல்வாறே கூறுவர்; தொல். செய். சூ. கங௭.

ங. (அ) "மாணாநோயுழப்பதை" கலி. கங௨: ககூ. மாணாமை, அளவிறத்தலென்னும் பொருளிலும் வரும்.

ச. நெஞ்சொடு கேட்குந போலக் கூறியதற்கு "நீ.....நெஞ்சே" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. ௨௦௦. நச்.

(பிரதிபேதம்) * கங்குல்வாய், † போனாய்நீ, ‡ இனிப்பெற்றாயோ, || ஓகாரமைய, ÷இரக்கமாகக்கூற, +நடுவியாமத்து.

கலித்தொகை கூஉங்.

கூ (க)கொல்லேற்றுச் (உ)சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனெய் செய்தான்கட் சென்றுய்மற் றவனைநீ
புல்லவும் பெற்றுயோ புல்லாயோ மடநெஞ்சே

எ - து: மடநெஞ்சே! கானலின்கண்ணே கொல்கின்ற(ங) எறுகியசுறவி னுடைய திரள் போவாரைப் போகாமற்காத்தலைக்கொண்ட மயக்கத்தை யுடைய மாலைக்காலத்தே வருத்தத்தையுடைய காமநோயைச் செய்தவனிடத் தேபோனாய்; போன நீ பின்னே அவனைப் புல்லஎன்கின்ற அவ்வளவுதானும் பெற்றுயோ, புல்லாதிருந்தாயோ கூறென்றாள். எ - று.

இனிப் புல்லப்பெற்றுயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்தலுமாம். *நீ அவனைப் புல்லப்பட்டாயெனக்கூறி ஓகாரத்தினை இரக்க மாக்கிக் கூறலுமாம்.

கஉ †வெறிகொண்ட (ச) புள்ளினம் ‡வதிசேரும் பொழுதினைற்
செறிவளை நெகிழ்த்தான்கட் சென்றுய்மற் றவனை(ஞ)நீ
யறியவும் பெற்றுயோ வறியாயோ மடநெஞ்சே

க. தொல். செய். சூ. கஉ. நச். மேற்கோளில் 'கொல்லேற்று' என்னும் தாழிசை மூன்றுவதாகவும் 'வெறிகொண்ட' என்னும்தாழிசை இரண் டாவதாகவும் காணப்படுகின்றது.

உ. "செழுங்கதிர் மண்டில, மால்வரை மறைய.....மல்குகழித், துணைச்சுரு வழங்கலும் வழங்கும்"

ங. (அ) "கடல்வாழ் சுறவு மேறெனப் படுமே" தொல். மர. சூ. கூ. (ஆ) "சுறவுப்பிற ழிருங்கழி நீந்தி" தொல். கள. சூ. உங. நச். மேற் கோள். என்பனவும் (இ) "கோட்சுரு வினத்தொடு" (சீவக. கூடு) என் பதன் விசேடவுரையில் 'முன்னே கழியிணைந்தமைபெறுதலின், சுறவு கூறினர்' என்று எழுதியிருப்பதும் (ஈ) கடல் 'மகாலயம்' என்று கூறப்படுதலும் நோக்க, சுறவு நெய்தனிலத்திற்கே உரியதென்று கொள்ளலாகும். (உ) மேலுள்ள தொல்காப்பியச் சூத்திரத்தின் இளம் பூரணருரையில், 'பிள்ளைச்சுறவு, யாற்றுச் சுறவு உண்மையின், செய் யுட்காவது கடல்வாழ் சுறவொன்றே யெனப் பிரித்தான்' என ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. இச்செய்தி ஆராய்தற்பாலது.

ச. "புள்ளின மிரைமாந்திப் புகல்சேர" கலி. கஉஉ: ச.

ஞ. "நீ.....நெஞ்சே" என்பது உணர்வுடையதுபோல் நகை பற்றிக் கூறியதற்கு மேற்கோள்; தொல். பொருளி. சூ, உ. நச்.

(பிரதிபேதம்) * தானவனைப் புலப்புட்டா, † பொறிகொண்ட, நெறிகொண்ட. ‡ பரி சேரும்போழ்திலுல்.

எ - து: மடநெஞ்சே! அக்கானலின்கண்ணே ஒழுங்குகொண்ட பறவைத்திரள் தாந் தங்கும் இடத்தே சென்றுசேரும் மாலைக்காலத்தே முன்பு செறிந்தவளை கழலப் பண்ணினனிடத்தே போனாய்; போன நீ பின்னை அவனை மனத்தினை *அறிய என்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ, அதுதானும் அறியாதிருந்தாயோ கூறென்றாள். எ - று.

இனி அறியப் பெற்றாயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்ததுமிற்க, நீதான் அவனாலறியப்பட்டாயென உரைத்து ஓகாரத்தை இரக்கமாக்கலுமாம்.

†எனவாங்கு அசை.

கசு எல்லையு மிரவுந் துயிறுறந்து பல்லா
(க)ழரும்பட ரவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் (உ)றுமாறி
வருந்தினை ‡யளியவென் மடங்கெழு நெஞ்சே

எ - து: அது கூறுமையின், பின்னும் அறியாமை பொருந்தியளிக்கத்தக்க என்னெஞ்சே! பொறுத்தற்கரிய வருத்தத்தையுடைய காமநோயைச் செய்தவனிடத்தே பகலுமிரவுந் துயிலைக் கைவிட்டுக் கரியகழியில் ஓதம் போவதுவருவதாய்த் தம்மாறுந்தன்மைபோல நீயும் பலமுறையாகச் சென்றும் வந்துந் தம்மாறி அவனைப் பெறுதல் நச்சி முடிவில் வருந்திவிட்டாய்; ||ஈதன்றே நீபெற்றதென நெஞ்சினைநோக்கி அழிந்துகூறினாள். எ - று.

இஃது "உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன், மறுத்துரைப் பதுபோ ÷னெஞ்சொடு புணர்த்தும்" (ங) என்பதனுட்கூறியது.

க. "அரும்பட ரவலநோ யாற்றவ ளென்னுது" (கலி.உஅ:கo.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "மணிநிற நெய்த லிருங்கழிச் சேர்ப்ப, னணிநல முண்டகன்று னென்றுகொ லெம்போற், றிணிமண லெக்கர்மே லோதம் பெயரத், துணிமுந்நீர் துஞ்சா தது" (ஆ) "பறைவா யொலியோதம் பக்கருகளுந், துறைசேர் சிறுகுடியார் துஞ்சினுந் துஞ்சாய், நிறையின், மருண்மாலை யெம்போல நீத்த, துறைவ னுடையையோ நீவாழி வீராய்" (இ)"வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய், பொருதி புலம்புநி நீயுங் - கருதுங்காற், பண்டினை யல்லையாற் பாழித்தோட் கோதை யைக், கண்டனையோ வாழி கடல்" (ஈ) "போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி, நாவாய் குழற நடுங்குறுவாய்.....ஆர்கலியே"

ங. தொல். பொருளி. சூ. உ.

(பாடபேதம்) * நீ அறிய, † துஞ்க எல்லையும், ‡ அளியையென், || இதுவன்றே. ÷ நெஞ் சொடு னெந்தலென்பதனுள்.

இதனுல், தலைவிக்கு இழிவு தோன்றிற்று.
இஃது ஒத்தாழிசைக்கலி. (சு)

(கஉச.) ஞாலமூன் றடித்தாய முதல்வற்ரு முதுமுறைப்
பாலன்ன மேனியா னணிபெறத் தைஇய
நீலநீ ருடைபோலத் தகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப;

நி ஊரல ரெடுத்தரற்ற வுள்ளாய்நீ துறத்தலிற்
சூருக்தன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
பீரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால்;

கூ இணைபிவ்வு ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலிற்
புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றுணையாருட் டகைபெற்ற தொன்னல மிழந்தினி
யணிவனப் பிழந்ததன் னணைமென்றோ ளல்லாக்கால்;

கஙு. இன்றிவ்வு ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலி
னின்றதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்
வென்றவே னுதியேய்க்குஞ் விறனல னிழந்தினி
நின்றுநீ ருகக்கலுழு நெடும்பெருங்க ணல்லாக்கால்;

கள அதனுல்;

பிரிவில்லாய் போலநீ தெய்வத்திற் றெளித்தக்கா
லரிதென்னு டுணிந்தவ ளாய்நலம் பெயர்தரப்
புரியுளைக் கலிமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகநின் செலவே.

இது "வெளிப்பட வரைதல் படாமை வரைதலெள், றுயிரன்டென்ப வரைத லாறே" (க) என்பதனுற் களவு வெளிப்பட்டபின் வரையாது பொருள்வயிற் பிரிந்துவந்தானைத் தோழி எதிர்ப்பட்டுநின்று தலைவியது ஆற்றமை கூறி வரைவுகடாயது.

இதன் பொருள்.

க. தொல். களவு. சூ. சக.

(கஉச.) ஞாலமூன் றடித்தாய முதல்வற்கு முதுமுறைப்
(க)பாலன்ன மேனியா னணிபெறத் தைஇய
(உ)நீலநீ *ருடைபோலத் தகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப

எ-து: (ங)உலகமூன்றையும் தன்திருவடியாலே அளந்த எப்பொருட்கும் அடியாயிருக்கின்றவனுக்கு மூத்தமுறைமையினையுடைய(ஈ)நம்பிமூத்தபிரான் அழகுபெற உடுத்த நீலத்தினது நீர்மையையுடைய ஆடையை ஒக்கும்படி அழகைப்பெற்ற வெண்டிரையினையுடைய கடல் வெண்மையையுடைய இமயவிடத்தே வந்து சூழ்ந்து விளங்குகின்ற † நீரையுடைய தண்ணிய ‡சேர்ப்பனே. எ – று.

வெண்மை திரைக்கு அடையாய்த் திரை ஆகுபெயராய் நின்றது; || நீல வுடைக்கு வெண்மை =ஒப்பன்மையின்.

கடல் தன்கரையை இகவாமை நிற்கின்ற சேர்ப்பனென்றதனால், நீயும் குடிப்பிறந்தார்க்குவரைந்துகொண்டுஇல்லறநிகழ்த்தவேண்டுமென்று ÷கூறிய கரையைக் கடவாமல் வரைந்துகோடல் வேண்டு+மென்று உள்ளுறையுவமங் கொள்க.

(ரு) ஊரல ரெடுத் ×தரற்ற வுள்ளாய்நீ (டு)துறத்தலிற்
கூருந்தன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்

க. "பானிற வண்ணன்போல்" கலி. கஅச: அ.

உ. (அ) "அலத்தான் முன்னம் பிளந்தபகை யடர்ப்பான் கருதிப் பிளப் புண்ட, சலத்தால் யமுனை பிணித்ததெனத் தயங்கும் படிசேர் தானை யினன்" வில்லி. திளைபதி. சஅ. (ஆ) "துளங்கொளி நீலநுண் டுகிலு டுத்தநல், விளங்களி றன்னவன் வீராமனே" (இ) "கொய்யு நாண்மலர் விரைகமழ் யமுனை கொய்யாத, செய்ய பொற்றணர்த் தேன்தொடை யொன்றொடு செறிந்த, நெய்யி ருங்குழ லிரேவதி கொழுநற்கு நெய்யா, வைய நீலநுண் டுகிலிரண் டளித்ததையன்றே" பாகவ. அக்குரூரன்வந்த: கக. நம்பிமூத்தபிரான் கோகுல. அ.

ங. "மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத், தாவியசே வடி" சிலப். கள.

ச. இந்நூற்பக்கம் கசச: உ – ஆம் குறிப்புப் பார்க்க.

ஞ. "தன்னெவ்வங் கூரினு நீசெய்த வருளின்மை, யென்னையு மறைத்தா ளென் றோழி" (கலி. சச: அ – ங) என்பதும் அதன் குறிப்புக்களில் இவ்விடத்துக்கு ஒத்தனவும் இங்கே ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * உடையபோற்றகை, †நிரையையுடைய, ‡சேர்ப்பனே கடல் தன் கரையை .....உள்ளுறை உவமங்கொள்க வெண்டிரை திரைக்கு. || நீலவாடைக்கு. = ஒப்பன்மையின் ஊரலர், ÷ கூறிக் கரையை. + என்ற உள்ளுறை, × சூர்ப்பவுள்ளாய்.

காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
(க)பீரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால்

எ - து: காரிகைபெற்ற *தன் அழகு கெடும்படி மனங்கலங்குதலாலே அப்பொழுதே பீர்க்கினது பூவினது அழகைத் தன்னிடத்தேகொண்ட பிறைபோலும் நுதலல்லாத இடத்து, இவ்வூரிலுள்ளார் அலரை உயர்த்துக் கூப்பிடும்படி நீ இவளைக் கைவிடுகையினாலே மிகுகின்ற தன்னுடைய வருத்தத்தையுடைய (உ) காமநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்? நுதல் புலப்படுத்தா †நின்றதே. எ - று.

காரிகைபெற்ற தன் கவின் - பிறர் இவளழகைப் பெறுதற்குக் காரணமான தன் அழகு; என்றது ‡பிறர் (ங) மகளுக்கு ஒப்புக் கூறுமிடத்து இவள் உவமையாய் நிற்பளென்பதாம்.

சு இணைபிவ்வூ ரலர்தூற்ற (ச)வெய்யாய்நீ துறத்தலிற்
புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றுணையாருட் டகை||பெற்ற தொன்னல மிழந்தினி
யணிவனப் +பிழந்ததன் (ரு)னணைமென்றோ ளல்லாக்கால்

க. "நுதல், பீரல ரணிகொண்ட பிறைவனப் பிழவாக்கால்" (கலி. ருங. கச - கரு.) என்பதும் அத்ன் குறிப்பும் பார்க்க.

உ. "என்றுதன் னகம்புடை யியலக் காளையா, லொன்றிய வுள்ளநோ யொளிக்க லுற்றன, ளின்றிவ ளகத்தது காமநோ யெனப், பொன்றவழ் பசலைமெய் புகல லுற்றதே" சூளா. கல்யாண. உககூ.

ங. (அ) "உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும், பிறர்க்கு நீ வாயினல்லது நினக்குப், பிறருவம மாகா வொருபெரு வேந்தே" பதிற். எங: க - ங. என்பதும் (ஆ) "சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி, போர்மிகு பொருந" (திருமுருத. உஎரு. சு.) என்புழி, "பொருந" என்பதற்கு,'உவமிக்கப்படுவாய்' என்று உரையும்,'பொருவப்படுமவன், பொருநனென நின்றது' என்று விசேடவுரையும் (இ) "பொருப்பிற் பொருந" (மது.சஉ) என்புழி, "பொருந" என்பதற்கு 'ஒப்பற்றவனே' என்று உரையும் 'பொருநனென்றது தான் பிறர்க்கு உவமிக்கப்படுவானென்னும் , பொருட்டு' என்று எழுதியிருக்கும் விசேடவுரையும், (ஈ) "ஒரு வீரரு முவமைக்கெதி ரில்லாவிற லுரவோன்" வில்லி. மணிமான். உஅ என்பதும் ஈண்டு அறிதற் பாலன.

ச. "எய்யா மையே யறியா மையே" தொல். உரி. சூ. சச.

ரு. "அணைமென்றோள்" பரி. எ: ருரு. இந்நூல் சஂஂ: ச.குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * தன்கவின் பிறர் இவ.....நிற்பளென்பதாம். தன் அழகு கெடும்படி.
† நின்றதே இணையிவ்வூர்,‡பிறமகளுக்கு.|| பெறத்தொன், +இழந்தன்னவனை,

எ - து: தோழியர் தோள்களில் அழகுபெற்ற இயற்கை நலத்தையும் இப்பொழுது இழந்து, நீ அணிதலாற் பெற்ற செயற்கை நலத்தையும் இழந்த தன்னுடைய அணைபோன்ற மெல்லியதோ ளல்லாத இடத்து, தம்மிற்கூடி இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றும்படி இவள் வருத்தத்தை நீ அறியாயாய் நீ துறக்கையினாலே * உண்டான தனக்கு உவமை கூறவொண்ணாத வருத்தத்தையுடைய காமநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்? தோள் புலப்படுத்தா நின்றதே. எ - று.

கங இன்றிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலி
னின்றதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்
வென்றவே னுதியேய்க்கும் விறனல னிழந்தினி
†நின்றுநீ ருகக்கலுழு நெடும்பெருங்(க)க ணல்லாக்கால்

எ - து: வென்றவேலினது முனையையொக்கும் வெற்றியினையுடைய நலத்தை இப்பொழுது இழந்து நீர் நின்று உகும்படியாக அழுத நெடிய பெரியகண் அல்லாத இடத்து, இன்று இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றும்படி இவள் வருத்தத்தை அறியாயாய் நீ துறக்கையினாலே தன்னிடத்தே நின்ற எவ்வநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்; கண் புலப்படுத்தாநின்றதே. எ - று.

கஎ அதனால்
பிரிவில்லாய் ‡போலநீ தெய்வத்திற் றெளித்தக்கா
லரிதென்னா டுணிந்தவ (உ)ளாய்நலம் பெயர்தரப்
புரியுளைக்|| கலிமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகநின் செலவே

எ - து: அலர்ந்த குளிர்ந்த மாலையினையுடைய அகற்சியையுடைய மார்பனே! அவ்வருத்தத்தாலே பிரிவில்லாதாரைப்போலே நீ இயற்கைப் புணர்ச்சிப் பின்னர்த் தெய்வத்தாலே பிரியேனென்று தெளிவிக்க, அப்பிரிவின்மை அரிதென்றுகருதாளாய் அதனை உண்மை என்று துணிந்தவளுடைய கெட்ட நலம் பண்டுபோலே நன்றாம்படி நின்னெஞ்சிலே புரிந்த உளையினையுடைய கலிமாப்பூண்ட தேரைச்செலுத்தாநின்று எம்மனையிடத்துச் செல்லும் நின் செலவை விரைவாயாகவென வரைவுகடாயினாள். எ - று.

க. "கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க, ணுரைக்கலுறுவதொன்றுண்டு" குறள். கஉஎக.

உ. "மாணிழை யரிவை காணிய வொருநாட், பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்" பதிற். அக: ௩௧ - ௩௨.

(பிரதிபேதம்) * உண்டானதுக்கு உவமை, † நின்றநீ ருகக்கலிழும். ‡ போலத் தெய்வத்திற்றெளித்தசொல், || பரிமான், வயமான், நெடுமான்.

அதனால் விரைகவென்க. ஆய்நலம் - நுணுகியநலம்.

இதனால், தலைவற்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது (க) *நான்கடியே நான்கடித் தரவிற்கு மரபென்றதனாற் கொண்ட நான்கடித் தாழிசையும் நடைநவிலாது பொருள்பெற்ற தனிச்சொல்லும் தரவியலொத்து இறுதிநிலையுரைத்த சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.(எ)

(கஉரு.) கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு
ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பினு மறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகவின்
வண்பரி நவின்ற வயமான் செல்வ
நன்கதை யறியினு நயனில்லா நாட்டத்தா
லன்பிலை யெனவந்து கழறுவ லையகேள்;

அ மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூ ழிளமுலை
முகிழ்செய முள்கிய தொடர்பவ ளுண்க
ணவிழ்பனி யுறைப்பவு நல்காது விடுவா
யிமிழ்திரைக் கொண்க கொடியை காணீ;

கஉ இலங்கே ரெல்வளை யேர்தழை தைஇ
நலஞ்செல நல்கிய தொடர்பவள் சாஅய்ப்

க. (அ) "இடைநிலைப்பாட்டே, தரவகப்பட்ட மரபின தென்ப" என்னும் தொல். செய். கஙச-ஆம் சூத்திரவுரையில் 'தரவிற் சுருங்கு மென்னாது அகப்படுமென்றான், தரவோடு ஒத்து வருந் தாழிசை என்ப தூஉங் கோடற்கு. என்னை? மக்களகத்துப் பிறந்தான் என்றவழி அச்சாதியோடொக்கப் பிறந்தானென்பது படுமாகலின்' என்றுகூறி, அதற்கும் தொல். செய். கஙஎ - ஆம் சூத்திரவுரையில் அளவியலாற் சுரிதகமொத்ததென்பதற்கும் இச்செய்யுளை மேற்கோள் காட்டுவர் பேராசிரியர். (ஆ) நச்சினார்க்கினியர் தொல். செய். கஙஎ - ஆம் சூத்திரவுரையில், 'இது நாலடி யிழிபாகிய நான்கடித்தரவிற்கு மரபென்ற இலேசாற்கொண்டநான்கடித்தாழிசை தம்முள் அளவொத்து வந்து நடை நவிலாது பொருள்பெற்ற தனிச்சொல்லும்பெற்றுத் தரவியலொத்து இறுதிநிலை யுரைத்த சுரிதகமும்பெற்ற வொத்தாழிசைக்கலிப்பா' என்று இங்குள்ள செய்தியையே தெளிவாக எழுதியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * நான்கடிபோய நான்கடித்.

புலந்தழப் புல்லாது விடுவா
யிலங்குநீர்ச் சேர்ப்ப கொடியை காணீ;

௧௬ இன்மணிச் சிலம்பிற் சின்மொழி யைம்பாற்
பின்னொடு கெழீஇய தடவர வல்கு
னுண்வரி வாட வாராது விடுவாய்
தண்ணந் துறைவ தகாஅய் காணீ;

எனவாங்கு;

௨௧ அனையளென் றளிமதி பெரும நின்னின்
றிறைவரை நில்லா வளைய ளிவட்கினிப்
பிறையேர் சுடர்நுதற் பசலை
மறையச் செல்லுநீ மணந்தனை விடினே.

இது வரைவுநீட ஆற்றாத தலைவிநிலைமை தலைவற்குத் தோழி உறி அவனை நெருங்கி வரைவுகடாயது.

இதன் பொருள்.

(௧) கண்டவ ரில்லென *வுலகத்து ளுணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு
ணெஞ்சறிந்த கொடியவை †மறைப்பினு மறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகலின்
வண்பரி நவின்ற வயமான் செல்வ
நன்கதை யறியினு நயனில்லா (௨)நாட்டத்தா
லன்பிலை யெனவந்து கழறுவ லையகேள்

---

௧. (அ) "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்னும் குறளின் உரையில் நெஞ்சு கரியாதற்கு, "கண்டவ ரில்லென.....கரியில்லை யாகலின்" என்னும் அடிகளை மேற்கோள்காட்டி, 'பொய்மறையாமையின் அது கூறலாகாதென்பது இதனாற் கூறப்பட்டது' என்பர், பரி; குறள். ௨௯௩.(ஆ) "தன்னைத்தன் னெஞ்சங் கரியாகத் தானடக்கிற், பின்னைத்தானெய்தா கலனில்லை" அறநெறி. ௨௦௭. (இ) "வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும், வஞ்சித்தோமென்று மகிழன்மின் -வஞ்சித்த, வெங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி, யங்கங் குலைவ தறிவு" நீதிநெறி. ௧௪. என்பவை இங்கே அறிதற்பாலன.

௨. நாட்டம் - ஆராய்ச்சி. புறம். ௩௫: ௧௪, ௭௦: ௧௧.

(பிரதிபேதம்) * உலகத்துணராதார், † மறைப்பவு மறையாவா னெஞ்சத்திற குறுகிய.

எ - து: அறியாதவர்கள்¡தம் மனம் இது செய்யலாகாதென்பு மீளாதே வேறு விலக்குவாரும் இன்றி உலகத்திற் கண்டவர்களும் இல்லையென்று கருதித் தாஞ் செய்யுந் தீவினைகளுள் தாம் தெஞ்சறியவே செய்த கொடிய தீவினைகளைப் பின்பு பிறர் அறியாமல் மறைத்தார்களாயினும் தாஞ் செய்த மையை அறிந்திருக்கின்றவர்கள் தம்முடைய நெஞ்சத்திற்காட்டில் அணுகிய சான்று வேறில்லையாகையினாலே வளைய பரியிலேபயின்ற வலியினையுடைத் தாகியகுதிரையையுடைய செல்வனே! நின்னை யான் கழறவேண்டுவதில்லை. அக்கழறவேண்டாமையை நன்றாக அறிந்தேனாயினும் நின்னோடு யான் கொண்ட நலம்பாடில்லாத ஆராய்ச்சியாலே நீ அன்புடையை¡யல்லையென்று சொல்லிவந்து நின்னைக்கழறுவேன்; ஐயனே! நீ அதனைக்கேள். எ-று.

நயன் - உறவு(மாம்.)

அ (க)மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூ ழிளமுலை
முகிழ்செய (உ)*முள்கிய தொடர்பவ ளுண்க
(ங) ணவிழ்பனி யுறைப்பவு நல்காது விடுவா
யிமிழ்திரைக் கொண்க கொடியை காணீ

எ - து: மகிழ்ச்சியைச் செய்கின்ற †இனிமையுடைத்தாகிய மொழியினை யுடையாளுடைய தொய்யில் எழுதின இளையமுலை தோன்றுதலைச் ‡செய்யா நின்ற இளமைப்பருவத்தே நீ கூடிய தொடர்ச்சியை, அவள்கண் தோற்று வித்தநீர் துளியாகவிழவும் அதுகண்டும்நல்காது விடுகின்றவனே! ஒலிக்கின்ற திரையையுடைய கொண்கனே! நீ மிகக் கொடியைகாண். எ - று.

கஉ (ச)இலங்(கு)கே ரெல்வளை யேர்தழை தைஇ
நலஞ்செல நல்கிய தொடர்பவள் சாஅய்ப்
‖புலந்தழப் புல்லாதுவிடுவா
(ஙு)யிலங்குநீர்ச் சேர்ப்ப ×கொடியை காணீ

க. தோழி தலைவனை "அன்பிலை கொடியை" என்றற்கு, "மகிழ்செய் .....சேர்ப்ப கொடியை காணீ" என்னும் பகுதிகள் மேற்கோள்; தொல். கற்பி. சூ. கடு. 'பரத்தைவாயில்' இளம்.

உ. முள்குதல் - கூடுதல்: சீவக. சஉ0, சுஅஎ, கசகங, கடுகச, ககஅசு, உகஅச.

ங. வகர மகரமும் தம்முள் ஒன்றற்கொன்று எதுகையெனப்படும். உயிரெதுகை, மூன்று மெழுத்தொன்றெதுகை யென்பாருமுளர்.

ச. "இலங்கே ரெல்வளை" கலி. எ: கசு; சசு: உஎ.

ஞ. இந்நூற்பக்கம் கடுஅ: ச - ஆம் குறிப்புப் பார்க்க.

"இலங்குநீர்த் தண்சேர்ப்ப" கலி. கஉசு: ஞ.

(தம்) * மூழ்கிய, † இனிமையையுடைத்தாகிய, ‡ செய்யா நிற்கின்ற. ‖ புலந்தழ (பிரதிபேதம்) புலந்தழீஇப் புல்லாத(என்பது தொல். பிரதிபேதம்). × கலியை.

எ-து: எல்வளையினையுடையாளது அழகையுடைய(க)தழையை உடுத்து இலங்குகின்ற இளமைப்பருவத்து * எழுச்சியினுடைய நலம் மேன்மேல் வளர்ந்துசெல்லும்படி நீ நல்கிய தொடர்ச்சியை, அவள்மேனிசாய்ந்து நின்னை வெறுத்து அழாநிற்க அது கண்டும் பொருந்தாதே கைவிடுகின்றவனே! இலங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே! நீ மிகக்கொடியைகாண். எ - று.

கசு (உ) †இன்மணிச் (ங)சிலம்பிற் (ச)சின்மொழி யைம்பாற்
பின்னொடு ‡கெழீஇய தடவர வல்கு
னுண்வரி வாட வாராது விடுவாய்
(ரு)தண்ணந் துறைவ தகாஅய் காணீ

எ - து: இனிதாகிய உள்ளிடுமணியையுடைத்தாகிய சிலம்பினையுடைய சிலவாகிய மொழியினையுடையாளுடைய மயிரைப் பின்னிமுடிக்கின்ற இளமைப்பருவத்தே வந்து பொருந்தின உறவின்பெருமை இடையறாது வாராநிற்க, அவளல்குலின் நுண்ணிய வரி வாடும்படி அவள்பால் வாராமல் அவளைக் கைவிடுகின்றவனே! தண்ணந்துறைவனே! நீ இனித் தகுதிப்பாடுண்டாகாய் காண். எ - று.

எனவாங்கு, அசை.

உக அனையளென் றளிமதி பெரும நின்னின்
றிறைவரை நில்லா வளைய ||ளிவட்கினிப்
பிறையேர் சுடர்நுதற் +பசலை
மறையச் செல்லுநீ மணந்தனை விடினே.

எ - து: பெருமா! அவளை யான் கூறிய அத்தன்மையையுடையளென்று உட்கொண்டு அளிப்பாய்; அளித்துவரைந்து தோள்மணந்தனையாய்

க. தழை, இன்னதென்பதும் அதனை இளையமகளி ருடுப்பரென்பதும் இந்நூற்பக்கம் சுஙக: க-ஆம் குறிப்பால் அறியலாகும்.

உ. தாழிசையில்லாத இடைநிலைப் பாட்டுக்கு "இன்மணிச்..... தகாய் காணீ" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. கஙஉ. பேர். சூ. கஙஎ. நச்.

ங. "ஆய்சிலம் பெழுந்தார்ப்ப வஞ்சில வியலுநின், பின்னுவிட் டிருளிய வைம்பால்கண்டு" கலி. ருக: எ - அ.

ச. இந்நூற்பக்கம் கருக: க-ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. விரிக்கும்வழி விரித்தலுக்கு, "தண்ணந் துறைவன்" என்பது மேற்கோள்; தொல். எச்ச. சூ. சுஙங. சேனா.

(பிரதிபேதம்) *எழிச்சி. †இன்மொழிச்சிலம்பின். இன்னொலிச் சிலம்பினின். இன்னரிச்சிலம்பின். ‡ தழீஇயதட. || அவட்கினி. + பயலை.

விடின் நின்னேயின்றி *இறையினெல்லேநில்லாமற் கழன்ற வளையினையுடைய இவட்கு இனிப் பிறையையொக்குந்திருநுதலிற் றோன்றியபசலை ஒருகாலமும் வாராமல் மறையும்படியாகப் போமென வரைவுகடாயினள். எ - று.

இதனுல், தலைவற்குப் புணர்ச்சியுவகை † பிறந்தது.

இது "பரத்தை மறுத்தல்வேண்டியும்" என்னும் (க) சூத்திரத்தாற் கை கோளிரண்டற்கும் பொதுவாகப் பொருள் கூறவும் பெறும்.

இது தாழிசையல்லா இடைநிலைப் பாட்டுப்பெற்றுப் புல்லாது விடுவா யெனக் குறைந்துவருதலின் யாப்பின்வேறுபட்டகொச்சகம். (அ)

(கஉசு.) பொன்மலை சுடர்சேரப் புலம்பிய விடனேக்கித்
தன்மலர்ந் துலகேத்தத் தகைமதி யோர்தரச்
செக்கர்கொள் பொழுதினு ளெவிஞீவி யினநாரை
முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போ
லெக்கர்மே லிறைகொள்ளு மிலங்குநீர்த் தண்சேர்ப்ப;

சு அணிச்சிறை யினக்குரு கொலிக்குங்கா னின்றிண்டேர்
மணிக்குர லெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யுள்ளான்ற வொலியவா யிருப்பக்கண் டலைகானற்
புள்ளென வுணர்ந்துபிற் புலம்புகொண் டினையுமே;

கo நீர்நீவிக் களுன்றபூக் கமழுங்கா னின்மார்பிற்
றூர்நாற்ற மெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யலர்பதத் தசைவளி வந்தொல்லக் கழிப்பூத்த
மலரென வுணர்ந்துபின் மம்மர்கொண் டினையுமே;

கச நீகைர் நிறையாற்று ணினையுநள் வதிந்தக்காற்
றோண்மேலா யெனநின்னை மதிக்குமன் மதித்தாங்கே
கனவெனப் புல்லுங்காற் காணுளாய்க் கண்டது
கனவென வுணர்ந்துபிற் கையற்றுக் கலங்குமே;

எனவாங்கு;

க. தொல். கற்.சூ. கள. இச்சூத்திரத்தினுரையிலும் இவர் இச்செய்யுளை இச்செய்திக்கே மேற்கோள்காட்டி, இதனைக் கைகோளிரண்டிற்குங் கொள்கவென்பர்.

(பிரதிபேதம்) * இனி இறையினெல்லே. † பிறந்தது. இது தாழிசை.....கொச்சகம். இது பரத்தை மறுத்தலேயேண்டியும்.

கசு பலநினைந் தினையும் பைத னெஞ்சி
னலமர னெயு ளுழக்குமென் றேழி
மதிமருள் வாண்முகம் விளங்கப்
புதுநல மேர்தரப் பூண்கநின் றேரே.

இது தோழி தலைவியது ஆற்றமை கூறித் தலைவனை வரைவுகடாயது.

இதன் பொருள்.

பொன்மலை (க)சுடர்சேரப் புலம்பிய விடனேக்கித்
தன்மலைந் துலகேத்தத் *தகைமதி பேர்தரச்
செக்கர்கொள் பொழுதினு ளெலிநீவி யினநாரை
மூக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போ
லெக்கர்மே விறைகொள்ளு (உ)மிலங்குநீர்த் தண்சேர்ப்ப

எ-து: (ங)பொன்னையுடைய அத்தகிரியிலே ஞாயிறு ‡சென்றுசேர, அஞ்ஞாயிறு †உடனேபட, ஞாயிறின்றி வருந்தின உலகைநோக்கி ‡உலகங்கொண்டாடும்படியாகத் தகைமையினையுடைய மதி எழாநிற்க, செக்கர்வானத்தைக் கொண்ட அந்திக்காலத்தின்கண்ணே, (ச) மூக்கோலைக் கையிலே ‡கொண்ட அந்தணர் முதியமொழியை நினைக்கின்றவர்களைப்போலே, இனமான நாரைகள் ஆரவாரத்தைக் கைவிட்டு இடமணன்மேலே இறுத்தலைச் செய்யும் இலங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே! எ - று.

(ரு) அந்தணர், காஷாயம் போர்த்த குழாங்கள். முதுமொழி - பிரணவம், பெரியநாரைசிறகுசிவந்திருத்தலானும்மூக்குத்‡தலையிலேசென்று‖குத்தலானும் அதனை மூக்கோலை ஊன்றியிருந்தஅந்தணரோடு ÷ ஒப்புரைத்தார்.

(சு)நாரை பகற்பொழுதெல்லாம் பல்லுயிர்க்கு வருத்தஞ்செய்து இரைகவர்ந்து அந்திக்காலத்து ஓர் ஆரவாரமின்றித் தீங்குசெய்யாதாரைப் போலே

க. "தினக ரன்கரந் திகழ்க மண்டலம், பனிகொள் செக்கர்தம் படம தாகவே, யினிய வந்தனைக் கெறியும் வேலைசேர், புனித ரொத்ததப் புன்கண் மாலையே" வில்லி. சூதுபோர். கசஉ.

உ. "இலங்குநீர்ச் சேர்ப்ப" கலி: கஉஞ: கஞ.

ங. "அத்தமென்னும், பொன்னஞ் சிலம்பு கதிரோன் மறைதலும்" இறை. சூ. கஅ. மேற்கோள்.

ச. இந்நூற்பக்கம் நுஅ: உ - ஆம் குறிப்புப் பார்க்க.

ஞ. "சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய்" ஐந் - எழு. கஅ.

ட. "கூர்வாய்ப் பறைதபு பெருங்கிழ நாரை, வஞ்சனை தூங்கி யாரலுண்ணு, நீங்காப் பழனப் பெருநகர்க் கூடல்" கல். ஙக: உ - ச.

(பிழிபேதம்) * தகைமதி, † உடனேபட்டு. ‡ தலையிலே, ‖ குத்தலானுமூக்கோலை, ÷ ஒப்புத்தார்.

குவிந்திருக்குஞ் சேர்ப்பன் என்றதனால், நின்னாட்டின் மகளிர் பிரிந்திருந்தார் உயிர்போதற்கு வேண்டுந் தீங்குகளைப் பகற்பொழுதெல்லாங் கூறி அந்திக் காலத்து ஆரவாரத்தைத் தவிர்ந்து நல்ல மகளிரைப் போலே ஒடுங்கி உறைகின்றார் என உள்ளுறையுவமங்கூறியவாறு உணர்க.

கூ அணிச்சிறை யினக்(க)குரு கொலிக்குங்கா னின்றிண்டேர்
மணிக்குர லெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யுள்ளான்ற வொலியவா யிருப்பக்கண் (உ)டவைகானற்
புள்ளென வுணர்ந்துபிற் புலம்புகொண் டினையுமே

எ - து: அழகினையுடைத்தாகிய சிறகினையுடைய குருகுகள் இராக் காலத்து ஒருகால் ஒலிக்குமிடத்து நின்னுடைய திண்ணிய தேரின்மணியினோசையென்று இவள் மிகவும் துணியாநிற்கும்; துணிந்த அப்பொழுதே அப் பறவைகள் உள்ளடங்கிய ஒலியையுடையவாய் ஆரவாரியாதிருக்க, அதனைத் தன் (ங)மனத்தாலே தேர்மணியொலியல்லவென்று கண்டு, பின்னர் அவ் வொலியைக் கானலிடத்துப் பறவைகளொலியென்று உணர்ந்து, பின்பு தனிமைகொண்டு வருந்தாநிற்கும். எ - று.

கo நீர்நீவிக் கஞன்றபூக் கமழுங்கா னின்மார்பிற்
றார்நாற்ற மெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யலர்பதத் தசைவளி வந்தொல்கக் கழிப்பூத்த
மலரென வுணர்ந்துபின் மம்மர்கொண் டினையுமே

எ - து: நீரைக் கைவிட்டு மேலாய் நெருங்கின பூ அலர்ந்து நாறுமிடத்து நின்மார்பிற் கிடந்த மாலையினது நாற்றமென்று இவள் மிகவுந் துணியாநிற்கும்; துணிந்த அப்பொழுதே அப்பூக்கள் அலருஞ் செவ்வி

க. இந்நூற்பக்கம் எசுங: ரு - ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ) "அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமா பூண்ட, மணியரவ மென்றெழுந்து போந்தேன் - கனிவிரும்பும், புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா, யுள்ளுருகு நெஞ்சினே னாய்" ஐந்-ஐம். ருo.
(ஆ)"இடுமணலெக்க ரகன்கானற்சேர்ப்பன், கடுமாமணியரவமென்று- கொடுங்குழாய், புள்ளரவங் கேட்டுக் கலுழ்ந்தாள் சிறுகுடிய, ருள்ளரவ நாணுவ ரென்று" ஐந் - எழு. ருகூ.

ங. காணுதலென்பதற்கு விளங்கவறிதலென்று நீலகேசியுரையாசிரியர் பொருள் கூறுதலால், இங்கே அது காதினால் விளங்கவறிதலின்மேல் நின்றதென்றலுமாம். "நம்பி தந்த கீத மேந யந்து காண வோடினார்" (சீவக.உoங்எ) என்புழி, காணவென்பதற்கு, கேட்கவென்றுபொருள் கூறியிருத்தலும் இங்கே அறிதற்பாலது.

யிடத்து அவற்றை அசைத்த காற்றுவந்து தன்மேற்பட, அதனைக் கழியிற் பூத்த மலரினது மணமென்று உணர்ந்து, பின்பு மயக்கங்கொண்டு வருந்தா நிற்கும். எ - று.

கச நீணகர் நிறையாற்று ணினையுநள் வதிந்தக்காற்
(க)றேண்மேலா யெனகின்னை மறிக்குமன் மறித்தாங்கே
(உ)நனவெனப் புல்லுங்காற் காணுளாய்க் கண்டது
கனவென வுணர்ந்துயிற் கையற்றுக் கலங்குமே

எ-து: உயர்ந்தமனையிலே மனத்தைநிறுத்துதலேமாட்டாளாய்(கூ)நின்னை நினைத்து அவசத்தாற் சிறிதுதுயின்றவிடத்துத் தன்றோண்மேற்கிடந்தாயாக நின்னை மிகவுந் துணியும்; துணிந்த அப்பொழுதே மெய்யென்று கருதித் தழுவுமிடத்து உன்வடிவைக் காணுளாய்த் * தான்கண்டது கனவாயிருந்த தென்று அறிந்து பின்பு செயலற்றுக் கலங்காநிற்கும். எ - று.

†எனவாங்கு

எ - து: என்று; எ - று. ஆங்கு, அசை.

கக (ச)பலநினைந் தினையும் பைத னெஞ்சி
னலமர னேயு ளுழக்குமென் (ஞ)றேழி

க. (அ) "துஞ்சுங்காற் றேண்மேல ராகி விழிக்குங்கா, னெஞ்சத்தராவர் விரைந்து" தறள். கஉகஅ. என்பதும் (ஆ) "வேய்புரை மென்றே ளின்றுயி லென்றும், பெருஅன் பெயரினும்" நறிஞ்சி. உசஉ-உசகூ. (இ) "பாயல்கொண் டென்றோட் கனவுவார்" கலி. உச: எ. (ஈ) "இளையோள், பெருந்தோ ளின்றுயில் கைவிடு கலனே" அகம். ககூ: கசூ - கச. (உ) "நறுநுதலா, ராவி தளிர்ப்ப வவர்தோண்மேற் றஞ்சி னார்" (ஊ) "நல்லா ரவர்தோண்மேற் றஞ்சினர்" சீவக. கஞஎஇ, கஞஎசு. என்பவைகளும் (எ) "மென்றோட் டுயில்பெறும்" (கலி. கஅ: உச) என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. "நனவினு னல்காக் கொடியார் கனவினு, னென்னெம்மைப் பீழிப் பது" தறள். கஉகள.

ஊ. "கனவிற்றுன் செய்தது மனத்த தாகலிற், கனவிற் கண்டு" (கலி.சஅ: ஊ - ச) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ச. (அ) "பலநாடு நெஞ்சினேம்" (ஆ)"பலசூழ மனத்தோடு பைதலேன்" கலி. ஊடு: கக, சசு: கள.

ஞ. "ஆய்நலம் பெயர்தரப், புரியுளைக் கலிமான்றேர் கடவுபு, விரிதண் டார் வியன்மார்ப விரைகின் செலவே" (கலி. கஉச: கக - உக.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரிபேதம்) * நான்கண்டது. † எனயாங்கு, அசை.

மதிமருள் வாண்முகம் விளங்கப்
புதுநல மேர்தரப் பூண்கநின் றேரே

*எ-து: பலவற்றையும் நினைத்து வருந்தும் நோயையுடைய நெஞ்சாலே சுழலுதலையுடைய காமநோயிலே அழுந்தும் என் தோழியுடைய மதியென்று மருளும் ஒளியினையுடைய முகம் விளங்கும்படி புதிய நலம் எழுதலைச் செய்ய நின் தேர் குதிரையைப் பூண்பதாகவென வரைவுகடாயினள். எ - று.

இதனால், தலைவற்குப் புணர்ச்சி யுவகை பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (சு)

(கஉஎ.) தெரியிணர் ஞாழலுந் தேங்கமழ் புன்னையும்
புரியவிழ் பூவின கைதையுஞ் செருந்தியும்
வரிஞிமி றிமிர்ந்தார்ப்ப விருந்தும்பி யிளையூதச்
செருமிகு நேமியான் ஞர்போலப் பெருங்கடல்
வரிமணல் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப;

சு கொடுங்கழி வளைஇய குன்றுபோல் வாலெக்கர்
நடுங்குநோய் தீரநின் குறிவாய்த்தா ளென்பதோ
கடும்பனி யறலிகு கயலேர்கண் பனிமல்க
விடும்பையோ டினைபேங்க விவளீ துறந்ததை;

கo குறியின்றிப் பன்னணின் கடுந்திண்டேர் வருபதங்கண்
டெறிதிரை யிமிழ்கான லெதிர்கொண்டா ளென்பதோ
வறிவஞ ருழந்தேங்கி யாய்நலம் வறிதாகச்
செறிவளை தோளூர விவளீ துறந்ததை;

கசு காண்வர வியன்றவிக் கவின்பெறு பனித்துறை
யாமத்து வந்துநின் குறிவாய்த்தா ளென்பதோ
வேய்நல மிழந்ததோள் விளங்கிழை பொறையாற்றுள்
வாணுதல் பசப்பூர விவளீ துறந்ததை;

அதனால்;

கசு இறைவளை நெகிழ்ந்த வெவ்வநோ யிவடூர
வுரவுக்கதிர் தெறுமென வோங்குதிரை விரைபுதன்
கரையம லடும்பளித் தாஅங்
குரவுநீர்ச் சேர்ப்ப வருளினை யளியே.

(பிரதிபேதம்) * எ - து: என்று பலவற்றையும்.

இதுவுமது.

இதன் பொருள்.

தெரியிணர் ஞாழலுந் தேங்கமழ் புன்னையும்
புரியவிழ் பூவின கைதையுஞ் செருந்தியும்
(க)*வரி(உ)ஞிமி (ங)றிமிர்ந்தார்ப்ப (ச)விருந்தும்பி யியைபூதச்
செருமிகு (டு)நேமியான் முர்போலப் பெருங்கடல்
வரிமணல் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப

எ - து: போரின்கண் மிகுகின்ற சக்கரத்தையுடைய திருமால் திருத் தோளிற் சேர்ந்த மாலைபோலே பெரிதாகிய கடற்கரையில் அறலையுடைய மணலிடத்தே விளங்குகின்ற கொத்தினையுடைய(சு)ஞாழற்பூவும் தேன்நாறு

க. "வரிஞிமிறு" தநிஞ்சி. ககக.

உ. "நரம்பின் றீங்குரனிறுக்குங்குழல்போ, லிரங்கிசைமிழற்றெழு தும்பிதா னுத" கலி. ங்ங: உஉ - உங.

ங. "இமிர்ந்தார்ப்ப" கலி. கஙக: கூ.

ச. "இருந்தும்பி யியைபூத" கலி. கஉங: உ.

டு. பலமலர்கள் விரவி நீளக் கிடத்தல்பற்றி, 'நேமியான்முர்போல' என்றார்; (அ) "பொருகடல் வண்ணன் புனைமார்பிற் முர்போற், றிருவில் விலங்கூன்றி" கார். க, எனவும் (ஆ) "அகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப, வாக்கிதழ்க் குவளையொடு நீல நீடி, மூரட்பூ மலிந்த முது நீர்ப் பொய்கை" பெரும்பாண். உகூ-உசு. (இ) "எருவை கோப்ப வெழிலணி திருவில், வானி லணிந்த வரியூதும் பன்மலராற், கூனி வளைத்த சூனை" பரி. கஅ: சஅ - டுo, எனவும் வருபவற்றைநோக்குக.

கூ. ஞாழல் - நெய்தனிலத்துக்கு உரித்தாகக் கூறப்படுவதொரு பூமரம்; (அ) அது "ஊர்க்கா னிவந்த பொதும்பரு ணீர்க்காற், கொழுநிழன் ஞாழன் முதிரிணர்கொண்டு, கழுமமுடித்துக் கண்கூடு கூழை" (கலி. நுசு: க - ங) என்பதன் விசேடவுரையில் 'ஞாழன் முடித்தாளென நெய்தற்றலைவிபோலவும், ஊர்க்கா னிவந்த பொதும்பரென்றதனுன் மருதத்துக்கண்டான் போலவுங்கூறி' என்றும்(ஆ)நெய்தற்கு, 'நரம், புன்னையும் ஞாழலும் கண்டலும்' (தொல். அகத். சூ. கஅ. உரை.) என்றும் இவ்வுரையாசிரியர் எழுதியிருத்தலானும்(இ) நெய்தற்றிணைக் கருப்பொருளுக்கு, "நறுஞாழல் கையினேந்தி என்பதனுற் பூவுங் கூறினர்" (சிலப்.பதி.விசேடவுரை) என்று அடியார்க்குநல்லார் எழுதி யிருத்தலானும் (ஈ) பரிபாடலும் புறநானூறு மொழிந்த மற்றைத் தொகை நூல்களினும் கீவக. சிலப். மணி முதலிய நூல்களிலும்

(பிரதிபேதம்) * வரிமிஞிறு.

இன்ற(க)புன்னைப்பூவும்தலையவிழ்ந்தபூக்களையுடையனவாகிய(உ)தாழம்பூவும் தலையவிழ்ந்த பூக்களையுடையனவாகிய (க.) *செருந்திப்பூவும் வரியினையுடைய

நாற்கவி உசை-ஆம் சூத்திரத்திலும் இது நெய்தற்கே உரித்தாகக் கூறப் பட்டிருத்தலானும்அறியலாகும். இம்மரம் எக்கரிற்செழித்துவளர்வது; (உ) அது ஐந்துறுநூற்று ஞாழற்பத்தால் அறியலாகும். இதன் அரை யும் கொம்பும் கருநிறமுடையன; அவற்றை(ஊ)"ஏஎன்போ னிறங் கிளர்பு களுவிய ஞாழலும்" (கலி. உசு: ச) என்பதும் (எ) 'ச்யாமா' என வடமொழியிலுள்ள பெயரும் (ஏ) "செவ்வீ ஞாழற் கருங்கோட் டிருஞ்சினை" அகம். உசo: க. என்பதும் வலியுறுத்தும். அவ்வரை பொரிந்திருப்பது; அது (ஐ) 'பொரியரை ஞாழலும்' சீவக. ஙகடி. என் பதனால் அறியப்படும். நெய்தனிலத்து மகளிர் இதன்குழை கொய்தும் இதனாலாக்கிய தழையுடுத்தும் இதிற்றாக்கிய ஊசலாடியும் இன்புறுவ ரென்பதுமாம்; அவற்றை (ஒ) "ஞாழன் மலரின் மகளி, ரொண்டழை யயருந் துறைவன்" ஐங். கசஎ. (ஓ) "கொய்குழை யரும்பிய குமரி ஞாழல்" நற். இசை: கூ.(ஔ) "கானன் ஞாழற் கவின்பெறு தழையள்" ஐங். ககக. (ஃ) "ஞாழ லோங்குசினைத் தொடுத்த, தாழைவீழ் கயிற் றூசல்" அகம். உo:டி-சு. என்பவை வலியுறுத்தும். இது செறிந்தபூங் கொத்தினது; (அஅ)"இணர்தைஞாழல்" பதிற். சுo: க. என்பதனால் உணர்தற்பாலது. இது பசிய அரும்புள்ளது; (ஆஆ)"பசுநனைஞாழல்" தும்பி. அசு. என்பதனாற் பெறப்படும். இதன்பூ, பொன்னிறமும் சிறிய உருவமும் நன் மணமும் வண்டினமொய்த்தலுமுடையது; அவற்றை (இஇ) "பொன்னிணர் ஞாழல்" ஐங். கசுகூ. (ஈஈ) "ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்" தும்பி. டிo.(உஉ)"சிறுவீ ஞாழல்" நற். கூசு: க.(ஊஊ) "கணங்கொள்வண் டார்த்துலாங் கன்னி றுஞாழல்" என்பவற்றால் அறிக. இப்பூ, பசப்புக்கும் சுணங்குக்கும்உவமையாதல் இந்நூல் கஙக: கக - ஆம் அடிக்குறிப்பிற் காட்டப்படும். ஞாழலென்பது குங்குமம், ஒருவகைக் கொன்றை, கோங்கு, பலினி முதலிய பலமரத்துக்கும் பெயராமாயினும் நெய்தற்கருப்பொருளில் அதுபலினியையேகுறித்து வருமென்ப; பலினி யென்பது வடமொழிச் சிதைவு.

க. புன்னையின் செய்தி கலி. கஙசு: கஙடி-ஆம் அடிக்குறிப்பிற்காணலாகும்.

உ. தாழையின் செய்தி கலி., கஙக: கo-ஆம் அடிக்குறிப்பிற் குறிக்கப் பெறும்.

ங. (அ) "பாசிலைச், செருந்தி தாய விருங்கழிச் சேர்ப்பன்" (ஆ) "எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழ" (இ) "வண்டுபட, விரிந்த செருந்தி வெண்மணல் முகிக்கர்" (ஈ) "செருந்தி, யிருங்கழி காழு மெறிகடற்

(பிரதிபேதம்) * செருந்திப்பூவும் சூழ்ந்தவிடக்கும் விளங்குகின்ற சேர்ப்பனே, எங்ஙனம் சூழ்ந்தவிடக்குமென்னில் வரியினை.

மிஞிறு சிறிதே ஒலித்து மிக ஆரவாரிப்பக் *கரிய தும்பிகள் தம்மில் இயைந்து தேனையூதச் †சூழ்ந்துகிடக்கும் விளங்குகின்ற நீரையுடையசேர்ப்பனே! எ-று.

கடலினது புலானாற்றமாகிய தீங்கினைப் பூக்களின்மணம் போக்கினவதனை அக்கடல் அறியாதிருக்கின்ற சேர்ப்பனென்றதனான், நின்வருத்தத்தைத் தீர்க்க ‡ வேண்டுமென்று கருதி அவள் நின்னிடத்தே வந்து தீர்த்த நிலையை நீயறிந்திலையென மேல்வருகின்ற தாழிசைப்பொருளையுள்ளுறுத்து உள்ளுறை யுவமந் தந்தவாறுகாண்க.

௬ கொடுங்கழி வளைஇய குன்றுபோல் வாலெக்கர்
(க) நடுங்குநோய் தீரநின் குறிவாய்த்தா ளென்பதோ
கடும்பனி யறலிகு கயலேர்கண் பனிமல்க
விடும்பையோ டினைபேங்க விவளைநீ துறந்ததை

எ - து: முன்னர்க் கடியதாகிய நீர் பின்னர்ச் சுவறுதலின் அறுதியை யுடைத்தாய் விழுகின்ற, கயலையொத்த கண் நீரற்று(உ)மல்குகின்ற அளவாய் நிற்க, வருத்தத்தோடே கெட்டு அழும்படி இவளை நீ துறந்தது, நின் மனம் நடுங்குதற்குக் காரணமாகிய காமநோய் தீரும்படியாகச் சுறவு முதலியன வற்றையுடைமையாற் || கொடிய கழிகள் சூழ்ந்த மலைபோல் உயர்ந்த வெண்மையையுடைய இடுமணலிடத்து நீ செய்த குறியிடத்தே தப்பாமல் வந்தாளென்பதோ ? எ - று.

என்பதோ என்றது என்று சொல்லப்படுவதோவென்னும் பொருடந்து நில்லாது வாய்த்தாளென்னுஞ் சொல்லுணர்த்திய செய்ந்நன்றியைத் தானும் உணர்த்திப் பிரிவிலசைநிலையாய் நின்றது. இஃது "ஆக வாக லென்ப

றண் சேர்ப்ப" (உ) "பொன்னடர்ந் தன்ன வொள்ளிணர்ச் செருந்தி" (ஊ) "பருதியஞ் செல்வன்போ லிணரூழ்த்த செருந்தியும்" (எ) "அரும்பலர் செருந்தி நெடுங்கான் மலர்" (ஏ) "தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்" (ஐ) "செருந்தி, காலை யேகன கம்மலர் கின்ற சாய்க் காடே" (ஒ) "பொன்னியன்ற, தட்டலர்த்த பூஞ்செருந்தி" என்பவற்றால் செருந்தி நெய்தற்குரித்தாதலும் அதன் பூவினியல்பு முதலியனவும் அறியப்படும்.

க. "நடுங்குநோய் செய்தவர் நல்காமை நினைத்தலிற், கடும்பனிகைமிகக் கையாற்று ளாழ்ந்தாங்கே, நடுங்குநோ யுழந்தவென் னலனழிய மணனோக்கி, யிடும்பைநோய்க் கிகுவன போலுமஃ தெவன்கொலோ" கலி. கஙச: கஙி - கஅ.

உ. "கண்ணிறை நெடுநீர் கரந்தன ளடக்கி" என்பதும் அதனுரையும் இங்கே அறிதற்பாலன. சிலப். கங: கஎங; அடியார்க்கு.

(பிரதிபேதம்) * கரியதாகிய. † சூழ்ந்துகிடக்குமென்க, கடலினது, ‡ வேணுமென்று கருதி யவனிடத்தே, || கொடியதாகிய.

தென்னு, * மாவயின் மூன்றும் பிரிவி லசைநிலை" என்னும் (க) சூத்திரத்து என்ப † தென்றதற்கு உதாரணமாகக்காட்டினும்; அதனானுணர்க. ஏனையவும் இவ்வாறேகொள்க.

க0 (உ)குறியின்றிப் பன்னாணின் கடுந்திண்டேர் வருபதங்கண்
டெறிதிரை யிமிழ்கான லெதிர்கொண்டா ளென்பதோ।
வறிவஞ ருழந்தேங்கி (௩)யாய்நலம் வறிதாகச்
செறி(ச)வளை தோளூர விவளைநீ துறந்ததை

எ - து: தன்னறிவு வருத்தத்தே அழுந்தி அழுது ஆராய்ந்தநலம் சிறிதாகையினாலே முன்புசெறிந்தவளைதோளினின்றுங்கழன்றுவிழும்படி இவளை நீ துறந்தது, எறிகின்றதிரை யொலிக்கின்ற கடற்கரையிலே நின்னுடைய கடியதாகிய தேர் இன்ன காலத்தே வருமென்னுங்குறிப்பின்றிப் பலநாளும் வருங்காலத்தை(ரு)மனத்தாலே நோக்கி எதிர்கொண்டாளென்பதோ ? எ-று.

திரையொலியால், தேரொலி கேட்டற்கு அரிதாகவும் அவ்வொலிகேட்டு எதிர்கொண்டாளென்றாள்.

கச காண்வர வியன்றவிக் கவின்பெறு பனித்துறை
யாமத்து வந்துநின் குறிவாய்த்தா ளென்பதோ

க. தொல். இடை. சூ. ௩உ. இச்சூத்திரத்தின் இவருரையிலும் 'என்பது' என்றது என்றுசொல்லப்படுவதென்னும் பொருள்தந்து நில்லாது வாய்த்தாள், எதிர்கொண்டாள் என்னுஞ்சொற்கள் உணர்த்திய செய்ந்நன்றியைத் தானும் உணர்த்தி நின்றதென்பதற்கு "நடுங்குநோய்... .....துறந்ததை" "எறிதிரை.....துறந்ததை" என்னும் பகுதிகள் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன.

உ. களவொழுக்கத்துத் தேரேறிச்சென்று தலைவர்கூடுதற்கு, "குறியின்றி .....தோளூர விவளைநீ துறந்ததை" என்னும் பகுதி மேற்கோள்; தொல். பொருளி. சூ. கஅ. நச்.

௩. "மென்றோண் ஞெகிழவுந் திருநுதல் பசப்பவும், பொன்போல் விறற் கவின் றொலைத்த, குன்ற நாடற்கு" ஐங். உ௩0.

ச. வளையென்றது தொடியை; அது முன் 'செறி' என அடைகொடுத்தலானும் பின் 'தோள்' என இடங்குறித்தலானும் துணியப்படும். தொடி, வளையென்றும் வழங்கப்படுதற்கு, குறள். கஉ௩ச, கஉ௩டு, பரிமேலழகருரையும் சான்று பகரும். 'முன் வளைகழல நின்றார்க்கு வருத்தமிகுதியால் தொடியுங் கழன்றன வென்க' (சீவக. சசுக. விசேடவுரை) என்பதும் இங்கே அறிதற்பாலது.

ரு. இந்நூற்பக்கம் எஅச: ௩ - ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * ஆவியன் மூன்றும். † என்பதற்குக் காரணமாகக் காட்டினும்.

வேய்நல மிழந்தமோள் விளங்கிழை பொறையாற்றுள்
வாணுதல் பசப்பூர விவளோ டுறந்ததை

எ - து: மூங்கில் தன்னலனிழத்தற்குக் காரணமான தோள்களிற் கிடந்து விளங்குகின்ற பூண்களை அத்தோள் பொறுத்தலைச் செய்யாமல் மெலிந்து(க)வாணுதல்பசப்புப்பரக்கும்படி இவளோடு துறந்ததுநோக்கினோர்க்குக் காட்சி வரும்படியாகப் பண்ணினதோர் அழகைத்தான்பெறுகின்ற இப்பனித் துறையிலே *நடுயாமத்தே நீ வந்து செய்த பின் வரவு உணர்த்திய குறியிலே தப்பாமல் வந்தாளென்பதோ ? எ - று.

தன்மெலிவு தோள்பொறுமைக்குக் காரணமாய் நின்றது. ஆற்றுளா யென்னும் முதல்வினை நுதல்பசப்பூரவென்னுஞ் சினைவினையோடு முடிந்தது. (உ) †இவளோடென்றது இங்ஙனம் நன்மை செய்தவளையென்றும், நீயென்றது அங்ஙனங் குறைந்துநின்ற நீயென்றும் பொருள் தந்தன.

தாழிசைமூன்றும், பொச்சாப்பென்னுமெய்ப்பாடு ‡பயந்தன.

கஅ அதனால்

இறைவளை நெகிழ்ந்த வெவ்வமோ யிவடீர
புரவுக்கதிர் தெறுமென வோங்குதிரை விரைபுதன்
கரையம (ங)||லடும்பளித் தாஅங்
(ச) குரவுநீர்ச் சேர்ப்ப வருளினை ÷யளியே

எ - து: வலியினையுடைத்தாகிய நீரையுடைய சேர்ப்பனே ! தினக்குச் செய்ந்நன்றிக்கேடு உண்டாம், ஆகையினாலே அதுநீர வலியினையுடைய ஞாயிறு சுடுமென்று கருதி ஓங்குகின்ற திரை தன் கரையில் நெருங்கின

க. (அ) "நீ துறத்தலிற், பல்லோரறியப் பசந்தன்று நுதலே" (ஆ) "வாணுதல் பசப்பச் செலவயர்ந் தனையே" ஐங். நடு, சூஉ. (இ) "நுதலூரும் பசப்பு" (ஈ) "பிறைநுதல் பசப்பூர" கலி. உஅ: கடு, கூங: கo.

உ. "அந்தா மரையன்ன மேநின்னே யானகன் ஞற்றவனே" (கோவையார். கஉ) என்பதன் விசேடவுரையில் 'நின்னையென்புழி உயிரினுஞ் சிறந்த நின்னையென்றும், யானென்புழி இருதலைப் புள்ளினொருயிரே னுகிய யானென்றும், அச்சொற்களால் விளக்கி நின்றன' என்று பேராசிரியர் எழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலது.

ங. அடும்பின் செய்தியை, கலி. கசச: ங0-ஆம் அடிக்குறிப்பிற் காண்க.

ச. (அ) "உரவுநீ ரழுவத்து" மணி. எ: கஉஙி. (ஆ) "உரவுநீர் ஞாலத்து" பு - வெ. பாடாண். சூசு. (இ) "உரவுநீர் நிலத்து" கம்ப. பால. ஆற்றுப். கஉ. உரவு - வலி; உரவுதலெனின், உலவுதலென்றுக்கி, பரத்தலென்றலுமாம்.

(பிரதிபேதம்) * நடுயாமத்தே, † இவளென்றது, ‡ பயன், || அடும்பளித்தாக்கு மாஅநீர், ÷ அளிமே.

அடும்பை வீரைந்தளித்தாற்போல இவளுடைய இறையில் வளைகழன்ற வருத்தத்தையுடைய நோய்தீரும்படி அருளினையாய் வரைந்துகொள்ளென வரைவுகடாயினள். எ - று.

(க)வளைகழலுதல் வெளியாக வருத்தத்தைவினாக்குதல்பற்றிச் சுரிதகத்து வளைநெகிழ்தலேக்கூறினள்.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கo)

(கஉஅ.) தோடுறற் கருளா தவர்போ னின்று
வாடை தூக்க வணங்கிய தாழை
யாடுகோட் டிருந்த வசைநடை நாரை
நளியிரும் கங்கு னந்துய ரறியா
நி தளியின்று பிணியின்று விளியாது நரலுங்
கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை மென்றி யாயி
னனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி;

கo அலந்தாங் கமையலெ னென்றுனைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்;

கச முலையிடைத் துயிலு மறந்தித் தோயென
நிலையழி நெஞ்சத்தே னழுவேன் போலவும்
வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்;

கஅ கோதை கோலா விறைஞ்சி நின்ற
வூதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி யாங்கே
பேதையை பெரிதெனத் தெளிப்பான் போலவும்;
ஆங்கு;

க. "துறைவன் றுறந்தமை தூற்றுகென் முன்னை, யிறையிறவா நின்ற வளை" தொல். களவி.

உஉ கனவினுற் கண்டேன் றோழி காண்டகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்ப
னனவின் வருதலு முண்டென
வீனவரை நின்றதென் னரும்பெற லுயிரே.

இது வரைவிடையாற்றளாய்ச் செல்கின்ற தலைவியது கவின்கண்டு விலுயதோழிக்கு அவள் தான்கண்ட கனவுநிலையுரைத்தது.

இதன் பொருள்.

தோடுறந் தருளா தவர்போ னின்று
வாடை தூக்க வணங்கிய தாழை
யாடுகோட் டிருந்த வசைநடை நாரை
நளியிருங் கங்கு னந்துய ரறியா
து தளியின்று பிணியின்று விளியாது நரலுங்
கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை யென்றி யாயி
னனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி

எ - து: வாடைக்காற்று அசைக்கையினுலே வளைந்த தாழையின் அசைகின்ற கொம்பிலே இருந்த அசைந்தநடையினையுடைய நாரை நம் தோளைத் துறந்து நமக்கு அருளாதவரைப்போலே நின்று பெருமையையுடைய கங்கு லிடத்து நந் துயரை அறியாமல் நம்மேலளித்தலின்றுய்த் (க)தனக்குக் காம நோயாலே வருத்தமின்றுய் மாறுமற் கூப்பிடுங் கானலையுடைய அழகிய சேர்ப்பினையுடையவனைக் கண்டு (உ) கூடினுய்போலே புதிதாக ஓர் அழகினை

க. "தேற றேங்குழிக், களிப்பவுண் டிளவனங் கன்னி நாரையைத், திளைத்தலின்" (சீவக. கo.) என்பதற்கு, 'தேறல் மிக்குச் செறிந்த இடத்தே, காமவின்பம் அறிந்த அன்னம் அதனையுண்டு காமவின்ப நுகர்ந்தறியாத நாரையைப் 'புணர்தலின்' என இவ்வுரையாசிரியர் எழுதியிருப்பது இக்கே அறிதற்பாலது.

உ. (அ) " ஆரிடை யென்னுய்நீ யாவஞ்சாய் வந்தக்கா, னீரற்ற புலமே போற் புல்லென்றுள் வைகறை, கார்பெற்ற புலமேபோற் கவின் பெறும்" (கலி. நஅ: கo - கஉ) என்பதும் (ஆ) இந்நூற்பக்கம் உகஉ: க-ஆம் குறிப்பும் (இ) "நாடன், புணரிற் புணருமா ரெழிலே பிரியின், மணிமிடை பொன்னின் மாமை சாயவென், னணிநலஞ் சிதைக்குமார் பசலை" என்பதும் இக்கே அறிதற்பாலன.

யுடையையாளுயென்று கூறுகின்ருயாயின் வெளியாக வாராத உறவில்லாத வனைக் கனவிடத்தே கண்டு யான் செய்த காரியத்தை இப்பொழுது கேள். எ - று.

கo அலந்தாங் (க)கமைபலை (உ)னென்ருனைப் பற்றி(ங)யென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
*கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்

எ - து: நின்னைப் பிரிந்த இடத்து வருந்தி உயிர்வாழேனென்று கூறின வனைப் பிடித்துக்கொண்டு நீகொண்ட என் நலத்தை இனித் தாராயென்று வினைத்துக்கொள்வேன்போலேயும், அவ்விடத்தே என்னுடையகழிந்த அழகை யான் பெறும்படி புல்லிக் கூடி இனி வருந்தாதேகொள்ளென்று கூறி என் னையும் அளிப்பான்போலேயும். எ - று.

கக (ச)முலையிடைத் துயிலு மறந்தீத் தோயென
நிலையழி நெஞ்சத்தே னழுவேன் போலவும்

க. "நின்னின்றி யமையலேன் யானென்னு மவளுயின்" கலி. சஎ: கூ.

உ. (அ) "தந்தனை சென்மோ.....தண்கடற் சேர்ப்பநீ யுண்டவென் னலக்கே" (ஆ) "என்னலந் தந்து, கொண்டனை சென்மோ" (இ) "தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலங், கொள்வா மென்றி தோழீ" குறுந். உகூ; உகூ; கூசூ. (ஈ) "நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த, பன்மீ னுணங்கல் கவருந் துறைவனைக், கண்ணிறைக் காண வமையுங்கொ லென்றேழி, வண்ணந்தா வென்கந் தொடுத்து" ஐந் - எழு. சுசு. எனவும் (உ) "இரவுகந்தருளு கனவினிற், பகலிழந்த நிறை பெறமுயன் றுமொழி பதறுமாதர்" கலிங்க. உஎ. எனவும். வருவன காண்க.

ங. கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கட் செல்லாதனவற்றை இரத் தற்கண் ,தாவென், இளவி வருவதற்கு, "என்னலந்தாராய்" என்பது மேற்கோள்; தொல். எச்ச. சூ. நo. நச்.

ச. (அ) "நீயுந், தேம்பா வோதி திருநுத னீவிக், கோங்குமுகைத்தன்ன குவிமுலையாகத், தின்றுயி லமர்ந்தனை" அகம். உசo: கூ - கஉ. (ஆ) "அவர்நம், மேந்துமுலை யாகத்துச் சார்ந்துகண் படுப்பவும்" தொல். கற். சூ. சுஎச். மேற்.(இ)"விரிந்த பைத்தலை வெள்ளிவெம் பாப்பணைத் துயின்ற, கருந்துழாய் முகில் கார்நிறக்கட்செவிச்சேக்கை, பொருந்தி யாங்கொரு புரிகுழல் புணர்முலைக் கோட்டி, னரந்த மூழ்கிய கறு மலர்ப் பிணையன்மேற்றுயிலும்" பாக. பதினுருயிரத் திருவிளை. கஉ.

(பிரதிபேதம்) * கலந்தாக்கே.

வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
(க)தலையுற முன்னடிப் * பணிவான் போலவும்

எ-து: என்னை மறத்தலேயன்றிப் பின்னர் அவசத்தான் முலையிடையிற் றுயிலுந் துயிலையும் மறந்தாயென்றுகூறிப் பழைய (உ)தன்மைகெட்ட நெஞ் சத்தையுடையேன் அழுவேன்போலேயும், அதுகண்டு (ங) வலையிலே அகப் பட்ட மயில்போலே காவலிலே அகப்பட்டுப் பெரிதும் வருந்தினையேயென்று கூறி அடிமுன்னே தன் தலையுறும்படி வணங்குவான் போலேயும். எ - று.

க. (அ) "முன்னடிப் பணிந்தெம்மை யுணர்த்திய வருதிமன்" கலி. எகூ: கடு. என்பதும் அதன் குறிப்பும் (ஆ) "பொய்ப்ப விடேள மென நெருங்கிற் றப்பினே, னென்றடி சேர்தலு முண்டு" கலி. அக: கசு - கடு. (இ) "சிற்றடிப் போது புல்லித் திருமகன் 'விடப்ப" சீவக. உடும்அ. (ஈ) "தோடவிழ்தார் யானுந் தொடர வவனுமென், பாடகச் சீறடியின் மேற்பணிய - நாடகமா, வைகிய கங்கு றலைவரி, னுய்குவெ னுலகத் தளியேன் யானே" பு - வெ. கைக்கிளை. பெண்பாற். கo. (உ)"நெய்யுண் சுரிகுழ னேரிழை யாய்நென்ன னீளிரவின், மையுண் குவளை மலிபுன லூரன் மலர்க்கமலக், கையுத் தலையுமென் காலு மொன் முன கனவுதன்னை, மெய்யென் றருவினை யேன்விழித் தே னென் விழியிமையே" (ஊ) "கதந்தணியத், தொடர்ந்தகலாத துணை யடித்தாமரை சூடவள்ளல்" (எ) "ஊர வணங்கியசின், முடிவைத்த செங்கையு மென்முலையாக முயங்கவந்தென், னடிவைத்த செங்கையு மெங்கையர்காணி னறவுகண்டே" (ஏ) "எண்போன நெஞ்சமு நீரு மென் பாத மிறைஞ்சுதலுங், கண்போலு மெங்கையர்காணினன்றே" (ஐ) "அளகையன்னீ, நெல்லாக் குறையும் பொறும்பணிந் தேனும் மிணையடியே" (ஒ) "பேராட்டி யின்றென் பிழையை யெண்ணிச, சிறேலுன் சீறடி பற்றினன் யான்" (ஓ) "பிழையைக் கருதிடலுன், சரணஞ் சரண மடியேற் கருளுன் றலையளியே" (ஔ) "நூபுரஞ்சேர், சிறடி மேல்விழுந் தேன்றவிர் வாயிற்சச் சிற்றத்தையே" (ஃ) "என்கால் பிடிக்கின்ற தெங்கையர் காணி னியல்பலவே" (அஅ) "ஊரன் மலரடி வீழ்ந்து" (ஆஆ) "இளம்பிடி பஞ்சடி தொட்டவன்றே, கஞ்சமுத் தின்றன" (இஇ) "சிறுத் தொண்டனென்னக், காலை முடித்தனை யெங்கையர் காணிற் கலங்குவரே" என்பவைகளும் ஈண்டு அறிதற் பாலன.

உ. நிலை - தன்மை; "நிலையொன்று பாடுதும்யாம்" என்பது சிலப். உசு.

ங. (அ)"ஓரி முருங்கப் பீலிசாய, நன்மயில் வலைப்பட் டாங்கியா, முயங்கு தொறு முயங்கு மறனில் யாயே" குறுந். உசூ. (ஆ) "வலைப்படு மஞ்ஞையி னலஞ்செல"- குறிஞ்சி. உஙo. (இ) "வலையிடைப்பட்ட

(பிரதிபேதம்) * பணிப்பான் போலவும்.

கஅ (க)கோதை கோலா விறைஞ்சி நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி யாங்கே
பேதையை பெரிதெனத் தெளிப்பான் போலவும்

எ-து: அங்ஙனம் வணங்குகின்ற (உ)ஊதைக்காற்றையுடைய சேர்ப்பனை மாலையே கோலாகக்கொண்டு அடிப்பேன் போலேயும், அவ்விடத்தே யான் செய்த தப்பு யாதென்று கூறி நடுங்கி நீ பெரிதும் அறியாமையையுடையை யென்று தெளிவிப்பான் போலேயும். எ - று.

இத்தாழிசைகளுள் நெஞ்சினை உறுப்பும் உணர்வும் மறுத்தலுமுடைய தாகக் கூறி, எதிர்பெய்துகொண்ட தலைவ *னுருவும் அம்மூன்றுமுடைய தாய்ச் செய்யாமரபின செய்தனவாகக் கூறி, (௩)†உயர்திணையாகக் கூறிய வாறும் பிறவும் உணர்க.

"கனவு ‡ முரித்தா லவ்விடத் தான" (௪) என்பதனாற் கனவுகொள்க.

மானே போன்றாங், கஞ்சிநின் றழைக்கு மாத்துயர் கண்டு" மணி. கஙஃ ௩௨ - ௩௩. (௫) 'வலைப்படு மயிலென வருந்தினாரென்க' சீவக. ௪௨௪. உரை என்பன இங்கே ஒப்புநோக்கற்பாலன.

க. "நல்லார்தங் கோதையா, லலைத்த" (கலி.சுஎ: சு-எ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. ஊதைக்காற்று - ஊதையாகிய காற்று. ஊதை - பெருங்காற்று; குளிர் காற்றென்றலுமாம். இது செய்யுள் வழக்கில் "ஊதைகூட் டுண்ணு முகுபணி யாமத்து" என ஊதையென்றேவழங்குமாயினும் உலக வழக்கில் ஊதலென வழங்கும். இதனைக் கடற்காற்றென்பாருமுளர்; இச்சொல் காற்றுக்குப் பொதுப்பெயராயும் வரும்.

௩. "உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன், மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்துஞ், சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்" என்பது தொல். பொருளி. சூ. உ.

௪. தொல். பொருளி. சூ. ௩. இச்சூத்திரவுரையிலும் இவர் "அலந்தாங்கு .....பணிவான் போலவும்" என்ற பகுதிகளை மேற்கோள்காட்டி, தன்னெஞ்சினை உறுப்பும் உணர்வும் மறுத்துரைத்தலுமுடையதாகக் கூறியவாறும், ஆங்கு எதிர்பெய்துகொண்ட தலைவனுருவும் உறுப்பும் உணர்வும் மறுத்துரைத்தலுமுடையதாகச் செய்யாமரபின செய்தவாகக் கூறியவாறும் அவை உயர்திணையாகக் கூறியவாறும் பிறவு முணர்க' என்று தெளிவாக எழுதியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * உருவு முயம மூன்று, † உயர்திணையாயவாறும். ‡ உரித்தாதலவ்விடத்,

முன்னடிப்பணிவான்போலவும் அலைப்பேன்போலவும் என்றாள்; முன்னே தன்மனத்தின் அது நிகழ்தலுடைமையின். இதுவும், "[illegible] வோன் பணிவு, நினையுங் காலைப் புலவியு ளூரிய" (க)என்பதனாற் கொள்க.

ஆங்கு, அசை.

உ௩ கனவினாற் கண்டேன் றோழி காண்டகக்
(உ)கனவின் வந்த கானலஞ் சேர்ப்ப
னனவின் வருதலு முண்டென
(௩)*வனைவரை நின்றதென் னரும்பெற லுயிரே

எ - து: தோழீ! கனவிடத்தே கண்டேன்; அதனாலே என்னுடைய பெறுதற்கரிய உயிர் எனக்குக் † காட்சி தரும்படி கனவிலே வந்த கானலையுடைய அழகிய சேர்ப்பன்(ஈ)வெளியிலே வந்துகூடுதலும் உண்டென்று கருதி அவன் அருளும் எல்லைக்கண்ணே அது நசையாக நின்றதுகாணெனக் கனவில் நிகழ்ந்தது கூறினாள். எ - று.

க. தொல். பொருளி. சூ. ௩௩. இச்சூத்திரவுரையிலும் இவர் "வலையுறு .....அலைப்பேன் போலவும்" என்னும் பகுதிகளை மேற்கோள் காட்டி, 'இது முன்னே தலைவி மனத்து நிகழ்தலுண்மையிற் கனவிலுங் கண்டாளென்றுணர்க' என்று குறிப்பும் எழுதியிருக்கிறார்.

உ. (அ) "நனவினா னல்கா தவரைக் கனவினாற், காண்டலி னுண்டென் னுயிர்" (ஆ) "கனவினா னுண்டாகுங் காம நனவினா, னல்காரை நாடித் தரற்கு" குறள். கஉகஙு - கஉகச.

௩. (அ) "அனைமது கையர் கொல்"(ஆ)"அனைத்தானு, மான்ற பெருமை தரும்" குறள். சகசு.

ச. (அ) "வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினுங், குரூஉமயிர்ப் புருவை யாசையி னல்கும்" (ஐங். உ௩அ.) என்பதற்கு, 'வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும் பின்பு வரக்கூடுமென்னும் ஆசையாலே புருவை தங்குமென்றது, இவளும் இவ்வாறே நின்னைக் காணலாமென்னும் ஆசையாலே உயிரோடு வாழாநின்றாளென்பதாம்' என்றெழுதியிருக்கு முரையும் (ஆ) "பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினே; னறையிருங் கழலவற்காணு மாசையால்" (இ) "புண்ணிய மூர்த்திதன்னைக், காணலா மின்னுமென்னுங் காதலாலிருந்தேன் கண்டாய்" (ஈ) "என்றன் பொருசிலை மேகந்தன்னைக், காணலாமென்னு மாசைகடுக்க வென்னாவிகாத்தே, னேணிலா வுடலினீங்க லெளிதெனக் கெனவுஞ் சொன்னாள்" கம்ப. உருக்காட்டு. கக. மாயாசனக. உஉ, சீதைகளங். ௩க. என்பவைகளும் இங்கே ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * தரும்படி. † அவன்வரை.

இதனுல், (க) கனவொடு மயங்கலென்னும் மெய்ப்பாடு தலைவிக்குத் தோன்றிற்று.

இஃது "இடைநிலைப்பாட்டு" (உ) என்றதனுல், தாழம்பட்ட ஓசையின்றி வந்த இடைநிலைப்பாட்டுப் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலிப்பா. (கக)

(கஉகூ.) தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போ
லெல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீ இ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர
வெல்லிலக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை;

அ பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட
றாவறத் துறந்தனன் றுறைவனென் றவன்றிற
நோய்தெற வுழப்பார்க ணிமிழ்திரியோ வெம்போலக்
காதல்செய் தகன்றுரை யுடையையோ நீ;

கஉ மன்றிரும் பெண்ணே மடல்சே ரன்றி
னன்றறை கொன்றன ரவரெனக் கலங்கிய
வென்றுய ரறிந்தனை ரரறியோ வெம்போல
வின்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ;

கக பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழ
லினிவரி னுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் டினைதியோ வெம்போல
வினியசெய் தகன்றுரை யுடையையோ நீ;

எனவாங்கு;

உக அழிந்தய லறிந்த வெவ்வ மேற்படப்
பெரும்பே துறுதல் களைமதி பெரும

க. இம்மெய்ப்பாட்டுக்கே "அலந்தாங்.....அளிப்பான் போலவும்" என்பது மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது; தொல். மெய்ப். சூ. உஉ. பேரா. இ - வி. சூ. இஅ0.

உ. தொல். செய். சூ. கஉஉ.

வருந்திய செல்ல நீர்த்த நிறனறி யொருவன்
மருந்தறை கோடலிற் கொடிதே யாழநின்
னருந்தியோர் நெஞ்ச மழிந்துக விடினே.

இது "தன்னுட் கையாறெய்திடு கிளவி"(க)யால்தலைவி ஆற்றளாயின வாறு தோழி தலைவற்குக் கூறியது.

இதன் பொருள்.

(உ)தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போ
லெல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
(ங)ஞல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர
வெல்லைக்கு வரம்பாய விடும்பைசூர் மருண்மாலை

எ - து: பல உலகங்களில்உயிர்களெல்லாம் பழைதாகிய ஊழிக்காலத்தே பிறந்திறந்து தடுமாறித் திரியும்படி அயனுய்ந்நின்று படைத்த முதல்வன் (ச)அரனுய் அவ்வுயிரெல்லாந்தன்னிடத்தேவந்துதொகுதலைத் தான்விரும்பும்

க. இறை. சூ. ஙo.

உ. "தொன்முறை யியற்கையின் மதியொ,.....மரபிற் ருகப், பசும்பொ னுலகமு மண்ணும் பாழ்பட, விசும்பி லூழி யூழ்ழ் செல்லக், கருவளர் வானத் திசையிற் ரேன்றி, யுருவறி வாரா வொன்ற னூழியு, மூந்து வளி கிளர்ந்த வூழ ழூழியுஞ், செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு. தண்பெய றலேஇய வூழியு மவையிற், றண்முறை வெள்ள ழூழ்கி யார் கருபு, மீண்டும் பீடியர் பீண்டி யவற்றிற்கு, முள்ளீ டாகிய விருநிலத் தூழியு, நெய்தலுங் குவளையு மாம்பலுஞ் சங்கமு, மையில் கமலமும் வெள்ளமு நுதலிய, செய்குறி யீட்டம்" பரி. உ: க - கடு.

ங. (அ) "அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே, கோடியாத்தூரு பெரிது நந்து, மெல்லியன் கிழவ னூகி.....பிண்ட நச்சின்,..... தானு முண்ணு னுலகமுங் கெடுமே"(ஆ)"காவற் சாகா நகைப்போன் மாணி, னூறின் ருகி யாறினிது படுமே, யுய்த்த நேற்ரு னுயின் வைகலும், பகைக்கூ ழள்ளற் பட்டு, மிகப்பசீ நீநோய் தலைத்தலைத் தருமே" புறம். கஅச: ஙி - கக; கஅடு: உ - சு.

ச. "பல்லுருவம் பெயர்த்துநீ" (கலி. க: ஙி) என்பதும் அதன் உரையின் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ஊழி முடிந்த காலத்திலே தன்னிடத்தே மீட்டு ஒடுக்கிக்கொள்கின்றவனைப் போலே ஞாயிறு பகற்பொழுது வந்துசேர்தற்குக் காரணமான *தன்னுடைய தெறுகின்ற கிரணங்களைத் தன்னிடத்தே மீட்டுக்கொண்டு மறைகையினாலே (க)நல்ல நீதிநூல் வழியாலே உலகை நெறியிலே நிறுத்தி அவ்வுலகை ஆண்ட அரசன் போயபின்னர் நீதியல்லதனை எறட்டுக் கொண்டிருந்து அறநெறியை உலகத்து நிறுத்தமாட்டாத குறுநில மன்னன்காலம்போலே மயங்கின இருள் உலகிடத்தேவரும்படி பகற்பொழுதிற்கு ஓரெல்லையாகிய, வருத்தம்மிகுதற்குக் காரணமான, மயக்கத்தையுடைய மாலைக்கண்ணே. எ - று.

மடக்கி, மடங்கியென விகாரம்.
மெல்லியான், படைமுதலியன இன்றி இளைத்தவன்.
எல்லை, (உ)மரணகாலமுமாம்.

அ (கூ)பாய்திரை †பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட
(சு)றாவறத் ‡துறந்தனன் றுறைவனென் றவன்றிற
நோய்தெற ||வுழப்பார்க ளிமிழ்த்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்ரூரை யுடையையோ நீ

க. "அறமாவது: உயிர்களுக்கு இதமாவன செய்தலும் சத்தியஞ் சொல்லுதலும் தானதன்மங்கள் செய்தலுமாம்" என்று பதுமனூர் கூறுதலால், 'நல்லற நெறிநீ இ' என்பதற்கு, நல்ல அறங்களைத் தன்னெறியால் உலகில் நிறுவியென்றலுமாம்; "நடையி னின்றுயர் நாயகன்" "என்னுயிரொழுக் கதற்கு வேண்டு முவமையொன் றுரைக்க வேண்டின்" "நெறியி னின்றதன் னுயகன்" கம்ப. பாயிர. கக. நாடவிட்ட. சக. பாசப். சக. எனவருதலும் அறிக.

உ. "புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக், கொல்லாது போத லரிதா லதனெடியான், செல்லாது நிற்ற லிலேன்" கலி. கசஅ: உக - ஙக.

கூ. (அ)"இடையேவனே சோரவெழுந்துவிழுந், தடலேய்மத னன்சர மஞ் சினையோ, வுடலோய்வுற நாளு முறங்கலையால், கடலேயுரை நீயு மொர் கள்ளிகொலாம்" கம்ப. கடிமணப். கக. என்றும் (ஆ) "போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி, காவாய் குழற நடுங்குறு வாய் - தீவா, யிரவகற்று மென்போல வார்கலியே மாதை, யிரவகற்றி வந்தாய்கொ லின்று" நள. கலிதீங்கு, உக. என்று ஒருவாறு இதனோடொத்தும் வருவன காண்க.

சு. (அ) "தாவறத் துறந்தாரை" கலி. ககஅ: கூ. (ஆ) "தாவறத் துறத்தனன்றென" மணி. உடு: கூஉ. என்பவைகளும் இந்நூற்பக்கம் எசஎ: ஓ - ஆம் குறிப்பில் இதற்கு பொருந்துபவையும் ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * தனதுடைய, † பாட்டோவா. ‡ துறந்தன்றுறைவன், || உமிழ்ப்பார்கண்.

எ - து: பரக்கின்ற நிரை ஒலித்தல் மாறுத பரந்தலை யுடைத்தாகிய நீரையுடைய பனிக்கடலே! துறைவன் எமக்கு வலியில்லையாம்படி துறந்தா னென்று அவன் கூற்றுலே உண்டான காமநோய்கூட அதன்கண் அழுந்துவா ரிடத்தே நின்று வருத்தவேண்டி முழங்குகின்ருயோ? அன்றியே முன்னர்க் காதல்செய்து பின்பு நீங்கினரை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்ருயோ? எ - று.

கஉ (க)மன்றிரும் பெண்ணை மடல்சே ரான்றி
னன்றறை கொன்றன ரவரெனக் கலங்கிய
வென்றுய ரறிந்தனை நாறியோ (உ)வெம்போல
வின்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ

எ - து: மன்றிலே நின்ற கரியதாகிய பனையின்மடலிலே சேர்ந்திருக்கும் (ங)அன்றிலே! நந்தலைவர் தாஞ்செய்த நன்றுகளையான் இருந்துசொல்லுதலைக்

க. (அ)"மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத், துணைபுன ரன்றில்" நற். ஈoஈ: ச - இ. (ஆ) "மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை, யன்றிலும் பையென நரலும்" தருநீ. கஎஎ.

உ. துணையும் பாலும் விளக்கமில்லாத சொற்களுள் நீஎன்பது குறிப்பான் அஃறிணையுணர நிற்றற்கு, (அ) "எம்போல.....நீ" என்பது (தொல். பெயர். சூ. ஈஎ. 'இன்னபெயரே' தெய். உரையிலும்) (ஆ) "இன்றுணை.....நீ" என்பது (தொல். பெயர். சூ. ஈக. நச். உரையிலும்) மேற்கோள்.

ங. அன்றிலென்பது நெய்தனிலத்துக்கு உரித்தாகக் கூறப்படுவதொரு பறவை; கழிமீன் முதலியவற்றையுண்டு பனைமரத்திற் சிறுகோலாற் கூடுகட்டிக்கொண்டு வதிவது; செந்தலையையும் வளைந்ததும் செந் நிறத்ததுமாகிய வாயையும் கரிய காலையுமுடையதென்று கூறப்படு கிறது; துணையின்மேல் மிக்க காதலையும் அதனைப் பிரியாத தன்மையையும் பிரியின் துயிலாது நடுங்கி வருந்திக் கதறுந் தன்மையையுமுடையது; கள்ளிரவின் அகவுவது; பிரிந்திருப்பவரைத் தன்குரலால் வருத்துவது; இவை, (அ)"தெண்ணீ ரிருங்கழி வேண்டு மிரைமாந்திப், பெண்ணைமேற் சேக்கும் வணர்வாய்ப் புணரன்றில்" (ஆ) "நெருப்பி னன்ன செந்தலை யன்றி, லிறவி னன்ன கொடுவாய்ப் பெடையொடு.....கட்சியிற் பிரிந்தோர் கையற நரலு நள்ளென் யாமத்து" (இ) "மனைசேர் பெண்ணை மடிவா யன்றி, றுணையொன்று பிரியினுந் துஞ்சாகா ணை" (ஈ) "பராரைப் பெண்ணைச் சேக்குங் கூர்வா, யொருதனி யன்றி லுயவுக்குரல் கடைஇய, வுள்ளே கனலு

(பிரதிபேதம்) * எற்றினன்றை.

கெடுத்துவிட்டாரென்று கலங்கிய (க) என் வருத்தத்தை அறிந்தனையாய் மிகவும் வருத்தவேண்டி ஆரவாரிக்கின்றாயோ? அன்றியே முன்பு இனிய துணையாய்ப் பின்புபிரிந்தாரை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்து கின்றாயோ? எ - று.

நன்றறைகொன்றனர் என்றதனால் நீங்கே செய்தமை கூறினாள். இனி மிகவும் மறைந்துநின்ற களவை வெளிப்படுத்தினாரும் என்பாரும் உளர்.

கக பனியிருள் சூழ்தரப் பைதலஞ் (உ)சிறுகுழ
வினி*வரி னுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் (ங)டினதியோ வெம்போல
வினியசெப் தகன்றுரை யுடையையோ நீ

எ - து: வருத்தத்தினையுடைய அழகினையுடைய சிறியதாகிய குழலே! இக்காலத்தே வருவாராயின், தாஞ்செய்த பழி மிகவும்போமென்று கருதிப் பனியோடு கூடிய இருள்சூழ்ந்து வருகையினாலே கலங்கின தனித்தவருடைய

மூள்ள மெல்லெனக், கனையெரி பிறப்ப வூது, நினையா மாக்க டுங்குழல் கேட்டே" (உ) "செவ்வாய வன்றி றுணையிழப்ப" (ஊ) "முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக், கொழுமட லிழைத்த சிறுகோற் குடம்பைக், கருங்கா லன்றிற் காமர் கடுஞ்சூல், வயவுப்பெடை யகவும் பாளுள்" (எ) "கனைந்ததங் காதலிற் கனவிற் கண்டிறந், தினைந்த போன் றிடையிடை நோக்கி யின்குரல், புனைந்தகம் புணர்பெடை புல்லி மெல்லவே, யனந்தருண் முரன்றன வன்றிற் சேவலே" (ஏ) "புணர்பிரியா வன்றிலும்போ, னித்தலு நம்மைப் பிரியல மென் றுரைத்த, பொற்றொடியும்" (ஐ) "ஒன்றில் காலை யன்றில் போலப், புலம்புகொண் டுறையும் புன்கண் வாழ்க்கை" (ஒ) "துணைபிரிந் தயரு மன்றிற் சேவலிற் றுளங்குகின்றான்" (ஓ) "பெண்ணைமேற், பின்னுமவ் வன்றிற் பெடைவாய்ச் சிறுகுரலுக், குன்னி யுடலுருகி னையாதார்" என்பவற்றால் அறியப்படும். பெரும்பாலும் இவ்வியல் பினதாக மகன்றிலென்று ஒருநீர்வாழ்பறவைகூறப்படுகிறது. இதுவும் அதுவும் ஒன்றென்றும் கூறுவர். அன்றிலென்பது வடமொழியில், 'க்ரௌஞ்சம்' என வழங்குமென்ப.

க. "தன்றுணை யில்லாள் வருந்தினுள் கொல்லென, வின்றுணை யன்றி லிரவி னகவாவே" (கலி. கஉக: உஎ - உஅ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "குழலினு மினைகுவள் பெரிதே" ஐங். கூஅ. (ஆ) "கோவலர் தீங்குழ லினைய வரோவென், பூவெழி லுண்கண் புலம்புகொண்

(பிரதிபேதம்) * லரினுயரும்.

வருத்தத்தைக்கண்டு நீயும் வருந்துகின்றாயோ? அன்றியே முன்பு இனியன வற்றைச் செய்து பின்பு நீங்கினாரை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்றாயோ? எ - று.

(க)உயர்தல், "நோன்புயர்தல்" போல நீக்கத்தின்கணின்றது.

(உ)கடலும் அன்றிலும் குழலும் உற்ற பிணியைத் தம்பிணிக்கு வருந்தின வாகச்சேர்த்தி உயர்திணையாக்கி உவமவாயிற்படுத்தவாறு காண்க. இஃது "அவாவு நுறுபிணி தமபோற் சேர்த்தியது" (ங)

*எனவாங்கு

எ - து: என்றுசொல்லி. எ - று.

ஆங்கு, அசை.

உக அழிந்தய லறிந்த வெவ்வ மேற்படப்
பெரும்பே துறுதல் களைமதி பெரும
வருந்திய செல்ல †தீர்த்த திறனறி யொருவன்
(சு)மருந்தறை ‡கோடலிற் கொடிதே யாழநின்
||னருந்தியோர் நெஞ்ச ÷மழிந்துக விடினே

×எ - து: நெஞ்சழிந்து, அயலிலுள்ளார் அறிந்தவருத்தம் மேலிட்டுவரு கையினுலே பெரியதாகிய பித்தேறுதலைப் பெரும! வரைந்துகொண்டு போக்கு வாய்; அங்ஙனம் போக்குங்கால் நின்னே நுகர்ந்தோருடைய நெஞ்சம் அழிந்து கெட்டுப்போம்படியாக அவரைக் கைவிடுவையாயின், அது வருந்தியவருத்தத் தைப் போக்கும் மருந்தின்றிறத்தை அறிந்த ஒருவன் அம்மருந்தை அறியேன்

டினையும்" கலி, கஉ0: கடு-கசு. (இ) "குழலினை வதுபோ லழுதனள் பெரிதே" புறம். கசஉ: கடு.

க. "தானுயர்ந்த தவத்தினுன்" கம்ப. கும்ப. கசக.

உ. "அன்றிற் கமைக்காழிக்கு .....அயர்ந்தாள்"

ங. தொல். பொருளி. சூ. உ. (அ) இச்சூத்திரப்பகுதியினுரையிலும் இவர் இச்செய்திக்கு இத்தாழிசை மூன்றையும் மேற்கோளாகக் காட்டி, இக்குறிப்பையும் எழுதியிருக்கிறார். (ஆ) தலைமகள் அவாவருநுபிணி தமபோற் சேர்த்திக் கூறியதற்கு, "பாய்திரை.....காதல்செய் தகன்ருரை யுடையையோ நீ" என்னும் பகுதிமட்டும் (தொல். பொருளி. சூ. உ; இளம். இ - வி. சூ. டுஎ0.) மேற்கோள்.

ச. "இயைவது கரத்தலிற் கொடுமை யில்லே" முதுமொழி. டுடு.

(பிரதிபேதம்) * தங்கசை அழிந்தயல், † தீர்நிறனெறி, ‡கோறலிற், || அருந்தோர்நெஞ்ச, அருந்தொடுநெஞ்ச. ÷அழிந்துக, இழந்துக. ×எ-து: என்றுசொல்லி நெஞ்சழிந்து

என்று வஞ்சித்து அம்மருந்தின் காரியத்தைக் கெடுக்குமதிலும் கொடிதுகா ணென அவளாற்றுமையைத் தோழி கூறி வரைவுகடாயினள். எ - று.

இது "காமஞ்சிறப்பினும்" (க)என்பதனுற்கொள்க.

இதனுல், தலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

(உ)இதவும் காலம்மயங்கிற்று. செல்லநீரத் திறனறியொருவன்என்பதும் பாடம்.

இது ஈ ஈ ஈ என ஓரசைச்சீர் வந்து ஐஞ்சீரடிவந்த *மண்டிலவாசிரியத்தா னிற்று யாப்பின்வேறுபட்ட கொச்சகம். (கூ)

(கஙூ0.) நயனும் வாய்மையு நன்னர் நடுவு
மிவனிற் றேன்றிய விலையென விரங்கப்
புரைதவ நாடிப் பொய்தபுத் தினிதாண்ட
வரைசனே டுன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போ
னிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செலக்
கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்போற்
புல்லிருள் பரத்தருஉம் புலம்புகொண் மருண்மாலை;

அ இம்மாலை;
ஐய ரமிரழ லெடுப்ப வரோவென்
கையறு நெஞ்சங் கனன்றுதீ மடிக்கும்;

கக இம்மாலை;
இருங்கழி மாமலர் கூம்ப வரோவென்
னரும்படர் நெஞ்ச மழிவொடு கூம்பும்;

கச இம்மாலை;
கோவலர், தீங்குழ லினைய வரோவென்
பூவெழி லுண்கண் புலம்புகொண் டினையும்;

க. தொல். களவு. சூ. உ0.

உ. (அ)முதற்பொருள்களுள் காலம்மயங்கிவருமென்பதற்கு இச்செய்யுளை மேற்கோள்காட்டுவர் இளம்பூரணர்; தொல். அகத். சூ. கச. 'திணை மயங்கு' (ஆ) நச்சினார்க்கினியரும் அச்சூத்திரவுரையில் "தொல்லூழி .....வினியசெய் தகன்றுரை யுடையையோ நீ" என்னுமடிகளை மேற்கோள்காட்டி 'நெய்தற்கலியுட் கங்குலும் மாலையும் முன்பனியும்

(பிரதிபேதம்) * மண்டலவாசிரியத்தான்

எனவாங்கு;

கஅ படுசுடர் மாலையொடு பைதலே யுழப்பாஅக்
குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்முனை
விடுவழி விடுவழிச் சென்றுங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றுற் பசப்பே.

இது பிரிவிடையாற்றத தலைவியது ஆற்றமை தலைவன் வந்துகார்த லின் நீங்கினமைகண்டு வாயில்கள் தம்முள்ளே கூறியது.

இதன் பொருள்.

நயனும் வாய்மையு நன்னர் நடுவு
மிவனிற் றோன்றிய விவையென விரங்கப்
புரைதவ நாடிப்(க)பொய்தபுத் தினிதாண்ட
*வரைசனே டுன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போ
னிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செலக்
(உ)கல்லாது முதிர்ந்தவன்(ங)கண்ணில்லா நெஞ்சம்போற்
புல்லிருள் †பரத்தருஉம் புலம்புகொண் மருண்மாலை

ள்-து: (சு) இவனுலேவிளங்கின கலந்தஉறவும் உண்மைகூறலும் நன்மை யையுடைய நடுவுநிலைமையுமாகிய இவை, இனி விளக்கமின்றிப் போயின வென்று தனக்குப்பின்பு உலகத்தார் இரங்கும்படியாக அவற்றிற்கு உயர்ச்சி

வந்தன' என்பர்; இ - வி. நாலாரும் அவ்வாறே கூறுவர்; இ - வி. கு. ஙகூச.

க. "பொய்யறியா வாய்மொழியாற், புகழ்நிறைந்த நன்மாந்தரொடு, நல்லூழி யடிப்படர,.....வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக" மது. கக - உங.

உ. "கல்லா தவருளம் புல்லிய குழலும்"

ங. (அ) "கண்ணில்புன் மாக்கள்" நாலடி. சச. (ஆ) "கண்ணிழந்து மாயக் கவருடி" நள. சுயம்வர. கo. (இ) "கண்ணுடைய ரென்பவர் கற்றோர்" திறள். ஙகூங. (ஈ) "கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின் கண்ணு மாகும்" சீவக. கடுகூடு. (உ) "கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவழி" நீதிவெண்பா.

சு. (அ) "கலையின தகலமுங் காட்சிக் கின்பமுஞ், சிலையின தகலமும் வீணைச்செல்வமு, மலையினி னகலிய மார்ப னல்லதிவ், வுலகினி லிலை யென வொருவ னுயிலுன்" சீவக. சகக. (ஆ) "ஆற்றலு நிறையுங்

(பிரதிபேதம்) * அரசனோடு, † பாத்தரும்.

மிகும்படி ஆராய்ந்து (க)பொய்யைக்கெடுத்து நன்றாக ஆண்ட அரசனோடே சேரக்கெட்ட நல்ல ஊழால் உண்டாகிய செல்வம்போலே நிரைத்த கதிரையுடைய ஞாயிறு படுதலோடே பகற்கால்மும்போகப் பின்பு வருத்தங் கோடற்குக் காரணமாகிய மாட்சியையுடைய மாலைக்காலம் ஒன்றையுங் கல்லாமல் மூத்தவனுடைய ஞானக்கண்ணில்லாத நெஞ்சுபோலே புற்கென்ற இருள் உலகிலே பரத்தலைத் தாராநிற்கும். எ - று.

ஊழ், ஊழி எனத் திரிந்தது.

"நயனு * நண்பு நாணுநன் குடைமையும், பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்"(உ)என்றாராகலின், நயன் பண்பன்மைஉணர்க. இரங்கப் புரை தவநாடியென்க. அச்செல்வம் அரசனோடு போனாற்போலப் பகற்காலமும் ஞாயிற்றோடே போயிற்றென்றுணர்க.

அ (௩)இம்மாலை

ஐய ரவிரழ லெடுப்ப வரோவென்
கையறு நெஞ்சங் கனன்றுதீ மடுக்கும்

கல்வி யமைதியு மறிவு மென்னும்,வேற்றுமை யிவனோ டில்லை" கம்ப. அனுமப். ககூ. (இ) "மறமும் வாகு வலியும் வல்வின் முதலெப் படையின், றிறமுந் தேசும் வாழ்வுஞ் சீருங் கேள்விச் செல்வு, நிறமு முண்மை யறிவு நெறியும் புகழுந் திகழ்பே, ரறமும் பொன்று நின்னோ டையா வந்தோ வந்தோ" (ஈ)"வில்லாய் நீவெம் போர்முனை வெல்லும் விறலாய்நீ, சொல்லாய் நீதொல் வேதிய ருட்குந் தொழி லாய்நீ, வல்லார்வல்ல கலைகளனைத்தும் வல்லானே, யெல்லாமின்றே பொன்றின வுன்னோ டெந்தாயே" வில்லி. பத்தாம்போர். ௪௦. பதினைந்தாம். ௩௩.

க. (அ) "பொய்சேணீங்கிய வாய்நட் பினையே" மது. ககூஅ. (ஆ) "தேற்றாய் பெரும பொய்யே" புறம். ௫௯: ௪. (இ) "புகழ்வாய்மை வழீஇய சொல்லும்.....இலன் கொற்ற வேலான்" நாரதசரிதை. (ஈ) "மன்னனுக், கைய மின்றி யறங்கட வாதருண், மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ" (உ) "பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன்" கம்ப. மந்தரை. கஎ; கைகேயி. ௩௧. (ஊ) "சத்தியம் பிறழ்வது தரியேம்" அரிச். மயான. கஉஅ.

உ. நற். ககூ௦: க - உ.

௩. (அ) "அந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து, செந்தீச் செவ்வழ றொடங்க வந்ததை.....மாலை யென்மனார்" கலி. கககூ: கஉ - கசு; (ஆ) "அந்தி யந்தணர் செந்தீப் பேண" மணி. ௫: க௩௩.

(பிரதிபேதம்) * நன்றும்.

எ-து: இம்மாலைக்கண்ணே, இருடிகள் விளங்குகின்ற அழலை (க) *ஆவுதி பண்ணிஎழுப்ப, என்செயலறுநெஞ்சம் தானுங்கொதித்து எனைக்கும்(உ)காமத் தீயைக் கொளுத்தும். எ - று.

கக (ங)இம்மாலை
இருங்கழி மாமலர் கூம்ப வரோவென்
னரும்படர் நெஞ்ச மழிவொடு கூம்பும்

எ - து: இம்மாலைக்கண்ணே, †கரிய கழிகளிற் பெருமையையுடைய மலர்கள் குவிய, என்னெஞ்சம் அவனை ‡ உள்ளுதலால் அழிதலோடே தான் நினைவின்றிக் குவியும். எ - று.

கச (ச)இம்மாலை
கோவலர் தீங்(டு)குழ ‖னினைய வரோவென்
(ஈ)பூவெழி லுண்கண் புலம்புகொண் டினையும்

எ - து: இம்மாலைக்கண்ணே, கோவலருடைய இனியதாகிய குழலாலே நெஞ்சவருந்த, +எனதுபூவினதழகையுடையவுண்கண்தனிமையைக்கொண்டு வருந்தும். எ - று.

இஃது, இன்பத்தைவெறுத்தல். அரோ, அசை.

க. வடமொழியின் மூப்பத்துமூன்றும் மெய்யாகிய ஹகாரம் சேர்ந்த மொழிகளைத் தமிழில்வழங்கும்போது அம்மெய் மொழிமுதலில்வரின் அதனைக்கெடுத்தும் இடையேவரின் ககரமாகவாவது யகரமாக வாவது திரித்தும் வழங்குவதன்றி வகரமாகவும் திரித்து வழங்குவ தென்பதை, (அ) "ஆவுதி மண்ணி" மது. சகச. (ஆ) "ஆவுதி நறும் புகை" பட். டுடு. சீலபீ. கo: கசச. (இ) "ஆவுதி யருத்தியும்" பட். உoo. (ஈ)"பெரும்பெய ராவுதி" பதிற். உக: எ. (உ)"ஆவுதி பொங்க" புறம். கடு: ககூ. என இச்சொல் பயின்று வருதலானும் வைதேஹி யென்பது (ஊ) வைதேவியென வழங்கப்படுதலானும் அறிக.

உ. "மாலை மலருமிந்நோய்" தொள். கஉஉஎ.

ஊ. "இல்லவ ரொழுக்கம்போ லிருங்கழி மலர்கூம்பச், செல்லுமென் னுயிர்ப்புறத் திறுத்தந்த மருண்மாலை" கலி. கசஅ. க - எ.

ச. "ஆயர் மணிமாலை பூதுங் குழல்" (கலி. கoக: ஙச - ஙடு) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

டு. இந்நூற்பக்கம் அoஉ: உ - ஆம் குறிப்புப் பார்க்க.

க. "பூவெழி லிழந்தகண் புலம்புகொண் டமையாது, பாயனேய் மிகும்" கலி. உஅ: கஅ - ககூ.

(பிரதிபேதம்) * ஆகுதி. † கரியதாகிய கழி. ‡உள்ளி அழிதல், ‖இனைப்ப, +என்னுடைய பூ.

எனவாங்கு

* எ - து: எனச் சொல்லி. எ - று.

ஆங்கு அசை.

கஅ (க)படுசுடர் மாலையொடு பைதலை யுழப்பாளைக்
(உ)குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்முனை
(ங)விடுவழி விடுவழிச் சென்றுங்கவர்
தொடுவழித் தொடுவழி † நீங்கின்றுற் பசப்பே

‡ எ-து: (ச)படுகின்ற சுடரையுடைய மாலையாலே வருத்தத்தையுடைய காமநோயிலே அழுந்துகின்றவளைக் குடிமக்களைப் பாதுகாத்துப் பின்னர்த் தன்னைப் பாதுகாக்கும் பாண்டியனுடைய அகற்சியையுடைய (ஞ) படை விட விடப் பகைவர் நீங்கினாற்போலப் பிரிந்தவர்வந்து தீண்டத்தீண்டப் பசப்பு நீங்கிற்று; ஈதிருந்தவாறு என்னென (ஊ)வாயில்கள் தம்முட்டம்முட் கூறினர். எ - று.

க. "படுசுடர்.....பசப்பே" என்பது, வழியீற்று வினையெச்சத்திற்கு மேற்கோள்; தொல். வினை. சூ. ஈக. கல். இவ்வினையெச்சத்திற்கு, கடையிரண்டடிமேற்கோள்; தொல். வினை. சூ. ஈஉ. நச். இ - வி. சூ. உசசு. நன். வினை. சூ. உச. இரா. இது இறப்புப்பற்றிவந்தென்பர்.

உ. (அ) "குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல், வடுவன்று வேந்தன் றொழில்" (குறள். ஙிசஈ) என்புழி, 'குடிபுறங் காத்தோம்பல்' என்பதற்கு, குடிகளைப் பிறர் கவியாமற் காத்துத் தானும் கவியாது பேணுதலென்று பொருள்கூறுவர். பரி. (ஆ) "குடிபுறங் காத்து" மணி. உங: கக. பெருங். (இ) அ: உ0. (ஈ): "இளர்வேந்தன் றன்னுடு, வாட்டானன் றென்றல் வனப்பு" சிறுபஞ்ச. கூ.

ங. (அ)"தொடுவழித் தொடுவழி நீங்கி, விடுவழிவிடுவழிப் பரத்தலானே" குறுந். ஙகஙு; (ஆ) "கொழுநனைச் சேர்ந்தோர், பசலை யென்னவே யுடைந்தது பாதக னிரதம்" விநாயக. மகோற்கடர். ஙிஅங.

ச. படுகின்ற சுடர் - அத்தமிக்கும் சூரியன்; மாலைக்காலத்துக்கு விளக்கேற்றல் கூறப்படுதலால், 'உண்டாகின்ற விளக்கு' எனினுமாம்.

ஞ. படைவிடல் - சேனைகள்போய்த் தங்குதல்; படைக்கலங்களைச் செலுத்தலென்பாரு முளர்.

ஊ. வாயில்களென்பது சொல்லால் அஃறிணையாயினும் பொருளால் உயர்திணையாதலின், கூறினரென உயர்திணையால் முடித்தார்.

(பிரதிபேதம்) * என்றதில் ஆங்கசை. †நீங்கின்று பசப்பே,நீங்கிற்றுற் பசப்பே. ‡எ-து:எனச் சொல்லிப்படுகின்ற.

"வாயிலுசாவே தம்முளுரிய" (க) என்பதுவிதி. உழப்பாளைத்தொடுவழி யென்க. விடுவழி தொடுவழி என்பன செயவெனெச்சக் குறிப்புச்சொல்லாகிய வழி என்னும் வினையெச்சம்.

இதனால், வாயில்கட்குப் பெருமிதமென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

(உ)இஃது இடையிடை சொற்சீரடி வந்த கொச்சகம். (கஙு)

(கஙுக.) பெருங்கடற் றெய்வநீர் நோக்கித் தெளித்தென்
றிருந்திழை மென்றோண் மணந்தவன் செய்த
வருந்துயர் நீக்குவேன் போன்மற் பொருந்துபு
பூக்களின் கொண்ட புகழ்சா லெழிலுண்க
ரு ணோக்குங்கா னோக்கி னணங்காக்குஞ் சாயலாய் தாக்கி
யினமீ னிகன்மாற வென்ற சினமீ
னெறிசுறா வான்மருப்புக் கோத்து நெறிசெய்த
நெய்த னெடுநார்ப் பிணித்தியாத்துக் கையுளர்வின்
யாழிசை கொண்ட வினவண் டிமிர்ந்தார்ப்பத்
தாழா துறைக்குந் தடமலர்த் தண்டாழை
வீழுச றாங்கப் பெறின்;

கஉ மாழை, மடமான் பிணையியல் வென்றாய் நின்னூசல்
கடைஇயா னிகுப்பநீ நீங்காய் தடமென்றோ
ணீத்தான் றிறங்கள் பகர்ந்து
கரு நாணினகொ றோழி நாணினகொ றோழி
யிரவெலா நற்றோழி நாணின வென்பவை
வாணிலா வேய்க்கும் வயங்கொளி யெக்கர்மே
லானாப் பரிய வலவ னளைபுகூஉங்
கானற் கமழ்ஞாழல் வீயேய்ப்பத் தோழியென்
மேனி சிதைத்தான் றுறை;

க. தொல். செய். சூ. உ00.

உ. (அ) இச்செய்யுள் இடையிடையே சொற்சீரடி பல விரவி யாப்பின் வேறுபடவந்த கொச்சகமென்பதும் இவர் கருத்துப்போலும்; (ஆ) "நயனும் வாய்மையு நன்னர்நடுவுமென, அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியதுபோலுங் கொச்சகம்வருங்கால் ஒத்தாழிசையும் வண்ணக மும்போலத் தனிச்சொற் பெற்றும் பெறாதும் வரும்" என்பது பேராசிரியருரையிற் காணப்படுவது; தொல். செய். சூ. கடுரு.

உக மாரிவீ ழிருங்கூந்தன் மதைஇயநோக் கெழிலுண்கட்
டாழ்நீர முத்தின் றகையேய்க்கு முறுவலாய்
தேயாநோய் செய்தான் றிறங்கிளந்து நாம்பாடுஞ்
சேயுய ரூசற்சீர் நீயொன்று பாடித்தை;

உஙி பார்த்துற் றனதோழி பார்த்துற் றனதோழி
யிரவெலா நற்றோழி பார்த்துற்றன வென்பவை
தன்றுணை யில்லாள் வருந்தினுள் கொல்லென
வின்றுணை யன்றி யிரவி னகவாவே
யன்றுதா னீர்த்த கரும்பணி வாடவென்
மென்றோண் ஞெகிழ்த்தான் றுறை;

ஙக கரைகவர் கொடுங்கழிக் கண்கவர் புள்ளினந்
திரையுறப் பொன்றிய புலவுமீ னல்லதை
யிரையுயிர் செகுத்துண்ணுத் துறைவனை யாம்பாடு
மசைவர லூசற்சீ ரழித்தொன்று பாடித்தை;

ஙஙி அருளினகொ றோழி யருளினகொ றோழி
யிரவெலாந் தோழி யருளின வென்பவை
கணங்கொ ளிடுமணற் காவி வருந்தப்
பிணங்கிரு மோட்ட திரைவந் தளிக்கு
மணங்கம ழெம்பாலா ருடலை யாங்கே
வணங்கி யுணர்ப்பான் றுறை;

எனநாம்;

சஉ பாட மறைநின்று கேட்டன னீடிய
வானீர்க் கிடக்கை வயங்குநீர்ச் சேர்ப்பனை
யானென வுணர்ந்து நீநனி மருளத்
தேனிமிர் புன்னை பொருந்திக்
கானலக் கினனவ் வூசலை வந்தே.

இது வரைவுநீட ஆற்றளாயதலைவியைத் தோழி அவன் முன் அருமை செய்து அயர்ந்தகாலத்து*அவன்வரைவினையானறிந்து ஊசலாட நின்னைக் கொண்டுபோயி ஆடுகின்ற காலத்து யான் இயற்பழிக்க நீ இயற்பட மொழிவது கேட்டுவந்து ஊசலை ஊக்கியவன் இக்காலத்து வருந்தவிடாது வருத்தமறிந்து வரைந்து கொள்வனென ஆற்றுவித்தது.

(பிரதிபேதம்) * அவன் வரவினை.

இதன் பொருள்.

பெருங்கடற் றெய்வநீர் நோக்கித் தெளித்தென்
றிருந்திழை மென்றோண் மணந்தவன் செய்த
வருந்துயர் நீக்குவேன் போன்மற் *பொருந்துபு
(க)பூக்கவின் கொண்ட (உ)புகழ்சா லெழிலுண்க
ரு (ங)ணோக்குங்கா னோக்கி னணங்†காக்குஞ் சாயலாய் தாக்கி
யினமீ னிகன்மாற வென்ற சினமீ
(ச)னெறிசுறா வான்மருப்புக் கோத்து நெறிசெய்த
(ரு)நெய்த னெடுநார்ப் ‡பிணித்தியாத்துக் கையுளர்வின்
(கூ)யாழிசை கொண்ட வினவண் டிமிர்ந்தார்ப்பத்
தாழா துறைக்குந் தடமலர்த் தண்(எ)டாழை
வீழூச றாங்கப் பெறின்;

க. "பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழிலுண்கண்" கலி. கசஉ: கக.

உ. "தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று" புகழ்தல்.

ங. "நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு, தானைக்கொண் டன்ன துடைத்து" குறள். கஅஉ.

ச. (அ) "எறிசுறாக் குப்பை யினங்கலக்கத்தாக்கு, மெறிதிரை" ஐந்-எழு. சுரு. (ஆ) "எறிசுறா நீள்கட லோத முலாவ" திணைமொழி. சங. (இ) இந்நூற்பக்கம் எஎஉ: ங - ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. "குவளையைத், தன்னாரா லியாத்து விடல்" (பழ. ஙசுரு.) எனவும் "குமிழின், புறழ்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில்யா ழிசைக்கும் விரலெறிகுறிஞ்சிப், பல்காற்பறவை கிளைசெத்தோர்க்கும்" (பெரும்பாண்.கஅ0-கஅங.) எனவும்வருவன இங்கேநோக்கற்பாலன.

சு. "யாழ்போல வண்டார்க்கும்" கலி. ஙஉ: கூ என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ச. (அ) "தாழை வீழ்க் கயிற்றூச றாங்கி" அகம். உ0: சு. (ஆ) "கான லொருசிறை, மகிழ்பூ மாலையொடு மருதிணர் மிடைந்த, வவிழ்பூங் கோதையோ டவிரிழை பொங்க, வெக்கர்த் தாழை, நீர்த்துறைத் தாழ்ந்த, நெடுவீ ழூசன் முடிபிணி யேறித், தொடுவேன் முற்றத்துத் தோழியோ டாடா" பெருங். (க) ச0: க0கூ - ககச. எனப் பிற நூல்க ளுள்ளும் வருதல் காண்க. இது விழுதுடைமையால் (இ) 'வீழ்த் தாழை', என்றும் தாழையென்னும்பெயரைத் திரிசொல்லாகவுடைய தென்னை வீழின்மையால் (ஈ) 'வீழி றாழை' என்றும் கூறப்படும்.

(பிரதிபேதம்) * பொருந்து பூக்கவின். † ஆகுஞ் சாயல், ‡ பிணித்தியார்த்து, பிணியாத்து.

எ - து: நோக்குங்காலத்து அப்பார்வையாலே பிறர்க்கு *வருத்தமுண்டாக்கும், தன்னில்இணையொத்துப் பூவினதழகைத் தன்னிடத்தேகொண்ட

இங்கே கூறப்படும் வீழ்த்தாழை (உ) புறக்காழுடையதாதலாற் புல் வகையுள் ஒன்றாக எண்ணத்தக்கது. இது கடலலை மோதுமிடத் துள்ள எக்கரிற் செழித்துவளர்வது. வளைந்தவடிவும் சருச்சரையான அரையு முடையது. தோல்திரைந்தாற்போன்ற திரையரையுடைய தென்றும் கூறுவர். இதன் இலை மிக்க நீளமுடையதாயும் இரு விளிம்பிலும் புறத்திடையிலும் கூர்மையும் வளைவுமுள்ள சிறு முட் களையுடையதாயும் ஒவ்வொரு கிளையின் நுனியிலும் அடர்ந்திருக்கும். அதனால் இதற்குப் பேயை உவமையாகக் கூறுவர். இவ்விலையால், குடை செய்யப்படுகின்றது. இதன் முள்ளுக்குச் சுறுக்கோடும் வாளாமும் பாம்பின் எயிறு(பல்லு)ம் உவமையாக்கப்பட்டுள்ளன. இம்முள் எயிறுபோலுதலால் எயிறெனவும் படும். புறமடலிலும் இவ்வகை முள்ளுண்டு. இதில் ஆணென்றும் பெண்ணென்றும் உலக வழக்கில் இருபிரிவுள்ளது. ஆண்டாழை காய்க்கும். அது அக்காயை யடித்துள்ள காய்மடலெனப்படும் புறவடல் சிலவற்றையேயுடையது; வேறுபூஇல்லாதது. பெண்டாழை காயாது. மேற்கூறியஇலையினடியி லிருந்து பலமடல்களையுடைய அரும்பையீன்று பூக்கும். இப்பூவில் வெண்ணிறமுடையது வெண்டாழையென்றும் பொன்னிறமுடையது செந்தாழையென்றும் வழங்கப்படும். இவற்றுள் செய்யுளிற் பெண் டாழையும் வெண்டாழையுமே பயின்றுவரும். ஆண்டாழையும் செந் தாழையும் அருகிவழங்கும். வெண்டாழைமுகிழுக்கு யானைத்தந்தமும் நகிலும் அதன்பூவுக்கு அன்னம் குருகு கொக்குமுதலியபறவைகளும் சங்கமும் உவமையாக உரைக்கப்படுகின்றன. செந்தாழம்பூவுக்குப் பொன் உவமையாக ஓதப்படுகிறது. இம்மரம் உலகவழக்கில் மோத்தை யென்று மொழியப்படும். (ஊ) இதன்முகிழ் கருவிலிருக்கும்போதே வண்டுகள் அதனை அறிந்து அதிற் செல்லுமென்பார். குருகுகள் இத னைத் தம்பார்ப்பென்றும் பெடையென்றும் மயங்கிப் புல்லுமென்பது கவிமரபு. இப்பூ, பறவைபோலத் தோன்றுதலால் இதனிழலைக் கயல் கெண்டை இரும்முதலிய மீன்கள் தம்மையுண்ணும் புட்களென்று அஞ்சி ஒளிக்குமென்றும் உரைப்பதுண்டு. இது காலையில் மலர்வ தாகக் கூறுவர். இது பின்னல் பின்னுங்காலத்தும் பெருங் காற்று வீசுங்காலத்தும் மிகப் பூப்பது. இப்பூ ஓலைப்பூவென்றும் கூறப்படும். இப்பூவின்மடல்களுக்கிடையே பூந்தாதையுடைய சோறெனப்படும் இழுதுபோன்ற உறுப்பு ஒன்றுண்டு. (எ) இப்பூவில் இத்தாதே உண்டென்றும் தேன் இன்றென்றும் சிலர் கூறுவர். இப்பூ, புலவு

(பிரதிபேதம்) * வருத்தமுண்டாக்குங் கண்ணியையுடைய சாயலாயென்க. சாயல் ஈண்டுத் தலைவிக்கு ஓர் பெயர்த்தன்மையாய் நின்றது. தன்னில்.

புகழ்ச்சியமைந்த * அழகினையுடைய கண்ணினையுடையாய்! சாயலாய்! இனமான மீன்களது மாறுபாடுகெடத் தாக்கிவென்ற சினத்தையுடைய

நாற்றத்தை நீக்கி நன்மணம் வீசுமென்ப. இதன் மடலைப் பண்டைக் காலத்தும் மகளிர் தலையிலணிந்துவந்தனர். ஆடவரும் மாலையாக அணிதலுண்டென்ப. இதனைக் காமவேளின் வாட்படையென்பதும் மரபு. தாழைவேறு கண்டல்வேறு. தாழைக்கும் கண்டலென்று ஒரு பெயருண்டு. இவற்றுட் பலவும் (1) "வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை, குருகுள ரிடத்தின் விரிபுதோ டவிழுங், கானல்" (2) "அல்கலுந், தயங்குதிரைபொருத தாழை வெண்பூக், குருகென மலரும் பெருந்துறை" (3) "முழங்குதிரை கொழீஇய மூரி யெக்கர்த், தடந்தாட் டாழை முள்ளுடை நெடுந்தோட், டகமடற் பொதுளிய முகைமுதிர் வான்பூங், கோடுவார்ந் தன்ன வெண்பூ" (4) "உரவுத் திரை பொருத பிணர்படு தடவுமுத, லரவுவாள் வாய முள் ளிலைத் தாழை" (5) "எக்கர்த் தாழை மடல்வயி னானும்" (6) "முட வுடற் கைதை மடன்முறித் திட்டும்" (7) "திரைமுதி ரரைய தடந் தாட் டாழைச், சுறவுமருப் பன்ன முட்டோ டொசிய, விறவா ரினக்குரு கிறைகொள விருக்கும்" (8) "நீடிலைத் தாழை" (9) "முடம்படு முள்ளிலை முடங்கன் மூரிசால், கடம்படு கரிமருப் பீன்று" (10) "முடமுட்டாழை" (11) "கொடுமுண் மடற்றாழைக் கூன்புற வான்பூ, விடையு ளிழுதொப்பத் , தோன்றிப் - புடையெல்லாந், தெய்வங் கமழும்" (12) "பல்பூங்கானன் முள்ளிலைத் தாழை, சோறு சொரி குடவயிற் கூம்புமுகை யவிழ" (13) "அள்ளிலைத், தடவுநிலைத் தாழை" (14) "கழுதுருவின கஞலிலையன கழிமடலின கைதை" (15) "இறவுப்புறத்தன்ன பிணர்படுதடவுமுதற், சுறவுக்கோட்டன்ன முள்ளிலைத் தாழை, பெருங்களிற்று மருப்பி னன்ன வரும்புமுதிர்பு, நன்மானுழையின் வேறுபடத்தோன்றி" (16) "வாள்போல் வாய கொழுமடற் றாழை" (17) "அரவெயிற் றணிமுட் கைதை" (18) "மோட்டுமண லடைகரைப், பேஎய்த் தலைய பிணரரைத் தாழை, யெயிறுடை நெடுந்தோடுகாப்பப் பலவுடன், வயிறுடைப்போது வாலி தின் விரீஇப், புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பின்" (19) "தாழை முகிழ்வேழமிகு தந்தமென வுந்துதகு சண்பை" (20) "யானைக் கூர்நுதி மருப்பிற் றோன்றி, வண்டொடு சுரும்பர் மூச மன்றலம் பொதிவாய் விண்டு, கண்ட னாண்மடற்றேன் சிந்துங் கண்டகி" (21) "மோடுடை நெட்டிலை முடவெண் டாழையந், தோடுடை நறுமலர் தோன்றல் கொய்வது, பாடுடை நெடுமடற் பனைக்கை வேழவெண், கோடடி பிடுங்கிய கோலம் போன்மரோ" (22) "பீடடைந் தவர்பிடர் புடைப்ப வானையின், கோடுடைந்துதிர்ந்தன கொடுமுட்கேதகைத், தோடுடைந்

(பிரதிபேதம்) * அழகினையுடைய கண்ணென்க. சாயலினமாக மீன்களது,

மீனாகிய எறியுஞ்(க)சுறாவினது மருப்பாற் செய்த பலகையைக் கோத்துப் புற விதழொடித்த நெய்தற் பூவை நெடியநாரிலே தொடுத்து அழகுபெறக் கட்டிக் கையாலே வாசித்தலையுடைய யாழினது ஓசையைத் *தம்மிடத்தேகொண்ட இனமான †வண்டுகள் ‡ஆளா[ப்]பஞ்செய்து பாடத்தாழாமல் தேன்றுளிக்கும்

தொருவழித் தொகுத லொத்தவே" (23) "முட்டாழைக ளானை, வெள்ளைக் கொம்பீனும் விரிபொழில்" (24) "மாமன்றற் கைதையங் கன்னிதன் மொக்குள் வனமுலைமேல்"(25)"அலைநீர்த்தாழை யன்னம் பூப்பவும்" (26) "தாழை குருகீனுந் தண்ணந் துறைவனை" (27) "தோடவிழ் தாழை துறைகமழக் கோடுடையும்" (28) "பழந்தூங்கு முடத்தாழை" (29) "சோறுவாய் திறந்த செம்பொற் றொகுமடற் கைதை" (30) "முருகுவாய் முட்டாழை நீண்முகைபார்ப் பென்றே, குருகுவாய்ப் பெய்திரை கொள்ளா - துருகிமிக, வின்னா வெயில்சிற கான்மறைக்குஞ் சேர்ப்ப" (31) "நெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிச்சென்று, கைதை மடல்புல்கு தென்கழிப் பாலை" (32) "ஏழை வெண்குரு கயலே யிளம்பெடை தனதெனக் கருதித், தாழை வெண்மடற் புல்குந் தண்மறைக் காடு" (33) "பிணர்முடத் தாழை விரிமலர் குருகென, நெடுங்கழிக் குறுங்கயல் நெய்தலுண் மறைந்தும்" (34) "புனற்கயல் கொக்கென்றஞ்சக், கண்டலங்கார மலரரங் கேசர்க்கு" (35) "மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று, தடமண்டு துறைக்கெண்டை, தாமரையின் பூமறைய" (36) "கருங்காற் குருகின்கோளுய்ந்து போகிய, முடங்குபுற விறவின் மோவா யேற்றை, யெறிதிரை தொகுத்த வெக்கர் நெடுங்கோட்டுத், துறுகடற் றலைய தோடுபொதி தாழை, வண்டுபடு வான்போது வெரூஉந், துறை" (37) "வேலை மடற்றாழை யுட்பொதிந்த வெண் டோட்டு, மாலைத் துயின்ற மணிவண்டு - காலைக், களிநறவந் தாதூதத் தோன்றிற்றே" (38) "தடித்தெழுந்தொறுந் தாழை பூப்பன" (39) "மாரனுக்கு வாளாமோ லைப்பூவு மால்" (40) "காற் றடித்தது தாழை பூத்தது" (41) "கைதை, சுரும்புந் தும்பி களுமருந்த மாறு தென்றுஞ் சோறிடுமால்" (42) "கண்ட லவிர்பூங் கதுப்பினாய்" (43) "இடைநிலத் தியாத்த, முதிர்பூந் தாழை முடங்கல்வெண் டோட்டு" (44) "சங்குடைந் தனைய தாழைத் தடமலர்த் தொடைய லானே" (45) "அடும்பி னயலது நெடும்பூந் தாழை, தாழை யயலது வீழ்குலைக் கண்டல்" (46) "கண்டலங் கைதையொடு விண்ட முண்டகம்" என்று வருவனவற்றால் அறியலாகும்.

௨: சுறாவினது மருப்பு, சுறாவகையுள் ஒன்றாகிய வேளாவினது கொம் பென்பர். இம்மருப்பில் இரு விளிம்பிலும் வேல்போலக் கூரிய முனைகள் உண்டு.

(பிரதிபேதம்) * தன்னிடத்தே. † வண்டு களாரப்பஞ்செய்து, ‡ ஆர்ப்பரவஞ்செய்து.

வளைவையுடைத்தாகிய மலரையுடைய தாழையினது விழுதாற் றிரித்து இட்ட ஊசலே நீ போந்து ஆடப்பெறின், நீரையுடைய பெரிதாகிய (க) கடலாகிய தெய்வத்தை நோக்கி நின்னிற் பிரியேன் என்று தெளிவித்து, உன்னுடைய திருந்திய இழையையுடைய மென்றோளைக் கூடினவன் அருமைசெய் தயர்த்ததால் நினக்குண்டாகிய அரிய வருத்தத்தை யான் அவனை எதிர்ப்பட்டு மிகவும் தீர்க்குவேன்போலே இராநின்ற *தென்றாள். எ - று.

சாயல், ஈண்டுத் தலைவிக்கோர் பெயர்த்தன்மையாய் நின்றது. பெறின், தீர்க்குவேன்போலுமென்க.

போலும் என்னும் †மூற்றுச்சொல் ஈற்றுமிசை உகரம் மெய்யொழித்துக் கெட்டுநின்றது. கோத்து யாத்து என்னுஞ் செய்தெனெச்சம் இட்டஎன்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது.

"தாயத்தினடையா" என்னும் (உ) பொருளியற் சூத்திரத்தால் என்றோ‡ளென்றாள். இது மேல் வருவனவற்றிற்குங் கொள்க.

கஉ (ங) மாழை, மடமான் பிணையியல் வென்றுய்ந்நின் னூசல்
கடைஇயா னிகுப்பநீ நீங்காய் தடமென்றோ
ணீத்தான் நிறங்கள் ‖ பகர்ந்து

எ - து: அதுகேட்டுஊசலிடத்தேசென்ற தலைவியைநோக்கி, இளமையையுடைய மடமான் +பிணையினது நோக்கினியல்பை வென்றவளே! நின் தடமென்றோளைக் கைவிட்டவனுடைய கொடுமையினது கூறுகளைச் சொல்லிப் பாடி நீ ஏறின ஊசலை யான் உயரச்செலுத்தித் தாழ்த்தாட்ட நெடும்பொழுது ஆடாயென்றாள். எ - று.

க. (அ) "பிரிவில்லாய் போலநீ தெய்வத்திற் றெளித்தக்கால்" கலி. கஉச: கஅ; (ஆ) "தோள்புதி துண்ட ஞான்றைச், சூளும் பொய்யோ கடலறி கிரியே" அகம். ஙஉ0: கங - கச.

உ. தொல். பொருளி. சூ. உஎ.

ங. (அ) "மாழை மானோக்கியு மாற்றாள்" தினைமொழி. எ. (ஆ) "மாழை மானோக்கின் மடமொழி" கைந்நிலை. நெய்தல். கக. (இ) "மாழை மான் மடநோக்கியுன் றோழி" நாலா. பெரியதிரு.மி: அ. க. என்பவை ஒப்புநோக்கற்பாலன. (ஈ) "மாழைமென்னோக்கி" நைடத. சுயம். கநிக. (உ) "மாழை யுண்கண்" (ஊ) "மாழை யொண்கண்" என மாழை கண்ணுக்கும் அடைமொழியாய் வருகிறது. பெருங். (க) சo: ஙoக; நிசு: ககசு.

(பிரதிபேதம்) * என்றாள். பெறிற்றீர்க்கு.† பெயரெச்ச மீற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டுநின்றது. ‡என்றாண்மாழை. ‖படர்க்கை, +பிணையது.

(க)நீள், காலத்தின் நீட்சியை உணர்த்திற்று.

கரு நாணினகொ ரோழி நாணினகொ ரோழி
யிரவெலா நற்றோழி நாணின வென்பவை
வா(உ)ணிலா வேய்க்கும் வயங்கொளி யெக்கர்மே
லானாப் பரிய(ங)வலவ னளைபுகூஉங்
கானற் கமழ்(ச)ஞாழல் வீயேய்ப்பத் தோழியென்
மேனி சிதைத்தான் றுறை

எ - து: தலைவி அங்ஙனம் பாடாமையிற் றோழி * தான், தோழீ! கான லிடத்துக் கமழ்கின்ற ஞாழற்பூவின் நிறத்தையொப்ப நின்மேனி பசப்பித்தவ னுடைய துறையிடத்து ஒளியையுடைய நிலாவையொக்கும் விளங்குகின்ற ஒளியினையுடைய இடுமணலின்மேலே ஓடும் அமையாத செலவுகளையுடைய ஞெண்டுகளென்று சொல்லப்படுமவை, இப்பொழுது நம்மைக்கண்டு † தம்

க: நீடுங்காய் என்பதை, நீடு ஊங்காய் எனப் பிரித்தலுமாம்; நீடு, நெடுங் காலமென்னும் பொருளிலும் ஊங்குதல், ஆடுதலென்னும் பொருளி லும் வருதலை, "நீநீடு வாழிய" "ஊக்க வூங்காள்" என்பவையும் வலி யுறுத்தும்.

உ. (அ) "நிலவெக்கர்" பொருந. உகங. (ஆ) "நிலாவி னிலங்கு மணன் மலிமறுகின்" அகம்.உ00: க.(இ)"நிலவுமணல் வியன்கானல்" புறம். கஎ: கக. (ஈ) "நிலவோ ரன்ன வெண்மணற் பாக்கத்து" தமிழ்நெறி. மேற். (உ) "அறல்விளங்கு நிலாமணல்" மணி. அ:! கக. (ஊ) "செழு நிலவின் றுகளனைய மணற்பரப்புந் திருப்பரப்பு" பெரிய. கலிய. ச.

ங. (அ)"அடும்பிவரெக்க ரலவன் வழங்குங், கொடுங்கழிச்சேர்ப்ப னருளா னெனத்தெளிந்து, கள்ள மனத்தா னயனெறிச் செல்லுங்கொ, னல்வளை சோர நடந்து" ஐந் - எழு. சுஉ. (ஆ) "ஆழிவா யாங் கலவ வோடி, யொளிக்கின்ற தென்னோ" நள. கலிநீங்கு. ககூ.

ச. ஞாழற்பூ இங்கே பசப்புக்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. (அ) "சிறுவீ ஞாழற் றேன்றோ யொள்ளிணர், நேரிழை மகளிர் வார் மண லிழைத்த, வண்டற் பாவை வனமுலை முற்றத், தொண்பொறிச் சுணங்கி னைதுபடத் தாஅங், கண்டல் வேலி" நற். ககூக: க - ரு. (ஆ)"எக்கர் ஞாழற் பூவி னன்ன, சுணங்குவள ரிளமுலை மடந்தைக்கு" ஐங். கசகூ: என்புழி சுணங்குக்கும் உவமையாகக் கூறப்பட்டிருக் கிறது.(இ) இதனைப் பற்றிய மற்றச் செய்திகளை இந்நூற்பக்கம் எஅஎ: சு - ஆம் குறிப்பால் அறிக.

(பிரதிபேதம்) * தானே. † தன்னனை.

அலையிலேப்புகாநின்றன; அங்ஙனம் புகுகையினாலே(க) அத்துறைவன்நம்பாற் செய்தகொடுமையை நினைத்துத் தோழீ! நம்முன் தாம்நிற்றற்கு நாணினவோ? தோழீ! நம்முன் தாம் நிற்றற்கு நாணினவோ? எங்ஙனம் நாணினவாயின், தோழீ! இராக்காலமெல்லாம் நாணிக்கிடந்தனவாய் இருக்குமென இயற்பழித்தாள். எ - று.

துறையிடத்து அலவனென்பவை என்க. என்பவை, தொழிற்பெயர்.

உக (உ)மாரிவீ ழிருங்கூந்தன் (௩)மதைஇயநோக் கெழிலுண்கட்
டாழ்நீர முத்தின் றகையேய்க்கு முறுவலாய்
தேயாநோய் (௪)செய்தான் றிறங்கிளந்து நாம்பாடுஞ்
சேயுய ரூசற்சீர் நீயொன்று (௫)பாடித்தை

எ - து: அது கேட்ட தலைவி பாடாமையிற் பின்னும் தோழி, மழை விரும்புகின்ற பெரிய கூந்தலையும் மதர்த்த நோக்கினது அழகையுடைய *கண்ணினையும் தாழ்ந்த கடலிற் பிறந்த முத்தினது அழகை ஒக்கும் முறுவலினையுமுடையாய்! மாயாத நோயைச் செய்தவனுடைய கொடுமையின் கூற்றினைச் சொல்லி நாம் பாடும் மிக உயர்ந்த ஊசற்பாட்டை நீ ஒன்றுபாடுவாயென்றாள். எ - று.

(௬)சீர் என்றது, தாள அறுதியையுடைய ஊசற்பாட்டை.

---

௧. "வாணிலாநகை மாதராள்செயல் கண்டுமைந்தர்மு னிற்கவு, நாணினாளென வேகினாணளிர் கங்குலாகிய நங்கையே" கம்ப. கைகே. ௪௬.

௨. "மாரிவீ ழிருங்கூந்தல்" (கலி. கச: ச) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௩. (அ) "பேரமர் மழைக்*கட் கொடிச்சி, (* கண் மடந்தை, என்றும் பிரதிபேதம்)மூரன்'முறுவலொடு மதைஇய நோக்கே" குறுந். உஅக.
(ஆ) "மாதர் வாண்முக மதைஇய நோக்கே" அகம். க௩௦: கச.
(இ) "மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு" சிலப். அ: எக,

௪. "கோதையுங் குழைவின் பட்டின் கொய்சகத் தலையுந் தாழ, மாதர் வண் டொருங்கு பேர மழையிடை நுடங்கு மின்போற், போதலர் பொதும்பிற் றாழ்ந்த பொன்னெழி லூச றன்மே, லோதநீர் வண்ணற் பாடி யூழினூ ழியங்கு வாரும்" சூளா. சுயம்வர. அக.

௫. "பாடித்தை" (கலி. ௪௦: க௦) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௬. 'சீரென்பதற்கு, 'தாள முடிந்துவிடுங்காலத்தினைத் தன்னிடத்தே கொண்ட சீர்' என (கலி. க: எ) இவ்வுரையாசிரியர் விளக்கியிருப்பதும் இந்நூற்பக்கம் க௦: க - ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * கண்ணினையுமுடைய தாழ்ந்த.

உரு பார்ந்துற் றனதோழி பார்த்துற் றனதோழி
*யிரவெலா நற்றோழி பார்த்துற்றன வென்பவை
தன்றுணை யில்லாள் வருந்தினுள் கொல்லென
வின்றுணை யன்றி லிரவி னகவாவே
யன்றுதா (க)னீர்த்த †கரும்பணி வாடவென்
(உ)மென்றோண் ணெகிழ்த்தான் றுறை

எ - து: அது கேட்ட தலைவி பின்னும் பாடாமையின் தோழி, நம்மேல் அன்புற்றுப் புணர்ந்த அன்று தா(ங)னெழுதிய கரும்பினது அழகு கெடும்படி மென்றோளை மெலிவித்தவனுடைய துறையிடத்து (ச)இனிய துணையோடு கூடிய அன்றிலென்று சொல்லப்படுமவை, தன் துணையானவனை நீங்கினவள் வருந்தினளோ என்று கருதி இராக்காலத்தும் அழைத்தனவில்லை; ஆகையினாலே தோழீ! அவை நம்வருத்தத்தைப் பார்த்துத் தாமும்வருத்தமுற்றன போலே இருந்தன; ஆதலால் நற்றோழீ! இரவெல்லாம் நம்வருத்தத்தைப் பார்த்துத் தாம்வருத்தமுற்றன என்றாள். எ - று.

(ரு)‡பாத்துற்றன பாடமாயின், பிரிவுற்றனவென்க.

ஙக கரைகவர் கொடுங்கழிக் கண்கவர் புள்ளினந்
திரையுறப் பொன்றிய புலவுமீ னல்லதை
யிரையுயிர் செகுத்துண்ணுத் துறைவனை யாம்பாடு
மனைவரா லுசற்சீ ரழித்தொன்று பாடித்தை

எ - து: அது கேட்ட தலைவி, கரையையிடித்துத் தனக்காக்கிக்கொள்ளுகின்ற கொடுங்கழியிடத்து நோக்கினார்கண்ணை வாங்கிக்கொள்ளும் அழகையுடைய பறவைத்திரள் திரைமோதுகையினாலே இறந்த || புலாஞற்றத்தை

க. "மென்றோட், பெய்கரும் பீர்க்கவும் வல்லன்" கலி. கசஙூ: ஙக - ஙஉ.

உ. "மென்றோ ணெகிழ்த்தானை" கலி. கசஙூ: கஞ.

ஙூ. இந்நூற்பக்கம் ஙஅஉ: ஙூ - ஆம் குறிப்புப் பார்க்க.

ச) "அன்றிலம் பெடைகளோயனுகி யன்னேகே, ணன்றென வினையின்மே னடந்த நாயக, ரின்றுவந் திவ்வரிங் கெம்பொருட்டினை, லொன்றுநீ யிரங்கலென் றுரைக்கின் மூர்கிலர்" (கந்த. திருநாட்டு. ஙக.) என்பதும் இந்நூற்பக்கம் அ0க: ஙூ-ஆம் குறிப்பும் இக்கே அறிதற்பாலன.

ஞ. பாதீடென்பதற்கு, 'பகுத்துக்கொடுத்தல்' என்று பொருள் கூறுமிடத்து, 'ஈத்தலும் ஈதலும்போலப் பாத்தலும் பாதலுமொன்றுதலிற் பாதீடாயிற்று' என்று (தொல். புறத். சூ. ஙூ) இவ்வுரையாசிரியர் எழுதியிருப்பதை நோக்குக.

(பிரதிபேதம்) * இவெல்லாம், †கரும்பினணி, ‡பாத்தன பாடமாயின், || புலாகாற்றத்தை.

யுடைய மீனே இரையாகத் *தின்னுமதல்லது தாம் ஒன்றன் உயிரைப்போக்கி இரையாக அதனை உண்ணுத அருட்டிறைவனை நாம்பாடும் அசைந்துவருதலை யுடைய ஊசற்பாட்டை, நீ இயற்பழித்ததனை அழித்து, இயற்பட ஒன்று பாடுவாய் என்றாள். எ - று.

கூறு அருளினகொ றோழி யருளினகொ றோழி
பிரவெலாந் தோழி யருளின வென்பலை
(க)கணங்கொ ளிடுமணற் (உ)காளி வருந்தப்
பிணங்கிரு மோட்ட திரைவந் †தளிக்கு
(ங)மணங்கம ழைம்பாலா ருடலை யாங்கே
வணங்கி யுணர்ப்பான் ‡றுறை

எ - து: அது கேட்ட தோழி அங்ஙனம் பாடாமையின் தலைவி, மணம் நாறுகின்ற கூந்தலையுடையாரிடத்து உண்டாகிய ஊடலை அதுகண்ட பொழுதே வளைந்து தீர்க்குமவன் துறையிடத்து, திரட்சிகொண்ட (ச)இடு மணலாலே காவியென்று சொல்லப்படுமவை வருந்த, அவற்றைத் தம்மிற் பிணங்கி||வருகின்ற கருமை தங்கிய பெருமையையுடையனவாகிய திரைகள் வந்து அம்மணலைக் கரைத்து அருள்பண்ணுகிற்கும்; ஆகையினாலே அத் திரைகள் தோழீ! அருளினவோ? தோழீ! அருளினவோ? தோழீ! ×எங் ஙனம் அருளினவாயின், தோழீ! இவ்வெல்லாம் அருளினவாயிருக்குமென இயற்படமொழிந்தாள். எ - று.

+களவுகாலத்துத் தலைவி "தன்வயி னாகிமையு மவன்வயிற் பரத்தையும்" (ஞ) கூறுதற்கு உரியளென்றலின், அவன்வயிற்**பரத்தைமை கூறிய காலத்து அதனை வணங்கித் தீர்த்தமை கருதி ஊடலை வணங்கி உணர்ப்பானென்றாள்.

காற்றுத் தூற்றிய மணலிடத்து அறல்††வருத்தினகாவியைத் திரைவந்து அளித்தாற் போல அலர் தூற்றுதலால் வருந்திய வருத்தத்தை நீக்கி நம்மை அளித்து ‡‡வரைவனென உள்ளுறையுவமங்கொள்க.

க. "கணங்கொள்.....றுறை" என்பது, எமஞ்சான்ற உவமைக்கண் தலைவி தான் ஊடியவாறும் மகிழ்ந்தவாறுங் காட்டி அவன்வயிற் பரத்தைமை கூறியதற்கு மேற்கோளாக உள்ளது. தொல். களவு. உக. இளம்.

உ. உரவுக்கதிர் தெறுமென வோங்குதிரை விரைபுதன், கரையம லடும் பளித் தாஅங்கு" கலி. கஉஎ: உ0 - உக.

ங. "மணநாறு கதுப்பினாய்" கலி. சஙூ: உங.

ச. இடுமண னெடுங்கோட்டைப், பயிறிரை கடுநன்னுட் பாய்ந்துறாஉத் துறைவ" கலி. கஙடு: ச - டு.

ஞ. தொல். களவு. உ0.

(பிரதிபேதம்) * தின்னுமல்லது. † அழிக்கும், ‡ வரை, || வருதற்கரியனவாகிய பெருமை, × அங்ஙனம், + களவுக்கால,**பரத்தமை.†† வருந்தின ‡‡வரையென்ன,

சக (க)எனநாம்
பாட (உ)மறைநின்று கேட்டன னீடிய
*வானீர்க் கிடக்கை (ஙு)வயங்கு†நீர்ச் சேர்ப்பனை
யார்னென வுணர்ந்து நீநனி மருளத்
தேனிமிர் புன்னை பொருந்தித்
தானுக் கினனவ் வூசலை வந்தே

எ - து: ‡ என்று அங்ஙனம் இயற்பழித்தும் இயற்படமொழிந்தும் யானும் நீயும் பாட, சேர்ப்பன், பாட்டை மறையநின்று || கேட்டனனும் நீடிய(ச)வெண்மையையுடைத்தாகிய நீர்க்கிடக்கை விளங்குகின்ற நீர்மையையுடைய சேர்ப்பனை யான் ஊசல் ஊக்கென்றேனென்றும் உணர்ந்து, பின்பு யானென நம்மில் நீ மிகவும் மருளும்படி அவன் தேனினம் ஒலிக்கும் புன்னையைப்பொருந்திநின்று, பின்பு வந்து அவ்வூசலைத் தான் ஊக்கினனென்; [அற வருத்தம் அறிந்து வியவாநின்று] (அன்று வருத்தமறிந்துதவியவன் இன்றும்) நம்வருத்தம் அறிந்து வளைந்து கொள்வனென × ஆற்றுவித்தாள். எ - து.

கிடக்கை, கடல்; நீர், கழி(யெனினுமாம்.)

இதனால், தலைவற்கு ஆராய்ச்சி பிறந்தது.

இனி"உணர்ப்புவயின்வாரா ஊடற்கண்" தோழி களவுகாலத்து நிகழ்ந்தமை கூறித் தலைவியை ஊடறீர்த்தென்று கிளவி கூறி அதற்கேற்ப உரைப் பாருமுளர்.

இஃது ஐஞ்சீரடி வந்த நெடுவெண்பாட்டாகிய தரவும் ஐஞ்சீரடுக்கிய +குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டும் கொச்சகமும் தளைவிரவின கொச்சக வெண்பாவும் கொச்சகமும் நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் சுரிதகமும் வந்த கொச்சகம்: (கசு)

க. "என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்" கலி. சஉ: உஅ.

உ. (அ) "மறைநின்று கேட்டருளி" (ஆ) "மறைநின்று கேட்டனன்" கலி. சக: சக, சஉ: உஅ.

ஙு. "வயங்குநீர்த் தண்சேர்ப்ப" கலி. கஉச: ச, கஉஎ: ஙு.

ச. வெண்மையை யுடைத்தாகிய சேர்ப்பென்க; சேர்ப்பு - கடற்கரை; "பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே" (புறம். சக: சு) என வருதல் காண்க.

(பிரதிபேதம்) * வானீர்கிடக்கை, † நீர்சேர்ப்பனை, ‡ அன்று அங்ஙனம். || கேட்டனனும்ச் சேர்ப்பனை.' × ஆற்றுவித்தாள். நீடிய.....சேர்ப்பனை கிடக்கை, + குறுவெண்பாட்டும் கொச்சகமும்.

(கரூ௨.) உரவுநீர்த் திரைபொர வோங்கிய வெக்கர்மேல்
விரவுப்பல் லுருவின வீழ்பெடை துணையாக
விரைதேர்ந்துண் டசாவிடூஉம் புள்ளின மிறைகொள
முரைசுமூன் றாள்பவர் முரணியோர் முரண்டப
நிரைகளி றிடைபட நெறியாத்த விருக்கைபோற்
சிதைவின்றிச் சென்றுழிச் சிறப்பெய்தி வினைவாய்த்துத்
துறையகலம் வாய்சூழுந் துணிகடற் றண்சேர்ப்ப;

அ புன்னைய நறும்பொழிற் புணர்ந்தனை யிருந்தக்கா
னன்னுதா லஞ்சலோம் பென்றதன் பயனன்றோ
பாயின பசலையாற் பகற்கொண்ட சுடர்போன்றாண்
மாவின தளிர்போலு மாணல மிழந்ததை;

கஉ பன்மலர் நறும்பொழிற் பழியின்றிப் புணர்ந்தக்காற்
சின்மொழி தெளியெனத் தேற்றியசிறப்பன்றோ
வாடுபு வனப்போடி வயக்குறா மணிபோன்றா
ணீடிறை நெடுமென்றோ ணிரைவளை நெகிழ்ந்ததை;

கசூ அடும்பிவ ரணியெக்க ராடிநீ தணந்தக்காற்
கொடுங்குழாய் தெளியெனக் கொண்டதன் கொளையன்றோ
பொறையாற்றா நுசுப்பினாற் பூவீந்த கொடிபோன்றாண்
மறைபிற ரறியாமை மாணாநோ யுழப்பதை;

எனவாங்கு;

உக வழிபட்ட தெய்வந்தான் வ்லியெனச் சார்ந்தார்கட்
கழியுநோய் கைம்மிக வணங்காகி யதுபோலப்
பழிபரந் தலர்தூற்ற வென்றோழி
யழிபட ரலைப்ப வகறலோ கொடிதே.

இது வரைவு நீட்டித்துழிப் பகற்குறிவந்து நீங்குந் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி, அவனை நாணு நெஞ்சலைப்ப வரைவுகடாயது.

இதன் பொருள்.

(க)உரவுநீர்த் திரைபொர வோங்கிய வெக்கர்மேல்
விரவுப்பல் லுருவின வீழ்பெடை துணையாக

க. உரவுநீர். இந்நூற்பக்கம் எகூக: ௪-ஆம் குறிப்புப்பார்க்க.

விரைதேர்ந்துண் டசாவிடூம் புள்ளின மிறைகொள
*முரைசுமூன் றுள்பவர் முரணியோர் முரண்டட
நிரை(க)களி நிடைபட †நெறியாத்த விருக்கைபோற்
(உ)சிதைவின்றிச் சென்றுழிச் சிறப்பெய்தி வினவாய்த்துத்
துறையகலம் வாய்சூழுந் (ஙூ) துணிகடற் றண்சேர்ப்ப

‡ எ - து:(சு)முரைசு மூன்றை ஆள்கின்ற பாண்டியர் தம்மொடு மாறு பட்டோருடைய மாறுபாடு கெடும்படி நிரைத்த களிறுகள் ஏனைப்படைக்கு நடுவே நிற்கும்படி நெறியுண்டாகக் கம்பத்தோடே || கட்டின இருக்கை

க. (அ) "களிறுங் கந்தும் போல களிகடற், கூம்புங் கலனுந் தோன்றும்" யா - வி. ஒழி. சூ. உ. 'குன்றவெண்' மேற். (ஆ) "பண்ணுர் களிறே போற் பாயோங் குயர்நாவாய்" சீவக. உஎகஙூ. எனவும் (இ) "அம்பி காழோர், சிறையருங் களிற்றிற் பரதவ ரொய்யும்" நற். எசு: ஙூ - சு. எனவும் (ஈ) "நாவாய் போல.....உழிதருங் கடாஅ யானையும்" மது. ஙஎக - ஙஅஙூ. (உ) "கொல்களிறு மிடைந்து.....வங்கந் திசைதிரிந் தாங்கு" பதிற். இஉ: க - சு. (ஊ) "களிறே, மூன்நீர்வழங்கு நாவாய் போலவும்" (எ) "கலம்போலக், களிறுசென்று" புறம். கஙூ: இ, உசு: உ - ஙூ. (ஏ) "மயங்குகா லெடுத்த வங்கம் போல..... கால வேகங் களிமயக் குற்றென" மணி. சு: ஙுசு - சுசு. (ஐ) "பொரு மால்களிறு போன்ரேர், வங்கமொடு போகி.....ஓடுகளி ரெறுப்ப வினி தோடியதை" (ஒ) "மொய்களி, நுடைதிரை மாக்கலம்" (ஓ) "மாக்கடற் பெருங்கலங் காலின் மாறுபட், டாக்கிய கயிறரிந் தோடி யெங்கணும், போக்கறப் பொருவன போன்று நீப்படத், தாக்கின வரசுவாத் தம்மு ளென்பவே" சீவக. சுகஙூ - இ0க, உஉஉங, உஉஙக. எனவும் வருபவை இங்கே ஒப்புநோக்கற்பாலன.

உ. (அ) "அஃதென்ப, பட்டினம் பெற்ற கலம்" நாலடி. உஇ0. (ஆ) "ஊனமெனு மின்றியினி தோகெவி, தென்ருன்" சீவக. இ00.

ஙூ. "துணிகடற் சேர்ப்பன்" கிணைமொழி. சஎ.

சு. (அ) "இமிழ்குரான் முரச மூன்றுட னுளுந், தமிழ்கெழு கூடற் றண் கோல் வேந்தே" புறம். இஅ: கஉ-கஙூ. என்பதும் (ஆ) "அடையல ரொடுங்க மோதும் படைமுர சதிரு மோதை, யிடைபடு வதுமை யோட விடுகொடை முரசி னோதை, கடைபடு வடிவேற் கண்ணூர் கடிமண முரசி னோதை, முடியுடை யாசர் வீதி யெங்கணு முழங்கக் கண்டார்" சீற. கசம்பொருத்து. உஎ. என்பதும் நோக்குக.

(பிரதிபேதம்) *முரசுமூன்றுள்பவன், † நிறீஇயாத்த, ‡ எ - து: முரைசு மூன்றுடன்..... மூன்றென்றதுமாம். முரைசு மூன்றை.|| கட்டின பாசறைபோலே என்ற... .....கொடுத்து நின்றது. இருக்கைபோலே

போலே விரவுதலையுடைய பலவடிவினையுடையவாய் இரையைத் தேடித் தின்று இளைப்பாறும்புள்ளினங்கள், தாம் விரும்பினபேடுகள் தமக்குத் துணையாக வலியினையுடைய * கடலினது திரை வந்துபொரும்படி உயர்ந்த இடுமணலின்மேலே தங்குதல்கொள்ள, தாம்சென்ற இடத்துத் தமக்கொரு கேடின்றித் தாம்போன காரியம் வாய்த்துவந்து தலைமைபெற்றுத் துறையிடத்தனவாகிய மரக்கலங்கள் இடத்தைச் சூழ்ந்து நிற்கும் தெளிந்த கடலையுடைய † சேர்ப்பனே! எ - று.

முரசு மூன்றாவன :—வீரமுரசு தியாகமுரசு நியாயமுரசென்பன; தன்முரசும் சேரன்முரசும் சோழன்முரசுமென மூன்று என்றலுமாம்.

பாசறைபோலே என்ற ஏனையுவமம் மேல் வருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது. பறவைகள் ஏனைப்படைக்கும் மரக்கலங்கள் இடைநின்ற யானைக்கும் உவமை.

கரைக்குச் சிறந்தனவாகிய, இரைகவர்ந்து துணைபுணர்ந்த பறவைகளும் வினைவாய்த்து நின்றமரக்கலங்களும் ‡பகைவர்க்கு வருத்தஞ் செய்யும்பாசறை போலத் தோன்றும் என்றதனால், இல்லறம் நிகழ்த்தித் துணையொடு புணர்ந்தவர்களும் வினைவாய்த்துச் செல்வச் செருக்குடையவர்களும் தமக்கு வருத்தத்தைத் தருகின்றாரென உள்ளுறைதந்தவாறு காண்க; அவரைப்போலயாமும் துணைபுணர்ந்து இல்லறநிகழ்த்திச் செல்வம் உண்டாயிருக்கப் பெற்றிலேமென்னும் வருத்தத்தை அவர்கொடுத்தலின்.

அ புன்னைய நறும்பொழிற் புணர்ந்தனை யிருந்தக்கா
னன்னுதா (க)லஞ்சலோம் பென்றதன் பயனன்றோ
பாயின பசலையாற் (உ)பகற்கொண்ட சுடர்போன்றாண்
மாவின தளிர்போலு மாணல மிழந்ததை

எ - து: பரந்த பசலைநிறத்தாலே பகற்பொழுது எடுத்த விளக்குப் போல் ஒளிகெட்டவள் மாவின் கண்ணவாகிய தளிரை ஒக்கும் மாட்சிமையையுடைய நலத்தைஇழந்தது, புன்னையையுடையவாகியநறியதாகியபொழிலிலே இவளைப் புணர்ந்திருக்க, நன்னுதால்! நீ யான் பிரிவேனென்று அஞ்சுதலைப் ||பாதுகாத்துக்கொள் என்று தெளிவித்ததனால் உள்ள பயனல்லவோ? எ - று.

கஉ பன்மலர் நறும்பொழிற் பழியின்றிப் புணர்ந்தக்காற்
(௩)சின்மொழி தெளியெனத் தேற்றிய சிறப்பன்றோ

க. இந்நூற்பக்கம் கஉ௦: உ, உசச: ரு - ஆம் குறிப்புக்கள் பார்க்க.

உ. (அ) "பகலெரி சுடரின் மேனி சாயவும்" நற். கஉஅ: க. (ஆ) "வெயிலிடைத் தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்" கம்ப.காட்சி. ச.

௩. "சின்மொழி" (கலி. உக: க௦) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * கடலிற்றிரை. † சேர்ப்பனேபறவைகளேனை. ‡ பகைவர்புக்கு, || நீபாதுகாத்து.

(க)வாடுபு வனப்போடி வயக்குறு மணிபோன்று
னீடிறற் நெடுமென்றோ ளிரைவளை நெகிழ்ந்ததை

எ - து: அழகு வாடிக்கெட்டு நெடுங்காலம் விளக்கமுறுத்தாத மணியை ஒத்தவளுடைய(உ)திரண்டநெடியமென்றோளின்நிரைத்தவளைகழன்றது, பல மலர்களையுடைய நறும்பொழிலிலே குற்றமின்றாக அவளைப் புணர்ந்திருக்க, சிலவான மொழியினையுடையாய்! நின்னை யான்பிரியேன் இதனைத்தெளிவாயாக என்று தெளிவித்ததனால் உள்ள சிறப்பன்றோ? எ - று.

கசு அடும்பிவ ரணிபெக்க ராடிநீ மணந்தக்காற்
கொடுங்குழாய் தெளியெனக் கொண்டதன் (ஙா)கொளேமென்றோ
பொறையாற்று நுசுப்பினுற் (ச)பூ (ஞ)வீந்த கொடிபோன்றுண்
(சு)மறையிற ரறியாமை (எ)மாணோ *யுழந்ததை

எ - து: தன் மென்மையால் அணிகளைப் பொறுத்தலாற்றாத இடையாலே அணிகலங்கள் அணியாமற் பூமாறின கொடியையொத்தவள் பிறர் இக்களவொழுக்கத்தையறியாமல் மறைந்து மருந்தால் மாட்சிமைப்படாத காமநோயிலே அழுந்தியது, †அடும்பங்கொடிபரந்த இடுமணலிலே கூடவிளையாடி நீபுணர, கொடுங்குழாய்! நின்னையான்பிரியேன் இதனைத்தெளிவாயாக என்று கூற அதனை மெய்யென்று உட்கொண்டதனுடைய கோட்பாடன்றோ? எ - று.

எனவாங்கு, அசை.

உக வழிபட்ட தெய்வந்தான் வலியெனச் சார்ந்தார்க்ட்
கழியுநோய் கைம்மிக வணங்காகி யதுபோலப்
பழிபரந் தலர்தூற்ற வென்றோழி
யழிபட ரலைப்ப வகறலோ கொடிதே

க. "வாடுபு வனப்போடி" கலி. கசு: உ என்பதும் அதன்குறிப்பும் பார்க்க.

உ. இறையென்பதற்கு, இப்பொருள் வேறெங்கும் காணப்படவில்லை.

ஙா. "கொளே" கலி. கூ: சு.

ச. "பூவீ கொடியிற் புல்லெனப் போகி" அகம். கக: கசு.

ஞ. "பீர்வீய" (கலி. ஙக: ச) என்பதற்கு எழுதியிருக்கும் உரைபார்க்க.

சு. மறையென்பது களவொழுக்கமென்னும் பொருளில்வருதலை, (அ) "மறையிற்றான் மருவுற" (ஆ) "மறையினின் மணந்தாங்கே" (கலி. சஞ: உஉ, ஙஉ: அ) என்பவற்றாலும் அறிக.

எ. "மாணோய்" கலி. கஉங: எ.

(பிரதிபேதம்) * உழப்பதை. †அடம்பங்.

எ - து: தனக்கு வலியைத்தரும் என்று கருதித் தான் *வழிபட்ட தெய்வம் தன்னைச் சேர்ந்தவர்கட்கு நெஞ்சழியும் நோய் சைமிகும்படி வருத்தமாகிய தன்மைபோல நின்னைத்தனக்கு வலியென்று †வழிபட்டவன்றோழியை நீ செய்த பழி எங்கும்பரந்து அலர்தூற்றுகையினாலேஉண்டான மிக்க நினைவு வருத்த, நீங்குதல் தொடிதுகாணெனத் தோழி வரைவுகடாயினள். எ - று.

இதனால், தலைவிக்கு அசைவுபிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கஉ)

(க்ஙஉ.) மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினேன் மாமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தனையபோலப் புள்ளல்குந் துறைவகேள்;

சு ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்டெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறுஅமை
கo யறிவெனப் படுவது பேதையார் சொன்னேன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறுஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணேடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றுரைப் பொறுத்தல்;

கடு ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுத னலனுண்டு துறத்தல் கொன்க
தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைத
னின்றலை வருந்தியா டியரஞ்
சென்றனை கனைமோ பூண்கநின் றேரே.

இது "வரை‡வுடம் பட்டோர்க் கடாவல்வேண்டினும்"(க)என்பதனுல் தலைவன் தெருளாதவனைத் தெருட்டி வரைவுகடாயது.

க. தொல். கள. சூ. உங. இச்சூத்திரத்தின் இவருரையிலும் இச்செய்யுள் முற்காலத்து வரைவுகடாவுமாறுபோ லன்றி வரைவு கடாயதற்கு மேற்கோள்.

(பிரதிபேதம்) * †வழிப்பட்ட, ‡ உடன்பட்டோர்க் கடாவவேண்.

இதன் பொருள்.

மாமலர் முண்டகந் (க)தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு *சிறப்பினோன் மா†முதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
‡பூமலர்ந் தலைபோலப்(உ)புள்ளல்குந் துறைவகேள்

எ-து: (ங) ||கருமையையுடைத்தாகிய மலரையுடைய கழிமுள்ளி தில்லையோடேசேரச்சூழ்ந்தகானலிடத்துத்திரையிட்டமணன்மேலே காற்றுலையர்ந்த

க. தில்லை, நெய்தனிலத்துக்கு உரித்தாகக் கூறப்படும் மரவகை. இது (அ) "நீர்நாய் கொழுமீன் மாந்தித், தில்லையம் பொதும்பிற் பள்ளி கொள்ளு, மெல்லம் புலம்ப" (நற். கஙஙு: உ - சு.) (ஆ) "தில்லை வேலி யிவ்வூர்" (ஐங்குறு.கஙக) என்பவற்றாலும் அறியப்படும். இதன் நளிர் புற்கென்ற நிறமுடையதென்பதும் பன்முறை அருவி நீரோடும் தாபதர்சடையினிறத்திற்குஉவமை கூறப்படுவதென்பதும் (இ)"கறங்கு வெள் ளருவி யேற்றலி னிறம்பெயர்ந்து, தில்லையன்ன புல்லென் சடையோ, டள்ளிலைத் தாளி கொய்யு மோனே" (புறம். உஙஉ: க-ங) என்பதனால் அறியப்படுகின்றன. (ஈ) "தில்லை பாலை" (குறிஞ்சி. எஎ) என்பதன் உரையில் தில்லை-தில்லைப்பூ என்று எழுதியிருத்தலால் இது பூவுடையதென்றும் தெரிகிறது. (உ) இதன்பால் மிக்க கொடுந்தன்மை யுடையதென்பர். (ஊ) சிதம்பரம், இம்மரம் அடர்ந்த காடாயிருந்தது பற்றி, 'தில்லை' என்று பெயர்பெற்றதென்பர்.

உ. "புள்ளிறை கொண்ட முள்ளுடை நெடுந்தோட்டுத், தாழை" அகம். கஅ0: கக - கஉ.

ங. (அ) "முள்ளிக், கொடுங்கான் மாமலர்" பெரும்பாண். உகடு - உகக. (ஆ) "கூர்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்" குறுந். டுக. (இ) "கூர்முண் முள்ளிக் குவிகூலைக் கழன்ற, மீன்முள் ளன்ன வெண்கான் மாமலர்" அகம். உசு: க - உ. எனவும், (ஈ) "முண்டகங் கதிர்மணி கழாஅலவும்" சிறுபாண். கசஅ.(உ)"மணிப்பூ முண்டகத்து" மது.கசு. (ஊ) "மணிமருண் மலர முள்ளி" அகம். உஙசு: க. எனவும் வருவன வற்றால், கழிமுள்ளிப்பூக் கருநிறமுடையதென்பதும் மற்றும் சிலவும் விளங்கும். இப்பூவை நெய்தனிலமகளிர் அணிவதுண்டென்ப; அது (எ) "அணிமலர் முண்டகத் காய்பூங் கோதை, மணிமரு ளோம்பால் வண்டுபடத் தைஇ" நற். உசடு: உ - ங. (ஏ) "முண்டகக் கோதை கனையத், தெண்டிரைப் பௌவம் பாய்ந்தநின்றேரே" ஐங். கஉக.

(பிரதிபேதம்) * நெப்பினுன், † முதலசைத்த, முதற்றலைத்த, முதற்றலைசேர்த்த, ‡பூவலர்ந் தலை, || கருமையுடைத்தாகிய.

மண்ணிலே *உடனின்ற, புகழ்மிகுகின்ற தலைமையினையுடைய (க) தக்கணா மூர்த்திதேவர் தாமிருந்த (உ)ஆலமரத்தே தாமிருப்பதற்குமுன்னே தூக்கி வைத்த நீர்நிறைந்த (ங)குண்டிகை போலப் பழந்தூங்கும் முடத்தையுடைய (ச) †தாழைப்பூ அலர்ந்தவைபோலக் குருகினம் அத்தாழைமேலே தங்குந் துறைவனே! யான் கூறுகின்றதனைக்கேள். எ - று.

முள்ளுடைய முண்டகமும் கொடிய நில்லையுமே சூழ்ந்த கானலைக் கொடிதாக அலர்கூறுகின்ற மகளிர் சூழ்ந்திருக்கின்றதாகவும் உயிர்க்கொலை சூழுங்குருகுகள் நன்றாகியதாழைமலர்போற் றோன்றுகின்றதனை எம்முயிர்க்கு வருத்தஞ்செய்கின்ற தலைவன் நன்மகனைப்போற் பிறர்க்குத் தோன்றுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க.

சு ஆற்றுத லென்பதொன் ‡றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
(ரு)பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

(ஐ) "முண்டகக் கோதை யொண்டொடி மகளிர்" புறம். உச: கக. என்பவற்றால் அறியப்படுகிறது. இப்பூவின் காம்பினடியிற் சிறிது தேனுண்டு. இதன் முதலாகிய செடி கத்தரிவகையுளொன்றாகிய முள்ளியின் வேறென்றறிதற்பொருட்டுப் பெரும்பாலும் கழிமுள்ளி யென்றே வழங்கப்படும்; (ஒ) கடன்முள்ளியென்றும் அருகிவழங்கும். இது மற்றை நீர் நிலைகளிலுமிருக்கும.

க. தக்ஷிணாமூர்த்தியென்பது தக்கணாமூர்த்தியெனச் சிதைந்து நின்றது.

உ. இந்நூற் பக்கம் சகச: உ - ஆம் குறிப்பும் "ஆலமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன்" என, தக்கணாமூர்த்தியென்போன் (சிலப். உங: கக) கூறப்படுதலும் இங்கே அறிதற்பாலன.

ங. தாழம்பழம் பலாப்பழத்தைப்போல முட்புறத்தையுடையது; கலயத்தி னளவான பருமனையும் சுடுமட் கலம்போன்ற செந்நிறத்தையுமுடைய தாதலால் இதற்கு, கமண்டலம் மெய்யானும் உருவானும் உவமம். இப்பழம், பயன்படாதவையென்று இகழப்படுபவற்றுள் ஒன்று.

ச. இந்நூற் பக்கம் அகக: எ - ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. (அ)"பண்புடைமை:—அஃதாவது பெருமைசான்றாண்மைகளிற் றாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளுமறிந்து ஒத்தொழுகுதல்; 'பண் பெனப் படுவது பாடறிந் தொழுகல்" என்றார் பிறரும்' என

(பிரதிபேதம்) * உடனின்ற முடத்தாழைப்பூ.....கூறுகின்றதனைக் கேள். புகழ மிகு கின்ற, † தாழை என்க. முள்ளுடைமுண்டக, ‡ அலர்ந்தவர்க்கு.

யறிவெனப் படுவது பேதையார் சொன்னென்றல்
செறிவெனப் படுவது கூறியது*மறுஅமை
(க)நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
(உ)முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வெளவல்
(ரு)பொறையெனப் படுவது போற்றுரைப் †பொறுத்தல்

இவ்வடியை மேற்கோள்காட்டுவோர் பரி; குறள். கoo - ஆம் அதி. அவ. (ஆ) "பாடறிந் தொழுகும் பண்பி னோரே" (புறம்.ககஎ: கச.) என்பது இதனோடு ஒப்புநோக்கற்பாலது.

க. "நிறையழிதல்:--அஃதாவது தலைமகள், மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்" என்று கூறி, அதற்கு (குறள்.கஉசு-ம்அதி. அவ) பரிமேலழகரும் "நிறையாம்வரம்பு" என்புழி நிறை என்பதன்பொருளை விளக்குதற்கு, (தஞ்சை.கச.உரை) சொக்கப்ப நாவலரும் இவ்வடியை மேற்கோள்காட்டி யிருத்தலும், "நிறையிலன்"(குறள்.அசச) என்பதன் விசேடவுரையில்,'நிறை-மறை பிறரறியாமை' என்று பரிமேலழகரும் 'நிறையென்பது மறைபிறரறி யாமை நெஞ்சினை நிறுத்தல்' என்று (தொல். மெய்ப். சூ. உடு. உரை) பேராசிரியரும் எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன. இந்நூற் பக்கம் சகக: சு - ஆம் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "நீமெய் கண்ட நிலை காண், னெப்ப நாடி யத்தக வொறுத்தி" புறம். கo: ங - ச.(ஆ) "எங்கண் ணினைய ரெனக்கருதி னேதமாற், றங்கண்ண ரானுந் தகவில கண்டக்கால், வன்கண்ண ஞெ யொறுக்க வொறுக்கல்லா, மென்கண்ண ளா னரசு" பழ. கஉஉ.(இ)"ஓர்ந்து கண் ணோடா நிறைபுரிந் நியார்மாட்டுந், தேர்ந்துசெய் வஃதே முறை" (ஈ) "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட் டதனொடு நேர்" குறள். நுசக, நுநo. (உ) "எய்திய குற்றத்தோர்கள் யாவரா யினுங்கண்ணோடா, தைதென நாடி நீதி யறந்தலை பிழையாத் தண்டஞ், செய்தலே செங்கோலாகும்" விநாயக. அரசியற்கை. அச. என்பவைகளும் (ஊ) "கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு" (குறள்.நுஎச).என்பதன்விசேடவுரையில், "தம்மொடுபயின்றூர் பிறரை இடுக்கண்செய்தழி அவரைக் கண்ணோடியொருதார்க்கு முறை சிதைதல், மேல் 'ஓர்ந்துகண் ணோடாது' என்ற முறையிலக்கணத் தானும் பெற்றும். முறை சிதையவரும்வழிக் கண்ணோடாமையும் வாராவழிக் கண்ணோடலும் ஒருவற்கியல்பாதலருமையிற் கண்ணோட வல்லார்க் கென்றும்.....கூறினர்" என்று எழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலன.

ரு. (அ) "மண்டினிந்த நிலனும்.....போற்றூர்ப் பொறுத்தலும்" புறம். உ: க-எ. (ஆ) "வையா மாலையர் வசையுரைக் கறுத்த, பகைவர்

(பிரதிபேதம்) *மறுமைமுறையெனப்.†பொறுத்தல். நிறையெனப்.பொறுத்தல் சூங்கதை.

எ-து: (க) இல்வாழ்க்கைநடத்துதல்என்று சொல்லுவது (உ) மிடித்தவர்க்கு யாதானும்ஒன்றை உதவுதலே; ஒன்றைப்(ங) பாதுகாத்தல் என்று சொல்லுவது கூடிஞரைப் பிரியாதிருத்தலே; மக்கட்பண்பு என்று சொல்லப்படுவது உலக வொழுக்கம் அறிந்தொழுகுதலே; (ச) அன்பு என்று சொல்லப்படுவது தன் சுற்றத்தைக் (ஞ) கெடாதிருத்தலே; (ஈ) அறிவு என்று சொல்லப்படுவது

தேளத் தாயினுஞ், சினவா யாகுத லிறும்பூதாற் பெரிதே" பதிற். ஈஉ: கடி-கள. (இ)"அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத் தம்மை, யிகழ்வார்ப் பொறுத்த றலே" (ஈ) "ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணேடிப், பொறுத்தாற்றும் பண்பே தலே" குறள். கடுக, நிஎக. (உ) "கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய்தாரைப், பொறுத்தாற்றிச் சேறல் புகழால்" பழ. ககூ..

க. "தானந்தவம்" என்னுங் குறளின் விசேடவுரையில் 'பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின்மேலும் தவம் துறவறத்தின்மேலும் நின்றன'என்று (குறள்.ககூ)பரிமேலழகர் எழுதியிருப்பதும் "வறியார்க் கொன் றீவதே யீகைமற்றெல்லாங், குறியெதிர்ப்பைநீ ரதடைத்து" (குறள். உஉக.) என்பதும் ஈண்டறிதற்பாலன.

உ. அலத்தல் மிடியுறுதலென்னும்பொருளில்வருதலே, "அலத்தற் காலே" மணி. கடு: நிo, உஅ: ககக. என வருதலாலும் அறிக.

ங. "பொருள் போற்றி வழங்குநெறி" குறள். சளஎ. என்புழி, போற்றி வழங்குதலென்பதற்கு, பேணிக்கொண்டொழுகுதலென்று உரையும், பேணிக்கொண் டொழுகுதலென்பதற்கு,(ஒருவரோடும் ஈட்பில்லாத அதனைத் தம்மோடு) நட்புண்டாக்கிக்கொண் டொழுகுதலென்று விசேடவுரையும் எழுதியிருப்பது இங்கே அறிதற்பாலது.

ச. (அ) "தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்" புறம். கநஎ: க. (ஆ) "நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக், கண்கண்ட குற்ற முளவெனினுங் காய்ந்தியார், பண்கொண்ட நீஞ்சொற் பணைத் தோளா யாருளரே, தங்கன்று சாக்கறப் பார்" பழ. ககூ.

ஞ. "அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார், மறத்திற்கு மஃதே துணை" (குறள். எசூ.) என்பது இங்கே நோக்கற்பாலது.

ஈ. (அ) "தெரியா தவர்தந் திறனில்சொற் கேட்டாற், பரியாதார்போல விருக்க" (ஆ) "ஆய்ந்த வறிவின ரல்லாதார் புல்லுரைக்குக், காய்ந் தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்" பழ. கஉடு, உசுஅ. (இ) "வன் மையுள், வன்மை மடவார்ப் பொறை" குறள். கடுஉ. (ஈ) "எள்ளிப் பிறருரைக்கு மின்னுச்சொ றன்னெஞ்சிற், கொள்ளிவைத் தாற் போற் கொடிதெனினு - மெள்ள, வறிவென்னு நீரா லவித்தொழு லாற்றிற், பிறிதென்னும் வேண்டா தவம்" அறநெறி. கoக.

அறியாதார் தன்னைப் *பார்த்துச்சொல்லுஞ் சொல்லைப் பொறுத்தலை; (க)ஒருவரோடு ஒருவர்க்கு உறவுஎன்று கூறப்படுவது கூறியதொன்றைத் தாம் † மறாதிருத்தலை; நிறைஎன்று சொல்லப்படுவது மறைந்தது ஒரு காரியம் பிறர் அறியாமல் ஒழுகுதலை ; முறை என்று சொல்லப்படுவது (உ)நமரென்று கண்ணோட்டஞ்செய்யாது அவர்செய்தகுறைக்கேற்ப அவர் உயிரைக்கொள்ளுதலை; (௩) பொறை என்று சொல்லப்படுவது பகைவரைக் காலம் வருமளவும் ‡ பொறுத்திருத்தலை. எ - று.

கரு ‖ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுத னலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா ÷ லுண்பவர் கொள்கலம் × வரைத
னின்றலை வருந்தியா டுயரஞ்
சென்றனை களைமோ (௪)பூண்கநின் +றேரே

எ - து: அப்படியே அக்குணத்தை நீரே அறிந்தொழுகினீராயின் அவ்வொழுக்கத்திற்கு ஏற்பது ஒன்று கூறுவேன்; கொண்க ! என்றோழியது நன்னுதலின் நலத்தை நுகர்ந்து அவளைத் துறத்தல், இனியதாகிய பாலை

க. (அ) "தேறிய பாங்கியர் வெள்ளமுண் டாயினுந் தேமொழிநான், கீறிய கீற்றினை யுங்கட வாள்வண்டு கிண்டிமது, வூறிய கொன்றைய ரா ரூர்த் தியாக ருயர்சிலம்பிற், கூறிய வாறு மறாண்முடிப் பேனுன் குறையினையே" திருவாரூர்க்கோவை. க௩௩. (ஆ) "பெம்மான் புகலியிற் சம்பந்தர் பால்வைத்த பேரருள்போ, லம்மான்விழியெம் முதல்வியென் பானல் லருள்பெரிய, ணம்மானச் சம்பந்தர் சொற்படி யாவு நடத்தினன்மற், றிம்மானென் சொற்படி யெல்லா நடத்து மியல்பினளே" சீகாழிக்கோவை. கரு௩.

உ. "நமரெனக் கோல்கோடாது" புறம். ரு௫: கக.

௩. (அ) "காலங் கருதி யிருப்பர் கலங்காது, ஞாலங் கருது பவர்" (ஆ) "பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த், துள்வேர்ப்ப ரொள்ளி யவர்" (இ)"செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை, காணிற் கிழக்காந் தலை" (ஈ) "எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே, செய்தற் கரிய செயல்" (உ) கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" குறள். ௪அரு, ௪அஎ, ௪அஅ, ௪அகூ, ௪௩௦. (ஊ) "ஆண்டுநே ரெல்லையாக வவன்றிறத் தழற்சியின்மை, வேண்டுவ லென்று சொன்னான் வில்வலா னதனை நேர்ந்தான்" சீவக. ௩௬௩.

௪. கலி. கஉசு: உ௦ - உஉ - ஆம் அடிகளும் அவற்றின் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * பாராது. † மாறாதிருத்தலை. ‡ பொறுத்திறுத்தலை அப்படியே, ‖ ஆங்கறிந்தொழுகினை யாயினுமென், ÷ உண்பவர், உண்டோர். × வரைதலினின்றலை வருந்தினடுயரம். + தேரே என்பது இல்வாழ்க்கை.

யுண்ணுமவர்கள் பாலையுண்டு அதனைக்கொண்டிருக்கும் கலத்தைக் கவிழ்த்து விடுதல் போல்வதொன்று; ஆகையினாலே, நின்னிடத்து வருந்தினவள் துயரத்தை வரைந்து சென்றனையாய்க் கூறுவாய்; அங்ஙனங் கூறுதற்கு நின் தேர் புரவியைப் பூண்பதாகவெனத் தெருட்டி வரைவுகடாயினள். எ – று.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

(க) இது தனிச்சொல்லின்றி ஆசிரியச் சுரிதகம் பெற்ற தரவினைக் கொச்சகம். (கக)

(கஉச.) மல்லரை மறஞ்சாய்த்த மலர்த்தண்டா ரகலத்தோ
னெல்லாதா ருடன்றோட வுருத்துட னெறிதரிற்
கொல்யானை யணிறுத லழுத்திய வாழிபோற்
கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலி
நி னிருங்கட லொளித்தாங்கே யிரவுக்காண் பதுபோலப்
பெருங்கட லோதநீர் வீங்குபு கரைசேரப்
போழய வண்டினற் புல்லென்ற தறையவாய்ப்
பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப
வொருநிலையே நடுக்குற்றிவ் வுலகெலா மச்சுற
விருநிலம் பெயர்ப்பன்ன வெவ்வங்கூர் மருண்மாலை;

கக தவலினெய் செய்தவர்க் காணுமை நினைத்தலி
னிகலிடும் பனிதின வெவ்வத்து ளாழ்ந்தாங்கே
கவலைகொ ணெஞ்சினேன் கலுழ்தரக் கடலேக்கி
யவலமெய்க் கொண்டது போலுமஃ தெவன்கொலோ

கந நடுங்குநோய் செய்தவர் நல்காமை நினைத்தலிற்
கடும்பனி கைமிகக் கையாற்று ளாழ்ந்தாங்கே
நடுங்குநோ யுழந்தவென் னலனழிய மணலேக்கி
யிடும்பைநோய்க் கிகுவன போலுமஃ தெவன்கொலோ;

க. (அ) இச்செய்யுள் இச்செய்திக்கே தொல். செய். சூ. கஙஙி. பேர். நச். உரைகளில் மேற்கோள். (ஆ) இளம்பூரணர்; 'தரவின்றுகி' என்னும் தொல். செய். கசஉ – ஆம் சூத்திரத்தினுரையில் இதனைக் கொச்சக வொருபோகு எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றி வருவதற்கு மேற்கோள் காட்டி முதற்பகுதியைத் தரவென்றும், இடைப்பகுதியை எண்ணென்றும், கடைப்பகுதியைச் சுரிதகமென்றும் விளக்கினர்.

[கசூ] வையினர் நலனுண்டார் வாராமை நினைத்தலிற்
கையறு நெஞ்சினேன் கலக்கத்து ளாழ்ந்தாங்கே
மையல்கொ ணெஞ்சொடு மயக்கத்தான் மரனேக்கி
யெவ்வத்தா லியன்றபோ லிலைகூம்ப லெவன்கொலோ;

எனவாங்கு;

உச கரைகாணப் பௌவத்துக் கலஞ்சிதைந் தாழ்பவன்
றிரைதரப் புணைபெற்றுத் தீதின்றி யுய்ந்தாங்கு
விரைவனர் காதலர் புகுதர
நிரைதொடி துயர நீங்கின்றுல் விரைந்தே.

இது பிரிவிடை மாலைப்பொழுது கண்டு ஆற்றத தலைவி இவ்வகைப் பட்டனவும் நமதிடுக்கண்களைக் கண்டு எவ்வஞ்கொண்டன போன்ற; அவரும் நமக்கருளுவாரிகொல்லோ, எனச்சொல்லிய நோத்துக்கண் தலைவன் புக, *அவ்வளவில் அவள் அவலம் நீங்கினமை கண்டு வாயில்கள் தம்முள்ளே கூறியது.

இதன் பொருள்.

மல்லரை மறஞ்சாய்த்த மலர்த்தண்டா ரகலத்தோ
னெல்லாகா முடன்றேட வருத்துட னெறிதலிற்
கொல்(க)யானை யணிறுத லழுத்திய வாழிபோற்
(உ)கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலி
நி னிருங்கட லொலித்தாங்கே யிரவுக்காண் பதுபோலப்
பெருங்கட லோதநீர் வீங்குபு கரைசேரப்

க. (அ) "கன்னவில் கடகத் தோளான் கண்டகை தொழுது கொண்டு, மின்னவிர் விளக்கு நேமி விடுத்தனன் விடுத்த லோடு, மன்னனை மார்புகீண்டு மணிமுடி யெறிந்து மற்றைப், பொன்னவி ரோடை யானைப் புகர்நுதற் புக்க தன்றே" (சூளா. அரசியல். நகக.) எனவும் (ஆ) "செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி, முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போ, யெல்லோர்க் வியன்கொண்மூ விடைதுழையு மதியம்போன், மல்லலோங் கெழில் யானை மருமம்பாய்ந் தொளித்ததே" (யா-கா. உறுப்பியல். கக. மேற் கோள்.) எனவும் யானை நுதலில் ஆழிபுகுதல் உறப்படுதல் காண்க.

உ. (அ) "படுசுடர் கல்சேர" (ஆ) "கனைசுடர் கல்சேர" (இ) "ஒண்சுடர் கல்சேர" (ஈ) "கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயின்" கலி. ககக: உ, கஉ0: ங, கஉக: க, கசஉ: ஙஎ.

(பிரதிபேதம்) * அவ்வளவில் நீக்கினமை கண்டு,

போஒய வண்டினாற் புல்லென்ற துறையவாய்ப்
(௧)பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப
வொருநிலையே நடுக்குற்றிவ் வுலகெலா மச்சுற
விருநிலம் (௨)பெயர்ப்பன்ன வெவ்வங்கூர் மருண்மாலை

எ-து: (௩)பகையாய் வந்த(௪)மல்லரைமறத்தைக்கெடுத்த *அலர்ந்ததண்ணிய தாரைஅணிந்த திருமார்பையுடைய மாயவன், தன் பகைவர்எல்லாருஞ் சேரவந்து உருத்துத் தன்னை எறிகையினாலே, †அவரை உடன்று அவர் ஓடும் படியாக அவர் ஏறின(௫) கொல்யானையினது அழகினையுடைய மத்தகத்திலே

---

௧. (அ) "கண்பாயல் பெற்றபோற் கணைக்கால மலர்கூம்ப" (ஆ) "இம் மாலை, இருங்கழி மாமலர் கூம்ப" (கலி. கக௩:௫; க௩௦: கக-கஉ) என்பவையும் அவற்றின் குறிப்பும் நோக்குக.

௨. (அ) "பல்லுருவம் பெயர்த்து" (ஆ) "பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போல்" (கலி. க: ௫; கஉ௩: உ.) என்பவற்றில், பெயர்த்தலென்பதற்கு எழுதியிருக்கும் உரையும் பார்க்க.

௩. பகையாய் வந்த மல்லரென்றது, கஞ்ச னேவலால் தன்னைக் கொல்ல வந்த சாணூரன் சலன் கவுசலன் முதலியவரை.

௪. மல்லரை மறத்தைக் கெடுத்தலென்னு முடிபை, தொல். வேற்-மயங். ௫ – ஆம் சூத்திரத்தின் இவருரை நோக்கித் தெளிக.

௫. கொல்யானை என்னு மொழியிலுள்ள முதனிலை செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொதுவாய் நிற்கும். இந்நூலுள் முன்பு "கொல்யானை நீர்க்குவிட் டாங்கு" (கலி. ௫௬: ௩௨) எனச் செய்வினையிலும் "கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாம்" (கலி. ௪௨: எ) எனச் செயப்பாட்டு வினையிலும் வந்திருக்கிறது. "புலி கொல் யானை" என்பதற்கு, 'புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை, புலியினிற் கொல்லப்பட்ட யானை' என்று மயிலைநாதரும், 'புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை'என்றுமற்றைய உரைகாரரும், (நன். பொது. சூ. உஉ. உரை) புலி கருத்தாவாகியும் கருமமாகியும் யானை கருத்தாவாகியும் கருமமாகியும் நிற்குமென்று சுப்பிரமணிய தீக்ஷிதரும் (பிரயோக. க௫. உரை) எழுதியிருப்பவையும், "கொல் யானை என்பது அக்காலத்து அஃது உதிரக்கோட்டோடு வந்ததேல் இறப்பும், அதன்றொழிலைக் கண்டுநின்றுழி நிகழ்வும், அது கொல்ல ஓடுவதனைக் கண்டுழி எதிர்வும் விரியும். இனிக் கொல்யானை என்பதன்கண் இரண்டு ஈறும் ஒருங்கு தொக்குநின்ற தென்றற்கு

(பிரதிபேதம்) * அலர்ந்த தாரை, † அவன் அவரை.

அழுத்தின சக்கரம்போலே, ஞாயிறு தான் பரப்பிய கதிர்களைத் தன்னிடத்தே குவித்துக்கொண்டு அத்தகிரியைச் சேர்ந்து மறைகையினாலே பெரிதாகிய கடலில் ஓதம் ஏறுகின்ற நீர் மிக்குக் கரையைச் சேராநிற்க, கழியிடத்துப் பூக்களினின்றும் போன வண்டுகளாலே பொலிவழிந்த துறையிடத்தனவாய்த் துயில்கொள்வனபோலே, அக்கயத்தின் மலர்களெல்லாம் வாய்குவியாநிற்க, அக்காலத்தே இருங்கடல் ஒலித்து இவ்வுலகெல்லாம் ஒருபடிப்பட நடுக்க முற்று அச்சமுறும்படி (க) தான் தோற்றுவித்த இருநிலத்தைத் தான் மீண்டு தன்னிடத்தே ஒடுக்கிக்கொள்ளுந் தன்மையையொத்த இராக்காலத்தைத் தான்(உ)படைப்பதுபோல, அதற்கு முன்னே தோன்றுகின்ற, பிரிந்தோர்க்கு * வருத்தம் மிகுதற்குக் காரணமான, மருண்மாலைக் கண்ணே. எ - று.

இருங்கடல் ஒலித்தெழுந்து உலகைக் கோப்பதுபோன்ற இராக்காலத்தைத் தான்படைப்பதுபோற் றோன்றுகின்ற மாலை என்க. மறைதலின் ஆங்கே தோன்றுகின்ற மாலையென்க.

கக தவலினோய் செய்தவர்க் காணாமை நினைத்தலி
†னிகலிடும் பனிதின வெவ்வத்து ளாழ்ந்தாங்கே

விதி, 'செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின், மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியும்' என்றதாம். என்றதன்பொருள் செய்யுஞ் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களினுடைய காலங்காட்டும் உம்மும் அகரமும் ஒருசொற்கண்ணே சேர நடக்கும் புடை பெயர்ச்சி தொக்குநிற்குஞ் சொற்களென்றவாறு. இங்ஙனம் இரண்டு பெயரெச்ச வாசகமுஞ் சேரத் தொக்குநிற்றலான் ஆசிரியர் ஒரு சொல்லாக்கிப் புணர்க்கலாகாதென்று'புணரியனிலையுடையுணரத்தோன்றா'என்றார்" என்று நச்சினார்க்கினியர் (தொல். எச்ச. சூ. கக. உரை) எழுதியிருப்பதும் அறிதற்பாலன.

௧. (அ)"மாநிலமியலா முதன்முறை யமையத்து, நாம வெள்ளத்து நடுவட் டோன்றிய,'வாய்மொழி மகனொடு" என்னும் (பரி. ௩: கக - கூ௩.) பகுதியும் அதனுரையும், (ஆ) "மாநில மியற்றுவான், விரிதிரை நீக்கு வான் வியன்குறிப் பொத்தனர்" (கலி. க௦௬: ௧அ - கக.) என்பதும் அதன் குறிப்பில் இவ்விடத்துக்குப் பொருந்துவனவும் பார்க்க.

௨. காண்பது - செய்வதாதலின் படைப்பதென்று பொருள் கூறினார்; காணென்பது செய்யென்னும் பொருளில் வருதலை, "கம்மியர் காணா மரபின" (சிலப். இ: க௦௬) என்புழி, 'காணா' என்பதற்கு, 'பண்ணப் படாதன' என்று அடியார்க்கு நல்லார் பொருளெழுதி யிருத்தலாலும் அறிக. இக்காலத்தும் உலகவழக்கில் காணுதலின் பொருட்டாகிய பார்த்தலென்பது செய்தலென்னும் பொருளில் வழங்குகின்றது.

(பிரதிபேதம்) * வருத்தத்திற்குக் காரணமான, † இகலிரும்பனி, இகலடும்பனி.

கலலெகொ ணெஞ்சினேன் கலுழ்தாக் (க)கடலேஞ்கி
யவலமெய்க் கொண்டது போலுமஃ தெவன்கொலோ

எ - து: எனக்குக் கேடில்லாத காமநோயைச் செய்தவரைக் கண்ணுற் காணுமல் என்னெஞ்சு நினைக்கையினுலே, அது தனக்கிடமாகக் *கொண்டு மாறுபாடுகளைக்†கொடுக்கும்பனிக்காலம்அறிவைத்தின் றுவிட,‡அப்பொழுதே வருத்தத்திலே அழுந்திப் (உ) பல நினைவுகொண்ட நெஞ்சினையுடைய யான் கலக்கத்தைத் தர, கடல் அதனை நோக்கி என்னுடைய இந்த அவலத்தைத் தன்னுடைய மெய்யிலே கொண்டதுபோலே கூப்பிடாநின்றதற்குக் காரண மென்னேதான். எ - று.

கரு (ங)நடுங்குநோய் செய்தவர் நல்காமை || நினைத்தலிற்
கடும்பனி × கைம்மிகக் கையாற்று ளாழ்ந்தாங்கே
நடுங்குநோ யுழந்தவென் னலனழிய மணலேஞ்கி
யிடும்பைநோய்க் (ச)கிகுவன போலுமஃ தெவன்கொலோ

எ - து: எனக்கு நடுங்குகின்ற காமநோயைச் செய்தவர் என்னை அரு ளாதபடியாலே என் நெஞ்சு அவரை நினைக்கையினுலே, அதுகண்டு கடிய பனிக்காலம் கைம்மிக்குவர, +அதுகண்டு அப்பொழுதேசெயலறவிலேயான் அழுந்த, (ஞ) மணற்குன்று அதனை நோக்கி நடுங்குகின்ற நோயிலே உழந்து என்னலத்தை இருந்திழக்தேனது (?) இடும்பையைத் தரும் நோய்க்குத் தான் கரைந்து ÷தாழ்வனபோல இராநின்றதற்குக் காரணமென்னேதான். எ-று.

நிரையால், மணற்குன்று கரைந்து வீழ்கின்றதனைக் கண்டு கூறினுள். ஆழ்ந்து, ஆழவென்க.

க. "பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட, றாவறத் தூறந்தனன் றுறைவனென் றவன்றிற, நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ" (கலி. கூஉக: அ - கo) என்பதும்இந்நூற்பக்கம் அoo: ங-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. "பலநினைந் தினையும் பைத னெஞ்சி, னலமர னேயு ளுழக்குமென் றேழி" கலி. கூஉசு: ஙங - உo.

ங. "நடுங்கு நோய்" கலி. கூஉள: எ.

ச. இகுதல் - தாழ்தல்; இற்றொழுகுதல், விழுதலென்னும் பொருளிலும் வரும்.

ஞ. "குன்றுபோல் வாலெக்கர்" கலி. கூஉள: சு.

(பிரதிபேதம்) * கொண்டுதன் மாறு, † கெடுக்கும் பனிக்காலம் தம்அறிவைத், ‡ அப் பொழுதே அவ்வருத்தத்திலே, || விடுத்தலிற், × கைமிகக்கையாற்றுதாழ்ந்து, +நடுங்குகின்றநோயிலேஉழந்து செயலறவிலே யான்அழுந்த மணற்குன்று அதனைநோக்கித் தங்கலத்தை இழந்திருக்தேனது ÷ தாழ்வதுபோலே.

௧௯ வையினர் நலனுண்டார் வாராமை நினைத்தலிற்
கையறு நெஞ்சினேன் கலக்கத்து ளாழ்ந்தாங்கே
மையல்கொ ணெஞ்சொடு மயக்கத்தான் மரனோக்கி
யெவ்வத்தா லியன்றபோ (௧)லிலைகூம்ப லெவன்கொலோ

எ-து: இறந்துபட்டு வருத்தந் தீராமல் என்னை(௨)வைத்து, என்னலத்தை உண்டவர் ஈண்டு வாராதபடியாலே என்னெஞ்சு அவரை நினைக்கையினாலே, அதுகண்டு பனிக்காலம் வருத்த, அது * கண்டு அப்பொழுதே மயக்கத்தாலே செயலற்ற நெஞ்சினேனாய்க் 'கலக்கத்திலே அழுந்த, மரம் அதனை நோக்கி வருத்தத்தாற் செய்தவைபோலே மயக்கங்கொண்ட (௩)நெஞ்சோடே இலைகள் குவிதற்குக் காரணம் என்னோதான். எ - று.

† எனவாங்கு

எ - து: என இவள் சொல்லாநிற்க. எ - று.
ஆங்கு, அசை.

௨௪ (௪)கரைகாணாப் பௌவத்துக் கலஞ்சிதைந் தாழ்பவன்
றிரைதரப் புணைபெற்றுத் தீதின்றி யுய்ந்தாங்கு
விரைவனர் காதலர் புகுதர
நிரைதொடி துயர நீங்கின்றால் விரைந்தே

---

௧. "மரமெல்லா மிலைகூம்ப" கலி. க௨௦: ௬.

௨. "வையினர்" என்பதற்கு, 'வைத்து' என்றுஇங்கே பொருள்கொள்ளும் இவ்வுரைகாரர் இச்சொல்லுக்கு'வஞ்சித்து'என்றும்(தொல். பொருளி. சூ. ௫௦.) பொருள்கொண்டு (அ) வஞ்சித்தமை கூறுதலாகிய வைஇய மொழிக்கு,"வையினர்.....நினைத்தலின்"என்பதை மேற்கோள்காட்டி யிருக்கிறார். இச்சொற்கு அப்பொருளுமுண்மை,(ஆ)"வையாது"என்ப தற்கு 'வஞ்சியாதே' என்று (பு - வெ. வெட்சி. கஅ. கொளுவுரை.) பொருளெழுதியிருத்தலாலும் அறியப்படும்.

௩. (அ) "கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி" (கலி. ௩௪:௧௦) என்பதன் விசேடவுரையில், "'புல்லு மரனு மோரறி வினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே' இதனுட் பிற அறிவும் உள வென்று கூறினார்; அதனாற் பாவத்திற்கு அஞ்சி மரம் கவின்வாடிற் றென்றார்" என இவ்வுரையாசிரியர் எழுதியிருப்பது இங்கே அறிதற் பாலது. (ஆ)"கல்லோ மரனு மிரங்க" என்பது, சீவக. ௨௧௬௪.

௪. மணிமேகலையிலுள்ள சாதுவன் வரலாறும் சீவகசிந்தாமணியிலுள்ள வணிகனாகிய சீதத்தன் வரலாறும் ஈண்டு அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * கண்டபொழுதே, † எனவாங்கு ஆங்கு அசை.

*எ - து: கரைகாணுத நடுக்கடலிலே மரக்கலங் கெட்டு அழுந்துகின்ற வன் திரை கொண்டுவந்துதர ஒரு தெப்பத்தைப் பெற்றுப் பின்பு நீதில்லே யாய்ப் பிழைத்தாற்போல இவள்காதலர் விரைந்து புகுத இடும்பையாவதும் விரைந்துபோயிற்று; அதனைக்காணீரென வாயில்கள் தம்முள்ளே கூறினர். எ - று.

எனப்புகுதரவென்க. ஆல், அசை.

இதனால், தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கள)

(கஉடு.) துணைபுணர்ந் தெழுதருந் தூநிற வலம்புரி
யிணைதிரண் மருப்பாக வெறிவளி பாகனு
வயிறிணி நெடுங்கத வமைத்தடைத் தணிகொண்ட
வெயிலிடு களிறேபோ லிடுமண னெடுங்கோட்டைப்
பயிறிரை நடுநன்னாட் பாய்ந்துறாஉந் துறைவகேள்;

கூ கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றுளைத்
தொடிநெகிழ்ந்த தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
குடிமைக்கட் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ;

கூ ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றுளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ;

கஉ திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றுளை
யிகழ்நலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ;

எனவாங்கு;

கஙு சொல்லக் கேட்டனை யாயின் வல்லே
யணிகிளர் நெடுவரை யலைக்குநின் னகலத்து
மணிகிள ராரந் தாரொடு துயல்வர
வுயங்கின ளுயிர்க்குமென் றேழுகிக்
கியங்கொலி நெடுந்திண்டேர் கடவுமதி விரைந்தே.

இது வரையாது வந்தொழுதந் தலைவனைத் தோழி நெருங்கி வரைவு கடாயது.

(பாடபேதம்) *எ - து: எளவிவன் சொல்லாற்கக்கரை.

இதன் பொருள்.

துணைபுணர்ந் தெழுதருந் *தூஞிற (க)வலம்புரி
யிணைதிரண் மருப்பாக வெறிவளி பாகனை

க. சங்கு, இடம்புரி வலம்புரி சலஞ்சலம் பாஞ்சசன்னியமென நால்வகைப் படுமென்றும் அவை முறையே ஆயிரம் இப்பி ஆயிரமிடம்புரி ஆயிரம் வலம்புரி ஆயிரஞ் சலஞ்சலம் இவற்றுற் சூழப்படுஞ் சிறப்பினவென்றும் நிகண்டுகள் கூறும். அவற்றுள் வலம்புரி (அ) "இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும், வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்" என்றும் (பெரும்பாண். கசை-கஎ) (ஆ) "வரிவளை சூழும் வலம்புரி" என்றும் (சீவக. உகஅக) சிறப்பித்துக்கூறப்படுகின்றது. (இ) இது பரதவர்களால் மூழ்கி எடுக்கப்படுவதென்பது "வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்" என்பதனாலும் (அகம். கடுஅ: கக.) துறையிடத்தே வந்து மேய்ந்து மணலில் உழுதலும் உண்டென்பது. (ஈ) "துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்றம்" என்பதனாலும் (சிலப். எ: அ.) விளக்கும். இது பதினெறு மங்கலப்பொருள்களுள் ஒன்றாக (உ) "வலம்புரி வட்டமு மிலங்கொளிச் சங்கும்" என்று (பெருங். (உ) இ: உஅ) கூறப்படுகின்றது. (ஊ) இது கடவுளை அபிடேகித்தற்குச் சிறந்த கருவியாகக் கொள்ளப்படுகிறது. இதன் வடிவான ரேகை ஆடவர்கையிலிருப்பது உத்தமலக்கணமெனப்படும். அது (எ) "வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை, நீர்செல நிமிர்ந்த மா அல்" எனவும் (முல்லை. உ-கூ) (ஏ) "வலம்புரி பொறித்த வண்கை மதவலி" (ஐ) "வலம்புரித் தடக்கையானே" எனவும் (சீவக. உ0ச, அஉக.) (ஒ) "சங்கலேகையுஞ் சக்கரலேகையு, மங்கை யுள்ளன வையற் காதலாற், சங்கபாணியான் சக்கராயுத, மங்கை யேந்துமென் றறையல் வேண்டுமே" (தேவா. குமார. சஞ) (ஓ) "சங்க நல்லி ரேகையைத் தடக்கை காட்டுமாற், பங்கயவி ரேகையைப் பாதங் காட்டுமா, லிங்கிவ னேழுலகோம்பும்" எனவும் (பாக. (கூ) பூரு. கள.) வருவனவற்றுல் உணரத்தக்கது. பரதனுலுள் வலம்புரிக்கையென இதன் வடிவமாகக் காட்டும் கையொன்று கூறப்படும்; அதனை (ஔ) "வலம்புரிக் கையே வாய்ந்த கனிட்ட, னலந்திகழ் பெருவிர னயமுற நிமிர்ந்து, சுட்டுவிரன் முடக்கிச் சிறுவிர னடுவிரல், விட்டுநிமிர்ந் திறைஞ்சும் விதியிற் றென்று, கூறுவர் தொன்னூற் குறிப்புணர்ந்தோரே" என்னும் சிலப். மேற்கோளால் அறிக. பண்டைக்காலத்து இதன்வடிவமாக மகளிர் தலையணியொன்று இருந்ததென்பது (ஃ) "தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின் வைத்து" (முருகு. உகூ.) (அஅ) "தெய்வவுத்தியொடு செழுநீர் வலம்புரி.....மையீரோதிக்கு மாண்புற வணிந்து" (சிலப்.சு:கஅசு-கஅஅ) என்பவற்றுலும், செப்புஒன்று இருந்ததென்பது

(பாடபேதம்) * தூய்நிற.

வயிறிணி நெடுங்கத *வமைத்தடைத் தணிகொண்ட
(க)†வெயிலிடு களிறேபோ (உ)லிடுமண னெடுங்கோட்டைப்
பயிறிரை நடுநன்னுட் பாய்ந்துறாஉந் துறைவகேள்

எ - து: வேல் தைத்துச் செறிந்த நெடிய கதவாகச் சமைத்து ‡அதனால் அடைத்து அழகு கொண்ட எயிலைக்(ங)குத்துங் களிறுபோலே (ச)இடுமணலினதுநெடிய‖சிகரத்தைப்பயின்றதிரை,அலைக்கின்ற காற்றுப்பாகனைத், தூணையைக் கூடி எழுகின்ற(ஞ)தூயநிறத்தையுடைய வலம்புரிகள் இணைந்த திரண்ட கொம்புகளாக, நடுநாட்கண்ணே குத்தி அவ்வியானைபோலே முழங்குந் துறைவனே! யான் கூறுகின்றதனைக் கேள். எ - று.

"அயிற்கதவம்பாய்ந்துழக்கி"(ரு)என்றுரைப்பாரும்.÷தன்னுற்பாதுகாக்கப்படுகின்ற மணற்குன்றைத் தானேகரைத்தாற்போல நின்னுற்பாதுகாக்கப்படுந்

(ஆஆ) "வலம்புரித் தூலங்கு செப்பும்" (சீவக.உசஎடு) என்பதனாலும் அறியப்படுகின்றன.

க. (அ) "எயிறுபடை யாக வெயிற்கத விடாஅக், கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற், பெருங்கை யானை" (புறம்.கூ:கூ-கக.) என்பதும் (ஆ) "கடியரணம் பாயாநின் கைபுனை வேழம்" (கலி. அசு: எ) எனப் பொய்ம்மையானையைக் கூறியிருத்தலும் (இ) அதன் குறிப்பில் இவ்விடத்துக்கு ஒத்தனவும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

உ. "இவறுதிரை திளைக்கு மிடுமண னெடுங்கோடு" ஐங். கஎஎ.

ங. "இடுமருப் பியானை" (கலி. உசு: கo) என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ச. இடுமணல் - (அலை கொண்டுவந்து) இட்டமணல்; எக்கரென வழங்கும்; இஃது "இடுமண லெக்க ரகன்கானற் சேர்ப்பன்" (ஐந் - எழு. நகூ.) என எக்கருக்கு அடைமொழியாயும் வரும்.

ஞ. தூய நிறம் - வெண்ணிறம்; தூய வலம்புரி என்றலுமாம்; தூய்மை - சுத்தம்; அது தூயதென்பது "வலம்புரி முத்தே" என்பதற்கு, 'மரபின் றூய்மை கூறுவான் வலம்புரி முத்தென்றான்' என்றும் (சிலப். உ: எகூ. அடியார்க்கு.) "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்" என்றும் (ஆந்திரையன்.) "சங்குடைந் தனைய வெண்டா மரைமலர்த் தடங்கள் போலு, நங்குடி" (சீவக. நசஎ) என்பதற்கு, 'தடங்களிலே உடைந்த தன்மையவாகியமலரும் சங்கும்போலு நங்குடி; இது தூய்மைக்கு உவமை' என்றும் தூயதற்கு உவமை கூறப்படுதலானும் துணியப்படும்.

ரு. "அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சான் மன்ன, ரெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற் - பனிக்கடலுட், பாய்தோய்ந்த நாவாய் போற் றோன்றுமே யெங்கோமான், காய்சினவேற் கிள்ளி களிறு"முக்.

(பிரதிபேதம்) * அடைத்தமைத்து, † எயிலிடு, ‡ அடைத்தகளால் அழகு, ‖ சாகரத்தை, ÷தான்பாது.

தலைவியை நீதானே வருத்தாநின்றாய் என உள்ளுறையுவமங்கொள்க. களிறே போல் என்ற ஏனையுவமம் கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது.

கூ கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடிநெகிழ்ந்த *தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
† குடிமைக்கட் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ

எ-து: மணத்தையுடைத்தாகிய மலரினையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனால் தன்னழகு தோற்றவளைத்(க)தொடியுட்படநெகிழ்கின்றதோளளாம்படி கைவிடுவாயாயிராநின்றாய்; அங்ஙனங் கைவிடுகின்றது பின்னை நின் குடிமையிடத்துப் பெரியதொரு குற்றமாய்த் தங்காதோ. எ - று.

(உ)குடிமை - ஒழுக்கம்.

கூ (ங)ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றாளை
நோய்மலி ‡ நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ

க. (அ) "தொடிபழி மறைத்தலிற் றோளுய்ந் தனவே" (ஆ) "தோட்பழி மறைக்கு முதவிப், போக்கில் பொலந்தொடி" (நற். உங: க, கஙசு: அ-கூ) என்பவைகளும், (இ) "தோடீக்க விப்பாற், பார்செலச் செல்லச் சிந்திப் பைந்தொடி சொரிந்த" (சீவக. சசுகூ) என்பதன் விசேடவுரையில், 'முன் வளைகழல நின்றார்க்கு வருத்தமிகுதியால் தொடியுங் கழன்றன' என்று எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

உ. (அ)"பிறப்பே குடிமை" என்பதன் விசேடவுரையில் 'குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னையெனின், பிறப்பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத்தக்க ஒழுக்கம் குடிமை எனப்படும்; குடிப்பிறந்தாரது தன்மையைக் குடிமையென்றாரென்பது; அதனை ஊராண்மையெனவுஞ் சொல்லுப. ஆண்மை புருடர்க்காம். அஃது ஆள்வினையெனப்படும். இது தலைமகட் கொப்பதன்றாலெனின், குடியாண்மை யென்புழி ஆண்மையென்பது இருபாற்கும்ஒக்குமாதலின் அமையுமென்பது' என்று (தொல். மெய்ப். சூ. உரு) பேராசிரியரும் (ஆ) 'குடிமை:— அஃதாவது உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை' என்று (குறள். கூசு-ஆம் அதி. அவ) பரிமேலழகரும் (இ) "குடிமையாவது குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கம். அஃது 'ஒழுக்கமுடைமை குடிமை' என்றதனான் உணர்க. 'மடிமை குடிமைக்கட்டங்கின்' என உயர்திணையிருபாலையும் உணர்த்திற்று" என்று (தொல். கிளவி. சூ. ருஎ) இவ்வுரையாசிரியரும் எழுதியிருப்பவை இங்கே அறிதற்பாலன.

ங. "ஆய்மலர்ப் புன்னை யணிநிழற் கீழால்" மணி. உரு: கசுகூ.

(பிரதிபேதம்) * தோளாளாய்த், † குடிமைக்கீட்பெரிய, ‡ நிலையளாய்த்.

எ - து: நன்றென்று ஆய்ந்த மலரையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனால் தன் அழகையுடையநலந்தோற்றவளைக் காமநோய் மிகுகின்ற நிலைமையளாகக் * கைவிடுவாயா யிராநின்றாய்; அங்ஙனங் கைவிடுகின்றது பின்னை நின் மெய்கூறுதற்கட் பெரியதோர் பொய்யாய்த்தங்காதோ. எ-று.

மெய், (க)நின்னிற்பிரியேனெனத் தெளிவித்தது.

கஉ திகழ்மலர்ப் (உ)புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
†யிகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ

எ - து: விளங்குகின்ற மலரையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனால் திருவினலம்போன்ற நலத்தைத்தோற்றவளை(ங)முன்புதோற்றமலர்கள் தாம் இகழ்கின்ற கண்ணையுடையளாம்படி கைவிடுவாயா யிராநின்றாய்; அங்ஙனங் கைவிடுகின்றது ‡ பின்னை நின்னைப் புகழ்ந்து கூறுந் தன்மையிடத்துப் பெரியதோர் குற்றமாய்த் தங்காதோ. எ - று.

எனவாங்கு, ஆங்கு அசை.

ககூ சொல்லக் கேட்டனை யாயின் வல்லே
யணிகிளர் நெடுவரை யலைக்குநின் னகலத்து
(ச) மணிகிள ராரந் தாரொடு துயல்வர
(ரு)வுயங்கின ளுயிர்க்குமென் (கூ)றோழிக்
கியங்கொலி நெடுந்திண்டேர் கடவுமதி விரைந்தே

க. "நின்னிற் பிரியலே னஞ்சலோம் பென்னு, நன்னர் மொழியு நீமொழிந் தனையே" கலி. உக: எ - அ.

உ. புன்னையைப்பற்றிய செய்திகள் அடுத்த செய்யுளில் கங-ஆம் அடிக் குறிப்பாகக் குறிக்கப்படும்.

ங. "நறுமலர் நாணின கண்" என்பதற்கு, 'நின் கண்கள் ஒளியிழந்து முன் தமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன' என்று எழுதியிருக்கும் உரை ஈண்டறிதற்பாலது; குறள். கஉங.க. பரி.

ச. "தெண்மணி யார மார்பன் றிருநுதன் மகளிர் நெஞ்சத், துண்ணிறை பருகும் வண்டா ருருவமை திருவின் மிக்கான்" (சீவக. சுகஇ) என்பதன் உரைபார்க்க.

ரு. "உயங்க மாலை யுதவினன் வஞ்சிக்கே" தில்லைக் கலம்பகம் கச.

சு. கலி. ங0: கஅ - ககூ, கஉச: ககூ - உக, கஉசு: உ0 - உஉ, கங்ங: கஅ-ககூ, கங்சு: உக - ஆம் அடிகளும் அவற்றிலுள்ள குறிப்புக்களும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * கைவிடுவையாய். † துகழ்மலர்க், ‡ பின்னைப்புகழ்ந்து.

எ-து: என்று யான் வல்லே சொல்லக்*கேட்டாயாயின், அழகு விளங்கு கின்ற நெடிய மலையை வருத்தும் நின்மார்பிடத்தே மாணிக்கம் †விளங்கு கின்ற முத்துவடம் பூமாலையோடு அசைதலுண்டாக அணிந்து வருந்தினளாய் நெட்டுயிர்ப்புக்கொள்ளும் என்றோழிபொருட்டு ஒடுகின்ற ஒலியினையுடைய நெடிதாகிய தேரை விரைந்து செலுத்துவாயென வரைவுகடாயினள். எ - று.

"களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக், காதன்மிகுதி யுளப்படப் பிறவு, நாடு மூரு மில்லுங் குடியும், பிறப்புஞ் சிறப்பு மிறப்ப நோக்கி, யவன் வயிற் றோன்றிய இளவியொடு தொகைஇ, யினநிலை வகையான் வரைதல் வேண்டினும்" (க) என்பதனிற் சிறப்பு என்பதனால் ஒழுக்கமும் வாய்மையும் புகழும் [பிறப்புங்] கூறி வரைவுகடாயினள்.

இதனால், தலைவற்கு அசைவு தோன்றிற்று.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கஅ)

(கஉகூ.) இவர்திமி லெறிதிரை யீண்டிவந் தலைத்தக்கா
லுவறுநீ ருயரெக்க ரலவனு டூளவரித்
தவலிறண் கழகத்துத் தவிராது வட்டிப்பக்
கவறுற்ற வடுவேய்க்குங் காமர்பூங் கடற்சேர்ப்ப;

ரு முத்துறழ் மணலெக்க ரளித்தக்கான் முன்னுயம்
பத்துருவம் பெற்றவன் மனம்போல நந்தியா
ளத்திறத்து நீநீங்க வணிவாடி யவ்வாயம்
வித்தத்தாற் றோற்றுன்போல் வெய்துய ருழப்பவோ;

கூ முடத்தாழை முடுக்கரு ளளித்தக்கால் வித்தாய
மிடைத்தங்கக் கண்டவன் மனம்போல நந்தியாள்
கொடைத்தக்காய் நீயாயி னெறியல்லாக் கதியோடி
யுடைப்பொதி யிழந்தான்போ லுறுதுய ருழப்பவோ;

க. தொல். களவி. சூ. உகூ. இச்சூத்திரப்பகுதியி னுரையில், "கடிமலர்ப் .....புகாஅக் கிடவாதோ" என்னும்பகுதியை மேற்கோள்காட்டி, ஒழுக்கமும் வாய்மையும் புகழும் இறப்பக்கூறியனவென்று நச்சினார்க் கினியரும் குடிமையும்வாய்மையும் புகழுமாகிய சிறப்புப்பற்றி வந்தன வென்று இளம்பூரணரும் நாற்கவி. சூ. கசுசு. உரையில் இவற்றை மேற்கோள்காட்டி, மரபும் புகழும் வாய்மையுங் கூறியன வென்று நாற்கவிராசநம்பியும் எழுதியிருக்கிறார்கள்.

(பிரதிபேதம்) * கேட்டாயாயி னனி அழகு, † விளங்கும் முத்துவடம்.

கஙூ நறுவீ தாழ் புன்னைக்கீழ் நயந்துநீ யளித்தக்கான்
மறுவித்த மிட்டவன் மனம்போல நந்தியா
எறிவித்து நீங்கக் கருதியாய்க் கப்பொருள்
சிறுவித்த மிட்டான்போற் செறிதுய ருழப்பவோ;
ஆங்கு;

கஅ கொண்டுபலர் தூற்றுங் கௌவை யஞ்சாய்
தீண்டற் கருளித் திறனறிந் தெழீஇப்
பாண்டியஞ் செய்வான் பொருளினு
மீண்டுக விவணல மேறுக தேரே.

இது வரைவிடை வைத்துப் பிரியக்கருதிய தலைவனைத் தோழி தலைவி யாற்றுமை கூறிச் செலவுவிலக்கி வரைவுகடாயது.

இதன் பொருள்.

(க)இவர்திமி லெறிதிரை யீண்டிவந் தலைத்தக்கா
(உ)லுவறுநீ ருயரெக்க ரலவனு டளைவரித்
தவலிறண் கழகத்துத் தவிராது வட்டிப்பக்
கவறுற்ற வடுவேய்க்குங் காமர்பூங் கடற்சேர்ப்ப

எ-து: பரக்கின்ற, மீன்பிடிக்குந் திமிலையுடைய, எறியுந்திரைகள் திரண்டு வந்து அலைக்க, ஊறுகின்ற நீரையுடைய உயர்ந்த இடமணலிடத்து அளையினின்றும் போந்து விளையாடித் திரியும் புள்ளிகளையுடைய அலவன் (கூ) மன

க. இவர்தலென்பது இவறுதலெனவும் அருகிவழங்கும்; "இவறுதிரை" என்பது ஐங். களை; ஒளிர்தல், ஒளிறுதலென வழங்குவதும் நோக்குக.

உ. உவறுதல் - ஊறுதலென்னும் பொருட்டாய், (அ) "உவறுநீ ருழக்கி" என்று (சீவக. கூசுசு.) செயப்படுபொருள் குன்றிய வினையாய் வருதலன்றியும், (ஆ) ஊறச் செய்தலென்னும் பொருட்டாய், "ஒண்செங் குருதி யுவறியுண்டு" என்று(அகம். கூ: அ.) செயப்படுபொருள் குன்று வினையாயும்வந்துள்ளது; உவறுதலென்பதே ஊறுதலென மருவிற்றுப் போலும்.

கூ. (அ) "இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோல்" குறள். கூசஂ. (ஆ) "காமரு சூதால்" (இ) "அண்டரும் விரும்பும் வன்சூ தாடுதும்" (ஈ) "பார்கொடுத்து மரசுகூர்ப தக்கொடுத்து முரியதம், மூர்கொடுத்து மதனினுள்ள மொழிவுமும லோடவே" வில்லி. சூதுபோர்ச். உசு, உசி, கஎஅ.

வேட்கை கெடுத்தலில்லாத, (க) தண்ணிதென்று நீக்கின சூதுபொருகின்ற இடத்தே வடுவுற்ற(உ)கவற்றினை வேட்கை தவிராதே(ங)உருட்ட அக்கவற்றை ஒக்கும் விருப்பமருவின பொலிவினையுடைய கடற்சேர்ப்பனே! எ - று.

அளை - முழை; *வரி - புள்ளி. "புள்ளிக்களவன்" (ச)என்றார் பிறரும்.

க. (அ)"அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்குந், திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு - மறத்தையே, பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச் சூதை மிக்கோர்க, டீண்டுவரோ வென்றார் தெரிந்து". (ஆ) "உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத், திருவழிக்கு மானஞ் சிதைக்கு - மருவு, மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது, பொருவரோ தக்கோர் புரிந்து" நள. கலிதொடர். ௩அ, ௩௯. (இ) "அடியு மாண்மையும் வலிமையுஞ் சேனையு மழகும்வென் றியுந்தத் தங், குடியு மானமுஞ் செல்வமும் பெருமையுங் குலமுமின் பமுந் தேசும், படியு மாமறை யொழுக்கமும் புகழுமுன் பயின்றகல் வியுஞ் சேர, மடியு மான்மதி யுணர்ந்தவர் சூதின்மேல் வைப்பரோ மனம் வையார்" (ஈ) "மேதகத்தெரி ஞானநூற்-புலவரும் வேத்துநூ லறிந் தோரும், பாதகத்திலொன் றென்னவே முன்னமே பலபடப் பழித் திட்டார், தீதகப்படு புன்றொழிலிளைஞரிற் சிந்தனை சிறிதின்றித், தோதகத்துட னென்னையோ சகுனிதன் சூதினுக் கெதிரென்றான்" (உ) "கொடியவெஞ், சூதெடுத்து விழைதலுற்ற சூள்பிழைத்த லின்னவே, தீதெடுத்த நூலின் முன்பு தீயவென்று செப்பினார்" வில்லி. சூது. ௬௫, ௬௭, கசுஉ.

உ. கவறென்பது, சூதாட்டத்திற் குலுக்கிப் போகடப்படுங் கருவி; பண்டைக்காலத்து விபீதகக் கொட்டையையே இக்கருவியாகக்கொண்டு மூன்றைம்பது கொட்டைகளைக் குலுக்கிப்போகட்டு நிலத்திற் குழி குழித்து அக்குழிகளில் நாயென்னும் வல்லுக்களை யிட்டு ஆடினரென்றும் நளன் தருமன் முதலியவர் ஆடியகாலத்து, சோகி அல்லது சோழியென்றும் பறையலகு .அல்லது பலகறையென்றும் கூறப்படும் கடல்விளைபொருளையேகவறாகக்கொண்டு ஆறுகவறுருட்டிஆடிவந்தனரென்றும்,பிற்காலத்து அவற்றாலறியக்கூடிய எண்களை இரண்டு பாச்சிகைகளால்அறியும்படி அமைத்துக்கொண்டுஅப்பாச்சிகைகளால் ஆடிவந்தனரென்றும் கூறுவர். இசசெய்யுளினுரையில்ஈரைந்து ஈரிரண்டு இருமூன்று என்றவழக்கேகாணப்படுகிறது. இந்நாட்டில் சொக்கட்டானென்றும் தாயக்கட்டமென்றும் பத்துக்கட்டமென்றும் வழங்கும் பலவகை யாட்டமும் இதன் வழி வந்தனவென்பர்.

ங. சீவக. கூஉஎ. விசேடவுரையில் 'உழக்கு - பிடித்துப்போகடாமற் கவறிட்டு உருட்டு முழக்கு' என்று எழுதியிருத்தலால், கவறாடலில் கையாற்பிடித்துப் போகடுதலும் உழக்கிலிட்டு உருட்டலுமென இருவகை முன்பிருந்தமை அறியப்படும்.

ச. கலி. அஅ: கo.

(பிரதிபேதம்) * வரி புள்ளிக்களவனென்றார்.

(க)தண்கழகம் ஈண்டுக் குளிர்ச்சியை உணர்த்தாது "தண்பொன்" என் றுற்போல இழிவை உணர்த்திநின்றது.

அத்துறைக்கு உரியவாய் இயல்பாகச் சிறப்பு நிகழும்படி ஆடித் திரியும் புள்ளியையுடைய அலவன்(உ)கண்களையுடைய(ங)உருண்ட கவற்றை உருட்ட அக்கவற்றை ஒக்கும் என்றதனால் உலகியல்வழக்காகிப் பின்பு இல்லறம் நிக ழும் களவொழுக்கம் இவ்வூரிலுள்ளார்க்கு இழிந்த தொழிலுமாய்த் தோன்று நின்றதென உள்ளுறையுவமங்கொள்க. "பலகை செம்பொ னுகப் பளிங்கு நாயாப் பரப்பி, *யலவ னுடி மலைபோ லரும்பொற்கவறங் குருளக், †குலவும் பவழ வழக்கிற் கோதை புரளப் பாடி, யிலவம் போதேர் செவ்வா யினையோர் பொருவார்க் காண்மின்" என்னுஞ் (ச)சிந்தாமணியாலும் இதுவே பொரு ளாதல் உணர்க.

ஞ முத்துறழ் மணலெக்க ரளித்தக்கான் முன்(ஞ)னுபம்
பத்துருவம் பெற்றவன் மனம்போல நந்தியா
ளத்திறத்து நீநீங்க வணிவாடி யவ்வாயம்
வித்தத்தாற் றேற்றுன்போல் (சு)வெய்துய ருழப்பமோ

க. இக்கழகம் நூல்களும் படைக்கலமும் பயிலிடம்போலச் சிறந்ததன்று தலின், "தண்கழகம்' என்றார்; தண்ணென்பது இழிவை யுணர்த்தி வருமென்பது (அ) "கூழுடைக் கொழுமஞ்சிகைத், தாழுடைத் தண் பணியத்து" என்புழி, "தண்பணியத்து" என்பதற்கு, 'நெல்லுப் போல ஏனைப்பண்டங்கள் சிறந்தன அன்மையின், தண்ணிய பண்ட மென்றார்' என்று (பட். ககூங - ககூச) எழுதியிருக்கும் விளக்கத் தாலும் (ஆ) "மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞைநின், சாயற் கிடைத்து தண்கா னடையவும்" என்புழி, "தண்கான்" என்பதற்கு, 'இழிந்த காடு' என்று (சீலப். உ: ஙங - ஙச. அடியார்க்கு) எழுதியிருக்கும் குறிப்பாலும் (இ) இழிந்த சமயத்தவன், "தண்ணிய சமயி" என்று கூறப்படுதலாலும் உணரப்படும்.

உ. கண்களால் இம்மீது அகூமென்று பெயர்பெற்றதென்பர்.

ங. (அ) "உருளாயம்" குறள். கூங்; சீவக. உஅஎங. (ஆ) "உருளாயச் சூதாடி" பெரிய. மூர்க்க. அ. (இ) "தப்பிலாத கவறுருண்ட தாயம்" வில்லி. சூது. ககச.

ச. சீவக. கஉஎ.

ஞ. (அ) "ஆயங்கொளின்" குறள். கூஙசு. (ஆ) "ஆயம் பிடித்தாரும்" நள. கலிதொடர். சo.

சு. வெய்துதுயர், வெய்துயரென மருவிற்று; (அ) "தழங்குரன் முரசு", (ஆ) "குலையலங் காந்தள்" என்பவைபோல. வெந்துய ரெனற்பாலது (பிரதிபேதம்) * அலையுமம்மைபோல் என்பது அச்சுலிலுள்ள பாடம், † குலவுபவழ,

எ-து: (க) முத்தையொக்கும் எக்காகிய மணலிலே நீகூட (உ)முற்பட இருக்கின்ற தாயம் முன்னே மனைகட்டலாம்படி கவற்றிலே (ங) ஈரைந்தைப் பெற்றவனுடைய மனம்போல ஆக்கம் பெருகினவள், அங்ஙனம் அளிக்குங் கூற்றினின்று நீ நீங்குகையினுலே அப்பெருந் தாயமின்றி *ஈரிரண்டு இரு மூன்று என்னுஞ் சிறுதாயம் இடுதலால் தோற்றவனைப் போலே அழகுகெட்டு வெய்தாகிய வருத்தத்திலே அழுந்துவோ? எ - று.

உருவம் என்றது கவற்றை.

கூ முடத்தாழை முடுக்கரு ளளித்தக்கால் விந்தாய
மிடைத்தங்கக் கண்டவன் மனம்போல நந்தியாள்
கொடைத்தக்காய் நீயாயி னெறியல்லாக் கதியோடி.
யுடைப்பொதி *யிழந்தான்போ லுறுதுய ருழப்பவோ

எ-து: முடத்தையுடைய(ஈ)தாழை முடுக்குக்குள்ளே நீ கூடப் போனிடையிலேசிறுதாயம்(ஙு) இடவேண்டின அளவிலேசிறுதாயம் தங்கக்கண்டவனுடைய மனம்போலே ஆக்கம்பெருகினவள், சுற்றத்தார்க்குப் பொருளைக் கொடுத்து

வெய்துயரென அருகி வந்ததெனினுமாம்; (இ) "செய்த செய்தவன்" (ஈ) "செய்த செய்தவும்" (உ) "செய்த செய்தவச் செல்வன்" என்ற கம்பர் ஆட்சிகள் இதுபோல்வன.

க. (அ) "முத்தவார்மணல்" பெரும்பாண். கூகடு; புறம். கூக: க. (ஆ) "முத்து மணல் வீதி" (இ) "முத்துமணற் பரந்த நற்பெருங் கோயின், முற்றந் தோறும்" பெருங். (உ) எ: கசஉ, (ங) சு: சக - சஉ.

உ. சூதுபோரில் முற்பட ஒன்று விழுவதற்குத் தாயமென்றும் பெயரென்றும் அது விழுந்தபின்பே காய் பெயர்த்து மனைகட்ட உரிமையுண்டென்றும் கூறுவர். இது, பின்பு இவ்வாட்டத்தில் வேண்டும் என்களைக் குறிப்பதாகவும் வழங்குகிறதுபோலும்.

ங. வடநாட்டில் ஹாரே(தோற்பேன்)என்றும் ஜீதே (வெல்வேன்)என்றும் கூறி அவ்வாறே செய்பவர் எதிர்பொருவோர் வைத்த பந்தயப் பொருளைப்பெறுவரென்ப. இஃது அவ்வழக்காலுல் இங்கே கூறியது, 'வெல்வேன்' 'வெல்வேன்' என்று மூண்ய இருவர் செய்தியாம். ஒற்றை விழுதல் தோல்வியென்றும் இரட்டை விழுதல் வெற்றியென்றும் கூறுவர்.

ச. தாழையின் இயல்பை இந்நூற்பக்கம் அசை: எ - ஆம் குறிப்பிற்காண்க.

ஞ. "மாயமுற்ற கவறு மந்த மாமன் வல்ல பத்திலே, தாய முற்றி டங்கொ டாது தரும னேச்ச தித்தனே" "இன்ன தாயம் வேண்டு மென்றெறிந்த போது மற்றவன், சொன்ன தாய மேபுரண்டு சோர்விலாமல் வருதலின்" வில்லி. சூதுபோர். கஅஅ - கஅக.

(பாடபேதம்) *அவிழ்த்தான்போல்.

வரைந்துகோடற்குத் தக்கவனே! நீ முன்பே பொருளைத் தேடாதே இப் பொழுது பொருள்வயிற் பிரிவை ஆராய்ந்து பார்ப்பாயாயிற் சிறுதாயஞ் சிறுக இடவேண்டுமளவில் இடாமற் பெருக இட்டு வெல்லும் தெறியல்லாத தெறியிலே சூதுபொருகையினாலே அதற்கென்று கட்டிவைத்த தன்னுடைய (க) பொருளை இழந்தவனைப் போலே மிக்க துயரிலே அழுந்தவோ. எ - று.

கஉ. நறுவீ தாழ் (உ) புன்னைக்கீழ் நயந்துநீ யளித்தக்கான்
மறுவித்த மிட்டவன் மனம்போல நந்தியா

க. கவருடிப் பொருளையிழந்தவன் துயருற்று அதனைப் பழித்த செய்தி இருக்கு வேதமுதலியவற்றிலும் கூறப்பட்டுள்ளதென்பர்.

உ. புன்னை, நெய்தனிலத்துக்கு உரித்தாகவும் கடற்கரையாகிய மணலில் கடற்றிவலையால் தழைத்து வளர்வதாகவும் கூறப்படுவதொரு மரம். இது பருத்ததும் வளைந்ததும் நீண்டதும் கரியதுமான அடியையும் கரியனவும் நெடியனவும் குறியனவுமான கொம்புகளையும் உடைய தாகக் கூறப்படுகிறது. இதன் கொம்பு பசுநிற முடையதென்றும் சொல்லப்படும். அக்கொம்பிற்கு இரும்பு உவமையாகச் சொல்லப் படுகிறது. இம்மரத்தில் பாதவர் அம்பி முதலியவற்றைக் கட்டி வைத்தலும் இம்மரத்தின்மேல் ஏறி நெடுந்தூரத்தே வரும் மரக் கலங்களைப் பார்ப்பதும் மீன் உண்ணவந்த பறவைகள் இதன்மேல் தங்கி இருப்பதும் இயல்பு. இது மகளிர் நறவு கொப்புளித்தலாற் பூப்பதென்றும் ஆதலாற் பூப்பதென்றும் சொல்லப்படுகிறது. இம் மரத்தொகுதி பொழிலென்று கூறப்படும். இதன் இலை நீலநிறமும் அகலமும்உடையது. இது கொத்துக்கொத்தாகப்பூக்கும் இயல்பினது. இதன் அரும்பு நீண்ட காம்பும் உருண்ட தலையும் மங்கலான வெண் ணிறமு முள்ளது. இந்நிறத்தாலும் உருட்சியாலும் இதற்கு மண்ணு முத்தும் பல்லி முட்டையும் சங்குமணியும் விண்மீனும் உவமையாகக் கூறப்படுகின்றன. இவ்வரும்பு வெண்ணிறத்தையும் தன்னுட் பொன் னிறமும் செந்நிறமுமுள்ள உறப்புக்களையும் உடையதாயிருத்தலால் இது பொன்னையும் பவழத்தையும் உள்ளடக்கிய முத்தென்று புனைந் துரைக்கப்படுகிறது. இதன்பூவும் இவ்வாறேசொல்லப்படும். இப்பூவை மக்கள் அணிவதுண்டு. இப்பூ நறுமணமுடைமையால் இதில் வண்டு முரன்று தாதுண்டுகொண் டிருக்கும். இதன் போதவிழ் நிலைக்கு ஊர்க்குருவியின் உடைந்த முட்டை உவமையாக்கப்பட்டுள்ளது. இதன் தாது பொன்னிறமுடையது; மூப்பத்திருவகை ஓமாலிகைப் பொருள் களுள் ஒன்றாகவுள்ளது. இதனிழல் புகர்நிழலென்று பலவிடத்தும் கொழுநிழலென்று சிலவிடத்தும் கூறப்படுகிறது. கொழுநிழலுள்ள இம்மரத்தினடியில் மன்றம் அமைப்பர் போலும். இவையும் இம் மரத்தைப்பற்றிய வேறு சிலவும் அடியிலுள்ளவற்றால் அறியலாகும்;

ளறிவித்து நீநீங்கக் கருதியாய்க் கப்பொருள்
சிறுவித்த மிட்டான்போற் செறிதுய ருழப்பவோ

---

(1) "வெண்டிரை பொருத வேலை வாலுகத்துக், குண்டுநீ ரடைகரைக் குவையிரும்,புன்னை" (2)"முதுநீர்ப், புணரிதிளைக்கும் புள்ளிமிழ்கான, லிணரவிழ் புன்னை யெக்கர் நீழல்" (3) "உரவுத்திரை பொருத தணி மண லடைகரை, நனைந்த புன்னை மாச்சினை" (4) "ஓங்கல் வெண் மணற் றாழ்ந்த புன்னைத், தாதுசேர் நிகர்மலர்" (5) "வான்கடற் பரப் பிற் றூவற் கெதிரிய, மீன்கண் டன்ன மெல்லரும் பூழ்த்த, முடவு முதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினைப், புள்ளிறை கூரு மெல்லம் புலம்ப" (6)"பராரைப் புன்னைச் சேரி" (7) "நுரைபிதிர்ப் படுதிரைப், பராரைப் புன்னை வாங்குசினை" (8) "முடக்காற் புன்னையும்" (9) "கொடுங்காற் புன்னை" (10) "நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்ப வும்" (11) "எல்லி யன்ன விருணிறப் புன்னை, நல்லரை முழுமுத லவ்வயிற் றொடுத்த, தூங்க லம்பி" (12) "கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில்"(13)"நெடுஞ்சினைப்புன்னை" (14)"குறுஞ்சினைப் புன்னை நறுந்தாது" (15) "பைங்கோட்டு மலர்ப் புன்னை" (16) "இரும்பி னன்ன கருங்கோட்டுப்புன்னை, பொன்னினன்ன நுண்டாதிறைக்குஞ் சிறுகுடி" (17)"பெருங்காற் புன்னைக் கருங்கோட் டணைத்த, நாவாய்" (18) "கடலே, காறந்த கலனெண்ணுவோர், கானற் புன்னைச் சினை நிலைக் குந்து"(19)"குவவுமண லடைகரை, நின்ற புன்னை நிலந்தோய் படுசினை, வம்பநாரை சேக்குந், தண்கடற் சேர்ப்ப" (20) "புன்னை, யலங்குசினை யிருந்த வஞ்சிறை நாரை" (21) "கன்னியம் புன்னைமே லன்னங்காள்" (22) "பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை, கருங்கோட்டுப் புன்னைத் தங்குந் துறைவற்கு" (23)"வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை" (24) "இறுநுசுப்பி னந்நலா ரேந்துவள்ளத் தேந்திய, நறவங்கொப்புளித்தலி னாகு புன்னை பூத்தன, சிறகர் வண்டு செவ்வழி பாடமாடத் தூடெலா, மிறைகொள்வானின் மீனென" (25) "அலம்புமணி மேகலையு மரிக்குரற்கிண் கிணியுமணிச் சிலம்பு மார்ப்பக், கலம்படுபொற் குயமடவா ,ராடுதலு மாட்டமைதி கவினக் கண்டு, நலம்படுபொற் பரிசிலெதிர் வீசுவபோ லிளம்புன்னை நறிய வீயின், குலம்புதிது பூத்துகுப்ப விம்மிதராய்ச் சிலரிவர்ந்து குற்று நின்றார்" (26) "பொன்னென நன்மலர் நறுவீ தாஅம் புன்னை நறும் பொழில்" (27) "பொங்கிரும் புன்னைப் பூம்பொழில்" (28) "எழிற்பூம் புன்னைப் பொழில்" (29) "இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை, நீலத்தன்ன பாசிலையகந்தொறும், வெள்ளியன்னவிளங்கிணர்நாப்பட், பொன்னி னன்ன நறுந்தா துதிர" (30) "அகலிலைப் புன்னைப் புகரி னீழல்" (31)"புன்னை, வாலிணர்ப் படுசினைக் குருகிறை கொள்ளு, மல் குறு கானல்"(32) "மண்ணா முத்த மரும்பிய புன்னை" (33) "மண்ணாப்

எ-து: நறியதாகிய பூத்தங்கின புன்னைக்கீழே நீ விரும்பிக்கூட இருசாற்
(க) சிறுதாயம் இடவேண்டின அளவிலே ஒருகாலன்றியே இருகாலாவதும்

பசுமுத்தேய்ப்பக் குவியிணர்ப், புன்னை யரும்பிய புலவுநீர்ச் சேர்ப்ப" (34)"பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை" (35)"பல்லி, பொரித்த சினைபோலு நீளிரும் புன்னைப், பொரிப்பூ விதழுறைக்கும் பொக்கு நீர்ச் சேர்ப்ப" (36) "புன்னைய மலர்ப்பொழில்க ளக்கிலெளி காட்ட" (37)"வெண்முத்தரும்பிப் பசும்பொன் மலர்ந்து, கடைக்தசெம் பவளத் தொத்துடன் காட்டு, மிரும்புகவைத் தன்ன கருங்கோட்டுப் புன்னை" (38) "பவழமும் பொன்னுங் குவையிய முத்திற், நிகழரும் பீன்றது புன்னை" (39) "முத்தரும்பிப் பைம்பொன் மலர்ந்து முருகுயிர்த்துத், தொத்தலருங் கானற் றுறையேம்" (40)"படுமுத்தம் புன்னை யரும்பும் புகாஅர்" (41) "புன்னைகண் முத்தென வரும்ப" (42) "புன்னையின் முகைநிறை பொதியவிழ் பொழிலணி புறவமே" (43) "புன்னைவெண் கிழியிற் பவளம் புரை பூந்தாய்" (44) "ஒள்ளொளிப் பவளத் துள் ளொளி யடக்கி, வெள்ளிப் பூந்தா ரெள்ளுந் தோற்றத்துப், போது பொறை யாற்றுப் புன்னையம் பொதும்பர்" (45) "புன்னை, பொன் னிறம் விரியும் பூக்கெழு துறைவனை" (46) "தாமலர்ப் புன்னை" (47)"தாவற் கலித்ததேம்பாய் புன்னை, மெல்லிணர்க் கண்ணி மிலைச்ச மைந்தர்" (48)"கருங்கோட்டுப் புன்னை மலரிற் ருதருந்தி, யிருங்களிப் பிரச மூத" (49) "கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசை தொறுஞ், சுரும்பார்க்குங் குரலிலே டிருந்தும்பி யியைபூத" (50) "உள்ளூர்க்குரீஇக் கருவுடைத் தன்ன, பெரும்போதவிழ்ந்த கருந்தாட் புன்னை"(51)"புன்னை நுண்டா துறைத்கருகெய்தல், பொன்படு மணி யிற் பொற்பத் தோன்று, மெல்லம் புலம்பன்" (52) "பொன்னேர் நுண்டாது புன்னைதாஉம்" (53) "பொன்னேர் தாதிற் புன்னையொடு" (54) "புன்னை பொன்ரு துதிர்மல்கு மந்தண் புகலிந் நகர்" (55) "புன்னைநன்மாமலர் பொன்னுதிர்க்கும்புனவாயிலே"(56)"பொன்னி னன்ன புன்னை நுண்டாது" (57) "புன்னை நறுமலரின் பூந்தா திடை யொதுங்குங், கன்னி யிளமேதிக் காற்குளம்பு - பொன்னுரைத்த, கல் லேய்க்கு நாடன்" (58) "புன்னை நறுந் தாது.....கதிர்நகையா யோமாலி கை" (59) "இன்னிணர்ப் புன்னையம் புகர் நிழல்" (60) "கடன்மீன் றந்து கானற் குவையி, யோங்கிரும் புன்னை வரிநிழ லிருந்து, தேங்கமழ் தேறல் கிளையொடு மாந்திப், பெரிய மகிழுந் துறைவன்" (61) "நீனிறப் புன்னைக் கொழுநிழ லசைஇ" (62) "மன்றப் புன்னை மாச்சினை நறுவீ" (63)"மன்றத்துப் புன்னை போல"

க. வித்தம் - சிறுதாயமென்னும் பொருளில் இச்செய்யுளில் மூன்னும் வந்துள்ளது; இது கவறுடலின் வழி வந்த ஆட்டங்களில் 'வருத்தம்'

சிறுதாயம் இட்டவன் மனம்போலே ஆக்கம்*பெருகினவள், நீ பிரிந்து வந்து வரைவேனென்று எமக்கறிவித்துப் பிரியக் கருதின நின்பொருட்டு அக்கவறு இருகாற் சிறுதாயம் இட வேண்டின அளவிலே ஒருகாற் சிறுதாயம் இடப் பட்டவனைப்போலே செறிந்த துயரிலே அழுந்தவோ? எ - று.

இது †தகவாகாது காணெனக் கூறிப் பின்னும்.

ஆங்கு, அசை.

கஅ (க)கொண்டு ‡பலர்தூற்றுங் கௌவை யஞ்சாய்
தீண்டற் கருளித் திறனறிந் தெழீஇப்
பாண்டியஞ் செய்வான் பொருளினு
மீண்டுக விவணல மேறுக தேரே

எ-து: நீ பலரும் மேற்கொண்டு தூற்றும் அலருக்கு அஞ்சாய்; இதனைக் கைவிட்டு இவளை வரைந்துகொண்டு கூடுதற்கு அருள்பண்ணி, அதற்காந் திறத்தை அறிந்து எழுந்திருந்து தேரை ஏறுவாயாக; அங்ஙனம் வரைந்தால் ||இவள்நலம் உழவாடியாகி யிருப்பானி[ருவரி]டத்துப் பெரும்பொருளினும் ஈண்டுவதாக என வரைவுகடாயினாள். எ - று.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கக)

(கஈஎ.) அரிதே தோழிநா ணிறுப்பாமென் றுணர்தல்
பெரிதே காமமென் னுயிர்தவச் சிறிதே
பலவே யாமம் பையுளு முடைய
சிலவே நம்மோ டுசாவு மன்றி
லழலவிர் வயங்கிழை யொலிப்ப வுலமந்
தெழிலெஞ்சு மயிலி னடுங்கிச் சேக்கையி
னழலா கின்றவர் நக்கதன் பயனே;

அ மெல்லிய நெஞ்சு பையுள் கூரத்தஞ்
சொல்லினா னெய்தமை யல்ல தவர்நம்மை
வல்லவன் றைஇய வாக்கமை கடுவிசை

'விருத்தம்' என வழங்கும் சொல்லின் சிதைவுபோலும்; அன்றி வித்தென்பது அம்சாரியை பெற்றுவந்ததெனினும் இயையும்; வித் தாயமென இச்செய்யுளுள் வருதலும் நோக்குக.

க. எதுகை நோக்கி 'கோண்டு' எனக்கொள்ளின், நீட்டல் விகாரமாம்.

(பிரதிபேதம்) * பெருகினவளணிபிரிந்து, †தாயகதாது, தாயாகாது, ‡ பழிதூற்றும், || இவ ணலமும் வாடியாகி யிருப்பானிருவரிடத்தும்பெறும்பொருளினுமீண்டுவதாக.

வில்லினு னெய்தலோ விலர்ம னுயிழை
வில்லினுங் கடிதவர் சொல்லினுட் பிறந்தநோய்;

கசு நகைமுத லாக நட்பினு ளெழுந்த
தகைமையி னலித லல்ல தவர்நம்மை
வகைமையி னெழுந்த தொன்முரண் முதலாகப்
பகைமையி னலிதலோ விலர்ம னுயிழை
பகைமையிற் கடிதவர் தகைமையி னலியுநோய்;

கஅ நீயலே னென்றென்னை யன்பினுற் பிணித்துத்தன்
சாயலிற் சுடுத லல்ல தவர்நம்மைப்
பாயிரு ளறநீக்கு நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினுற் சுடுதலோ விலர்ம னுயிழை
தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்;

ஆங்கு;

உச அன்னர் காதல ராக வவர்நமக்
கின்னுயிர் போத்தரு மருத்துவ ராயின்
யாங்கா வதுகொ றோழி யெனையதூஉங்
தாங்குதல் வலித்தன் றுயி
னீங்கரி துற்றன்றவ ருறீஇய நோயே.

இது வனைவுநீட வாற்றளாயிள இடத்துத் தலைவி யாற்றமையை அவடன்னுளே தலைவந்து அறிவிக்கலுற்ற தோழி, தலைவள் சிறைப்புறத் தானுகத் தலைவியை வற்புறுக்க, அவள் *வன்புறை எதிழிந்து கூறியது.

இதன் பொருள்.

அரிதே தோழிநா ணிறுப்பாமென் றுணர்தல்
(க)பெரிதே காமமென் னுயிர்தவச் சிறிதே
(உ)பலவே யாமம் பையுள முடைய
சிலவே †நம்மோ டுசாவு (ங)மன்றி

க. "இவளுயிர் தவச்சிறிது காமமோ பெரிதே" தருந். கஅ.

உ. "ஊழி பலவோ ரிரவாயிற் றோவென்னும்" நள. சுயம். கஅ.

ங. அன்றிலின் இயல்பு இந்நூற்பக்கம் அஅக: ங-ஆம் குறிப்பால் அறியலாகும்.

(பிரதிபேதம்) * வல்லொற. † எம்மோடு.

ழுலவிர் வயங்கிழை யொலிப்ப *வுலமந்
தெறிலெஞ்சு மயிலி னடுங்கிச் †சேக்கையி
னழலா கின்‡றவர் நக்கதன் பயனே

எ-து: தோழீ! நம்முடைய(க)ராணை நம்மிடத்தே நிறுத்துதலைச் செய்வா மென்று உணர்ந்திருத்தல் அரிது; அதற்குக் காரணமென்னெனில் வேட்கை பெரிதாயிராநின்றது; அதனைத் தேய்ந்த உயிர் மிகச் சிறிதாயிராநின்றது; நமக்கு வருத்தத்தைத் தருதலையுடைய யாமங்களும் பலவாயிராநின்றன; அவ்வியாமங்களித் துயிலாதபடி தூணையைப் பிரிந்து வருந்தி நம்மோடு உசாவும் அன்றில்களும் சில உளவாயிராநின்றன; ஆதலான் அவ்வுயிர் தாங்குதல் அரிது; முடிவில் அவர் நம்மோடு கூடியதனைப் பெற்றபயன் (உ)பீலி உதிர்ந்த மயில்போலே ஒபாலிவழிந்த நாணத்தால் நாம் நடுங்கச் சேக்கையிலேகிடந்து ‖உடம்பு நெருப்பிலே ஓடவைத்த பொன்னைச்செய்த சிலம்புமுதலியன ஒலிக்கும்படி உலமர நமக்குக் காமத்தீ உண்டாகாநின்றதொன்றுமே. எ - று.

உலமர, நடுங்க எனத் ÷திரிக்க.

அ மெல்லிய நெஞ்சு பையுள் கூரத்தஞ்
சொல்லினு னெய்தமை +யல்ல தவர்நம்மை
(ங)வல்லவன் றைஇய வாக்கமை கடுவிசை
வில்லினு னெய்தலோ விலர்ம ஞயிழை
வில்லினுங் ×கடிதவர் சொல்லினுட் பிறந்தநோய்

எ-து: அவர் நெஞ்சுபோல் வலியுடைத்தன்றி நம்முடைய வலியில்லாத நெஞ்சு வருத்தம் மிகும்படி தாம் பின்னிற்பினியே னென்று தெளிவித்த சொல்லால் வருத்தினமையல்லாது அவர் நம்மைப் பண்ணவல்லவனுலே பண்ணப்பட்ட(ச)வடிவமைந்த கடிய விசையையுடைய (ஙு)வில்லினால் எய்தற் றொழிலைச் செய்தலோ உடையரல்லர்; ஆயினும் ஆயிழாய்! அவர் தெளிவித்த சொல்லாற் பிறந்தநோய் மிகவும் வில்லினுங் கடிதாயிராநின்றது. எ-று.

க. "எழுந்த நாணு மிச்சையுந் தினம்போ ராடி, யகழ்த நாணந் தோற்ற தாசையே வென்றதம்மா" திருக்குற்றலத். புராணவியல்பும். கஙு.

உ. "காமர் பீலி யாய் மயில்" அகம். நடுஅ: உ.

ங. "வல்லவன் றைஇய பாவைகொல்" கலி. இசு: எ.

ச. வடிவு-வார்த்தல்; "வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே" புறம். நகஉ: ங.

ஞ. வில், ஆகுபெயராய் அம்பை உணர்த்திற்றெனினும் ஆம்; "வில்லின் மானியின் வீரன் விலக்கினன்" கம்ப. காடகைவதை. கஎ.

(பிரதிபேதம்) * உலம் வந்து, † சேக்கையுள், ‡ அவனக்கதன், ‖ உடம்பு நிலம்பு முதலியன, ÷திரிக்க, அழலவிர் வயங்கிழை - நெருப்பிலே யோடவைத்த பொன்னைச்செய்தவிழைமெல்லிய, + அல்லாதவர் நம்மை, × கொடிதவர்.

கங. நகைமுத லாக நட்பினு ளெழுந்த
தகைமையி *னலித லல்ல தவர்நம்மை
†வகைமையி னெழுந்த தொன்முரண் ‡முதலாகப்
பகைமையி னலிதலோ விலர்ம னுயிழை
பகைமையிற் கடிதவர் ‖தகைமையி னலியுநோய்

எ-து:(க)நகுநயமறைத்தலென்னும் மெய்ப்பாடுகாரணமாக நாங்கொண்ட நட்பிலே ÷தோன்றிய தமது தகுதிப்பாடுகளாலே வருத்துதலொழிய அவர் நம்மைப் பொருள்களின் கூறுபாட்டாலே தோன்றிய பழைதாகிய மாறுபாடு காரணமாக வந்த பகையாலே வருத்துதலோ உடையரல்லர்; ஆயினும் ஆயிழாய்! அவர் +தமது தகுதிப்பாடுகளாலே வருத்துதலொழிய அவர் நம்மை வருத்துநோய் பகைமையினுங் கடிதாயிராநின்றது. எ - று.

(உ)மூதல் - காரணம். பொருள்கள், ஈண்டு மனப்பொருள் முதலியன.

கஅ ×நீயலே னென்றென்னை **யன்பினிற் பிணித்துத்தஞ்
சாயலிற் சுடுத லல்ல தவர்நம்மைப்
††பாயிரு ளறநீக்கு நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினுற் ‡‡சுடுதலோ விலர்ம னுயிழை
தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்

எ - து: நின்னிற் பிரியேனென்றுசொல்லி, என்னைத் தனக்குண்டாகிய அன்பினுலே வயக்கப்படுத்தித் தமது மென்மையாலே சுடுதலொழிய அவர் நம்மைப்பரந்த(ங)இருளை அவ்விடத்தினின்றும்போம்படி நீக்கும் நெடியதாகிய கொழுந்தினையுடைய நெருப்பாற் சுடுதற்றொழிலோ உடையரல்லர்; ஆயினும்

க. தொல். மெய்ப். சூ. கங.

உ. "இருமுதலின்" (தொல். பாயிரம்) என்பதற்கு 'இரண்டு காரணத்தான்' என்று இளம்பூரணரும், 'பெரிய காரணத்தான்' என்று சிவஞான முனிவரும் "நோய் முதல்" (குறள். கூசஅ) என்பதற்கு, 'நோய் வருதற் காரணம்' என்று பரிமேலழகரும் எழுதியிருக்கும் உரை இங்கே அறிதற்பாலன.

ங. "பகையிருட் பிழம்பு சீக்கும் பல்சுட ருமிழும் வாளான்" நைடதம். சுயம். கசை.

(பிரதிபேதம்) * கலியதல்லது, †வகைமையுள, ‡முதலாப். ‖ தகையினலியு, ÷தோன்றித் தமது, +கமது தகுதிப்பாடுகளாலே நம்மை வருத்துநோய், ×யேலே மென்றெம்மை, யேலனென்றென்னை, ** அன்பினிற் பிணித்ததஞ், †† பாயிரு ளீக்கு. ‡‡கடுவதோ.

ஆயிழாய்! அவர் ஆண்டுச் * செய்த காமநோய் கெடுதற்குக் காரணமான † மென்மையால்நின்று எரியுங்காமநோய் தீயினுங்கடிதாயிரா‡நின்றது.எ-று.

நோய்தபு சாயலென்க.

||ஆங்கு, அசை.

உ௪ அன்னர் காதல ராக வவர்நமக்
கின்னுயிர் போத்தரு மருத்துவ ராயின்
யாங்கா வதுகொ றோழி யெனையதூஉந்
தாங்குதல் வலித்தன் றாயி
னீங்கரி துற்றன்றவ ருறீஇய நோயே

எ-து: தோழீ! நெஞ்சு அத்தன்மையவர் நம்மிடத்துக் காதலையுடையவராகக் கருதி முன்பு நம்மை நீங்குதலருமையுற்ற அவ்வியற்கைப் புணர்ச்சியினன்று அவர் நம்மையுறுத்தின நோயைத் தான் பொறுத்தலைத்துணிந்த துணிவை ஆராய்ந்துபார்க்கில் அத்துணிவு எப்படியும் நம் இனிய உயிரைப் போக்கும்; அவர் நமக்கு (௧) உயிரைப் போகாமல்மீட்கும் மருத்துவராய் இருப்பாராயின், அந்நிலை ÷எக்காலத்து அவர்க்கு உண்டாவது கொல்லென +வன்புறை எதிரழிந்து கூறினாள். எ - று.

(௨) வலித்தன்று என்பது வலித்ததன்றென்னும் மறைப்பொருள் தாராமை உணர்க.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது "இடைநிலைப்பாட்டு" (௩)என்றதனாற் × தாழம்பட்ட ஓசையின்றி ஐந்தடியான் இடைநிலைப்பாட்டுவந்த ஒத்தாழிசைக்கலி. (௨௦)

---

௧. இந்நூற்பக்கம் ௪௯: உ - ஆம் குறிப்புப் பார்க்க.

௨. வலித்தன்று=வலித்தது - துணிந்தது; இஃது இங்கே வினையாலணையும் பெயராய் நின்றது. "காண்டல் வலித்தன்று" என்பது பு - வெ. கைக்கிளை. பெண்பாற். கொளு. ௬. இவ்வகை ஆட்சியே அந்நூற் கொளுவில் மலிந்து கிடக்கின்றது. இதனை வினைத்திரிசொல்லென்று முற்காலத்தவரும், அகரச்சாரியை பெறாது அன்சாரியை பெற்று வந்த சொல்லென்று பகுபத முடிபு கூறும் இக்காலத்தவரும் வழங்குவர்.

௩. தொல். செய். சூ. க௩௪. இச்சூத்திரத்தின் உரையில் "நகைமுதலாக.....தகைமையி னலியுநோய்" என்னும் பகுதியைப் பேராசிரியரும், (தொல். செய். சூ. க௩௭) இச்செய்யுள் முழுவதையும் நச்சினார்க்கினியரும் இடைநிலைப்பாட்டு ஐந்தடியான் வந்ததற்கு மேற்கோள் காட்டியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * செய்தமென்மையால், †மென்மையாய்.‡ நின்றது நோய்தபுசாயல் - காமநோய் கெடுத்தற்குக் காரணமான சாயலென்க ஆங்கு,||ஆங்கஅசை. ÷எக்காலத்தே, +வன்பொறை, × தாழப்பட்ட.

(கூடீ.) எழின்மருப் பெழில்வேழ மிருகரு கடாத்தாற்
றெழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுகம் மறிவாய்ந்த வடக்கமு காலைநெடு
வறிதாகப் பிறரென்னை நகுபவு நகுபுடன்

உ மின்னவிர் நடக்கமுங் கனவும்போன் மெய்காட்டி
யென்னெஞ்சு மென்னெடு நில்லாமை நனிவெளவித்
தன்னலங் கரந்தாளைத் தலைப்படுமா றெவன்கொலோ
மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
பணிப்பூளை யாவிரை யெருக்கொடு பிணித்தியாத்து

கo மல்லலூர் மறுகின்க ணிவட்டாடு மிஃதொத்த
னெல்லீருங் கேட்டுமி னென்று;

கஉ படரும் பனையீன்ற மாவுஞ் சுடரிழை
நல்கியா னல்கி யவை;

கக பொறையென் வரைத்தன்றிப் பூநுத லீத்த
நிறையழி காமநோய் நீந்தி யறையுற்ற
வுப்பியல் பாவை யுறையுற் றதுபோல
வுக்கு விடுமென் னுயிர்;

கஅ பூளை பொலமல ராவிரை வேய்வென்ற
தோளா ளெமக்கீத்த பூ;

உo உரிதென் வரைத்தன்றி யொள்ளிழை தந்த
பரிசழி பைதனெய் மூழ்கி யெரிபரந்த
நெய்யுண் மெழுகி னிலையாது பைபயத்
தேயு மளித்தென் னுயிர்;

உக இனையாரு மேதி லவரு முளையயா
னுற்ற துசாவுந் துணை;

உஉ என்றியான் பாடக் கேட்டு
அன்புறு கிளவியா ளருளிவந் தளித்தவிற்
றுன்பத்திற் றுணையாய மடனினி யிவட்பெற
வின்பத்து ளிடம்படலென் றிரங்கின னன்புற்
றடங்கருந் தோற்றத் தருந்தவ முயன்றோர்தம்
மூடம்பொழித் துயருல கினிதுபெற் றாங்கே.

கலித்தொகை கங அ.

இது (க)மடலூர்ந்து தலைவியைஎய்திய தலைவன் தான் மடலூர்ந்த வாறும் அவளை எய்தியவாறும் தனக்குப் பாங்காயினார்க்குக் கூறியது.

இதன் பொருள்.

(உ)எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தாற்
றொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த வடக்கமு நாணொடு
வறிதாகப் பிறரென்னை நகுபவு நகுபுடன்
௫.(௩)மின்னவிர் நுடக்கமுங் கனவும்போன் மெய்காட்டி
யென்னெஞ்ச மென்னோடு நில்லாமை நனிவெளவித்
தன்னலங் கரந்தாளைத் தலைப்படுமா *றெவன்கொலோ
(௪)மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
யணிப்பூளை (௫)யாவிரை யெருக்கொடு பிணித்தியாத்து

க. புணர்ந்தபின் நிகழ்வதாகிய பெருந்திணைக் குறிப்புள் தலைமகற்கே யுரித்தாகிய எறிய மடற்றிறத்துக்கு இச்செய்யுள்மேற்கோள்; தொல். அகத். சூ. ௫௪. இளம். சூ. கங. நச்.

உ. "நெய்தற்றிணையோடு பெருந்திணையும் மயங்கி வந்ததற்கு "எழின் மருப் பெழில்வேழம்.....கேட்டீமினென்று" என்னும் பகுதி மேற்கோள்; இ - வி. சூ. ௩௯௫.

௩. "துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி, யொளியோ டுரு வென்னைக் காட்டி யளியளென், னெஞ்சாறு கொண்டா ளதற்கொண் டுந் துஞ்சே, னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின், பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப, வோங்கிரும் பெண்ணை மடலூர்ந் தென் னெவ்வநோய், தாங்குத றேற்றா விடும்பைக் குயிர்ப்பாக, வீங் கிழை மாதர் திறத்தொன்று நீங்காது, பாடுவேன் பாய்மா நிறுத்து" கலி. கங௯: ௫ - கங.

௪. (அ) "மணிநிற வுருவின தோகையும்" (ஆ) "மரகதக் கதிர்தழைத்த கலாப மஞ்ஞை"

௫. (அ)"குனிகா யெருக்கின் குவிமுகிழ்விண்டலொடு. பனிவா ராவிரைப் பன்மலர் சேர்த்தித், தாருங் கண்ணியுந் தைஇத் தன்னிட, மீளு மட லோன் வரவென் கொல்லென, 'நீர்த்துறைப் பெண்டிர் நெஞ்சழிந் திரங்கு.....றணிமடற் கலிமா மன்றத் தேறித்தன், னணிநலம் பாடினு மறியாள்" குணநாற்பது.(ஆ)"மறவல் வாழிதோழி துறைவர், கடல்புரை பெருங்கிளை நாப்பண், மடல்புனைந் தேறிநிற் பாடும் பொழுதே" தொல். கள. சூ.உ௩. மேற்.

(பிரதிபேதம்) * எவன்கொல்லோ.

கo மல்லலூர் மறுகின்க ணிவட்பாடு (க)மிஃதொத்த
னெல்லீருங் கேட்டீமி *னென்று

எ-து: மின் விளங்குகின்ற நுடக்கமும் கனவினது தோற்றமும்போலே தன்வடிவைக் காட்டி என்னுடனே முற்படக் கூடிப் பின்னர்ப் பிறர் என்னை (உ)இகழ்ந்து சிரிப்பனவற்றையும் எனக்குக் காட்டி எனக்குரிய நெஞ்சம் என்னோடு கூடி நில்லாமல் அழகினையுடைய மருப்பினையும் அழகினையுமுடைய (ங)வேழம் சொரிதலைச்செய்யுமதத்தாலே பாகனுக்குச் செய்யுந்தொழில்களைத் தவிர்த்து தான்வேண்டியவாறுமுகாதபடி தன்னை விலக்குந் தோட்டியையுங் கைகடந்தாற்போலத் தன்மேற் சென்ற வேட்கையினாலே என்னைவலைச் செய்தலைத் தவிர்த்து தான் வேண்டியவாறுமுகாதபடி (ச) தனக்குக் காவலாகிய அறிவும்நம்(ஞ) அறிவாலேஆராய்ந்த அடக்கமும் இயல்பாகத்தோன்றிய (ஈ)நாணுடனே வறுவிதாக அவற்றைக் கைகடக்கும்படி †மிகவும் என்னெஞ்சைக் கைக்கொண்டு தன்னலத்தை யான் காணுமல் மறைத்தவளைக் கூடும்வழி எவ்வழிதானென்றுஆராய்ந்துஇனி(எ)மடலேறுதலே கூடும்வழியென்று கருதி

க. இந்நூற்பக்கம் ஈஅசு: ஈ-ஆங் குறிப்புப் பார்க்க.

உ. "பல்லார்நக் கெள்ளப் படுமடன் மாவேறி" கலி. சுக. உஉ.

ங. "பிறையெனு நுதலவள் பெண்மை யென்பதி, நறைகம ழலக்கலா னையன கோசர, மறைதலு மனமெனு மத்த யானைய், னிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே" கம்ப. மிதிலைக்காட்சி. சo.

ச. "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ, னன்றின்பா லுய்ப்ப தறிவு" குறள். சஉஉ.

ஞ. (அ) "கற்றறிந்தார் கண்ட தடக்கம்" பழ. உசஈ. (ஆ) "கற்றறிவு குலமேன்மை கருணைபெரும் புகழ்செல்வங் கைம்மா றெண்ணு, துற்றதவங் கொடைசீர்மை யொழுக்கமருந் தவநியம முறவின் கேண்மை, மற்றெதிரி லாத்திண்மை வாய்மைமிகுந் நாய்மைகுணம் வனப்பி யாவும், பெற்றிடினு மடக்கமில்லாப் பெருமிதத்தா லத்தனைக்கும் பிழையுண் டாமால்" பிரபோத. விவேகன்சேனை. ஈங.

ஈ. "நோனு வுடம்பு முயிரு மடலேறு, நாணினை நீக்கி நிறுத்து" குறள். சகஈஉ.

எ. "மடலேறலாவது:—தலைவன் ஒவ்வாக் காமத்தால் பனங்கருக்காற் குதிரையும் பனந்தருவி லுள்ளனவற்றுல் வண்டில் முதலானவுஞ் செய்து அக்குதிரையின்மேலேறுவது; மடலேறுவான் நிகம்பாலுய் உடலெங்கும் நீறுபூசிக் (1) கிழி ஒலியர்கைப்படாது தானேகிட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவன் பெயரை வரைந்து கைப்பிடித்து

(பிரதிபேதம்) * இன்று, † மிகவுமன்னெஞ்சை.

(க)மடன்மாவிலே சூட்டவேண்டி நூலாலேநீலமணிபோலும் நிறத்தையுடைய (உ)பீலியையும் மற்றை அழகையுடைய பூளைப்பூவையும் ஆவிரம்பூவையும் எருக்கம்பூவோடே தொடுத்து அம்மடன்மாவிலே கட்டி வளப்பத்தையுடைய ஊரின் மறுதின்கண்ணே இவளெருத்தன் (ஈ) இவளைப் பாடும்; பாட்டை எல்லீரும் கேட்பீராக என்று சொல்லிப் பாடத் *தொடங்கி. எ - று.

ஊர்தடுவே ஈற்சந்தியில் ஆகார நித்திரையின்றி அக்கிழிமேற் பார்வையுஞ் சிந்தையு மிருத்தி வேட்கைவயத்தளாய் வேறுணர்வின்றி (2) ஆவூரினும் அழன்மேற்படினும் அறிதலின்றி மழை வெயில் காற்றால் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங் கூடிவந்து, (3) 'நீ மடலேறுதியோ, அவளைத்தருதும் சோதனைதருதியோ' என்றவழி, இயைந்தாளுயின் அரசனுக்கு அறிவித்து அவனேவலால் அவன் இனைந்து கையத்தந்து 'மடலேறு' என்றவழி, எறு ' முறைமை:—பூளை எலும்பு எருக்கு இவைகளாற் கட்டிய மாலையணிந்துகொண்டு அம்மாவில் ஏற அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும் அவ்வருளை உருண்டோடும் பொழுது, பனங்கருக்கு அறுத்தவிடமெல்லாம் இரத்தந் தோன்றுது வீரியந்தோன்றின் அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது. இரத்தங்கண்டழி அவனைக் கொலைசெய்து விடுவது. இவை புலவரால் காட்டிய வழக்கென்றுணர்க" என்பது தஞ்சை. கo க. உரையில் உள்ளது. இது தலோத்துங்க. கஉஅ. குறிப்பில் (1) தான் காமித்த தலைவியினுருவை ஒரு படத்தில் தன் கையாலெழுதி யென்றும் (2) ஆவுரிஞ்சினுமென்றும் (3) நீ மடலேறிச் சோதனைதந்தால் நீ இச்சித்த பெண்ணைக் கொடுக்கச் செய்வோமென்று கூற அதற்கு அவனிசைந்தாளுயி னென்றும் விளக்கத்தோடும் சிறிது சொல் வேறுபாட்டோடும் உளது. ஆவிரம்பூவும் அணிவதுண்டு.

க. சிலப். எo - எக-ஆம் அடிகளும் அவற்றினுரையும் பார்க்க.

உ. "பூவல்ல பூளை யுழிஞையொடியாத்த, புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி, பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி" கலி. கசo: ச - ஞ.

ஈ. (அ) "கழிகின்ற வென்னையு நின்றநின் கார்மயி றன்னையும்யான், கிழியொன்ற நாடி யெழுதிக்கைக் கொண்டு" (கோவையார். எசு.) என்பதன்விசேடவுரையில், 'தனக்கு' அவளையலென்னுங்கருத்தினையுய், நின் கார்மயிலென்றான். என்னையும் நின் கார்மயிறன்னையும் மடலிடத்தெழுதுவேனென்றதென்னை? கார்மயிலை யெழுதுவதன்றித் தன்னையு மெழுதுமோவெனின், மடலெழுதிக் கையிற்கொண்டால் உரையாடுகையின்றி இவனும் ஓவியமாகலின், மடலின்றலையிலே தன்னுரையுந்தன்பேரையும் அவளுரையு மவள்பேரையும் எழுதுகையால் என்னையு மென்றான்' என்றுள்ள குறிப்பால் மடலூர்பவற்கு உரையாடாமை உண்டென்றறியப்படுமாயினும் (ஆ) " என்றியான் பாடக் கேட்டு" (இ) "பாடுவேன் பாய்மா நிறுத்து" (ஈ)"பாடெனிற் பாடவும்

பிரதிபேதம்) * தொடங்கியென்ற கல்லெனவற்றையும்.

நகுவனவற்றையுங்காட்டி என்றான், மடலேறுதல்(க)வரைபாய்தலாகிய இரண்டினையுந் தான் பின்புகருதுதலின். இவனொருத்தன் எனத் தன்னைப் *பிறர்போற் கூறினான். அஃது உலகத்தார் பாடும் பாட்டன்மையுந் தோற்றுவித்துகின்றது.

இவளென்று சுட்டிற்று, கையில் (உ)எழுதிப்பிடித்த கிழியிலவளை.

கஉ (ங)படரும் பனையின்ற மாவுஞ் சுடரிழை
(ச)நல்கியா னல்கி யவை

எ-து: விளங்குகின்ற இழையினையுடைய, என்னுலே காமிக்கப்பட்டவள் எனக்குக் காதலித்துத் தந்தவை, வருத்தமும் வருத்தத்தாலுண்டான பனை மீன்ற மடலாற் செய்த குதிரையும். எ - று.

வல்லேன் சிறிதாங்கே, யாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ" (உ) "அணிநிலைப் பெண்ணை மடலூர்ந் தொருத்தி, யணிநலம் பாடி வாற்கு" (ஊ) "வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாட" (கலி. கங.அ: உசு, கஙக: கங, கசo: கங - கச, கசக: டு - சு, உஉ.) என இந்நூலுட் பலவிடத்தும் வருதலால், அவளைக் குறித்துப் பாடுதலாகிய உரையாடலுண்டென்பது தெளிவாம். இந்நூற்பக்கம், அடிசு: டு-ஆம் குறிப்பும் பார்க்க.

க. (அ) "விளையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளநிறைக், கரையூர் பொழுதினங் காளையர் தாங்கிழி கைப்பிடித்துத், தரையூர் தொறும் பெண்ணை மாமட லூர்வர்.தவிர்த்துபின்னும், வரையூர்வர் தஞ்சையர் கோன் வாணன் மாறையில் வாணுதலே" நந்தை. கoஉ. (ஆ) "முன்னேன் றிருக்கொடி யேற்றத்தி னன்முயங் காதொழிந்தாற், பின்னேன் மழைக்குடை வீழ்ந்தொழி வார்.....வசுதேவன் பெற்ற விருவரிலே" (இ) "பரசன் சொரூப மெடுப்பது வோமலை பாய்ந்துகடன், முரசன் சொரூப மெடுப்பதுவோ.....அன்பர் பேரெண்ணமே" மாறன். கஉசு, கருச. (ஈ) "மடவார் காம வெள்ளத்தின் மோதலுற்றூர், கிழியொன்று கைப்பிடித் தேமட லேறுவர் கேண்மையற்றூர், பழியொன்று மெண்ணில ராய்ப் பறம் பேறியும் பாய்வர்களே" கிருவாவடுதுறைக். ககக.

உ. இந்நூற்பக்கம் அடிஅ: உ - ஆம் குறிப்பில், முதலிலுள்ள செய்யுளாலும் "கிடம்பெற்ற காரினி யோர்யாணு மங்கையுஞ் சித்திரஞ்சேர், படம் பெற்றிருக்கிலன் றேதிரு மாலெனப்பாவிப்பரே" (மயூரகிரி. கசக.) என்பதனாலும் தலைவனுருவும் எழுதுவதுண்டென்று தெரிகிறது.

ங. "தொடலைக் குறுந்தொடி தந்தான் மடலொடு, மாலை யுழக்குந் துயர்" குறள். ககஙடு.

ச. (அ) "நல்கினு நல்கா னுயினும்" புறம். அo: டு; (ஆ) "கல்லினே கேளாய்" மணி. கஉ: டுசு.(இ) "நுமக்குரீர் கல்குதி ராயின்"

(பிரதிபேதம்) * பிறன்போற்.

கச (க)பொறையென் வரைத்தன்றிப் பூநுத லீத்த
(உ)நிறையழி காமநோய் நீந்தி யறையுற்ற
(ங)வுப்பியல்*பாவை யுறையுற் றதுபோல
வுக்கு விடுமென் னுயிர்

எ - து: என்னுடைய உயிர்தான் †பொறுத்தல் என் எல்லைத்தன்றாகப் பொலிவுபெற்ற நுதலினையுடையாள் தந்த, நிறைஎன்னுங் குணம் அழிதற்குக் காரணமான காமநோயை நீந்தி உப்புப் பாத்தியிலே கிடந்த உப்பால் இயன்ற பாவை மழைத்துளியை உற்ற தன்மைபோலக் கரைந்துவிடா நின்றது. எ - று.

கஅ பூளை (ச)‡பொலமல ராவிரை (ரு)வேய்வென்ற
தோளா ளெ[ம](ன)க்||கீத்த பூ

எ - து: வேயை வென்ற தோளையுடையாள் எனக்குத் தந்த பூக்கள் பூளைப்பூவும் பொன்போன்ற பூவையுடைய ஆவிரம்பூவும். எ - று.

எனவே, தான் + கொடுத்தன நல்லபூ என்றான். ÷பொலமல ரென்னும் முடிவு "தொடரியலான" (சு)என்னும் இலேசான் முடித்தாம்.

க. "இந்நோய், பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயின்" (கலி. ருஅ: உo-உக) என்பதும் அதன் குறிப்பும் "பொறுக்கல்லா நோய்செய்தாய்" (கலி. கச: கக) என்பதும் ஒப்புநோக்கற்பாலன.

உ. (அ) "நிறையு முண்டோ காமங் காழ்கொளின்" மணி. ரு: உo. (ஆ) "நிறையென்ப தில்லைக் காம நேர்நின்று சிறக்கு மாயின்" சூளாமணி. கல்யாண. கருரு.

ங. (அ) "நெடுவெள் ளுப்பி னிரம்பாக் குப்பை, பெரும்பெயற் குருகி யாஅங்கு" (ஆ) "மிகுபெய, லுப்புச்சிறை நில்லா வெள்ளம் போல, நாணுவரை நில்லாக் காம நண்ணி, நல்கினள்" அகம். உoசு: கச-கரு. உoஅ: கஅ - உக. (இ)"உப்பின் பெருங்குப்பை நீர்படியி னில்லாகும்" திரி. அங (ஈ) "கடும்புன னெருங்க வுடைந்துநிலை யாற்றா, வுப்புச் சிறைபோ லுண்ணெகிழ்ந் துருகி" பெருங். (ங) உo: கஉo - கஉக.

ச. "பொன்னே ராவிரைப் புதுமலர்" குறுந். கஎங.

ரு. வென்றவென்பது மரபுபற்றி உவமச்சொல்லாய் வருதற்கு, "வேய் வென்ற தோள்" என்பது மேற்கோள்; தொல். உவம. சூ. கஎ. இளம்.

சு. தொல். புள்ளிமய. சூ.சுக.இச்சூத்திரத்தின் இளம். நச். உரைகளிலும் ஒன்றின முடித்தலால் மென்கணம் வந்தவிடத்தும் பொன் என்பது

(பிரதிபேதம்) *பாறை, † பொறுத்ததென் னெல்லை, ‡ பொனமல ராவிரம். || அளித்தபூ. + தொடுத்தன நல்ல, ÷ பொனமலரென்னுமுடிபு 'தொடரியல்' 'ஆவிரை' என்னு மிலைசான்முடித்தாம்.

உ0 (க)உரிதென் வரைத்தன்றி யொள்ளிழை தந்த
*பரிசழி (உ)பைதலேய் மூழ்கி (ங)யெரிபரந்த
நெய்யுண் மெழுகி னிலையாது பைபயத்
(ச)தேயு மளித்தென் னுயிர்

எ - து: ஒள்ளிய இழையினையுடையாள் என்னுற் பொறுக்குமெல்லைத் தன்முக எனக்குரித்தாகத் தந்த, என்னியல்புகள் அழிதற்குக் காரணமான, வருத்தத்தையுடைய காமநோயிலே என்னுயிர் அழுந்தி, நெருப்புப் பரந்த நெய்யுள்ளே கிடந்த மெழுகு மெத்தென உருகித் தேயுமாறுபோல †நிலையில் லாதே மெத்தென மெத்தெனத் தேயாநின்றது; இஃது எல்லாராலும் அளிக் குந்தன்மையுடைத்து. எ - று.

உச இளையாரு மேதி லவரு ‡முளையயா
னுற்ற துசாவுந் துணை

எ - து: யானுற்ற காமநோய்க்கு யான் உளையும்படி உசாவுந் துணை இளையபிள்ளைகளும் இக் காமநோய்க்கு அயலானுமே; பிறரில்லை. எ - று.

உசு என்றியான் பாடக் கேட்டு
அன்புறு கிளவியா ளருளிவந் தளித்தலிற்
றுன்பத்திற் றுணையாய ||மடலினி யிவட்பெற
வின்பத்து ளிடம்படலென் றிரங்கின ளன்புற்

பொலமெனத் திரிந்து வருதலுண்டென்பதற்கு, "பொலமலராவிரை" என்பது மேற்கோள்.

க. உரிது. அகம். கo: எ; தூளா. மந்திர. நசு, அரசியல். நடுஎ; கலி. எசு: கள; அதன் குறிப்பும் பார்க்க.

உ. "பைதலேய்" கலி. நஉ:கசு, கநo: கஅ.

ங. (அ) "அருணா ணளிய வழல்சேர் மெழுகொத் தழிகின்றதே" கோவை யார். சுசு. (ஆ) "காதல ராயினுக் காதல் கையிகந், தேதில ராயின மடிகட் கின்றென, ஆதலே மெழுகினின் றுருகினர்" தூளா. மூத்திச். நசு. (இ) "உண்ணறை யழிய வுலையிடு மெழுகொத் தொருமொழி தோழியர்க் குரைத்தாள்" பிரமோத். பிரதோட. நஎ. (ஈ) "அழல்படு மெழுகே யென்னக், கொம்மென வுருக வுள்ளங் குதுகலித்து" (உ) "தீசேர் மெழுகென வுள்ளம் விள்ள" கந்த. திருநகர். கஉ.மேரு. சு. (ஊ) "உலையின் மீது மெழுகொத் துருகினுள்" அரிச். மயான. சுசு. (எ) "மெழுகா ரழலுற் றெனவிளகி" (ஏ) "மெழு கொள்ளெரிக்கதுவி யாங்குளநெகிழ்ந் துருகினுள்" விநாயக. முக்கலர். டு; கிருச்சமதரு.உ.

சு. "துடியிடையீ, ரருளா தொழியி னெழியா தழியுமென் னுயிரே" கோவையார். எசு.

பிரதிபேதம்) * பரிவழி. † கிலேகில்லாதே, ‡ உளையயானுற்றதகாறுங், ||மடலினிவட்பெற.

றடங்கருந் தோற்றத் தருந்(க)தவ *முயன்றோர் தம்
முடம்பொழித் துயருல கினிதுபெற் றாங்கே

எ - து: இப்படி இப்படி யான்பாட அன்புறுகிளவியாள் அதனைக்கேட்டு அருள்பண்ணி அதன் மேலே அன்புற்று வந்து என்னை அளிக்கையினாலே, மனவேட்கை அடங்கின அரிய விளக்கத்தையுடைய செய்தற்கரிய தவத்தை முயன்றோர் தம்முடம்பை இவ்வுலகிலேபோகட்டுச் சுவர்க்கத்தை †இனிதாகப் பெற்றாற்போல, துன்பத்திற்குத் துணையாய் நின்ற மடல் இனி ‡இவளைப் பெறும்படியாக இன்பத்துக்கு இடம்படக்கடவா (?) னென்று இரங்கினா ||ளென்றான். எ - று.

இது பூளையாவிரை எனத் தளைவிரவின, பாட்டிடைமிடைந்த, ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வாராது தரவும்போக்கும் வந்த, கலிவெண்பாட்டு. (உக)

(கரூகூ.) சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனானா லிவ்விருந்த
சான்றீ ருமக்கொன் றறிவுறுப்பேன் மான்ற
ரு துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சே
னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப

க. (அ) "உடம்பொழிய வேண்டி னுயர்தவ மாற்று" (ஆ) "தவத்தாற் சுவர்க்கமாம்" சிறுபஞ்ச. சு; ரூசு. (இ) "சுவர்க்கந் தவத்தால்" ஏலாதி. எஎ. (ஈ) "ஒழுக்கிய லருந்தவத் துடம்பு நீங்கினா, ரழிப்பரும் பொன்னுடம் படைந்த தொப்பவே" சீவக. ரூஉரு. (உ) "புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க மென்னும் தருமறைப் பொருளே" கம்ப. நகரப். ரு. என்பவையும் (ஊ) "தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ, ததன்பய மெய்திய வளவை மான" பொருந. கூக - கூஉ. (எ) "உடம்பொடு துறக்கநக ருற்றவரை யொத்தார்" (ஏ) "உறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார்" (ஐ) "துறந்த செல்வ னினையத் துறக்கந்தான், பறந்து வந்து படிந்தது பல்சனர், பிறந்து வேறொருலகுபெற் றாரென, மறந்து வைகினர் முன்னைத்தம் வாழ்வெலாம்" (ஒ) "மெய்யி னோடருந் துறக்கமுற் றாரென" கம்ப. கடிமணப். க. மந்திர. எரு. கிளைகண்டு நீங்கு. எ. மீட்சி. கருச. என்பவையும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * முயன்றோருடம், †இனிதாற்பெற்றாற், ‡இவள் பெறும்படியாக, ||என்றான்.

கo வோங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் னெவ்வநோய்
தாங்குத றேற்று விடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் இறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறுத்து;

கச யாமத்து மெல்லியு மெவ்வத் திரையலைப்ப
மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
றேமொழி மாத ருருஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு;

கஅ உய்யா வருநோய்க் குயவாகு மைய
லுறீஇயா ளீத்தவிம் மா;

உo காணுந ரெள்ளக் கலங்கித் தலைவந்தெ
ணெழின் முற்றி யுடைத்துள் ளழித்தரு
மாணிழை மாதரா ளெனவெனக் காமன
தாணையால் வந்த படை;

உச காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா;

உகூ அகையெரி யாகுதென் குருயி செஞ்சும்
வகையினு ளுள்ளஞ் சுடுதரு மன்னே
முகையே ரிலங்கெயிற் றின்னகை மாதர்
தகையாற் றலைக்கொண்ட நெஞ்சு;

ஙo அழன்மன்ற காம வநோய் நிழன்மன்ற
நேரிழை யீத்தவிம் மா;

ஆங்கதை;

ஙூ அறிந்தனி ராயிற் சான்றவிர் தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்றோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவ
ருயர்நிலை யுலக முறீஇ யாங்கென்
துயர்நிலை தீர்த்த னுந்தலைக் கடனே.

இது மடலேறுகின்ற தலைவன் சான்றோர்க்குக் கூறியது.

இதன் பொருள்.

(க)சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
(உ)பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி (ங)யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனானா (ச)லிவ்விருந்த
சான்றீ ருமக்கொன் றறிவுறுப்பேன் மான்ற
ரு துளியிடை (ரு)மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சே
னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து (கூ)மணியார்ப்ப
கo வோங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் னெவ்வநோய்
தாங்குத றேற்றா விடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
(எ)பாடுவேன் பாய்மா நிறுத்து

எ - து: நற்குணங்கள் எல்லாம் அமைந்தீர்! நற்குணங்களெல்லாம் அமைந்தீர்! நீர் வாழ்வீராக! பிறருடைய நோயும் தம்முடைய நோய்போலே எந்நாளும் பேணி அதனாற் பெறும் அறனை அறிந்து போதுதல் உலகத்துள்ள சான்றவர்க்கெல்லாம் * முறைமையானால், நுமக்கும் அது முறைமையென்று கருதி நுமக்கொரு காரியத்தினைக் கூறுவேன்; அஃதியாதெனின், ஒருத்தி

க. "சான்றவிர் வாழியோ சான்றவிரென்னும்" என்பது கண்டோர் கேட்பாராகத் தலைமகன் கூற்று நிகழ்ந்ததற்கு மேற்கோள்; தொல். செய். சூ. ககூசு. பேர்; நச்.

உ. "அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய், தந்நோய்போற் போற்றாக் கடை" குறள். ஙகரு.

ங. "தோன்றிமாய்ந் துலக மூன்றிற் றுயரெய்து முயிர்க டம்மை, யீன்ற தாய் போல வோம்பி யின்பத்து ளிருத்தி நாதன், மூன்றுலகிற்கு மாக்கி முடிவிலாத் தன்மை நல்கு, மான்றநல் லறத்தைப்போலு மரிய தொன் றில்லை கண்டாய்"

ச. "அவ்வெதிர்" (கலி. கo: கங) என்பதும் அதன் குறிப்பும் ஈண்டு அறிதற்பாலன.

ரு. கலி. கங அ: ரு - கக - ஆம் அடிகள் ஒப்புநோக்குக.

கூ. "பனைபடு கலிமாப், பூண்மணி கறங்க வேறி" குறுந். கஎங.

எ. இந்நூற்பக்கம் அருஅ: உ-ஆம் குறிப்பில் (ஆ) முதலியவை பார்க்க.

(பிரதிபேதம்) * முறைமையானாலும்.

மயங்கினமழைக்கு நடுவில் மின்போலே வந்துதோன்றித் தன்னெளியோடே தன்னுருவையும் என்னைக் காணப்பண்ணி என்னை அளிக்குந்தன்மையளாய் அளித்துப் *பின்னர் என்னெஞ்சைத் தான்வரும்வழியாகக்கொண்டெய்ட்டான்; அதனை முதலாகக்கொண்டு துயில்கொள்ளேனுய் அசைகின்ற அழகினையுடைய (க)ஆவிரையினது பூவோடே எருக்கினது கட்டுதலையுடைய அழகினையுடைய கண்ணியையுஞ் சூடி வளருங் கரிய பனைமடலாற் செய்த குதிரையை மணிகள் ஆரவாரிப்ப ஏறி அப்பாய்மாவை (உ)மனத்தே நிறுத்தியான் நீங்காமனின்று வருத்தத்தைத் தருகின்ற என் காமநோயைத் தாங்கமாட்டாமையால் உண்டான †மனவருத்தத்திற்கு இளைப்பாறுதலாக இறுகின பூணினையுடைய மாதர் என்னை வருத்தின கூற்றிலே ஒருகூற்றினைப் (ங) பாடுவேன்; அதனை இவ்விடத்திருந்த சான்றீர்! கேளுமென்றான். எ – று.

பலராதலிற் சான்றீர் சான்றீரென்றான். ஈர் என்று விளியேலாது (ச) குறுகிநின்றது. ஓ, அசை. பின்பு சான்றீர் என்றது தான் பின்பு கூறுகின்றதற்கு எதிர்முகமாக. ‡கொண்டும் என்னும் உம்மை இசைநிறை. ‖ "ஒருத்தியொளியோடு.....தஞ்சேன்" என்றது (ஞ)தன்கட்டோன்றிய அசைவு பற்றி அவலம் பிறந்தது.

கசு. (சூ)யாமத்து மெல்லியு மெவ்வத் திரையலைப்ப
(எ)÷மாமேலை னென்று மடல்புனையா நீந்துவேன்

க. இந்நூற்பக்கம் அடிஎ: எ-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ) "மன்றத்து மடலேறி, நிறக்குவென் போல்வல்யா னீடு பழியே" கலி. நிஅ: உஉ – உங. (ஆ) "மடற் கலிமா மன்றத் தேறித்தன், னணி நலம் பாடினு மறியாள்" தொ. என்பவற்றை நோக்க, 'மனத்தே' என்பது 'மன்றத்தே'என்று இருக்கவேண்டியதென்று தோற்றுகிறது.

ங. இந்நூற்பக்கம் அடிஅ: ங – ஆம் குறிப்பில் (ஆ) முதலியவை பார்க்க.

ச. 'அர்' ஈராய் விளியேற்கும்; தொல். விளி. சூ. உக.

ஞ. இச்செய்திக்கே "துளிவிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி.....தஞ்சேன்" என்னும் அடிகள் மேற்கோள்; தொல். மெய்ப். சூ. ஞ; நச்; இ – வி. சூ. ஞஎஅ.

கூ. "யாமத்து மெல்லியும்" என்னும் பகுதி (தொல். அகத். சூ. ஞச. நச்) சுட்டி ஒருவர்பெயர்கொள்ளாப் பெருந்திணைக்கும் "காம மேதகர் வார்தம காதலாஅல், யாம மும்பக லும்மறி யாமையால்" (சீவக. கஙஞ.) என்புழி யாமம் இரவென்னும் பொருளில் வருமென்பதற்கும் மேற்.

எ. "மாமேலெனென்று.....பட்டு" என வருதலின் இச்செய்யுள் எறியமடற்றிறமான பெருந்திணையென்பர் நச்சினர்க்கினியர்; தொல். (பிரதிபேதம்) * பின்னர் நெஞ்சை, † மனம் வருத்த, ‡ கொண்டும்: உம்மை, ‖ ஒத்தி. ÷ மாமேலி னின்று.

றேமொழி மாத ருறாஅ துறீஇய
(க)காமக் கடலகப் பட்டு

எ - து: தேன்போலும் மொழியினையுடைய மாதர் *தான் காமுறாதே என்னைக்காமுறுத்தின காமமாகிய கடலிலே அகப்பட்டு (உ)உசாத்துணை இல்லாத நடுவியாமத்தும் உசாத்துணையுள்ள பகலிடத்தும் † மனவருத்த மாகிய திரைகள் வந்து அலைக்கையினாலே மாவின்மேல் இருக்கின்றேனிருக்கின்றேனென்று மனத்தாற்கருதியிருந்து அம்(ங)மடன்மாஒருதெப்பமாக அக்கடலை நீந்துவேன்; அஃது என்னிலை; என்றான். எ - று.

கஅ (ச)உய்யா வருநோய்க் ‡குயலாகு மைய
லுறீஇயா ளீத்தவிம் மா

எ - து: என்னை மயக்கமுறுத்தினவள் அதற்கு மருந்தாகத் தந்த இம் மடன்மா யான் பிழையாமைக்குக் காரணமான அரிய காமநோய்க்குப் பிழைக்கும்படிக்குச் செய்வதொன்றாய் இராநின்றதென்றான். எ - று.

உ0 (டு)காணுந ரெள்ளக் ||கலங்கித் தலைவந்தெ
னாணெழின் முற்றி யுடைத்துள் ளழித்தரு

அகத். சூ. கங, சூ. டுக. இ - வி. நூலாரும் இச்செய்யுளை அதற்கே மேற்கோள் காட்டினர்; இ - வி. சூ. டுகூக.

க. (அ) "காமக் கடல்" (ஆ) "காமக் கடும்புனல்" குறள். ககசுச. ககசுஎ.

உ. (அ) "மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா, வென்னல்ல தில்லை துணை" குறள். ககசுஅ. என்பதும் (ஆ) "மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற" குறள். ககஙசு. என்பதற்கு, 'எல்லாருந் துயிலும் இடையாமத்தும் யானிருந்து மடலூர்தலையே கருதா நிற்பேன்' என்று பரிமேலழகர் எழுதியிருக்கும்உரையும் ஈண்டு அறிதற்பாலன.

ங. (அ) "துறைசையன்னார், கணையார் விழிதந்த காமக் கடலைக் கடக்க நெஞ்சே, புணையாகக் கோடன் மடலன்றி வேறு பொருளில்லையே" திருவாவடுதுறைக். ககஅ. (ஆ) "அடலான வேல்விழி யார்கை கொடாவிடி லாசைநெடுங், கடலானசோகச் சுழியூடகப்பட்ட காமுகர் தா, மடலான தோணிகொண் டேநீந்திச் சேர்வர் மணக்கரைக்கே" மாறன். கஉடு.

ச. (அ) "என்னு ளிடும்பை தணிக்கு மருந்தாக, நன்னுத லீத்த விம்மா" கலி. கசஂ: கடு - கசு. (ஆ) "உயலாற்றா, வுய்வினோய்" குறள். ககஎச.

டு. (அ) "பிற ரெள்ளத் தோன்றி, யொருநாண் மருங்கிற், பெருநாணீக்கித், தெருவி னியலவுந் தருவது கொல்லோ" குறுந். கஅஉ. (ஆ) "பல்லார்நக் கெள்ளப் படுமடன் மாவேறி" கலி. சுக: உஉ.

(பிரதிபேதம்) * தாங் காமுறாதே, † மனம் வருத்த ‡ உயலாகும், || கலங்கத்.

மாணிழை மாதரா ளேஎரெனக் காமன
*தாணையால் வந்த படை

எ - து: மாட்சிமைப்பட்ட இழையினையுடைய மாதராள் எரால் வந்த வருத்தமென்று யான் கூறும்படியாகக்(க)காமனுடைய எவலாலே வந்த காம நோயாகிய படை என்னைக் கண்டார் இகழும்படி யான்கலங்க என்னிடத்தே வந்து என்னுடைய(உ)ஆண்டன்மையின் அழகாகிய மதிலைச் சூழவிட்டிருந்து புறத்தையெல்லாமுடைத்துப் பின்னர் உள்வாயை அழியா †நிற்குமென்றான். எ - று.

கலங்கி, கலங்க என்க.

உச (ங)காமக் கடும்பகையிற் ‡றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா

எ - து: காமமாகிய கடியபகை ஆண்மையை உள்ளும்புறம்பும் அழித்தலாலே இன்னன்ம்' வடிவுகொண்டு தோன்றினஎனக்கு அழகையுடைத்தாகிய நுதலினையுடையாள் தந்த இம்மடன்மா, பரிகாரமாயிற்றென்றான். எ - று.

உசு அகையெரி யாஞதென் னு(ச)ருயி ரெஞ்சும்
‖வகையினு ளுள்ளஞ் சுடுதரு மன்னே
முகையே நிலங்கெயிற் றின்னகை மாதர்
தகையாற் றலைக்கொண்ட ÷நெஞ்சு

எ - து: முல்லைமுகையை ஒக்கும் இலங்குகின்ற எயிற்றையும் இனியதாகிய மகிழ்ச்சியையுமுடைய மாதருடைய அழகாலே அவளிடத்தைப்பற்றிக்

க. (அ) "நீழைமை பலவுஞ் செய்து பினிப்படை பரப்பி வந்து, வாழுயிர்ப் பொழித்து வவ்வி வலிந்துயிர் வாங்கி யுண்ணுங், கூழைமை பயின்ற கூற்ற வரசனே" (சூளா. துறவு. கஅ) என்பதும் (ஆ) "காலனைச் சூழ்ந்த நோய்போ னபுலமா வியலர் சூழ" (சீவக. ககசஅ) என்பதற்கு, 'காலன் எவினவிடத்தே சேறற்கு அவனைச் சூழ்ந்த நோய் போல மாவின்மேலே நபுல வியலர் சூழ்ந்துவர' என்றெழுதியிருக்கும் உரையும் இதன் நிழலாக இருக்கின்றன.

உ. (அ)"நாணெனுநல்லாண்மைபண்டையே னின்றடையேன், காமுற்று ரேறு மடல்" (ஆ) "காமக் கடும்புன லுய்க்குமே நாணெனு, நல்லாண்மை யென்னும் புணை" குறள். ககங. ககஎ.

ங. "காம முழந்து வருந்தினுக் கேம, மடலல்ல தில்லை வலி" குறள். ககஙஅ.

ச. "உயிரெஞ்சு துயர்செய்தல்" கலி. சுஅ: சு.

(பிரதிபேதம்) * ஆணையான். † நிற்குமேயென்றான். ‡ தோன்றினேற்கு, ‖ வகையினுள், ÷ நோய்.

கொண்ட என்னுடைய நெஞ்சிடத்து உள்ளத்தைச் சுடப்பட்டு எரிகின்ற காமத்தீ என் அரிய உயிர்போங் கூற்றுலே அமையாதே நின்று (க)சுதலைச் செய்யும்; ஐயோ! யான் என்னனம் ஆற்றுவேனென்றான். எ - று.

(உ)உறுப்புடையதுபோலே நெஞ்சுக்கு உள்ளமுண்டென்றான்.

கூ0 அழன்மன்ற காம வருநோய் நிழன்மன்ற
நேரிழை யீத்தவிம் மா

எ - து: காமமாகிய பொறுத்தற்கரியநோய் அறுதியாக நெருப்பு; ஒத்த இழையினையுடையாள் அதற்குப் பரிகாரமாகத்தந்த இம்மடன்மா அறுதியாக அதற்கொரு நிழலாய்இருந்ததென்றான். எ - று.

ஆங்கதை

கூக அறிந்தனி ராயிற் சான்றவிர் (ங)*தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்றோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவ

க. "ஊர்தலைக்கொண்டு.....காமத்தீ, நீருட் புகினுஞ் சுடும்" (கலி. கசை: இக - கூஉ) என்பதும் அதன் குறிப்புள் இவ்விடத்துக்குப் பொருந்துவனவும் ஒப்புநோக்கற்பாலன.

உ. தொல். பொருளி. சூ. உ.

ங. இந்திரன், விண்ணுலகில் தன்பால் வந்த யயாதியரசனை நோக்கிப் பலவும்வினவுங்கால், 'தவத்தில் நீ யாருக்கு ஒப்பாயினை' என்றதற்கு அவன், 'தவத்தில் எனக்கு ஒப்பாளொருவனையும் நான் காணவில்லை' என, இந்திரன், 'பிறரை அவர் பெருமையை அறியாமலே அவமதித்த இத்தவற்றால் நீ மேலுலக வாழ்வொழியக் கீழே விழுவாய்' என, 'அவ்வாறுயின் நல்லோரிடையே விழவேண்டுகிறேன்' என்று அவ் விந்திரன்பால் அவ்வரம்பெற்று விழுமரசன் சிலர் வேள்விசெய்யு மிடத்துக்கு நேரே இறங்குகையில் அங்கிருந்த அஷ்டகன் மிகப் பல செய்திவினவ, அவற்றுக்குவிடைகள்கூறிக் கீழேவீழ விரைந்தபோது, அவனும் பிரதர்த்தனனும் வஸுமனஸும் சிபியும் தமக்கு மேலுலக முண்டென்று கேட்டறிந்து அவ்வுலகங்களை யயாதிக்குக் கொடுப்ப, அவன் கொள்ளேனெனமறுத்துப் பின்பு அங்குவந்த தவமகளை அவள் கூற்றால் தன்மகள் மாதவியென்றும் அவர்களை அவள்பெற்ற பிள்ளைக ளென்றும் தெளிந்து அவள் கூறிய நியாயத்தால் அவளும் அந்நால்வர் களும்அளித்த தவப்பயனைமாற்றவொண்ணாதவற்று, மேலுலகினின்று அங்குவந்த ஐந்து பொற்றேர்களில் தனித்தனியே அந்நால்வர்க ளுடன்ஏறி மேலுலகடைந்தனனென்று ஸ்ரீமஹாபாரதம். ஆதிபர்வம்.

பிரதிபேதம்) * தான்றய மொழீஇ.

(க)ருயர்நிலை யுலக முறீஇ யாங்கென்
றுயர்நிலை *தீர்த்த னுந்தலைக் கடனே

எ - து: என்று கூறி என்னிடத்துச் செல்கின்ற வருத்தத்தை நீர் அறிந்தீராயிற் சான்றீராயுள்ளீர்! அமைந்த சான்றோர் இவன் தவஞ்செய்தற்கு உரியனென்று தவத்துள்ளே †கூட்டிக்கொள்ளப்பட்ட அரசனே, அவன் தான் தவஞ்செய்தலினீங்கித் துறக்கத்திற் சேறலை வழுவுகையினாலே, அவ்வழுவு தலை அவர் மீட்டித், தவஞ் செய்வித்து, உயர்ந்த நிலைமையையுடைய சுவர்க்கத்தேபோகவிட்டுத் துயர் ‡தீர்த்தாற்போல, (உ)என் துயரினதுதன்மையைப் போக்குதலும் நும்மிடத்து முறைமை; எனச் சான்றோரைநோக்கிக்கூறினன். எ - று.

இது தன்கட்டோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

இது(ங)தாவும் போக்கும் ||பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு. (உஉ)

(கசO.) கண்டவி ரெல்லாங் கதுமென வந்தாங்கே
பண்டறியா தீர்போல நோக்குவீர் கொண்டது
மாவென் றுணர்மின் மடலன்று மற்றிவை
பூவல்ல பூளை யுழிஞையோ டியாத்த
ரு புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி
யடர்பொன் னவிரேய்க்கு மாவிரங் கண்ணி
நெடியோன் மகனயந்து தந்தாங் கீனைய
வடிய வடிந்த வனப்பினென் னெஞ்ச
கo மிடிய விடைக்கொள்ளுஞ் சாய லொருத்திக்
கடியுறை காட்டிய செல்வேன் மடியன்மி
னன்னே னெருவனேன் யான்;

அO - அஎ-ஆம் அத்தியாயத்துள்ள செய்தி இம்மூலத்துக்கு ஒருவாறு பொருந்துமென்று தோற்றுகிறது.

க. (அ) "உயர்நிலை யுலகம்" மது. கசுஎ. (ஆ) "உயர்நிலை யுலகத்து" புறம். நO: கநு.

உ. "சான்றீரு நிருந்த வவையத் தற்றே, ஞசாகென்னும் பூசல்போல, வல்லே களைமதி யத்தை" புறம். உசுசு: அ - கO.

ங. தாவும் போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச் சுரிதகத்தான் வந்ததற்கு இச்செய்யுள் மேற்கோள்; தொல். செய். சூ. கநிசு. பேர்; நச்.

(பிரதிபேதம்) *தீர்த்தலுந்தலை, †கூடிக்கொள், ‡ தீர்ந்தாப்போல. ||பாட்டுமிடைமிடைந்த.

கங என்னானும், பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ
வென்னு ளிடும்பை தணிக்கு மருந்தாக
நன்னுத லீத்தவிம் மா;

கஎ திங்க ளரவுறிற் றீர்க்கலா ராயினுந்
தங்காதல் காட்டுவர் சான்றவ ரின்சாய
லொண்டொடி நோய்நோக்கிற் பட்டவென் னெஞ்சநோய்
கண்டுங்கண் ணோடாதிவ் வூர்;

உக தாங்காச் சினத்தொடு காட்டி யுயிர்செகுக்கும்
பாம்பு மவைப்படி லுய்யுமாம் பூங்கண்
வணர்ந்தொலி யைம்பாலாள் செய்தவிக் காம
முணர்ந்து முணராதிவ் வூர்;

உரு வெஞ்சுழிப் பட்ட மகற்குக் கரைநின்றா
ரஞ்சலென் றாலு முயிர்ப்புண்டா மஞ்சீர்ச்
செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காம
மறிந்து மறியாதிவ் வூர்;

ஆங்க;

ங0 என்க ணிடும்பை யறீஇயினெ னுங்கட்
டெருளுற நோக்கித் தெரியுங்கா லின்ன
மருளுறு நோயொடு மம்ம ரகல
விருளுறு கூந்தலா ளென்னை
யருளுறச் செயினுமக் கறனுமா ரதுவே.

(க)இது மடலேறுவேனென்ற தலைவன் கண்டார்க்குக் கூறியது.

இதன் பொருள்.

(உ)*கண்டவி ரெல்லாங் †கதுமென வந்தாங்கே
பண்டறியா தீர்போல ‡நோக்குவீர் கொண்டது

க. இச்செய்யுளையும் ஏறிய மடற்றிறமான பெருந்திணையென்று (தொல். அகத். சூ. கங. உரையில்) இவர் கூறியிருக்கிறார்.

உ. "கண்டவிரெல்லாம்.....நோக்குவீர்" என்பது எல்லாமென்னுஞ் சொல் சிறுபான்மை முன்னிலைப் பன்மைக்கண் வருமென்பதற்கு மேற்கோள்; தொல். பெயரி. சூ. ௩௩. இ - வி. சூ. கக௧.

(பிரதிபேதம்) * கண்டனிர், † கதுமெனவாங்கே, ‡ நோக்குநிர்

(க)மாவென் றுணர்மின் மடலன்று மற்றிவை
பூவல்ல (உ)பூளை யுழிஞையோ டியாத்த
நு புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி
யடர்பொன் னவிரேய்க்கு மாவிரங் கண்ணி
(ங)கெடியோன் மக*னயந்து தந்தாங் கனைய
வடிய வடுத்த வனப்பினென் னெஞ்ச
கo மிடிய †விடைக்கொள்ளுஞ் சாய லொருத்திக்
(ச)கடியுறை காட்டிய செல்வேன் மடியன்மி
னன்னே னெருவனேன் யான்

எ - து: என்னைக்கண்ட நீங்களெல்லாம் (நு) கடுகவந்து அவ்வூரிடத்து என்னைப் பண்டு அறியாதீர்போலப் பாராதின்றீர்; காப்பெய்தமணியைக்கழுத்திலே கட்டிக் கையாற் பிடித்தலமைந்த வாய்க்கயிற்றோடே யான் கையிற் கொண்டது மடன்மாவன்று, ஏறுவார் ஏறப்படுங் குதிரையென்றும் பின்னைத் தலையினும் மார்பினுங் கிடக்கின்ற இவை தகடாகிய பொன்னினது விளக்கத்தைஒக்கும் ஆவிரம்பூவாற்செய்த கண்ணியும்(சு) உழிஞைப் பூவோடே

க. (அ) "மாவென மடலு மூர்ப" தருந். கள. (ஆ) "மாவென் றுணைத்து மடலேறுப மன்று தோறும்" வளையாபதி.

உ. இந்நூற்பக்கம் அடுள: எ - ஆம் குறிப்புப் பார்க்க.

ங. (அ) : "மதனற்குமெழுத வொண்ணுச், சிதையைத் தருதலாலே" (ஆ)"இந்தத் தோன்றலே,யெழுதலாங்கொலிம் மன்மதனெலென்றுள்" கம்ப. மிதிலைக்காட்சி. நு. உலாவியல். உடு. என்பவற்றுல் காமன், ஓவியத்துறை கைபோயவனெனப்படுதலும் இங்கே நோக்கற்பாலது.

ச. "அடியுறை" கலி. நிச: ச. அதன் குறிப்பும் பார்க்க.

நு. (அ) "கதுமெனக் கண்டவர்க்கு" (ஆ) "கதுமென நோக்கன்மின்" கலி. சுo: நு; கசஎ: கள. (இ) "கதுமெனத் தாளெக்கி" குறள். ககஎங. (ஈ) இந்நூற்பக்கம் சஉஉ: எ-ஆம் குறிப்பும்பார்க்க.

சு. (அ) 'உழிஞை - கொற்றுன்; அது குடநாட்டார் வழக்கு' என்பது புறம். நுo. விசேடவுரை. (ஆ) இது கொடியை யுடையதென்று "நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு" (புறம். எசு: நு, எஎ: ங) என்பதனுல் தெரிகிறது. (இ) இதன் பூ மதில்வளைப்பவருக் குரித்தென்று சிலரும் (ஈ) அவருக்கும் மதில் காப்பவருக்கு மூரித்தென்று சிலரும் கூறுவர்; (உ) இது பூளையின்வகையு ளொன்றென்றும் கூறப்படும்.

(பிரதிபேதம்) * ஈயந் தகந்தாக்கு, † இடைகொள்ளும்.

பூளைப்பூவும் புனத்தையுடைய மலையிலே மயிலுதிர்த்த பீலியும் விளங்குகின்ற [தனமல்ல,] (தாரல்ல) என் மனத்தாலே நன்றென்று கருதி யான் கட்டின பூந்தாரென்றும் உணர்வீராக; திருமால் மகளுகிய காமன் என் தலைமையை அழித்தலை விரும்பிக்கொடுக்கப்பட்டுத் தன்மெய்யிடத்தே அத்தன்மையவாகிய நன்மைகளெல்லாந் தோன்றிய வனப்பாலும் சாயலாலும் வடிவுகிரின்றன் மையையுடைய கண்களாலும் என்னெஞ்சாகிய அரண் இடிந்துபோம்படி நடுவேவந்து என்னைக் கைக்கொள்ளும் ஒப்பிலாதவளுக்கு யான் வழிபட்டு உறைதலை உலகத்தார்க்குக் காட்டவேண்டிச் செல்லா நின்றேன்; இதனைக் கண்டு நீர் மனத்தே வெறுத்துக் குவிந்திராதேகொள்ளும்; யான் அத்தன்மை யையுடையேன் ஒருவனென்றான். எ – று.

அன்னேனென்றது தான் இவ்வாறுதற்கு முன்செய்த தீவினையை. நூல் ஆகுபெயர். தந்தென்பது, "செலவினும் வரவினும்" என்னும் (க)சூத்திரப் பொதுவிதியான் ஈண்டுக் கொடுத்தலை உணர்த்திற்று. அனைய என்றது நெஞ்சறி சுட்டாய் நின்றது. வடிய என்றது வடிவுகிரின் தன்மையையுடைய கண்களை உணர்த்திற்று. அடியிலே யுறைதல் வழிபாடென்னும் பொருடந்து நிற்றலின், அதனோடே ஒருத்திக்கு என்னும் நான்கனுருபு முடிந்தது.

கஙூ என்னானும், (உ)பாடெனிற் *பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ
(ஙூ)வென்னு லிடும்பை தனிக்கு மருந்தாக
நன்னுத லீத்தலிம் மா

எ-து: நீ ஒன்றுபாடென்று கூறுவீராயில் எப்படியால் எப்படி†யாயினுஞ் சிறிது பாடவும் வல்லேன்; அம்மடன்மா மேலே இருந்து அஃது (ச)இடவாய் வலவாய் பெயரும்படி நின்மெய்யை(ஞ) அசைப்பாயென்பீராயின் அத்தொழிலை யான் ஆளுதலேயும் வல்லேன்; இப்பொழுது என்னெஞ்சிடத்துக்காமநோயை யான் ஆற்றும் மருந்தாக நன்னுதல் தந்த இக்குதிரையினைப் பாடுவேனோ என்றான். எ - று.

அவர் பாடென்னுமையின், மேல் தன்னை வருத்தினமையைக் கூறு கின்றான்.

க. தொல். இளவி. சூ. உஅ.

உ. இந்நூற்பக்கம் அடிஅ: ஙூ-ஆம் குறிப்புப் பார்க்க.

ஙூ. "உய்யா வருநோய்க் குயலாகு மைய, லறீஇயா ளீத்: வீம்மா" கலி. கஙூ: கஅ - கஙூ.

ச. 'இடவாய் வலவாயாகிய இடத்தை' புறம். ச: எ. உரை.

ஞ. "சங்கர னவ ரெருக்கஞ்ஞ் சாடித் தனித்து நின்றே" என்று மடலேறு வார்க்கு ஆதலும் கூறப்படுதல் காண்க.

(பிரதிபேதம்) * பாடறும் வல்லேன், † ஆயினும்.

களவு (க)திங்க ளரவுறிற் றீர்க்கலா ராயினுங்
தங்காதல் காட்டுவர் சான்றவ ரின்சாய
லொண்டொடி *நோய்நோக்கிற் பட்டவென் னெஞ்சநோய்
கண்டுங்கண் ணோடாதிவ் வூர்

எ - து: சான்றோர் திங்களைப் பாம்புசென்று மறைக்குங்கால் அதனை வருத்தத்தைத் தீர்க்கமாட்டாராயினும் அதன்மேல் தமக்குள்ள காதலைக் காட்டித் துன்புறுவர்; அதுபோல இனிய மென்மையினையுடைய ஒண்டொடி யது (உ)நோய்செய்யும் நோக்கிலே அகப்பட்ட என்னுடைய நெஞ்சிடத்துக் காமநோயைக் கண்ணுற் கண்டுவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்க்க மாட்டாராயினும் (ங)கண்ணோட்டமாயினுஞ் செய்தலிலர். எ - று.

உவ தாங்காச் சினத்தொடு காட்டி (ச)யுயிர்செகுக்கும்
(ஞ)பாம்பு மவைப்படி லுய்யுமாம் பூங்கண்
(ஃ)வணர்ந்தொலி யைம்பாலாள் செய்தவிக் காம
முணர்ந்து முணராதிவ் வூர்

க. (அ) "அங்கண்மதிய மரவின்வாய்ப் பட்டெனப், பூசல்வாயாப் புலம்பு மினைக் கலங்கி, யேதின்மாக்களு நோவர் கோழி, யொன்று நோ வாரில்லைத், தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே" (தொல். அகத். சூ. ங. நச். மேற்கோள்.) என்பதும் (ஆ)"அழலுடைக் கடவுளை யரவு சேர்ந்தென, விழவுடை முதுநகர் விலாவிக் கின்றதே" (சீவக. கஅகஉ.) என்பதும் ஒப்புநோக்கற்பாலன.

உ. "ஒருநோக்கு நோய்நோக்கு" குறள். கஅகக.

ங. (அ) குறள். இஎக - ஙஎ - ஆம் செய்யுட்களும் (ஆ) "கண்ணுக் கணி கலங் கண்ணோட்டம்" திரிகடுகம். ஙஉ. (இ) "தெற்றப் பகைவ ரிடர்ப்பாடு கண்டக்கான், மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்" பழ. ஙகஙஉ. (ஈ) "கண்ணனப்புக் கண்ணோட்டம்" சிறுபஞ்ச. கூ. (உ) "ஒன்று நரம்பென்கோ வொன்றுத வென்பென்கோ, வின்றசை தா னென்கோ யாதென்கோ - மென்றோடையாழ்ப், பண்ணோட்டு மின் சொற் பிணைத்தோளாய் சேர்ந்தவர்பாற், கண்ணோட்டமில்லாத கண்" (ஊ)"யாவர் வரினு மெதிரேற்குந் தெய்வமடப், பாவையகத்திருக்கும் பாடின்றே-மேவினர்பாற்.....கண்ணோட்டமில்லாதகண்" பாரதம். (எ) "கண்ணுக்குப் பூணமணிப்பூண் கண்ணோட்ட மென்பதெலாங் கருணையன்றே" வில்லி. அருச்சுனன்றவ. சஙு. என்பவைகளும் இங்கே அறிதற்பாலன.

ச. "பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடும்" நாலடி. உஉ0.

ஞ. "சான்றோ, ரவைப்படிற் சாவாதாம் பாம்பு" பழ. ஙக

(பிரதிபேதம்) * ஓர்நோக்கின்.

எ - து. பிறராற் முங்கவொண்ணுத கினத்தோடே தன்வடிவைக்காட்டி அவருயிரைப்போக்கும் பாம்பும் பலரிடைப் பட்டாற் சாவாதென்னும்(க)உலக வழக்கிற்கேற்பச் சான்முேர் அவைப்படிற் பிழைக்கவுங்கூடும்; அத்தன்மையே னல்லாத எனக்குப் பூப்போலுங் கண்ணையும் (உ)கடைகுழன்று தழைக்கின்ற ஐம்பாலினையுமுடையாள் செய்த இக்காமநோயின் வருத்தத்தை அறிந்து வைத்தும் இவ்வூரிலுள்ளார் தீர்ப்பதோர் உபாயம் அறிகின்றிலர். எ - று.

உரி வெஞ்சுழிப் பட்ட மகற்குக் கரைகின்று
ரஞ்சலென் முலு முயிர்ப்புண்டா *மஞ்சீர்ச்
செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காம
மறிந்து மறியாதிவ் வூர்

எ - து: கடிய (ங)நீர்ச்சுழியிலே அகப்பட்டாளொருமகனுக்குக் கரையில் கின்முேர் †சென்றெடாமல் அஞ்சாதேகொள்ளென்று கரையிலே கின்று கூறினுலும் அவனுக்கு(ச)வருத்தந் தீருதலுளதாம்; அதுபோல, அழகிய சீரை யுடைய செறிந்தஅழகினையுடைத்தாகிய முறுவலையுடையாள் செய்த இக் காமநோயை அறிந்துவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்த்தலாற்று ராயினும் ஒரு தண்ணளி செய்தலையும் அறிகின்றிலர். எ - று.

ஆங்க, அசை.

ஙo என்க (டு)ணிடும்பை ‡யறீஇயினை னுங்கட்
டெருளுறு நோக்கித் தெரியுங்கா ‖லின்ன
மருளுறு நோயொடு மம்ம ரகல

க. "பலரிடை வீழுந்த பொல்லாப் பாம்புமா ருயிர்மா யாதென், றுலகவ ருரைக்கும் வார்த்தை யுண்மையே போலும்"

உ. (அ) "வணரொலி யைம்பாலார்" இன்ஞ. கஞ; (ஆ) "வணரைம்பால்" (கலி. நிஅ: க) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. "கயஞ்சான் மறுசுழி யழுந்தினளாக, முயங்கின னெனத்த வண்ணலே" தமிழ்நெறி. மேற்கோள்.

ச. (அ)"உயிர்ப்பிடம் பெறுஅது"(பொருந.கஙக)என்பதற்கு,'இளைப்பாற இடம் பெறுதே' என்றும் (ஆ) "உயிர்ப்பாக" (கலி. கஙக: கக) என்ப தற்கு,'இளைப்பாறுதலாக' என்றும் எழுதியிருக்குமுரைகள் நோக்கற் பாலன.

ஞ. "ஆருயிர் யாதொன் றிடருறு மாங்கதற், கோருயிர் போல வருகியுயக் கொள்ள, நேரி னதுமுடி யாதெனி னெஞ்சகத், தீரமுடைமை யருளி னியல்பே" சூளா. துறவு. களo.

(பிரிபேதம்) * மெஞ்சீர், இஞ்சீர். † சென்றடாமல். ‡ உறீஇயினேன், உரைஇயினேன். ‖ இன்னும்.

(க) * விருளுறு கூந்தலா ளென்னை
யருளுறச் செயினுமக் (உ)கறனுமா ரதுவே

எ-து: என்னிடத்து நிகழ்கின்றவருத்தத்தை யான் அறிவித்தேன்; இனி இதனை நும்மிடத்தே தெளிதலுறப் பார்த்து ஆராயுங்காலத்து இத்தன்மைத் தாகிய மயக்கமுறுங் காமநோயாலுண்டாகிய என்மயக்கம்நீங்கும்படி இருட்சி யுறுகின்ற கூந்தலையுடையாள் என்னை அருளுதலுறும்படி பண்ணுவீராயின், அது நுமக்கு அறனும் புகழுமாமென்றான். எ - று.

இது தன்கட் டோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

(ங)இது பாடெனில் ஆடெனில் என எதுகையியைந்த அடி என்னானும் என வேறு†நின்ற சீரோடுங் கூடி ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (உங)

(கசக.) அரிதினிற் றோன்றிய யாக்கை புரிபுதாம்
வேட்டவை செய்தாங்குக் காட்டிமற் றாங்கே
யறம்பொரு ளின்பமென் றம்மூன்றி னொன்றன்
றிறஞ்சேரார் செய்யுந் தொழில்க ளறைந்தன்
றணிநிலைப் பெண்ணை மடலூர்ந் தொருத்தி
யணிநலம் பாடி வரற்கு;

எ ஒரொருகா லுள்வழிய ளாகி நிறைமதி
நீரு ணிழற்போற் கொளற்கரியள் போரு

க. "இருளுற ழிருங்கூந்த லிவண்மாட்டு" கலி.சகூ: கஅ.என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. "அறனுமாரதுவே" ஐங். சச.

ங. தொல். செய். சூ. கடுச. உரையில் இவர் இச்செய்யுளை மேற்கோள் காட்டி, "இது, 'பாடெனில்' என்றும், 'ஆடெனில்' என்றும் எதுகை யியைந்த அளவடி, 'என்னானும்' என வேறுநின்ற சீரோடுங்கூடி ஐஞ்சீ ரடுக்கிற்று. இதனுள், 'ஆங்க' எனத் தனிச்சொல் வந்தது" என்று எழுதியிருப்பதும்,பேராசிரியர் அதனுரையில்இதனைமேற்கோள்காட்டி, "இச்செய்யுள் தரவும்போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச் சுரிதகத்தாலிற்றதாகலின், இதனுள், 'என்னானும்பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே' என்னும் அடி ஐஞ்சீரடுக்கினுள் வந்தது; என்னை? 'பாடெனிற்.....பாடுகோ' என்னும் அளவடி யிரண்டும் எதுகையா யமைந்தவழி, 'என்னானும்' என வேறுநின்ற சீரொடுங் கூடி ஐஞ்சீரடுக்கினமையின். இதனுள், 'ஆங்க' எனத் தனிச்சொல்வந்தது" என்றுஎழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்)*இருளுறழ்கூந்தலாள், †நின்று.

ளடன்மாமே லாற்றுவே னென்னை மடன்மாமேன்
மன்றம் படர்வித் தவள்; வாழி சான்றீர்;

கக பொய்தீ ருலக மெடுத்த கொடிமிசை
மையறு மண்டிலம் வேட்டனள் வையம்
புரவுக்கு முள்ளத்தே னென்னை யிரவுக்கு
மின்னு விடும்பைசெய் தாள்; அம்ம சான்றீர்;

கடு கரந்தாங்கே யின்னுநோய் செய்யுமற் றிஃதோ
பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு;

கள இடியுமிழ் வானத் திரவிருள் போழுங்
கொடிமின்னுக் கொள்வேனென் றன்னள் வடிநாவின்
வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள்; வாழி சான்றீர்;

உக என்றுங்கே;

வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்.

*இஃது ஓந்துபின்னின்ற தலைவன் (க) மடலேறியவழி அவள் தமர் அஞ்சித் தலைவியைக் கொண்டுவந்து கொடுத்தலைக் கண்டோர் கூறியது.

•இதன் பொருள்.

அரிதினிற் றேன்றிய யாக்கை (உ)புரிபுதாம்
வேட்டவை செய்†தாங்குக் காட்டிமற் றுங்கே
யறம்பொரு ளின்பமென் றம்மூன்றி ‡னென்றன்
றிறஞ்சேரார் செய்யுந் தொழில்க ளறைந்தன்

க. எறிய மடற்றிறமான பெருந்திணைக்கே (தொல். அகத். சூ. கங. நச். உரையிலும்) இச்செய்யுள் மேற்கோள்.

உ. புரிதலென்னுஞ்சொல், மனம் வேறுபடுதலென்னும் பொருளிலும் வருமென்பது (அ) "புரிந்து" கலி. கங: உஎ. என்பதனுரையாலும் துணியப்படும். (ஆ) "தெரியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை" (பிரதிபேதம்) * இவ இச்ச, †துங்கேகோட்டிமற்றுங்கயறம், ‡ஒன்றின்றிறம்.

*றணிநிலைப் (க)பெண்ணை மடலூர்ந் தொருத்தி
யணிநலம் (உ)பாடி வரற்கு

எ-து: (ங) பெறுதற்கரிதாகத் தோன்றிய மக்கள் † யாக்கை முற்பிறப்பில் தாம் மனம் வேறுபட்டு விரும்பின தீவினைகளைச்செய்து அறம்பொருளின்பம் என்றுசொல்லப்பட்ட அம்மூன்றில் அறமாகிய ஒன்றன் கூற்றைச் சாராதவர்கள் இப்பிறப்பிற்செய்து திரியுந்தொழில்களில் ஒன்றுகிய அழகினையுடைத்தாகிய நிலைமையினையுடைய பனைமடலையேறி அவ்வூரிடத்தே எல்லார்க்குங்காட்டி ஒருத்தியுடைய அழகினையுடைய நலத்தைப் பாடி ‡வருவதற்கு நூல்[கள்] சாற்றிற்று; ஆதலால், யானும் அதுவேதுணிந்து மடலேறிப்பாடுவேனென்றான். எ - று.

யாக்கை மடலூர்ந்து காட்டிப் பாடி ‖ வருவதற்குச் (நூல்) சாற்றிற் றென்க. மற்று, அசை. ஆங்கு என்றது, முற்பிறப்பை.

எ ஒசொர்ருகா லுள் ÷ வழிய ளாகி நிறைமதி
நீரு னிழற்போற் கொளற்கரியள் (ச)போரு
ளடன்மாமே லாற்றுவே னென்னை (ஞ)மடன்மாமேல்
மன்றம் படர்வித் தவள் வாழி சான்றீர்

எ - து: சான்றீர்! வாழ்வீராக; போரிடத்து வெற்றியினையுடைய குதிரையின்மேலே யிருந்து போர்த்தொழிலை நடத்துவேனுகிய என்னை அம்மா வல்லாத மடன்மாவிலே ஏறி +அக்களத்தேயன்றி மன்றின்கண்ணே தன்னை உள்ளுவித்தவள், ஒருகால் என் மனத்துள்ளே உளளாயிருந்து பின்னை நீருட் டோன்றிய நிறைமதியினுடைய நிழல் வாங்கிக்கோடற்கு அரியவாறுபோல வாங்கிக்கோடற்கு அரியளாயிராநின்றாளென்றான். எ - று.

(கலி. நகஃ சசு.) என்புழி, 'புரி திரிபு' என்பதற்கு, 'வேறுபட்டுத் தப்புதல்' என்று பொருளெழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலது.

க. இந்நூற்பக்கம் அடிஎ: எ - ஆம் குறிப்புப்பார்க்க.

உ. இந்நூற்பக்கம் அடிஅ: உ-ஆம் குறிப்பில் (ஆ) முதலியவை பார்க்க.

ங. பெறுதற்கருமையில், "பரவைவெண்டிரை வடகடற் படுநகத்துளையுட், டிரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி, யரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற், பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே" சீவக. உஎசசு. என்பது முதலியன நோக்குக.

ச. "ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு, ணண்ணுரு முட்குமென் பீடு" குறள். கஅஅ.

ஞ. "நாணெனு நல்லாண்மை பண்டையே னின்துடையேன், காமுற்ற சேறு மடல்" குறள். ககஞங.

(பிரதிபேதம்) * அணிநலப்பெண்ணை. † யாக்கைகள முற்பிறப்பில்லாத மனம், ‡‖ வருதற்கு, ÷ வழியாளாகி. + அக்களத்தன்றி.

ஆற்றுவேனென்னை .....படர்வித்தவளென்றது, (க) தறுகண்மை யென்னும் மெய்ப்பாடு. வாழிசான்றீரென்றது, ஒருமைப் பன்மைமயக்கம்.

கக (உ)பொய்தீ ருலக மெடுத்த கொடிமிசை
மையறு *மண்டிலம் வேட்டனள் (ங)வையம்
புரவூக்கு முள்ளத்தே னென்னை யிரவூக்கு
மின்னா விடும்பைசெய் தாள் (ச)அம்ம சான்றீர்

எ - து: கேளீர் சான்றீர்! உலகத்தையெல்லாம் பாதுகாத்தலை முயலும் உள்ளத்தையுடையேனாகிய என்னை ஒருவர்பால் ஒன்றை(ரு)இரத்தலைமுயலும் இன்னாதாகிய வருத்தத்தைச் செய்தவள் கீழைத் திசையிடத்துத் தோன்றின, பொய்யற்ற நன்மக்கள் உயர்த்துப் புகழ்ந்த, மாசற்ற ஞாயிற்றின் மண்டிலத்தை யான் வாங்கிக் கோடற்கு †விரும்பின அத்தன்மையளாய் இராநின்றாள்; என்றான். எ - று.

என்றது (சா)கொடையென்னும் மெய்ப்பாடு.

கரு கரந்தாங்கே யின்னாநோய் செய்யுமற் ‡றிஃதோ
பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு

எ - து: பரந்த சுணங்கினையுடைய, பணைபோலுந்தோளினை||யுடையாள் தான் மறைந்தபொழுதே பொறுத்தற்கரிய நோயைச் செய்யாநிற்கும்; அவள் குணம் எக்காலமும் இத்தன்மைத்தோ கூறின் என்றான். எ - று.

க. இம்மெய்ப்பாட்டுக்கே (தொல். மெய்ப். சூ. கூ.பேர். இ-வி. சூ. ருஎஅ. உரைகளிலும்) "அடன்மாமேல்.....படர்வித்தவள்" என்னும் பகுதி மேற்கோள்.

உ. "கொடிநிலை"என்பதற்கு, 'கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத்தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம்' என்று பொருளும் ஆகுபெயரென்று இலக்கணமுங்கூறி, "பொய்தீ ருலக.....செய்தாள்" என்பதனை மேற்கோள் காட்டினர், நச்சினார்க்கினியர்; தொல். புறத். சூ. ௩௩. உலகவழக்கினும், 'கொடி'என்பது கீழ்த்திசைக்குப் பெயராய் வழங்குகின்றது.

ங. "இரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லு முலகம், புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்" கலி. சஎ: க - உ.

ச. "அம்ம கேட்பிக்கும்" தொல். இடைச். சூ. உஅ.

ரு. (அ) "இரவினை, யுள்ளுங்கா லுள்ள முருகுமால்" நாலடி. ௩௦ரு. (ஆ) "இரத்தலி னின்னாது" (இ) "இரவுள்ள வுள்ள முருகும்" குறள். உஉகூ, கஎசுகூ.

சு. இம்மெய்ப்பாட்டுக்கே (தொல். மெய்ப். சூ. கூ. பேர். இ-வி. சூ. ருஎஅ. உரைகளில்)"வையம், புரவூக்கு.....செய்தாள்" என்பது மேற்கோள்.

(பிரதிபேதம்) மண்டலம், †விரும்பினவளத்தன்மை. ‡ஈதே.||உடையாளதாளதான்மறைந்த.

கள (க)இடியுமிழ் வானத் திரவிருள் போழுங்
கொடிமின்னுக் கொள்வேனென் றன்னள்(உ)வடிநாவின்
(ங)*வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள்;வாழி சான்றீர்

எ - து: பின்னும் வாழ்வீராக; சான்றீர்! வழுவின சொற்கள் சொல்லாதபடி தெள்ளிய நாவினுலே வார்த்தைசொல்ல வல்லார்முன்னே சொல்லுதல் வல்லேனுகிய என்னைப் பிறர்முன்னே ஒன்றையுங் கல்லாத தன்மையனுகக் காட்டியவள், இராக்காலத்து இடியை உமிழ்கின்ற மேகத்திலிருளைப் போழும் ஒழுங்கினையுடைய மின்னை வாங்கிக்கொள்வேனென்று ஒருவன் கருதிய தன்மையளாய் இராநின்ருளென்ருன். எ - று.

வல்லார்முற்சொல்..... .....காட்டியவளென்றது(ச)கல்விபற்றிய பெருமிதம்; என்னையும் கல்லாமை காட்டினுள் என்றலின். வாழி சான்றீரென்று அதனை முடிப்பாராக் கருதி வாழ்த்தினன்.

உக என்ருங்கே
வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் †போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்

எ - து: என்றுசொல்லி அவ்வூரிடத்து மறுகின்கண்ணே கண்டார் வருந்த மடன்மாவை ஏறிப்பாட, திருந்தின இழையினையுடையாளைத் தான் பெறுதற்குப் பொருந்தின வார்த்தைகளைத் தான் கூறக்கேட்டு, பகைவர் போர்த்தொழிலைவல்லபாண்டியனுக்கு அஞ்சி அரியதிறைகொடுக்குமாறுபோல,

---

க. (அ) "இடியுமிழ் பிரங்கிய விரவுப்பெயல்" கலி. சக. ங. என்பதும் அதன் குறிப்பும் (ஆ) "இடியுமிழ் வானம்" அகம். எஎ: ஙி. (இ) "இடியுமிழ் வானத் திடை" (தொல்.செய்.சூ.கஙஉ. பேர், நச். உரை.மேற். 'செஞ்சுடர்') என்பவையும் ஒப்புநோக்கற்பாலன.

உ. "வடியா நாவின் வல்லாங்குப் பாடி" புறம். சஎ: ஙி.

ஙி. "தலைப்படு சால்பினுக் குந்தல ரேன்சித்தம் பித்தனென்று, மலைத்தறி வாரில்லை யாரையுங் கேற்றுவ னெத்துணையுங், கலைச்சிறு திங்கண் மிலைத்தசித் தம்பல வன்கயிலை, மலைச்சிறு மான்விழி யாலழி வுற்று மயங்கினனே" கோவையார். உஙி.

ச. இச்செய்திக்கே (தொல். மெய்ப். சூ. க; பேர்; இ - வி. சூ. ஙிஎச. உரைகளிலும்)"வல்லார்முற்.....காட்டியவள்" என்பதுமேற்கோள்.

(பிரதிபேதம்) * வல்லாருட் சொல். †போர்வேல்.

தமர் குடிப்பழுதாமென்று அஞ்சி அவளை அவ்விடத்தே கொடுத்தார்; ஈதோர் மசட்கொடை இருந்தவாறென்னெனக் கண்டார் வியந்துகூறினர். எ – று.

இது கண்டார்க்குக் கொடைபற்றிய பெருமிதம் பிறந்தது.

இது "தரவும்போக்கும்"(க)என்பதனுட்பாட்டினைப்போக்கின்பின்வைத்த தனாற் போக்குப்பெற்ற, பண்பு என *நாற்சீரான் இயன்ற பாட்டு வந்தது.

(உ)வாழிசான்றீர் அம்மசான்றீர் என ஈற்றுக்கண் வந்த சீர்களை †முதல் அடிக்கு ஆண்டபொருண்முடிவுள் மாறுகூட்டி அடுக்க அறுசீராய் ஆறுமெய் பெற்றமையிற் கலிவெண்பா. (உசு)

(ஙசஉ.) புரிவுண்ட புணர்ச்சியுட் (ஙு)புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கட்
(ஙூ)செயநின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது
நயநின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
நெ பயனின்று மன்றம்ம காம மிவண்மன்னு

க. தொல். செய். சூ.கஙுசு. இதனுரையில், "தரவும்போக்கும் பாட்டிடை மிடைந்தும்" என, "பாட்டினைப் போக்கின்பின் வைத்ததனாற் போக்குப் போல நாற்சீரானிறுவனவும் அப்பாட்டுள் அமையுமென்பது; அது, 'கசந்தாங்கே.....பண்பு' என்றாற்போல வரும்" என்று பேராசிரியரும் இதனையே தழுவி நச்சினார்க்கினியரும் எழுதியிருக்கிறார்கள்.

உ. இச்செய்யுளுள், 'வாழிசான்றீர், அம்மசான்றீர், என ஐஞ்சீரடுக்கியாங்கு அடுக்கிச் சொல்ல அறுசீராயின. இதற்கும் ஐஞ்சீர் அடுக்கியுமென்றதனுபோல அறுசீரடுக்கியுமென்று அடுக்குதற்குத் தொழில் கொள்ளப்படும். ஈண்டு இரண்டளவடி தொடைப்படச் செய்தமையினென்க. இதனுள் என்றாங்கே என்பது தனிச்சொல்' என்று பேராசிரியரும், இதனுள் 'வாழி சான்றீர், அம்ம சான்றீர், என ஈற்றுக்கண் வந்த சீர்களை முதலடிக்கட் பொருண்முடியுமாறு கூட்டி ஐஞ்சீரடுக்கியாங் கடுக்க அறுசீரானவ்வாறு வந்ததாம். இதற்கும் அறுசீரடுக்கியும் எனக் கூட்டிப் பொருளுரைக்க. என்றாங்கு தனிச்சொல்' என்று நச்சினார்க்கினியரும் எழுதியிருப்பவை இக்கே அறிதற்பாலன; தொல். செய். சூ. கஙுசு.

ஙு. "புல்லாராப் புணர்ச்சியாற் புலம்பிய வென்றோழி" கலி. சஙி: கo.

சு. "செயநின்ற.....மன்றம்ம காமம்" என்பதை (நன். இடை. சூ. ககூ. உரையில்) மேற்கோள்காட்டி அம்ம, உரையசையென்று மயிலைநாதரும் இப்பகுதியையே (இ – வி. சூ. உஎசு உரையில்) மேற்கோள்காட்டி அம்ம, அசைநிலையென்று இ – வி. நூலாரும் கூறுவர்.

(பிரதிபேதம்) * காற்சீரானின்றபாட்டு, †முதலாடிக்கண்ட,

மொண்ணுத லாயத்தா (க)*ரோராங்குத் திளைப்பினு
(உ)முண்ணுனை †தோன்றாமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினு முகத்தினு நகுபவள் பெண்ணின்றி
யாவருந் தண்குரல் கேட்ப நிரைவெண்பன்
கo மீயுயர் தோன்ற நகாஅ நக்காங்கே
(ங)பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழிலுண்க
ணாயிதழ் மல்க வழும்;
கங ஓஓ! அழிதகப் பாராதே ‡யல்லல் குறுகினங்
காண்பாங் கனங்குழை ||பண்பு;
கரு என்று, (ச)எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ
நல்ல நகாஅலிர் ×மற்கொலோ யானுற்ற
வல்ல லுறீஇயான் மாய மலர்மார்பு
புல்லிப் புணரப் பெறின்;
கசு எல்லாநீ, உற்ற தெவனோமற் +றென்றீரே லெற்சிதை
செய்தா னிவனென வுற்ற திதுவென
வெய்த வுரைக்கு **முரனகத் துண்டாயிற்
(ரு)பைதல வாகிப் பசக்குவ மன்னோவென்
னெய்தன் மலரன்ன கண்;

க. ஓராங்கு, ஒருதன்மைப் படலென்னும் பொருள்படுவதோர் இடைச் சொல்; பதிற். ௬௯: கசு. கலி. கஉ: கஅ, கஅ: எ, கூஉ: ங்க. புறம். கசு: கக. இச்சொல், "ஓராங்கு" என்றும் வரும்; பதிற். ங்க: உ. கலி. ருo: எ. புறம். உங்அ: கரு, ங்oச: ரு, ங்உசு: கக, ங்எo: உ.

உ. "நகைமொக்கு ளுள்ளது" குறள். கஉஎச.

ங. (அ) "போதெழி லுண்கண் புகழ்நல னிழப்ப" (ஆ) "பூக்கவின் கொண்ட புகழ்சா லெழிலுண்கண்" கலி. கஉஉ: உ, கங்க: ச.

ச. அறிவர்(?)கேட்பத் தலைமகள் கூற்றுவந்ததற்கு, "எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ" என்பது மேற்;தொல். செய். சூ. கக்கூ. பேர்;நச்.

ரு. (அ) "பசந்தகண் பைதல பனிமல்க" கலி. கசு: க. (ஆ) "தெரிந் துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப், பைதலுழப்பதெவன்" (இ)"படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக், காமநோய் செய்தவென் கண்" குறள். ககஎஉ; ககஎரு.

(பிரதிபேதம்) * ஓராங்கு, † தோன்றாமல், ‡ அல்ல குறுகினும், || பண்பு எல்லீரு மென்செய்திர், × மற்கொல்லோ, + என்றிரேல். ** முரணகத்து.

உச (க)கோடுவாய் கூடாப் பிறையைப் *பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
யாடையான் (உ)†மூஉ யகப்படுப்பேன் சூடிய
காணுன் றிரிதருங் கொல்லோ மணிமிடற்று
‡மாண்மலர்க் (ங)கொன்றை யவன்;

உசு தெள்ளியே மென்மரைத்துத் தேரா தொருநிலையே
வள்ளியை யாகென நெஞ்சை வலியுறீஇ
யுள்ளி வருகுவர் ‖கொல்லோ வுளைந்தியா
னெள்ளி யிருக்குவேன் மற்கொலோ ÷நள்ளிருண்
மாந்தர் கடிகொண்ட கங்குற் (ச)கனவினுற்
றேன்றின னுகத் (ஞ)தொடுத்தேன்மன் ×யான்றன்னைப்
(ஊ)பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து;

க. (அ) "கோடுவாய் கூடாப்.....கொன்றை யவன்" என்னும் பகுதியைப் பெருந்தினைக்குரிய மெய்ப்பாடுகளுட் கலக்கமென்பது மனங்கலங்கி நிற்கு நிலையென்றுகூறி அதற்கு மேற்கோள்காட்டினர், இளம்; தொல். மெய்ப். சூ. உஉ. (ஆ) "கோடு கூடு மதியம்" பதிற். நூக: கஉ. (இ) "கோடுகொ ளொண்மதியை" கள. உஉ. (ஈ) "திங்கட் செல்வன், பைங்கதிர்க் கோடு கூடும் பக்கத்தில்" உத்தரகோச. நள. நூடு.

உ. "எங்கு, மூயிலங்கி யிறையவனூர் முடிமிசைமல் கியகோயில்" திரு வானைக்கா. கெசாரணிய. உசு.

ங. (அ) "கொன்றை யலங்கலந் தெரியலான்" கலி. கடுo: க. (ஆ) "கொன்றை வேய்ந்த செல்வன்" (இ) "பிரணவத்திற் குரியபொருள் பிறரென்று பேசிடுவோர், மூரணவித்தற் காகமங்கள் முதலாய வேண் டுவோர், காணவிகற் பங்கடந்தோய் நாவதமென் னிலகமழுந், திரண்மிகுத்த செழுங்கொன்றை மாலிகைசேர் தரக்கண்டும்"

ச. (அ) "கனவின் வாரா நயனி லாளனைக், கனவிற்கண்டியான் செய்தது கேளினி.....கொடுப்பேன் போலவும்" (கலி. கஉஅ: அ - கக) என்பதும் (ஆ) "தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற.....அற னில்லவன்" (கலி. கசஎ: நடு - நஅ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ஞ. "தொடுத்தல்" இந்நூற்பக்கம் எகச: உ-ஆம் குறிப்பில் (இ)(ஈ)பார்க்க.

ஊ. கலக்கமென்னு மெய்ப்பாட்டிற்கு, "பையெனக் காண்கு.....கரந்து" என்னும் அடிகள் மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உஉ. நச்.

(பிரிபேதம்) * பிறிதென்று, † மூடியகப், ‡ மாண்மாலைக்கொன்றை, ‖ கொல்லோ வுளைந்தியான், ÷ கல்லிருள், × யான்றனைஇப்.

ஈஎ (க)கதிர்பகா ஞாயிறே கல்*சேர்தி யாயி
னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
துயிர்திரியா மாட்டிய தீ;

ஈக மையில் சுடரே மலி†சேர்தி யாயிற்
பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு ‡மாத்திரை
கை(உ)விளக் காகக் கதிர்சில தாராயென்
றெய்யில் சிதைத்தாணைத் ||தேர்கு;

ஈசு ÷சிதைத்தாணைச் செய்வ தெவன்கொலோ வெம்மை
நயந்து நலஞ்சிதைத் தான்;

ஈள (ஙஉ)மன்றப் ×பணைமேன் மலி(ச)மாந் தளிரேஙீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டு மறிதியோ
(ஙு)+மென்றோண் ஞெகிழ்த்தான் றகையல்லால் யான்காணே
னன்றுதீ தென்று பிற;

ஙூக நோயெரி யாகச் சுடினுஞ் **சுழற்றியென்
னுயிர தூள்ளே ††கரப்பன் கரந்தாங்கே

க. "கதிர்பகா ஞாயிறே.....மாட்டிய தீ" என்னும் பகுதி, ஞாயிற்றைக் கேட்குநபோலக் கூறியதற்கு மேற்கோள்; தொல். செய்; சூ. உ0க. பேர். சூ. உ0o. நச்.

உ. "விட்டி லங்கொளி வெய்யவன் றனதுமெல் வீரலாற், சுட்டி யெங்க ணுஞ் காட்டல்போற் சுடர்வன சுடர்கள்" நைடதம். மாலைப். கஉ.

ங. ஞாயிறுமுதல் புள்ளீறுகச் சொல்லப்பட்டவைகளைச் சொல்லுவனவுங் கேட்பனவும் போலக் கூறுதலல்லாமலும் பிறவற்றையும் அவ்வாறு கூறுதலுண்டென்பதற்கு, "மன்றப் பணைமேன் மலிமாந் தளிரே" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. ககo. இளம். 'ஞாயிறு'

ச. "மாஅத் தளிர்கொண்ட போழ்திலுன்" கலி. கசஙு: உஎ.

ஞ. "மென்றோண் ஞெகிழ்த்தான்.....தீதென்று பிற" என்பது, உறுபெயர்கேட்டலென்னும் மெய்ப்பாட்டுக்கு மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உஉ.

(பிரதிபேதம்) * சேர்தி யாயிற். † சேர்தி யாயிற், ‡மாத்திரைக்கை. || தொகுகு. ÷னெஞ் தானைச், ×பணைமேல், + என்றே ணெகிழ்த்தான் றிறமல்லாலியான். ** சுற்றியென். ††கரப்பென்.

நோயுறு (க)வெந்நீர் தெளிப்பிற் றலைக்கொண்டு
வேவ தளித்திவ் வுலகு;

ருகு மெலியப் பொறுத்தேன் *களைந்தீமின் சான்றீர்
நலிதருங் (உ)காமமுங் கௌவையு மென்றிவ்
†வலிதி (ங)னுயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழும மிரண்டு;

எனப்பாடி;

கூ0 (ச)‡இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தன ||வென்றெண்ணி (ரு)யெல்லிரா
÷நல்கிய கேள்வ னிவன்மன்ற ×மெல்ல
மணியுட் பரந்தநீர் போலத் +துணிவாங்
கலஞ்சிதை (சு)யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றா
ணல்லெழின் மார்பனைச் **சார்ந்து.

க. ஸௌதாஸனென்னும் அரசன் தன் குலகுருவாகிய வசிட்டமுனியைச் சபித்தற்கு நீரைக் கைக்கொண்டபோது தன் மனைவியாகிய மதயந்தி கூற்றால் தடையுண்டு அந்நீரை மேலே வீசின் மழைவளமும் கீழே வீழ்த்தின் நிலவளமும் அறுமென்று தன்காலிற்பெய்து கன்மாட பாதனாயினனென்னும் வரலாறு இங்கே அறிதற்பாலது.

உ. "நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற், காம நுதுப்பே மெனல்" குறள். ககசஅ.

ங. (அ) "காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென், னோனா வுடம்பி னகத்து" (ஆ) "ஒருதலையா னின்னாது காமங்காப் போல, விருதலை யானு மினிது" குறள். ககசுங; ககசுசு.

ச. (அ) "இனைந்துநொந் தழுதனள்.....சார்ந்து" என்னும் பகுதி, பெருந்திணைக்கட் கண்டோர் கூறியதற்கு மேற்; தொல். அகத். சூ. சரு. (ஆ) "இனைபேங்கி யழுதனை" கலி. கஉஉ: ரு.

ரு. "எல்லிரா.....மெல்ல" என வெள்ளைச்சுரிதகத்துள் ஐஞ்சீரடியும் வந்தது" என்பது தொல். செய். சூ. கருச. பேர்.

கூ. (அ) "தேறுபடு சின்னீர் போலத் தெளிந்து, மாறுகொண் டோரா மனத்தின ளாகி" மணி. உங: கசஉ-கசங. (ஆ) "இல்லின், படுகாழ்ப்

(பிரதிபேதம்) * களைந்தபின், † உலிதிலுயிர். † இனைந்துநைந்து. || என்றெண்ணி நல்கிய, ÷ ஒல்கிய, × மெல்லியலமணியிற். + துணிபாம். ** சாரந்து. ஒஒ, இரக்கக்குறிப்பு. நகுதிரோ.....ஓகாரம், எதிர்மறை கேட்பீராக இவடன்னுடனே.

இது "பொழுது தலைவைத்த கையறு காலை, யிறந்த போலக் கிளக்குங் கிளவி, மடனே வருந்த மருட்கை மிகுதியோ, டவைநாற் பொருட்க ணிகழ மென்ப"(க)இச்சூத்திரம் பிள்ளார் நாள்தும்"பெருந்திணை பெறுமே"(உ)என்ற சிறப்புடைப்பெருந்திணையன்றிப்பெருந்திணைக்*குறிப் பாகக் கந்தருவத்துட்பட்டு வழுவிவரும் 'ஏறியமடற்றிறம்'(ங)முதலிய நான்கு ளுள் ஒன்றாய் †முன்னர் நிகழ்ந்த கந்தருவம் பின்னர் வழுவிவந்த 'தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்' (ச) ஆகிய பெருந்திணை வழுவமைக்கிள்றது.

படித்துத் தேய்வை யுறீஇக், கலுழி நீக்குங் கம்மியர் போல, மகர வீணையின் மனமாசு கழீஇ" பெருங். (க) கூடு: உகடு - உகஅ. (ஙு) "நின்ரு னுள்ளங் தேறுமைக்க நீத்தக் தெளிவு தெனத்தெளிந்து" பிரமோத்தர. வஞ்சுளைமுத்தி. கக.

க. தொல். பொருளி. சூ. சஉ. இச்சூத்திரத்தினுரையிலும் இது, 'பின் னர் நான்கும்.....கூறத்தகாதன கூறலும் பிறவுமாம்' என்று இவ்வாறே பொருள்எழுதி இச்செய்யுளைமேற்கோள்காட்டி, அகஉ-ஆம் பக்கத்திலுள்ள 'இதனுள் அந்திக்காலத்தே.....மிகுதியிறந்த வாறுங் காண்க' 'எல்லிரா கல்கிய.....வரைவு நிகழ்ந்தவாறுங் காண்க' என்ற குறிப்புக்களையுமெழுதி, 'இதற்குப் பொருளுரைக்குங் கால் கேட்பீராக இவள் நக்கு, நக்க அப்பொழுதே அழும். இங்ஙனம் அழுமாறு காமத்தை *ஊழானது (*உயிரானது என்றும் பாடபேதம்) அகற்றலின், அஃதறுதியாக நரம்பினும் பயனின்றுயிருந்தது. ஓ இதனையுற்ற இவள்! அல்லற்பண்பைப் பாராதே அழிதக யாங்குறுகி னேம், குறுகிய யாம் இதனை முடிவுபோகக் காண்பேமென்று வந்து எல்லீரும் என்செய்தீர்? என்னை இகழ்கின்றீரோ? இவ்வருத்தத்தை எனக்குறுத்தினவனது மாயஞ்செய்த மலர்ந்த மார்பை யான் முயங்கிக் கூடினும் இகழ்ச்சியன்றும்; என்றற் றொடக்கமாய் வரும்' என்று இவ் வுரையாசிரியர் வரைந்திருப்பது இங்கே அறிதற்பாலது.

உ. தொல். கள. சூ. கச.

ங. தொல். அகத். சூ.நிக.

ச. தொல். அகத். சூ. நிச. (அ) இச்சூத்திரப் பகுதியினுரையில் தேறுத லொழிந்தகாமத்துமிகுதிறமென்பது பெரும்பாலும் தலைமகட்கேயுரித் தென்று கூறி, அதற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டினர் இளம் பூரணர்; (ஆ)தொல். அகத். சூ. கங. உரையில், 'புரிவுண்ட புணர்ச்சி யென்றது முதலிய ஆறுபாட்டும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிற மாகிய பெருந்திணை. இவற்றை நெய்தலுட் கோத்தார் சாக்காடு குறித்த இரங்கற் பொருட்டாகலின்' என்றும் (இ) தொல். அகத். சூ. நிக. உரையில், 'புரிவுண்ட புணர்ச்சியென்னும் நெய்தற்பாட்டுச்

(பாடபேதம்) * குறிப்பாயக கந்திருவத்துட். † முன்னர் வழுவிவந்த.

ஓதலுந் தாதும் ஒழிந்த பகைவயிற்பிரிவாகிய வாளாணெதிரும் பிரிவும் முடியுடை *வேந்தர்க்கும் அவர் ஏவலிற் பிரியும் அரசர்க்கும் இன்றியமையாமையின் அப்பிரிவிற் பிரிகின்றான் 'வன்புறை குறித்த றவிர்ச்சி யாதும்'(க) என்பதனாற் கற்புப்போல நீ இவ்வாறொழுகி யான் வருந்துணையும் †ஆற்றியிருவென ஆற்றுவித்துப் பிரிதல்' இலக்கண‡மன்மையின், வாளாபிரியுமன்றே? அங்ஙனம் பிரிந்துழி அவன் கூறிய ||கூற்றினையேகொண்டு ஆற்றுவிக்குந் தோழிக்கும் ஆற்றுவித்தலரிதாகலின், அவட்கு அன்பின்றி நீங்கினானென்று ஆற்றாமை மிக்கு ஆண்டுப் பெருந்திணைப்பகுதி நிகழுமென்று உணர்க. (இ-ள்) பொழுது - அந்திக்காலத்தே, கையறுகாலை - 'புறஞ்செயச் ×சிதைதல்'என்னும் (உ)சூத்திரத்தில்'அதனினூங்கின்று' எனக்கூறியகையறவுரைத்தலென்னும் மெய்ப்பாடு எய்திய காலத்தே, தலைவைத்த - ÷அந்த ஆறாமறுதியின் இகந்தனவாக முடிவிலே வைக்கப்பட்ட மெய்ப்பாடுகள், மிகுதியொடு மடனே வருத்தம் மருட்கை நாற்பொருட்கண்நிகழும்-+தன் வனப்பு மிகுதியுடனே மடப்பமும் ஆற்றாமையும் வியப்புமாகிய நான்கு பொருட்கண்ணே நடக்கும்; அவை இறந்தபோலக் கிளக்குங் கிளவி என்ப-அங்ஙனம் அவை**நடக்கின்ற நான்குபொருளும் கூற்றுநிகழுங்கால்தன்னைக் கைகடந்தனபோலக் கூறுங் கூற்றாய் நிகழுமென்று கூறுவர் புலவர். எ-று. தலைவைத்த மெய்ப்பாடாவன: —††'ஆறாம்அறுதியினும் ஒப்பத்தோன்றுதற்குரிய மெய்ப்பாடுகளாய் ‡‡மன்றத்திருந்த சான்றோரறியத் தன் துணைவன் பெயரும் பெற்றியும் அவனொடு புணர்ந்தமையும் தோன்றக் ||| கூறியும் அழுதும் அரற்றியும் பொழுதொடு ÷÷புலம்பியும் ஞாயிறு முதலியவற்றோடு கூறத்தகாதன கூறுதலும் பிறவுமாம்' ××என்னும் விதிபற்றி வரவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைவி பிரிவாற்றகில்லாது நாணு வரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்துழி அவன்வந்து சாரத் தெளிந்தமை கண்டார் ++கூறிற்றென்று கூறியது.

காமத்து மிகுதிறம்; இதனைப் பொருளியலுட் காட்டுதும்; ஆண்டோதும் இலக்கணங்களுந் தோன்ற இதனுட் டெளிந்து கூறுவனவும் ஆண்டுக் காண்க' என்றும் இவ்வுரையாசிரியர் கூறியுள்ளார். (ஈ) இலக்கண விளக்க நூலாசிரியரும் ஏறிய மடற்றிறத்துக்கே இச்செய்யுளை மேற்கோள் காட்டினர்; இ - வி. சூ. ௫௯௧.

க. தொல். கற். சூ, ௪௪.

உ. தொல். மெய்ப். சூ. கஅ.

(பிரதிபேதம்) * வேந்தர்க்கு மரைசர்க்கும், † ஆற்றுகவென் றாற்றுவித்து, ‡ இன்மையின், || கூற்றை; × சிதைத்தல்என்னுஞ் சூத்திரத்து இதனினூங்கின்று, ÷ அந்த ஆற்றாமையின், + என் வனப்பு. ** நடக்கின்றவை நான்கு. †† ஆறாமறுதியினும் பரந்து தோன்று, ‡‡ மன்றத்துச் சான்றோர், ||| கூறியழுது மரற்றியும், ÷÷ புலம்பிய, ×× இவ்விதி, இதுவிதி. ++ கூறிற்றென்றுகிளவிகூறியவாறுணர்க.

இதன் பொருள்.

கேட்பீராக; இவள் தன்னுடனே பொருந்தி விளையாடும் ஒள்ளிய நுதலினையுடைய ஆயத்தார் எல்லாரும் * ஒராங்குக்கூடி விளையாடும் அளவிலும் முட்போலக் கூரிய தன் பல்லினுனி தோன்றுமல் முறுவலித்தலைக் கொண்டு, அதனை உள்ளடக்கி, அங்ஙகுதற்குறிப்புப் பிறரறியாமல் தன்கண்ணாலும் முகத்தாலும் நகுபவள்; இப்பொழுது பெண்டன்மையின்றிப் பிறர் கேளாமல்†மொழியும் (க)மெல்லியமொழியினை எல்லாருங்கேட்கும்படி கூறி, நிரைத்த வெள்ளிய பல்லின் மேலெயிறு தோன்றப் பெருகச் சிரித்து, சிரித்த அப்பொழுதே பூ(உ)வெடித்த தன்மையை ஒத்த புகழ்ச்சி அமைந்த அழகினையுடைய கண்கள் அழகினையுடையஇமை நீர்மல்கும்படி அழாநிற்கும்; இவள் இங்ஙனம் அழுமாறு காமவின்பத்தை ஊழானது ஒருவர் மனம் ஒருவரிடத்தே புரிதலுண்ட கூட்டத்திற் புல்லுதனிறையாத அளவிலே இருவரில் ஒருவரை ‡ அரியராம்படி பண்ணி நீக்குகையினாலே இக்கீலியாமையை ஆராய்ந்து பார்ப்பாரிடத்து அஃதறுதியாக நரம்பை வீக்குதலைச் செய்ய அதனிடத்தே நின்ற பண்ணினுட்டோன்றிய இனிமையைக் கேட்போர் செவிகொண்டு இன்புறுவதற்கு முன்னே விருப்பம் நின்ற இனிமையாகியபொருள் கெடுமுறுக்குஅறும் (ங)நரம்பிலுங்காட்டிற் || பயனின்றாயிருந்தது; ஓஓ! இக் ÷ கனங்குழையது அல்லலையுடைய குணத்தை நம்மை வருத்தும் என்று பாராதே நம் நெஞ்சழியும்படியாக வந்து குறுகினேம்; குறுகிய யாம் இதனை முடிவுபோகக் காண்பேம் என்று கருதிவந்து எல்லீரும் என்ன காரியஞ் செய்தீர்? இங்ஙனம் வந்த நீர்தாம் என்னை + இகழ்கின்றீரோ? இகழ்கின்றீராயின், யானுற்ற வருத்தத்தினை எனக்குறுத்தினவனுடைய மாயத்தைச் செய்த மலர்ந்த மார்பை யான்முயங்கி அவனைக் கூடப்பெறினும் அஃ × திகழ்ச்சியன்றும்; இங்ஙனம் என்னைச் சிதைத்தலைச் செய்தான் இவனென்று யான் முற்கூறியதனைக்**கேட்ட நீர் பின்னை அவனுலுற்றதுதான் எத்தன்மைத்தோ

க. கண்மை, மென்மை யென்னும் பொருளில் வருதல், "தண் குரவை" புறம். உசு: சு. என்பதனுரையாலும் வலியுறும்.

உ. (அ)"அத்திவெடி முல்லை யரும்பெடுத்தானன்வந்தேன்" தனிப்பாடல். (ஆ) "சூடா தது மணம் வீசா தது சுரும் பும்விரும்பி, மூடா தது வெடியாதது பின்முகி ழாதது தான், வாடாத தோரலர் வந்தாலெவ் வாறுய்வன் மன்னுயிரே" மாறன். உசுக.

ங. "வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோ, லேழுந்தம் பயன் கெட விடைநின்ற நரம்பறுஉம், யாழினுங் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ" கலி. அ: கூ - ஙக.

(பிரதிபேதம்) * ஒருங்குகூடி. † மொழியுமென் மொழியினை, ‡ அரியாராம்படி. || பயனில்லை யாயிருந்தது, ÷ கனங்குழைகல்லலை, + இகழ்கின்றீரோ இகழ்கின்றீரோ இகழ்கின்றீராயின். × இகழ்ச்சியென்றுமிங்ஙனம், ** கேட்டோ நீ பின்னை.

என்று கேட்பீராயின், யானுற்றதிதுவென (க) *எழுவகையாகிய அறத்தொடு நிலைகளின் ஒன்றை நும்மனத்திற்குப் பொருந்தக் †கூறும் என்னறிவு என் உள்ளத்துண்டாயின் யான் இங்ஙனம் வருந்துவனோ? வருந்தேன்; அவ்வறிவு கெட்டமையால் யானுற்ற வருத்தம் இத்துணைய வருத்தமென யான் உமக்குக் கூறுவன், அதனைக் கூறக்கேண்மின்; சான்றீர்! என்று சான்றோரை நோக்கிக் கூறுகின்றாள்; என்னுடைய ‡ சிற்றிலுளுள்ளே (உ)கூடலிழைத்து

க. எழுவகை அறத்தொடு நிலை இவையென்பதை, தொல். பொருளி. கஉ-ஆம் சூத்திரத்தால் உணர்க.

உ. கூடலிழைத்து அவனைக் கூடுவேனே என்று ஆராய்தல்:—பெரிதாக ஒரு வட்டங்கீறி அதற்குள்ளே சிறு சுழிகளைக் கணக்கிடாது சற்றுஞ் சுழித்து அவற்றை இவ்விரண்டு சுழியாகக் கூட்டி இறுதியில் ஒன்று எஞ்சாது கூடுகின்றனவா என்று பார்த்தல். அச்சுழிகளுள் ஒன்று எஞ்சாது கூடுமாயின் தலைவன் விரைவில் வந்து கூடுவனென்றும், ஒன்று எஞ்சிக் கூடாதாயின் அவன் விரைவில் வந்து கூடானென்றும் கோடல் மரபு; தலைவன் வரவை அறிதற்கு அவனைப் பிரிந்த தலைவி இவ்வினைச் செய்வதாகக்கூறல் பண்டைவழக்கென்பர். (அ)நாமீச் சியார்கிருமொழியின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்து அரும்பதத்தில், 'கூடலாவது - வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டால் கூடுதை, ஒற்றைப்பட்டால் கூடாமை என்ற சங்கேதம்' என்றுள்ள செய்தி இங்கே அறியத்தக்கது. (ஆ) இவ்வாறன்றிக் கண்ணை மூடிக்கொண்டு நிலத்தில் வட்டமாக ஒரு கோட்டைக் கீறிப் பின்பு கண்திறந்து பார்த்து அக்கோடு தொடங்கிய இடத்தில் தவறாமல் வந்து சேர்ந்திருப்பின் தலைவனும் 'தவறாமல் வந்து சேருவானென்றும் அது வந்து சேராமல் விலகியிருப்பின் தலைவனும் வந்து சேராது விலகியிருப்பானென்றும் கொள்ளுதல் மரபென்பாரும் உளர். இக்கூடலிழைத்தலைப்பற்றிய செய்திகளாகச் செய்யுட்களில் (இ) "தாழ்கடற் றண்சேர்ப்பன் றாரகல நல்குமே, வாழியாற் காணுமோ யாம்" ஐந் - ஐம். சசு. (ஈ) "பாட லாக்கிடும் பண்ணெடு பெண்ணிவள், கூடலாக்கிடுங் குன்றி மணற்கொடு, கோடல் பூத்தலர் கோழம்பத் தண்மகிழ்ந், தாடுங் கூத்தனுக் கன்பு பட்டாளன்றே" (உ) "மாட நீண்மருகற் பெருமான்வரிற், கூடுநீயென்று கூடலிழைக்குமே" தேவாரம். திருஞா. கோழம்பம். ச, மருதல். அ; (ஊ) "இழைப்பன் றிருக்கூடல் கூட" நாலா. நான்முகன். நக. (எ) "சிதைக்கின்ற தாழியென் றூழி திருத்தித்தன் சீறடியா, லுதைக்

(பிரதிபேதம்) * எழுவகையாகிய, † கூறுமறிவு என்னுள்ளத், ‡ சிற்றிலுள்ளே.

அவனைக்கூடுவேனோஎன்று ஆராய்கின்ற யான் அக்(க)கூடலில் ஒருபாகத்தை இழைத்த அளவிலே * அவ்வாராய்ச்சிக்குப் பிறிதொன்றுகிய வினவு தன்

கின்ற நாயகர் தன்னெடு" நாலா. திருவிருத்தம். கூசு. (ஏ) "சென்றூர் வரைய கருமஞ் செருவேலான், பொன்றுங் கணியகலம் புல்லப் பொருந்துமேற், குன்றுது கூடுகெனக் கூறிமுத்த வார்மணன்மே, லன்றுங் கணியிழையா ளாழி யிழைத்தாளே" சீவக. கoகூஎ. (ஐ) "மெய்யி லிணைத்துருகிப் பைய வகன்றவர்தா, மீள்வ – ரெனக்கருதிக் கூடல் வினைத்தறவே, கையி லிணைத்தமணற் கண்பனி சோர்புனலிற்,- கரைய விருந்தழுவீர் கடைதிற மின்றிறமின்" கலிங்க. ஙக. (ஒ) "குழைத்தபூங் கொம்பனை ளொருக்கி கூடலே, யிழைத்தன ளவ்வவ ளிட்ட போதெலாம். பிழைத்தலு மனங்கவேள் பிழைப்பி லம்பொடு, மூழைத்தன ளுயிர்த்தன ளுயிருண் டென்னவே" (ஓ)"மின்னகு மணி விரற் றேய வீழ்கணீர், துன்னரும்பெருஞ்சுழி யழிப்பச் சோர்வினே, டின்னகை நுனைச்சிய நிழைக்கு மாழிசால், புன்னையம் பொதும்பரும் புக்கு நோக்கினேன்" கம்ப. உண்டாட்டுப். கூகூ. வீடண. உஅ. (ஔ) "வினைத்துக் கிடந்த வரிமணற் கூடலும்" அம்பிகா. கூஉஉ. (ஃ) "நிலமே சுழித்தனே" துலோத். உடுஅ. (அஅ) "சுழித்த கூடல் கூடுறுது நீர்சொரிந்து நாடொறு, மழித்த கண்கள்" நைடத. கைக். கு. (ஆஆ) "சுழிக்குஞ் சுழிக்குத் தொகைவேறு வேறுறச் சோர்வினேபோ, லழிக்குங்கண் ணீர்பல காலுமந் தோவள மாமனைத்துஞ், செழிக்குந் தமிழ்க்குரு கூர்ச்சட கோபன் சிலம்பினிலென், விழிக்குங் காத்துக்கு நானென்ன வோவெவ் வினைசெய்ததே" மாறன். உஅசு. (இஇ)"ஆய் சுவைத்தேன், மொழிக்குங் குமமுலை யாள்விரல் நன்றவெண் முத்த மணற், சுழிக்குங் கழிக்கு மொழிக்குங்கண் ணீரென்ற துன்புறுமே" சீகாழிக். கூoஅ. என்று வருபவையும்(ஈஈ) நாலா. நாச்சியார். சு-வது 'தெள்ளியார் பலர்' என்னும் தலைப்பையுடைய கூடற் குறிப்பின் கo பாசுரங்களில் இச்செய்தியாக வருபவையும் (உஉ)"செய்குறி யாழி வைகலே றெண்ணி, யெழுது சுவர் நினைந்த வழுதுவார் மழைக் கண்" அகம். கூடுக: கo-கக. என்பது இச்செய்தியைக் குறிப்பதாயின் அதுவும் இங்கே அறிதற்பாலன. (ஊஊ) "ஆழி திருத்தும் புலியூ ருடையா னருளினளித், தாழி திருத்து மணற்குன்றி னீத்தகன் ரூர் வருகென், ரூழிதிருத்திச் சுழிக்கணைக் கோதிலை யாமலைய, வாழி திருத்தித்தரக்கிற்றி யோவுள்ளம் வள்ளலையே" (கோவையார். கஅசு) என்னுஞ்செய்யுளாலும் அதற்கு மூன் பின்னுள்ள குறிப்புரைகளாலும் இதற்குக் கூடற்றெய்வத்தை வழிபடலுண்டென்பது விளங்கும். அடுத்த குறிப்பும் பார்க்க. இது தமிழ்நூல் வழக்கு.

க. (அ) "பாகவரை வாங்கிப் பழுதாகிற் பாவியேற், கேகுமா லாவி யென நினைப்ப"சீவக.கoகூஅ. (ஆ)"கூடற்பெருமானைக்கூடலார்கோமானைக்,

(பிரதிபேதம்) * அவராராய்ச்சிக்கு.

னிடத்தின் முழுதுங் கூடாத இளம்பிறையைக் கண்டேன்; கண்டு அஃது அவ்விசும்பிடத்தே பின்பு நிறைமதியாய் வருத்துமெனக் கருதி யாலுடித்த துகிற்றலையாலே மூடி அகப்படுத்திக்கொள்கின்ற யான் அதனை அகப்படுத்தி னுல் நீலமணிபோலுங் திருமிடற்றையுடைய மாட்சிமையுடைத்தாகிய மலரை யுடைய கொன்றைமாலையையுடையவன் அதனேடு சூடுதற்குக் காணுமைத் தேடித் திரியுமோவென்று கொண்டு, * நெஞ்சே! இது பின் வருத்துதலைத் தேராதே இதனை அவற்குக் கொடுத்து ஒருபடிப்பட உபகாரியாவாய்; யாம் தெள்ளியேங்காணென்றகூறி நெஞ்சை வலியுறுத்தி அதனைக் கைவிட்டு, பின்னரும் அவர் வருவாரோ? வந்தால் யான் உடம்படாது அவரை மிகவும் இகழ்ந்திருட்பேனே? என்று உள்ளி வளைந்திருந்த நள்ளிருளையுடைய(க)ஊர் காவலர் காத்தலைக் கொண்ட கல்குலிடத்துக் கனவிலே யான் உள்ளியவாறே வந்து † தோன்றினுக யான் அவனை வளைந்து பிடித்துக்கொண்டேன்; அதனுற் பெற்றதென்? அங்ஙனம் பிடித்துக் காண்பேனுகப் பையென விழிக்க, யான் பிடித்த கையுள்ளே மறைந்து தோன்றுதலின்; இனி யான் ஞாயிற்றைக் கொண்டே அவனைக் காண்பேனென்றுகருதி இருந்து மற்றைநாள் அந்தியிலே ஞாயிற்றை நோக்கிக் கிரணங்களைப் பிறர்க்குப் பகுத்துக் கொடாத ஞாயிறே! அக்கதிர்களோடே நீ அத்தகிரியை அடை கின்றுயாயின் அவரை நினைத்துத் தேடிப் பிடித்துக்கொண்டு என்முன்னே நிறுத்தி என்கையிலே உன்கையை நீட்டித் தப்பாமற் றருவையாயின் உயிர் திரியாக என்னெஞ்சாகிய அகலிலே கொளுத்திய காமத்தீ அவியும் என் றேன்; அதற்கு மறுமொழி தாராது அத்தகிரியே போகலின் அதனை நோக்கி, மறுவில்லாத சுடரே! அத்தகிரியைச் சேர்கின்றுயாயின் நீ கடலினிடத்தே மீண்டு வந்து தோன்றிப் பகற்பொழுதை உண்டாக்குமளவும்(உ) தானைமுதுந் தொய்யிலை எழுதாமற் செடுத்தவனை யான் தேடுவேன்; யான் தேடும்படி

கூடப் பெறுவேனேற் கூடென்று - கூட, விழைப்பாள்போற் காட்டி யிழையா திருக்கும், பிழைப்பிற் பிழைபாக் கறிந்து' முதற்றொள்.

க. (அ) "காவலர் கடுகினும்" குறிஞ்சி. உசo. (ஆ) "துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்" அகம். கூஉ: கூ. (இ) யாமங் கொள்பவர் சுடர் நிழற் கதுஉங், கடுமுரண் முதலைய நெடுநீர் லஞ்சி" புறம். கூஎ: கூ-கo. என்பவற்றுலும் பண்டைக்காலத்தே இராப்பொழுதில் ஊர்காவலர் துயிலாது விளக்கொடு விரைந்து சென்று ஊர்காத்தனரென்பது அறியலாகும்.

உ. (அ) "கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி" என்பதன் விசேட வுரையில், 'கரும்பையும் வல்லியையும் தோளிலே எழுதியெனவே தொய்யிலொன்றையும் முலைமே லெழுதியென்பதாயிற்று' என்று (சிலப். உ: உக. அடியார்க்கு) இருப்பதனுல் தொய்யிலென்பது வல்லி

(பிரதிபேதம்) * நெஞ்சம் இது பின் வருத்தம், † தோணினுக.

எனக்குக்(க)கைவிளக்காகச் சில கிரணங்களைப் பகுத்துத் தாராய் என்று கூறினேன்; அச்சுடரும் யாம் அதனைக் கொடுத்தால் அவனைக் கண்டு துனித்து வருந்துவேனென்று உட்கொண்டு அதனைத்தாராது போயவாறுணர்ந்து அவன் எம்மை முன்னர் விரும்பிப் பின்னர் நலத்தைச் * சிதைத்தானுயினும்; இங்ஙனஞ்சிதைத்தவனை எதிர்ப்பட்டால் யான்கூடாமல் வேறுசெய்வது எவன்கொலென்றுகருதி அத்தகிரியிலேவீழ்கின்ற காலத்து(உ)மன்றத்தின் †பனைமேலே தோன்றும் மலையிடத்து மாந்தளிர்போலும் நிறத்தையுடைய வெயிலே! என்

யின் வேறென்பது அறியலாகும். (ஆ) "தொய்யில் முதலிய பத்திக் கிற்று" என (சிலப்.டு:உஉசு. அடியார்க்கு) வருதலும்காண்க; தொய்யிலென்பது ஒரு கீர்க்கொடி; இது (இ) "நெய்தலுறழக் காமர், துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர" என்பதனால், விளங்கும். இவற்றால் தொய்யிலென்பது முதலில், தொய்யிற்கொடிபோன்ற கோலத்துக்கே சிறப்புப்பெயராயிருந்துபிறகுகோலப்பொதுவுக்கு பெயராயிற்றென்று தோற்றுகிறது. (ஈ) "கொழுது தேனிமிர் தொடையலங் கோனவனழகு, முழுதுங் காண்டய் தம்மெதிர் முன்னவெங் களிற்றுக், கெழுது தொய்யிலைக் கரும்பிதோவென்றுகாட்டினர்போற், பழுதிலாமணிக்கச் சுகஞ்சிற்பர்கள் பல்லார்" காஞ்சி. ஈகரேற்று. உகக. என்பதும்நோக்குக. (உ) "ஐய விரும்பிநீ, யென்றே ரொழுதிய தொய்யிலும்" (ஊ) "வரி தேற்றுய் நீயென வணங்கிறை யவன்பற்றித், தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய் தனைத்தற்கோ" (எ)நெடுமென்றோட், பெய்கரும் பீர்க்கவும் வல்ல னிளமுலைமேற், றொய்யி லெழுதவும் வல்லன்" (ஏ) "உதுக்காணுந், தொய்யில் பொறித்தவழி" கலி. கஅ: உ - ஙு, எசு: கசு - கடு, கசஙு: ஙக - ஙங, கசஞ: ஙஞ. (உ) "சண்பக மாலைவேய்ந்து சந்தனம் பளிதந் தீற்றி, விண்புக நாறு சாந்தின் விழுமுலைக் காம வல்லி, கொண்டெழுந் தருவ காட்டி முகத்திடைக் குளித்துத் தோண்மேல், வண்டளி ரீன்றுசுட்டி வாணுதல் பூப்ப வைத்தான்" சீவக. கoஅக. என்பவற்றால் தலைவன் தொய்யிலெழுதலுண்டென்பது அறியப்படும். இது சந்தனம் தேவதாரம், அகில் குங்கும முதலியவற்றின் குழம்பால் எழுதப்படுமென்பர்.

க. (அ) "இருளே நீங்கக் கைவிளக் கேந்தி யாங்கு" (ஆ) "காய்பொற் கடிகைக் கதிர்க்கைவிளக் கேந்தி" (இ) "இருளே நீங்கக், காட்டினர் தேவ ராவர் கைவிளக் கதனை" சீவக. கஞசஉ, உஙடிo, உஎஉசு. (ஈ) "இருளே யுலகத் தியற்கை யிருளகற்றுங், கைவிளக்கே கற்ற வறிவுடைமை" அறநெறி. கஞசு.

உ. (அ) "மன்றப் பெண்ணை" நற். ஙoஙட: ச. (ஆ)"மன்றிரும் பெண்ணை" குறுந். கஎஏ.

பிரதிபேதம்) * சிதைத்தானுயிங்ஙனஞ். † பனைமேலே.

மென்றோளை மெலிவித்தானது வடிவழகின் றன்மை யான் விரும்பிக் காண்ப தல்லது அவன் *செய்த நன்று தீதென்று கூறுகின்ற பிறவற்றைக் காணேன்; என்னையொழியப் பழைதாக இவ்வுலகத்து மகளிரும் தத்தங்கணவரைக் கண்டாற் கூடுவதன்றித் துனிந்திருந்தாரென்று கேட்டும் அறிவையோ என்று †கூறினேன்; அங்ஙனங் கூறி, காமநோய் என் மனத்தைச் சுழலப் பண்ணி நெருப்பாக நின்று சுட்டதாயினும் தோன்றாமல் மனத்துள்ளே மறைப்பேன்; அதனை, மறைத்தாற்போலே அழகிய இதழ்போலுங் கண் தன்னிடத்தே கொண்டுநின்ற காமநோயை உறுகின்ற வெவ்வியநீரையும் மறைப்பேன்; அதற்குக் காரணம் அந்நீரைத் தெளிப்பின் அளிக்கத்தக்க இவ்வுலகு வேவ தொன்றாய் இருத்தலின் என்று யான் ஆற்றிய அருமையுங் கூறினேன்; இதுகாறும் யானுற்ற ‡வருத்தம் இதுதானென்று நின்றசான்றோரைநோக்கிக் கூறி, பின்னரும் சான்றீர்! நலியும் காமமுங் கௌவையுமென்று சொல்லப் படும் இரண்டு விழுமம் உயிர் (க) ||காவாக இரண்டுபுறத்துந்தூங்கி என்னை நலியும்; இதனை இங்ஙனம் உயிர்மெலியுமளவும் வலிதிற் பொறுத்தேன்; இனி இறந்துபடுவதற்குமுன்னே இதனைக் களைவீராக என்று கூறினாள்; என்று சொல்லி, பகலும் இரவும் கூட்டமின்றிக் கழிந்தன என்று எண்ணி வருந்தி அழுதனள்; அழுது நீடுநினைந்து நொந்துஉயிர்த்தனள்; அதன்பின்னர் விளக்கத்தையுடைய இராக்காலத்தே வந்து வரைந்துகொண்ட கேள்வன் இவன் (?)நல்ல அழகினையுடைய மார்பனைப் புணர்ந்து, தேய்க்குங் காலத்தே சிதைக்கின்ற(உ) தேற்றாவினுடைய விதையைக்கொண்டு கலத்தே மெல்லத் தேற்றக் கலங்கிய நீரிற் சிதைவு தெளியுமாறுபோலத் தன் சிதைவு தெளிந்து பழைய நலத்தைப் பெற்றாள்; ஆதலான், யாமும் இவர்களை அறுதியாக மணியும் அதனிற் பிறந்த ÷நீரும் போலே வேறல்லரென்று துணியக் கடவா மென்று கண்டார்கூறிற்றாகப் +பொருளுரைக்க. எ - று.

ஓஓ இரக்கக் குறிப்பு. நகுதிரோ என்னும் ஓகாரம் ஐயம். நல்ல நகாலி ரென்றது மிகவும் நல்ல சிரிப்பினையுடையீராவீர், நல்லீர்கொல்லோ? அது நல்ல சிரிப்பாகாதே என நின்றது. 'எற்சிதை செய்தான் ×இவனென' என்றது, முன் 'யானுற்ற அல்லலுறீஇயான்' என்றதனையேயாகக்கொள்க. உரன் - அறிவு, "உரவோ ரெண்ணினும்" (ங) என்றார் பிறரும். என்னுடைய

க. கா - இரண்டு பக்கங்களிலும் பண்டங்களைக் கட்டி தோளிற் சுமக்கப் படும் மரம்; காவடித் தண்டு என்று கூறப்படும்.

உ. இம்மரம் நூல்களில், 'தேறு' என்றும் வழங்கும்.

ங. பதிற். எங: க.

(பிரதிபேதம்) * செய்த தீதென்று. †கூறினெங்ஙனங். ‡வருத்தமென்றுநின்ற, ||காவலாக வவ்விரண்டு புறத்துந்தூக்கி, ÷நீர்மையைப்போல, +பொருளுரைக்க "சொல் லொடுங். × இவனென நின்றது,

(க) நெய்தன் மலரன்னகண்கள் இங்ஙனம் * வருத்தத்தையுடையனவாகி மிகப் பசப்பனவோ பசவாவே என ஓகாரம் எதிர்மறை.

"சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொளியற்கை, புல்லிய இளமையெச்ச மாகும்"(உ)என்பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவுதோன்ற ஆசிரியர் †நல்வந்துவனார் செய்யுட்செய்தார்.

‡எல்லீர நல்கியவென்றும் பாடம். மென்றோ ணெகிழ்த்தான் றிறமல்லாலென்பதும் பாடம்.

இதனுள் அந்திக்காலத்தே கையறவெய்திப் பின்னர்ச் சான்றோரை நோக்கிக் கூறுகின்றவள் புல்லாராமாத்திரை என்று அவனுடைய புணர்ச்சிகழ்ந்தமையுங் கூறி யாவருங் கேட்ப நக்கழுது அல்லலுறீஇயானெனப் பெயரும் பெற்றியுங் கூறிப் புல்லிப் புணரப்பெறின் இகழ்ச்சியன்றுமெனக் கூறத்தகாதன கூறலின் மடந்தன்னை இறந்தவாறும் தெள்ளியேமென்றதனானும் எள்ளியிருக்குவே னென்றதனானும் வருத்தமிறந்தவாறும் "கோடுவாய்கூடா.....கொன்றையவன்"என்றதனால், தான்செய்ததனை வியவாமையின் மருட்கையிறந்தவாறும் நெய்தன்மலரன்ன கண்ணெனத் தன்வனப்பு மிகுதி கூறலின் மிகுதி ||யிறந்தவாறுங் காண்க.

இதனுறுப்புக்களுட் தலைவிக்குக் (ங) ÷ கலக்கமென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

எல்லீரா நல்கிய கேள்வ னிவ னெனவே ∴ கந்தருவத்தின் வழுவிப் பெருந்திணை நிகழ்ந்தவாறும் பின்னர் வரைவு நிகழ்ந்தவாறுங் காண்க. அது புல்லாரா மாத்திரை என்றதனானுமுணர்க.

(ச)இது புரிவுண்டபுணர்ச்சிஎனக் +கலித்தலைவந்தும் 'புல்லாராமாத்திரை யருகுவித் ‡தொருவரை யகற்றலின்' எனவும், ।'இனைந்துநொந் தழுதன

க. (அ) "கண்ணே ரொப்பின் கமழ்நறு நெய்தல்" நற். உஅங: உ. (ஆ) "நெய்தற், கூம்புவிடு நிகர்மல ரன்ன, வேய்தெழின் மழைக்கணெங் காதலி" அகம். அங: கஉ - கச. (இ) "நெய்தற் போதனைய வுண்க ணேரிழை" திருவிளை. மாபாதகந். நசு.

உ. தொல். செய். சூ. உஅசு.

ங. இந்நூற்பக்கம் அஅஉ: க, சு - ஆம் குறிப்புக்கள் பார்க்க.

ச. (அ) "புரிவுண்ட.....செவிசுவை கொள்ளாது என்பதனுள், 'இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ யிரங்கினள்' என இயற்சீர் நிரையொன்றியும் ।பாவேறுபடாமையின் அது கலிவெண்பாட்டாயிற்

(பிரதிபேதம்) *. வருந்த மிகப். † நல்லந்துவனார், ‡ எல்லீரு நல்கியவென்றே பாடம். || இறந்தவாறு கூறியவாறுங் காண்க, ÷ கலக்க மெய்ப்பாடு எல்லீர நல்கிய, ∴ கந்திருவத்தின், + கலித்தலையும் வந்து புல்லாரா.

ணினைந்துநீ டுயிர்த்தனள், எனவும் இயற்சீர் நிரை ஒன்றியும் * பாவேறுபட்டு 'எல்லையுமிரவுங் கழிந்தனவென்றெண்ணி †.யெல்லிரா' என ஐஞ்சீரடிவந்த வெள்ளைச் ‡ சுரிதகம்பெற்ற கலிவெண்பாட்டு. (உரு)

(கசரூ.) அகலாங்க ணிருணீங்கி யணிநிலாத் திகழ்ந்தபிற்
பகலாங்கட் பையென்ற மதியம்போ னகலின்று
நன்னுத னீத்த திலகத்தண் மின்னி
மணிபொரு பசும்பொன்கொன் மாவீன்ற தளிரின்மேற்
ரு கணிகாரங் கொட்குங்கொ லென்றாங் கணிசெல
மேனி மறைத்த பசலைய ளானாது
நெஞ்சம் வெறியா நினையா நிலனோக்கா
வஞ்சா வழாஅ வரற்றா விஃதொத்தி
யென்செய்தாள்கொல்லென்பீர் கேட்டீமின் பொன்செய்தேன்;

கo மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா
தறைகொன்று மற்றத னாருயி ரெஞ்சப்
பறையறைந் தாங்கொருவ னீத்தா னவனை
யறைநவ நாட்டினீர் கொண்டுதரின் யானு
நிறையுடையே னாகுவேன் மன்ற மறையினென்
மென்றோ ணெகிழ்த்தானை மேஎ யவனாங்கட்
சென்றுசேட் பட்டதென் னெஞ்சு;

கஎ ஒன்றி முயங்குமென் றென்பின் வருதிர்மற் றாங்கே
யுயங்கினா ளென்றாங் குசாதிர்மற் றந்தோ
மயங்கினா ளென்று மருடிர் கலங்கன்மி

றென்பது கொள்க" என்று பேராசிரியருரையிலும் (ஆ) "புரி வுண்ட என்னும் நெய்தற்கலி[யுள்,] 'புரிவுண்ட புணர்ச்சியுள்' எனக் கலித்தளையும்வந்து 'புல்லாரா மாத்திரை, யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கண்' எனவும்,'இனைந்துநொந்தழுதனணினைந்து நீடுயிர்த்தனள்' எனவும் இயற்சீர் நிரையாயன்றியும் பாவேறுபட்டு, 'எல்லையு மிரவுங் கழிந்தனவென் றெண்ணி யெல்லிரா, நல்கிய கேள்வனிவன்மன்ற மெல்ல' என ஐஞ்சீரடிவந்த வெள்ளைச்சுரிதகமும் பெற்ற கலிவெண்பாட்டு" என்று நச்சினார்க்கினியருரையிலும். உள்ள குறிப்புக்கள் இங்கே ஆராய்தற்பாலன; தொல். செய். சூ. கரூச. நச்.

(பிரதிபேதம்) * பா வேறுபடாமையின் எல்லையு. † எல்லீராவென, ‡ சுரிதகமும் பெற்ற.

னின்னுயி ரன்னுற் கெனைத்தொன்றுந் தீதின்மை
யென்னுயிர் காட்டாதோ மற்று;

உஉ பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் வந்தெனென் னெஞ்சு
மழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ வென்று;

உஎ அழிதக, மாஅந் தளிர்கொண்ட போழ்தினு னிவ்வூரார்
தாஅந் தளிர்சூடித் தங்நலம் பாடுப
வாஅந் தளிர்க்கு மிடைச்சென்றூர் மீடரின்
யாஅந் தளிர்க்குவே மன்;

கூக நெய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல னிளமுலைமேற்
றொய்யி லெழுதவும் வல்லன்றன் கையிற்
சிலைவல்லான் போலுஞ் செறிவினு னல்ல
பலவல்லன் றோளாள் பவன்;

கூசு நினையுமென் னுள்ளம்போ னெடுங்கழி மலர்கூம்ப
வினையுமென்னெஞ்சம்போ லினங்காப்பார்குழறோன்றச்
சாயவென் கிளவிபோற் செவ்வழியா ழிசைநிற்பப்
போயவென் னெளியேபோ லொருநிலையே பகன்மாயக்
காலன்போல் வந்த கலக்கத்தே தொன்றலை
மாலையும் வந்தன் றினி;

சஉ இருளொடியா னீங்குழப்ப வென்னின்றிப் பட்டா
யருளிலை வாழி சுடர்;

சஎ ஈண்டுநீர் ஞாலத்து ளெங்கேள்வ ரில்லாயின்
மாண்ட மனம்பெற்றூர் மாசி றுறக்கத்து
வேண்டிய வேண்டியாங் கெய்துதல் வாயெனின்
யாண்டு முடையே னிசை;

சஅ ஊரலர் தூற்றுமிவ் வுய்யா விழுமத்துப்
பீரலர் போலப் பெரிய பசந்தன

நீலர் நீல மெனவவர்க் கஞ்ஞான்று
போதூர் செய்தவென் கண்;

நுஉ தன்னுயிர் போலத் தழீஇ யுலகத்து
மன்னுயிர் காக்குமிம் மன்னனு மென்கொலோ
வின்னுயி ரன்னானைக் காட்டி யெனைத்தொன்று
மென்னுயிர் காவா தது;
எனவாங்கு;

நுள மன்னிய நோயொடு மருள்கொண்ட மனத்தவள்
பன்மலி யிறந்தவன் பணிந்துவந் தடிசேரத்
தென்னவற் றெளிந்த தேனம்போல
வின்னகை யெய்தின ளிழந்ததன் னலனே.

(க) இதுவுமது. இதற்தும் (உ)முற்கூறிய உரைகளைக் கூறிக்கொண்டு பொருளுரைக்க.

இதன் பொருள்.

(ங)அகலாங்க ணிருணீங்கி யணிநிலாத் திகழ்ந்தபிற்
பகலாங்கட் பையென்ற மதியம்போ *னகலின்று
நன்னுத னீத்த திலகத்தண் மின்னி
மணிபொரு பசும்பொன்கொன் (ச)மாவீன்ற தளிரின்மேற்
நு கணிகாரங் கொட்குங்கொ லென்றுங் கணிசெல
(ரு)மேனி மறைத்த பசலைய ளாஞ்சு
நெஞ்சம் வெறியா நினையா நிலனேக்கா
வஞ்சா வழாஅ வரற்று †வி஫தொத்தி
யென்செய்தாள் கொல்லென்பீர் கேட்டீமின் பொன்செய்தேன்

க. இச்செய்யுளும் தேறுதலொழிந்த ஸாமத்து மிகுதிறமாகிய பெருந் திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. கஉ. நச்.

உ. இந்நூற்பக்கம் அஅடு - அஅசு. பார்க்க.

ங. அ) "முழவிமிழு மகலாங்கண்" மது. ஈஉஎ. (ஆ) "அகலு ளாங் கண்" தநிஞ்சி. ச.

ச. "மாவீன்ற தளிர்மிசை மாயவ டிதலேபோ, லாயிதழ்ப் பன்மல ரைய கொங் குறைத்தர" கலி. உங: எ - அ. என்பதும் இந்நூற்பக்கம் கடிச: ங - ஆம் குறிப்பும் பார்க்க.

ரு. "பசந்த மேனியன் படர்நோயுற்று" சிலப். கஉ: சுஅ.

(பிரதிபேதம்) * கலொன்று. † இ஫ுதொத்தி.

எ - து: அகன்ற ஊரிடத்தேயிருந்து களவின்கண் அவளோடு கூடி இன்புற்ற காலத்து (க)இராக்காலத்து இருணீங்க விளங்கின அணிநிலாவை யுடைய மதியம்போலே விளக்கம் அமைந்து அவன்நீங்கினபின்பு பகற்பொழு திடத்து ஒளி பாழ்பட்ட மதிபோலே ஒளிகெட்டு நன்றுகிய நுதலினின்றும் போன *திலகத்தையுடையளாய்(உ)நீலமணியைத் தாஞெளிவிட்டு மாறுபடும் பசிய பொன்னெளிகொல்லோ! மாவீன்ற பசிய †கொழுந்தின்மேலே கோங்கம் பூவிற்றுதபரந்த ஒளிகொல்லோ! என்று பிறர்கூறுந் தன்னணி தன் னிடத்தினின்றும்போம்படி தன்மேனியைமறைத்த பசலையளாய் அமையாமை தன்னெஞ்சம் இன்பத்தைத் தரும் பொருள்களோடே ‡வெருவி அவ்வின்பங் கழிந்தபடியைநினைத்து (ங)நாணுற் பிறரெதிர்முகநோக்காது நிலத்தைநோக்கி அங்ஙாண் மேற்போகின்றதற்கு அஞ்சி அழுது அழாதே பலவுஞ் சொல்லித் தன்குறை கூறி இவளொருத்தி என்ன வருத்தமுற்றுள் கொல்லோ என்று கூறுகின்றவர்களே! யான் பொன்செய்தேன்; யாதுற்றதனைக் கேட்பீராக என்று கூறினுள். எ - று.

கo மறையிற்றன் யாழ்கேட்ட மானே யருளா
தறைகொன்று மற்றத னருயி ரெஞ்சப்

க. (அ) "கண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணியாட்கு" கலி. கூக: கஅ. (ஆ) "மாலை மணந்து காலைப் பிரியுங், காதல ருடையையோ கறைநீங்கு மதிய, மிரவே யாயி னல்லை பகலே, மெல்லியற் கொடிச்சி நுதலினும், புல்லென் றனையா னேகோ யானே" தமிழ்நெறி. மேற். (இ)"பார்குலாமுழுவெண்டிங்கள் பகல்வந்தபடிவம்போலு, மேர்குலா முகத்தி னாள" கம்ப. கிட்கிந்தைப். நெ. (ஈ) "விரிகதிர்ப் பரிதி மூன் னர் வெண்மதி மழுங்கும்" நைடத. போர்புரி. உ.

உ. "நிறந்திகழ் பாசிழையென்றது தன்னின் அழுத்திய மணியினும் தன் னிறந்திகழும் பசும்பொன்னிழை யென்றவாறு. இச்சிறப்பானே, இதற்கு, 'நிறந்திகழ் பாசிழை' என்று பெயராயிற்று" என்பது, பதிற். எங. உரை.

ங. (அ) "நீயுந் தாயை யிவற்கென யான்றற், கரையவந்து வினவனென் வையிக், களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா, நாணி நின்றோ ணிலைகண்டு" அகம். கசு: கங - கசு. (ஆ) "காணும் பொழுதி னுலைக்கல் செல்லாது, நாணி யிறைஞ்சும்" கலி. சகு: அ - க. (இ) "அன்மை கண்டு நாணிச், சோலை நோக்கி நடக்கும்" சீவக. கூகக. (ஈ)"மாதிர மெவையு நோக்கான் வளநகர் நோக்கான் வந்த, காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை நோக்கான், முதவிழ் கூந்தன் மாதர் தனித்தனி நோக்கத் தானப், பூதல மென்னு மங்கை தன்னையே நோக்கிப் புக்கான்" கம்ப. கும்ப. ங.

(பிரதிபேதம்) * நிலதத்தை, † கொம்பின்மேலே, ‡ வெருவியவின்பம்.

பறையறைந் தாங்கொருவ னீத்தா (க)னவனை
*யறைநவ நாட்டினீர் கொண்டுதரின் யானு
நிறையுடையே னாகுவேன் மன்ற மறையினென்
மென்றோ †ணெகிழ்த்தானை மேஎ யவனாங்கட்
சென்றுசேட் பட்டதென் னெஞ்சு

எ - து: அங்ஙனங் கூறுகின்றவள் வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக் கேட்ட (உ) அசுணமாவை இவ்வின்பமுற்றதென்று, அருள் ‡பண்ணாதே முன்பு செய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதன் அரிய உயிர்போம்படி பறையைத் தட்டினாற் போலே ஒருவன் முன்னர் வஞ்சித்து

க. "அவனை .....மன்ற" என்னும் பகுதிக்கு உரை பின்பு உள்ளது.

உ. அசுணமென்பது விலங்குகளுள் ஒன்றென்று பலவிடத்தும் பறவைகளுள் ஒன்றென்றுசிலவிடத்தும் வழங்கப்படுகிறது. இதற்கு யாழொலி (குழலொலி வண்டொலி பாட்டொலி) முதலிய மெல்லிசையால் இன்புறுதல் முதலியவையும் பறையொலி (முரசொலி வெடியொலி) முதலிய வல்லிசையால் துன்புறுதல் முதலியவையும் இயல்பு. இதனைக் குறிஞ்சி நிலத்துக் குரியதென்றும். புகைபோன்ற மேனியுடையதென்றும் அச்சப்பொருள்களுள் ஒன்றென்றும் சுவையொளியூறோசை நாற்றமென்ற ஐந்தனுள் ஓசையிலீடுபட்டு உயிரையுமிழப்பதென்றும் கூறுவர். இவற்றுள் ஒவ்வொரு செய்தியே தனித்தும் பல செய்திகள் சேர்ந்தும் செய்யுட்களிற் பயின்று வருதலும் பிறவும் (அ) "மாதர் வண்டி னயம்வருந் தீங்குரன், மணநாறு சிலம்பி னசுணமோர்க்கு, முயர்வரை நாடன்" (ஆ) "அசுணங் கொல்பவர் கைபோனன்று, மின்பமுந்துன்பமுமுடைத்தே" நற்.உசச: ௩-௫; ௩௦ச: அ-௯. (இ) "இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத், திருங்கல் விடரளை யசுண மோர்க்குங், காம்பம லிறும்பின்" அகம். அஅ: கக - கஙூ. (ஈ) "பறைபட வாழா வசுணமா" நான்மணி. ச. (உ) "இன்ன ளிக்குரல் கேட்ட வசுணமா, வன்னளாய்" சீவக. கச௦உ. (ஊ) "கோவலர் கொன்றைத் தீங்குழ, லுலவுநீ ளசுணமா வுறங்கு மென்பவே" சூளா நாட்டுச். உஅ. (எ) "இசைகொள் சீறியா ழின்னிசை கேட்ட, வசுண நன்மா வந்நிலைக் கண்ணே, பறையொலி கேட்டுத்தன் படிமறந் தது போல்" பெருங். (க) சஎ. உசக - உசஙூ. (ஏ) "அச்சப்பொருளாவன, 'வள்ளெயிற்றரிமா..... .....குன்றுறை யசுணம்' என்று சொல்லப் பட்டன போல்வன" தொல். மெய்ப். சூ. க. நச். உரை. (ஐ) "இசை கேட்ட வசுணமாத் தாழ்ச்சிபோல்" மேரு. வைசயந்த. சச.(ஒ) "துறையடுத்த விருத்தத் தொகைக்கவிக், குறையடுத்த செவிகளுக் கோதில்

(பிரதிபேதம்) * யறைகல நாட்டினீர், † ஞெகிழ்த்தானை. ‡ பண்ணாதென்றருள்பண்ணாதே

இன்பத்தை உண்டாக்கிப் பின்னர் அவ்வின்பம் போம்படி என்னைக் கைவிட்டான்; அக்களவொழுக்கத்தாலே என் மெல்லிய தோளை *மெலிவித்தவனை (என்) நெஞ்சு பொருந்தி அவனுறைகின்ற இடத்தே சென்று வருதற்கு நெடுங்காலத்த[வ](த)ாயிற்று என்று கூறினள்.

கஎ ஒன்றி, †முயங்குமென் றென்றின் வருதிர்மற் றுங்கே
‡யுயங்கிரு ளென்றுங் குசாதிர்மற் (க)றந்தோ

யாழ், நறையூத்த வசுணரன் மாச்செவிப், பறையடித்தது போலு மென் பாவரோ" (ஒ) "குனிந்த வூசலிற் கொடிச்சிய ரெடுத்தவின் குறிஞ்சி, கனிந்த பாடல்கேட் டசுணமா வருவன காணுய்" (ஓள) "வாம மேகலை வானர மங்கையர், காமப் பூசற் களியிசைக் கள்ளிறற், றூம மேனி யசுணந் துயில்வுறு, மேம கூட மெறுமலை யெய்துவீர்" கம்ப. பாயிர. அ; சித்திரகூடப். உசு; நாடவிட்ட.கசு.(ஃ) "வண்டியா, ழென்ற வசுண மிறைகொள்ளு நாடர்" தஞ்சை. உஉங. (அஅ) "திவ வியா ழரமகளிர் தடவந்த வொலிகேளாச், செம்மாந்துள்ள, நவையின் மணிக் குடுமிதொறு மசுணமுறை புட்பகமா களிவான் குன்றும்" இலிங்க. நவவருட. சஅ. (ஆஆ) "மூசொலி கேட்ட வசுணமென் புள்ளின் மூச்சவிக் தொருவழி தேறி" கூர்ம. இராமன்வனம். சு. (இஇ)"வசைபடு மன்னவன் வாய்மை யாலறை, விசிமுழ வொலிசெவி வெதும்பக் கேட்டலு, மிசைபடு மன்னவற் கிரக்கி லேரெலா, மசுண மென் புள்ளென வலமந் தேக்கினர்" நைடத. கர்நீங்கு. சுசு. (ஈஈ) "காழுடைப்புறக் கழைகளின் றூளெதாறுங் கால்பரந் திசைக்கின்ற, வேழிசைக்குள முருகிமெய் புளகெழ விறைகொளு மசுணங்க, டாழழற்சுடர் சுடச்சுட வெடித்தெழு சுடலவோ வையின்மாய்ந்த" (உஉ) "பண்ணுறக் குருகிப் பறையாலகப் பட்ட மான்போல்" வில்லி.காண்ட. உ0. வெளிப்பாட்டு. சுசு. (ளஎஎ) "எற்றதோ ரிசையினுலே யிறக்குமா லசுணம்" பாகவதம். (கக) உத்தவர். சூ. (எஎ) "மறக்கும்ப தந்தியுஞ் சேலு மசுணமும் வண்டினமும், பறக்கும்,பதங்களும் போலவ ராற் கெடும் பாதகரே" திருவேங்கடத். உ.அ. (ஏஎ) "குழலிசைகேட் டருக ணேயு மசுணமென" காஞ்சிப். அந்தகேச. அ. (ஐஐ) "போரிகை முழக் கிய பிறங்கு மோசையா, லரிட முழந்துவீ முசுண மாவென" விநாயக. மகோற்கடர். உசுட. என்ற தமிழ்நூற் பகுதிகளாலும்(ஓஓ) "ꣳஷ்ஷ கொஹீத மொஹந ஷ்ஹமொ ஷ்ஹமயதெ வயழ॥" சுக்கிரநீதி. க: கoஉ. என்ற வடநூற் பகுதியாலும் அறியலாகும்.

க. அந்தோவென்பது, 'இரக்கத்தின்கட்குறிப்பு' கோவையார்.எஉ.உரை. 'இரக்கக்குறிப்பு' தீவக. கoசுஉ. உரை. 'இரக்கங்குறித்து வருவதோ ரிடைச்சொல்' நன். இடை. சூ. உ. மயிலை. சங்கர. விருத்தி. இரா.

(பிரதிபேதம்) * மெலிவித்தவனை நெஞ்சு, †முயங்குமெமென்று, ‡உயங்கிரு ளென்றுங்

மயங்கினை யென்று *மருடிர் கலங்கண்மி
(க)னின்னுயி ரன்னுற் கெணைத்தொன்றுங் நீதின்மை
யென்னுயிர் காட்டாதோ மற்று

உஉ (உ)பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் †வந்தெனென் னெஞ்ச
மழியத் துறந்தானைச் சீறுங்கா லெண்ணை
யொழிய விடாதீமோ வென்று

உள அழிதக, (ங)மாஅந் தளிர்கொண்ட ‡போழ்தினு னிவ்வூரார்
தாஅந் தளிர்சூடித் தங்நலம் பாடுப
வாஅந் ‖ தளிர்க்கு மிடைச்சென்றூர் மீடரின்
யாஅந் ÷ தளிர்க்குவே மன்

ஙக நெய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்(சு)றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல × னிள(ஙு)முலைமேற்
றெய்யி லெழுதவும் வல்லன்றன் கையிற்

க. "மதுமுகத் தலர்ந்த கோதை மாற்றமைந் தற்குரைப்பாள், கொதிமுகக் குருதி வைவேற் குரிசிலோ நம்மை யுள்ளான், விதிமுக மண்ண லெய்தி வீற்றிருந் தின்ப முய்ப்ப, மதிமுக மறியு நாமே வாடுவ தென்னை யென்றுள்" சீவக. கஎ0அ.

உ. (அ) ஆற்று நெஞ்சழிதல் என்னும் மெய்ப்பாட்டுக்கு, "பழிதபு ஞாயிறே .....விடாதீமோ வென்று" என்னும் பகுதி மேற்கோள்; தொல். மெய்ப்பாட். சூ. உ:உ; இ - வி. சூ. ஙஅ0. (ஆ) ஞாயிறு முதலிய சில பொருள்கள் சொல்லுவனபோலவும் கேட்குபோலவும் சொல்லப்படு மென்று கூறி, "பழிதபுஞாயிறே பாடறியாதார்கண்" என்னும் அடியை ஞாயிறு அவ்வாறே சொல்லப்படுவதற்கு மேற்கோள்காட்டினர்; இளம் பூரணர்; தொல். செய். சூ. ககூ0. 'ஞாயிறு'

ங. "மலைமாந் தளிரே" கலி. கசஉ: சஎ.

ச. (அ)"நற்றே ளிழைத்த கரும்புக்கு"; (ஆ) "தானீர்த்த கரும்பணி வாட வென், மென்றே ணெகிழ்த்தான்" கலி. சுச: ககூ, கங்க: உக - ங0.

ஞ. இந்நூற்பக்கம் அகூ0: உ-ஆம் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * மருடிர் கயங்கண்மின், † வந்தனனென்னெஞ் சழிய, ‡பொழுதினுள், ‖தளிக்குமிடை, ÷ தளிர்க்குமென்ன். × இணமுலைமேல்.

(க)சிலைவல்லான் போலுஞ் செறிவினை னல்ல
பலவல்லன் மேளாள் பவன்

கூசு நினையு(உ)மென் னுள்ளம்போ னெடுங்கழி மலர்கூம்ப
வினையுமென்(ங)னெஞ்சம்போ வினங்காப்பார் குழமேன்றச்
சாயவென் (ச)கிளவிபோற் செவ்வழியா ழிசைநிற்பப்
போயவென் னெளியேபோ லொருநிலைமை பகன்மாயக்
(ஞ)காலன்போல் வந்த கலக்கத்தோ டென்றலை
மாலையும் வந்தன் றினி.

சஉ இருளொடியா னீங்குழப்ப வென்னின்றிப் பட்டா
யருளிலை வாழி சுடர்

க. (அ)"அரிவையை யரம்பை நாண வணிந்தன னனங்க னன்னுன்" (சீவக. சுஎச) என்புழி, 'அனங்க னன்னுன்' என்பதற்கு, 'இவளோத் தீண்டவும் வேட்கை நிகழாமையின் அனங்க னன்னுன் என்றார்' என்று விசேடவுரை கூறி, "சிலைவல்லான் போலுஞ் செறிவினை" என்பதனைமேற்கோள்காட்டினர் இவ்வுரையாசிரியர். (ஆ)"வில்லாண் மையினுல் வெண்கருப்பு வில்லோன்றனக்கே நிகரென்ன" வில்லி. திரௌபதிமாலையிட்ட. சசு. (இ) "வேயெனத் தகைய தோளி யிரா கவன் மேனி நோக்கித், தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டா; ளுயெனத் தகுதுமன்றே காமனு நாமு மெல்லாம்" கம்ப. கும்ப. கூ0.(FP) "திருமலி கருப்புவெஞ்சிலையினு லுலகமெல்லாம், பொருதுசெங் கோன 'டாத்திப் 'புகழ்விளை யேக வீரன்" எனவும் (உ)"காமனும் விழையுங் காமர் காரிகைக், கலையுணர் மகளிர்" பெருங். (க) சo: கஅங - கஅச. (ஊ) "காமனும்.....காமுறு மொப்பில் வனப்பினுள்" திருவிளை. மாபாதகத். கூ. எனவும் வருவன நோக்குக.

உ. "இம்மாலை, இருங்கழி மாமலர் கூம்ப வரோவென், னரும்படர்நெஞ்ச மழிவொடு கூம்பும்" கலி. கஙo: கக - கங.

ங. "இம்மாலை, கோவலர் தீங்குழ லினைய வரோவென், பூவெழி லுண் கண் புலம்புகொண் டினையும்" கலி. கசo: கச - கசு.

ச (அ) "செவ்வழியாழ் நரம்பன்ன கிளவியார்" கலி. ககஅ: கஙு; (ஆ) "செவ்வழி நல்யா, ழிசையோர்த் தன்ன வின்றீங் கிளவி, யணங்குசா லரிவையை" அகம். உகஉ: கூ - அ.

ஞ. "பிறைநுதி யெயிறுக, நாற்றிசையு நடுக்குறூஉ மடங்கற் காலைக், கூற்றுநக் கதுபோலு முட்குவரு கமோலி" (கலி. கஉo: எ - கூ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௪௪ (க)ஈண்டுநீர் ஞாலத்து ளெங்கேள்வ ரில்லாயின்
மாண்ட மனம்பெற்றார் மாசி றுறக்கத்து
வேண்டிய வேண்டியாங் கெய்துதல் வாயெனின்
யாண்டு முடையே னிசை

௪௮ ஊரலர் தூற்றுமிவ் வுய்யா விழுமத்துப்
(உ)பீரலர் போலப் பெரிய பசந்தன

(௩)நீரலர் (௪)நீல மெனவவர்க் கஞ்ஞான்று
பேரஞர் செய்தவென் கண்

௫௨ (௫)தன்னுயிர் போலத் தழீஇ *யுலகத்து
மன்னுயிர் காக்குமிம் மன்னனு †மென்கொலோ
வின்னுயி ரன்னானைக் காட்டி யெனைத்தொன்று
மென்னுயிர் காவா தது

எனவாங்கு

க. "ஈண்டுநீர் மிசை" கலி. க௦௦: க.

உ. இந்நூற்பக்கம் உஎசு: ௫, ௩௨௨: ௩ - ஆம் குறிப்புக்கள் இங்கே அறிதற்பாலன.

௩. "நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை, கோடை யெற்றினும் வாடா தாகும்" குறுந். ௩௮௮.

௪. (அ) "நீலத் தலர்வென்ற வமருண்கண்,.....வேலிற், சேந்து நீ யினையையா லொத்ததோ சின்மொழி.....கணையினு நோய் செய்தல் கடப்பன்றோ கனங்குழாய்" கலி. ௫எ: ௯-க௫.(ஆ) "பூவொத் தலமருந்தகைய வேவொத், தெல்லாரு மறிய நோய்செய் தனவே" குறுந். எஉ.

௫. (அ)"அறனிழலெனக்கொண்டா யாய்குடை யக்குடைப், புறநிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா, பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றாளை" கலி. ௯௯: அ - க௦. என்பதும் (ஆ) அதன் குறிப்பும் (இ) "நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தயா, னென்றுணைக்குலமங்கையொ ரேந்திழை, தன்றுயர்க்குந் தகவிலெ னாயினே, னன்று நன்றென் வலி யென நாணுமால்" கம்ப. அயோமுகி. கசு. (ஈ) "தன்னுயிர்போல மன்னுயிர்க் கிரக்குந் தயவினோன்" மச்ச. பிரயாகையிற் பலசொரூப கதன. கஉ.

(பிரதிபேதம்) * யுலத்து, † என்கொலெம்முன்னுயிரென்.

௫௭ மன்னிய நோயொடு மருள்கொண்ட மனத்தவள்
பன்மலை யிறந்தவன் பணிந்துவந் தடிசேரத்
*தென்னவற் றெளித்த தேஎம்போல
வின்னகை யெய்தின ளிழந்ததன் னலனே

எ - து: அங்ஙனங் † கூறியவள் அது கொண்டுவருதலுங் கூடும்; அதனோடே நீருங் கூடி (க) நவகண்டமெனக் கூறுபடுத்தின ‡உலகத்தின் கண்ணே அவனை ஆராய்ந்து நீர் பிடித்துக்கொண்டு எனக்குத் தரப்பெறில் யானும் ||பிறமகளிரைப் போல அறுதியாக(உ) நிறையென்னுங்குணமுடையே னாவேன் ÷என்றுங் கூறினாள்; அதுகேட்டவர்கள் அதற்கு மறுமொழி கொடாமற் பின்னே வந்தமையின், இவள் ஒருநாளிலேயாயினும் அவனைப் பொருந்தி +முயங்குமென்று கருதி, என்பின்னே வாராநின்றீர்; பின்னை இவள் அப்பொழுதே முன்புபோலன்றி மிகவும் வருந்தினாள் என்று கருதி அவ்விடத்தே நின்று அவனுக்கு ஓர் தீங்கு நிகழ்ந்ததோவென்று உசாவா நின்றீர்; அவ்வருத்தமேயன்றி ஐயோ இவள் கையறவு எய்தினாளென்று மருளாநின்றீர்; இங்ஙனம் உண்மையுணராமற் கலங்காதேகொள்ளும்; பின்னை என் இனிய உயிரை ஒப்பானுக் கியாதொன்றுந் தீதின்றி அவனுள னாயிருக்கின்றமையை (௩) அவனுயிரோடு ஒன்றாகிய என்னுயிர் ஈண்டுக் காட்டாதொழியுமோ? அதுதான் இறந்துபடாது அவனிருந்தமை காட்டிற் றில்லையோ என்றாள்; அதுகேட்டவர்கள் தனக்கு ஓரேதமின்றி நின்று நின்னை இங்ஙனம் வருத்தினவனை நடுவாக நோக்கி நின்ற ஞாயிறு தான் வருத்துங்காண் என்றார்; அது கேட்டு நடுவுநிலைசெய்யாமல் உண்டாம்பழி நீங்கும் ஞாயிறே! உலகியல் அறியாதாரிடத்துக் கழியச்சீறுதற்கு விரைந்து ×செல்வையென்று இவர்கள் கூறக்கேட்டு நின்னை வழிபட்டு நீ அவரை மிகச் சீறாதபடி இரந்துகொள்வேனாக வந்தேன்; நீ என்னெஞ்சங் கெடும்படி என்னைக்கைவிட்டவனைக் ∴கண்டுசீறுமிடத்து என்னை நீங்கவிடாதே கொள்;

க. (அ)"வடபால்விதேகந் தென்பால்விதேகங், கீழ்பால்விதேக மேல்பால் விதேகம், வடபாலிரேவதந் தென்பாலிரேவதம், வடபாற்பரதந் தென் பாற்பரத, மத்திமகண்டமென் றித்திற மென்ப, நாவலந் தீவி னவ கண்டப்பெயரே" சேந்தன்றிவாகர. (ஆ) "நவத்தாரணி யாதிகட்கு" திருவானைக்காப். திருநீற்றுத்திருமதிற். அ.

உ. இந்நூற்பக்கம் ௪௧௯: ௬-ஆம் குறிப்புப் பார்க்க.

௩. "காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்கு, மாவிபோ லாடையுமொன் றானதே" நள. கலிதொடர். அச.

(பிரதிபேதம்) * தென்னவர்த் தெளிந்த. † கூறியவள் கொண்டு, ‡ உலத்தின்கண்ணே, || பிறர்மகளிரை, ÷ என்று கூறினாள். + முயங்குவேமென்று. × செல்வை யன்றியவர்கள்; செல்வையென்றவர்கள், ∴ கண்டு நீ சீறுமிடத்து.

*அஃது என்னெனில் நீ அக்காலத்து அவனை †மிகச்சீறில் யான் இறக்கும்படி நேரும் ‡ என்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறின அளவிலே ஞாயிறு படுகின்றமையைக் கண்டு பிரிந்தார்க்கு வருத்தந்தகும்படியாக மாந்தளிர்போலும் நிறத்தைக்கொண்ட மாலைக்குமுன்னாகிய இக்காலத்தே இவ்வூரின் மகளிர் தாம் (க)தளிர்விரவின மாலைகளைச் சூடி ஆடவர்மேல் தாம் வைத்த நலத்தைப் பாடி இன்புறுவர்கள்; அவர்களைப்போல ஆச்சாமரந்தளிர்க்குங் காட்டிடைச்சென்றவர் || மீண்டுவரின் யாம் மனமகிழுவேம்; அதனாற் பெற்றதென்? அவர்வரக் கண்டிலேம் என்றுங் கூறினாள்; கூறி, யாம் தளிர்க்குமாறு எங்ஙனே என்பீராயின், என்றோளைத் தொழில் கொள்கின்ற அவன் நெய்தற் பூவைப் புறவிதழொடித்து மாலை கட்டிச் சூடவும் வல்லன்; நெடிதாகிய மென்றோளிலே காமன்சிலையாகிய எழுதுகரும்பை எழுதவும்வல்லன்: இளமுலைமேல் தொய்யிற் குழம்பாற் கொடி எழுதவும்வல்லன்; இவையொழிந்து நீங்கியிருந்து மனம் வேட்கையடக்கியிருக்குமிடத்துத் தன்கையில் வில்லைத் தொழில்கொள்ள வல்ல காமனை ஒக்கும்; அதுவன்றி, வேட்கை நிகழ்ந்து கூடுங்காலத்து ஆண்டு நிகழ்த்தும் நல்ல தொழில்கள் பலவற்றையும் வல்லன்; இவ்வாற்றான் என் மனந் தளிர்க்குமென்றுகூறினாள்; அங்ஙனங் கூறின அளவிலே மாலைக் காலம் வருகின்றதனைக் கண்டு அவனை நினையும் என்னுள்ளங் குவியுமாறு போல நெடிய கழியின் மலர்கள் குவிய, இரங்கும் என்னெஞ்சுபோலே கோவலர் குழலோசைதோன்ற, அலைவுபெற்றஎன் மொழிகள்போல(உ)வண்டுகளின்(ங)செவ்வழிப்பாட்டு அடங்க, கெட்டுப்போன என் அழகுபோலப் பகற்

க. (அ) "தாமரைக் கொழுமுறித் தாதுபடு செழு மலர்க், காமருகுவளைக் கழுநீர்மாமலர்ப், பைந்தளிர்ப்படலை" சிலப் ௪:௩.௯-௪௧.(ஆ) "முறி மிடை படலை மாலை" சீவக. ௪௮௩, ௧௮௮௯. (இ) "பைந்தளிர்ப்படலை" பெருங்.(௩) உஎ: ௧௪. (ஈ)"கொய்தளிர்த் தண்படலை" (உ) இது படலை மாலை எனவும் இலை மாலை எனவும் வழங்கும்.

உ. (அ)"செவ்வழிப் பண்ணிற் சிறைவண்டரற்றுந், தடந்தாழ் வயலொடு" சிலப். ௧௧:௮௮-௮௯.(ஆ) "பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே,.....துறந்தார்நாட் டுளதாங்கொன், மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை" சிலப். எ: ௪௨.

ங. (அ) "இருள்வரச், சீறியாழ் செவ்வழி பண்ணி" (ஆ) "மாலை மருதம் பண்ணிக் காலைக், கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி, வரவெமர் மறந்தனர்" (புறம். ௧௪௪:௧-௨, ௧௪௯: ௨-௪) என்பவற்றால், செவ்வழிப் பண் மாலைக்குரித்தென்று கூறப்படுதலால் செவ்வழியா ழிசைநிற்ப வென்பதற்கு, யாழிற் செவ்வழிப்பண்ணை வாசிப்பஎன்றலுமாம். இஃது இரங்கற்பண்ணாதலின், சாயகிளவிக்கு உவமையாகக் கூறப்பட்டது;

(பிரதிபேதம்) * அதுவென்னெனில், † மிகச் சீறாமல் யானிறக்கும்படி,‡என்று கூறினாள், || மீண்டுவரின் மனமகிழுவோம். அதனால்.

காலத்தின் ஒளி மழுங்க, கலக்கத்தோடேவந்த காலனைப்போலே என்மேலே மாலைக் காலமும் வந்தது; இனி எங்ஙனம் ஆற்றுவேனென்று கூறினாள்; கூறி, அம்மாலையை வரவிட்ட ஞாயிற்றை நோக்கி, சுடரே! யானென்பதொரு தன்மையின்றி யான் இவ்விடத்தே இராக் காலத்தாலே வருந்தும்படி நீ போனாய்; அருளுடையையல்லையாயிருந்தாய்; * இத்தன்மையால் நீவாழ்வாயாக என்று கூறினாள்; கூறி, இவ்விரவால் இறந்துபட்டேனாயினும் தீங்கின்றாயிருந்ததென்று கருதி, மிகுகின்ற நீரையுடைய உலகத்துள் உறைகின்ற கேள்வருளரல்லாராயின், (க)தங்கணவர்மேலுள்ள வேட்கையோடே இறந்துபடும் மாட்சிமைப்பட்ட மனத்தைப்பெற்றவர்கள் குற்றமில்லாத சுவர்க்கத்தே சென்று அவர்கள் நுகர விரும்பியவற்றைத் தாம் விரும்பியபடியே பெறுதல் மெய்யென்று நூல்கள் கூறியவென்னின் யானும் அங்ஙனம் அவன்மேல் விருப்பத்தோடே உயிர்போய் அவனைப் பெற்று எவ்விடத்தும் புகழுடையேனாவேன்; இனி † வருத்தமின்று; என்றுங்கூறினாள்; கூறி (உ) "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் கண்டு விடும்" என்றுகூறிய பழமொழி உளதாகலின், அவ்வாறே நீரில் அலர்ந்த நீலமென்று அவர் புகழ அவர்க்கு அந்நாளிற் பெரியவருத்தத்தைச்செய்த என்கண்கள் இப்பொழுது பீரலர் போலப் பெரியவாகப் பசந்தன; ‡ அதனையும் என் வருத்தத்தையுங் கண்டும் அருளின்மையின் அவனை எனக்குக் காட்டாமல் இவ்வூர் நின்று அலர் தூற்றாநிற்கும்; இனி இவ்(ங)வுய்யா விடும்பையிடத்து உயிர்களைக் காத்தற்கு யான்

இஃது இரங்கற்பண்ணென்பது (இ) "பையுணல்லியாழ் செவ்வழி பிறப்ப" அகம். ௩௧௪: கஉ என்பதனாலும் (ஈ) இக்குறிப்பில் முதலாவதற்கு,'மாலைக்காலம் வந்தவளவிலே சிறிய யாழை இரங்கற்பண்ணாகிய செவ்வழியென்னும் பண்ணிலே வாசிக்கும் பரிசுபண்ணி' என்று எழுதியிருக்கும் உரையாலும் அறியலாகும்.

க. 'அதுவன்றிப் புகழ்வேண்டியும் கணவனொடு செத்தார் சுவர்க்கம் புகுவரென்னும் உரைகேட்டு அதுவேட்கையானும் சாம்; அப்பரிசன்றி அன்பினானும் சாம்' என்பது இறை. சூ. க. உரை.

உ. (அ) "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா, பிற்பகற் றாமே வரும்" குறள். ௩௧௯. (ஆ) "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்" சிலப். உக: ௩-௪. (இ) "முற்பகற்செய்யிற் பிற்பகல் விளையும்"கொன்றைவேந்தன். (ஈ) "முற்பகற் செய்வினை பிற்பக லுறுநரின்" பெருங். (க) ௫௪: உ௫௯. (உ) "முற்பக லோர்பழி முடிக்கின் மற்றது, பிற்பக றமக்குறும் பெற்றி யென்னவே" கந்த. இரண்டாநாட்சூர. ௩௬௫.

ங. உய்யா இடும்பை - பிழையாமைக்குக் காரணமான துன்பம்; கலி. கங௯:கஅ. கடக்க முடியாததுன்பம்; குறள். ௩கங. பரி. ஒழியாததுன்பம்; பு-வெ. உழிஞை. உ௫. போக்க முடியாத துன்பம்; சிலப். எ: அ.

(பிரதிபேதம்) * இத்தன்மையான நீ, †வருத்தமென்றென்றுங். இதனையும் வருத்தத்தையும்.

அரசனே என்று கருதித் தன்னுயிரைப் பாதுகாக்குமாறு போல உலகத்துப் (க)பெரிய உயிர்களைஎல்லாம் தழீஇப்பாதுகாக்கும் இம்மன்னனும் எனக்கினிய உயிரை ஒப்பானைக் காட்டி என்னுயிரைச் சிறிதொன்றுங் காவாதிருக்கின்ற தன்மை என்னபயனைக் கருதியோ*வென்றுங் கூறினாளென்று கூறும்படியாக நிலைபெற்றகாமநோயாலே† அங்ஙனம் மயக்கங்கொண்ட மனத்தையுடையவள் பலமலைகளைக் கடந்துபோனவன் வரைவொடுவந்து பணிந்து தன்னடியைச் சேர்கையினாலே பாண்டியனை உறவாக அவன் மனத்தைத் தெளிவித்த தேயத்திலுள்ளவர் இன்பமுற்று வாழுமாறுபோல அவனால் இழந்த நலத்தை ‡இனிய அகமகிழ்ச்சியோடு எய்தினள்; இஃதென்னவியப்போஎனக் கண்டார் கொண்டு கூறிற்றாக உரைக்க. எ - று.

'சென்றுசேட்பட்ட தென்னெஞ்சு' என்னுந் துணையும் கூறத்தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'நெடுமென்றோள்' 'நீரலர் நீலம்' 'இளமுலை' என்பனவற்றான் மிகுதியிறந்தவாறும் 'வழிபட் டிரக்குவேன் வந்தேன்' என் (பதனால்)வருத்தமிறந்தவாறும் 'யாண்டுமுடையே னிசை' என்பதனால் வியவா மையின் மருட்கையிறந்தவாறும் உணர்க.

இது கண்டார்க்கு ||அவளாக்கங்கண்டு மருட்கை பிறந்தது.

நெய்தனெறித்தல் முதலியன (உ)திருவினாற் காமக்குறிப்புப்பிறந்த ஒப்பு; இவை குடிப்பிறப்பினை அறிவித்துக் காமக் குறிப்பினை நிகழ்த்தலின்.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (உசு)

(கசச.) நன்னுதால் காண்டை நினையா நெடிதுயிரா
வென்னுற்றாள் கொல்லோ விஃதொத்தி பன்மா
ணகுதருந் தன்னாணுக் கைவிட் டிகுதருங்
கண்ணீர் துடையாக் கவிழ்ந்து நிலனோக்கி
௫. யன்ன விடும்பை பலசெய்து தன்னை
வினவுவார்க் கேதில சொல்லிக் கனவுபோற்
றெருளு மருளு மயங்கி வருபவள்
கூறுப கேளாமோ சென்று;

க. "பெரியத னாவி பெரிது" பழமொழி. க.

உ. "நெய்தனெறிக்கவும்.....றோளாள் பவ னென்பது திருவி னாற் காமக்குறிப்புப் பிறந்தவாறு; என்னை? இனையன வல்லனாதல் செல்வக்குடிப்பிறந்தாரை அறிவிக்குமாகலின்; அது காமக்குறிப்பினை நிகழ்த்துமென்பது. இது தலைமகட்கும் ஒக்கும்" என்பது தொல். மெய்ப். சூ. உ௫. பேராசிரிய ருரையிலும் காணப் படுகின்றது.

(பிரதிபேதம்) * என்று கூறினாள், † இங்ஙனம், ‡ இனியமகிட்சி, || அவராக்கம் பிறந்தது மருட்கை.

கூ எல்லாநீ, என்னணங் குற்றனை யார்நின் னிதுசெய்தார்
நின்னுற்ற வல்ல லுரையென வென்னை
வினவுவீர் தெற்றெனக் கேண்மி னெருவன்
குரற்கூந்தா லென்னுற்ற வெவ்வ நினக்கிபா
லுரைப்பனைத் தங்கிற்றெ னின்னுயி ரென்று
மருவூட்டி மாறி யதற்கொண் டெனக்கு
மருவுழிப் பட்டதென் னெஞ்சு;
கசு எங்குந் தெரிந்தது கொள்வே னவனுள் வழி;

கள பொங்கிரு முந்நீ சகமெல்லா நோக்கினை
திங்களுட் டோன்றி யிருந்த குறுமுயா
லெங்கே ளிதனகத் துள்வழிக் காட்டுமோ
காட்டுயா யாயிற் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவ ருள்வழிச் செப்புவே னுட்டி.
மதியொடு பாம்பு மடிப்பேன் மதிதிரிந்த
வென்னல்ல நீரா யெனின்;

உச என்றுங்கே, உண்ணின்ற வெவ்வ முரைப்ப மதியொடு
வெண்மழை யோடிப் புகுதி சிறிதென்னைக்
கண்ணேடி னுய்போறி நீ;

உள நீடிலைத் தாழைத் துவர்மணற் கானலு
ளோடுவே னேடி யொளிப்பேன் பொழிறொறு
நாடுவேன் கள்வன் கரந்திருக்கற் பாலன்கொ
லாய்பூ வடும்பி னலர்கொண் டுதுக்காணைங்
கோதை புனைந்த வழி;

ஈஉ உதுக்காண், சாஅய் மலர்காட்டிச் சால்பிலான் யாமாடும்
பாவைகொண் டோடி யுழி;
ஈச உதுக்கா[ணங்](ண்) தொய்யில் பொறித்த வழி;

ஈந உதுக்காண், தையா றேறெனத் தேற்றி யறனில்லான்
பைய முயங்கி யுழி;

ஈள அளியவென் னுள்ளத் துயவுத்தே ரூர்ந்து
வினியாநோய் செய்திறந்த வண்டி லவனைத்

தெளிய விசும்பினு ஞாலத் தகத்தும்
வளியே யெதிர்போம் பலகதிர் ஞாயிற்
றொளியுள் வழியெல்லாஞ் சென்று முனிபெம்மை
யுண்மை நலனுண் டொளித்தானைக் காட்டீமோ
காட்டாயேன், மண்ணக மெல்லா மொருங்கு சுடுவேனென்
கண்ணீ ரழலாற் றெளித்து;

௪௫ பேணான், துறந்தானை நாடு மிடம்விடா யாயிற்
பிறங்கிரு முந்நீர் வெறுமண லாகப்
புறங்காலிற் போக விறைப்பேன் முயலி
னறம்புணை யாகலு முண்டு;

௪௬ துறந்தானை, நாடித் தருகிற்பா யாயி னினக்கொன்று
பாடுவே னொன்னோ யுரைத்து;

௫௧ புல்லிய கேளிர் புணரும் பொழுதுணரே
னெல்லியா கெல்லையென் றாங்கே பகன்முனிவ
னெல்லிய காலை யிராமுனிவன் யானுற்ற
வல்லல் களைவா ரிலேன்;

௫௫ ஓஓகடலே, தெற்றெனக்கண் ணுள்ளேதோன்றவிமையெடுத்துப்
பற்றுவே னென்றியான் விழிக்குங்கான் மற்றுமென்
னெஞ்சத்து ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யு மறனில் லவன்;

௫௬ ஓஓகடலே, ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயு
ணீர்பெய்தக் காலே சினந்தணியு மற்றிஃதோ
வீரமில் கேள்வ னுதீஇய காமத்தீ
நீருட் புகினுஞ் சுடும்;

௬௧ ஓஓகடலே, எற்றமி லாட்டியென் னேமுற்றா ளென்றிந்நோ
யுற்றறியா தாரோ நகுக நயந்தாங்கே
யிற்றா வறியின் முயங்கலேன் மற்றென்னை
யற்றத்திட் டாற்றறுத்தான் மார்பு;

ஆங்கு;

௬௮ கடலொடு புலம்புவோள் கலங்கஞர் நீரக்
கெடலருங் காதலர் துனைதரப் பிணிநீங்கி
யறனறிந் தொழுகு மங்க ணாளைத்
திறனிலா ரெடுத்த நீமொழி யெல்லா
நல்லவை யுட்படக் கெட்டாங்
கில்லா கின்றவ ளாய்துதற் பசப்பே.

(௧)இதுவுமது. இதற்கும் (௨)அவ்வுரை கூறிக்கொள்க.

இதன் பொருள்.

நன்னுதால் காண்டை நினையா நெடிதுயிரா
வென்னுற்றாள் கொல்லோ (௩)விஃதொத்தி (௪)பன்மா
ணகுதருந் தன்னாணுக் கைவிட் டிகுதருங்
கண்ணீர் துடையாக் கவிழ்ந்து நிலனோக்கி
௫ யன்ன விடும்பை பலசெய்து தன்னை
வினவுவார்க் கேதில சொல்லிக் கனவுபோற்
றெருளு மருளு மயங்கி வருபவள்
கூறுப கேளாமோ சென்று

௭ - து: நன்றாகிய நுதலினையுடையாய்! இவளொருத்தி (௫)தனக்குரிய நாணினைக் கைவிட்டுத் * தன் மனத்தே ஒன்றை நினைத்து நெட்டுயிர்ப்புக் கொண்டு வீழ்கின்ற கண்ணீரைத் துடைத்துப் பிறரை நோக்காது நிலத்தைக் கவிழ்ந்து நோக்கித் தன்னை நீ உற்றது என்னென்பார்க்குக் கனவின்கண் வாய்வெருவிக் கூறுவாரைப்போலே உத்தரமல்லாதன சில சொல்லிப் பல காலும் நகுதலைச் செய்யும்; இங்ஙனந் தெளிவும் மயக்கமுமாய் மயங்கி வேறும் அத்தன்மையவாகிய இடும்பைகள் பலவற்றையுந் தன்னிடத்தே உண்டாகக் கொண்டு வருகின்றவள் என்ன துன்பமுற்றாளோதான்? இவளைக் காண்பா

௧. இச்செய்யுளும் தேறுதலொழித்த காமத்து மிகுதிரமாகிய பெருந் திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. ௧௩. ௧௪.

௨. இந்நூற் பக்கம் அஅ௫-அஅ௬. பார்க்க.

௩. "இஃதொத்தி" கலி. ௧௪௩: அ; "இஃதொத்தன்" (கலி. ௧௪: அ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௪. இந்நூற்பக்கம் உஅஅ: ௩-ஆம் குறிப்புப் பார்க்க.

௫. "சிறந்ததன் னாணும்" (கலி. ௧௪௫: ௧௦.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * தான் மனத்தே.

யாக; யாஞ் சென்று இவள்கூறும் வார்த்தைகளைக் கேட்டலேச் *செய்யாமோ என்றுரென்று கூறினாள். எ - று.

கூ எல்லாநீ, என்னணங் குற்றனை யார்நின் னிதுசெய்தார்
நின்னுற்ற வல்ல லுரையென வென்னை
வினவுவீர் தெற்றெனக் கேண்மி னொருவன்
(க)†குரற்கூந்தா லென்னுற்ற வெவ்வ நினக்கியா
னுரைப்பனைத் தங்கிற்றெ னின்னுயி ரென்று
மருவூட்டி மாறி யதற்கொண் டெனக்கு
மருவழிப் பட்டதென் ‡னெஞ்சு
கசு எங்குந் தெரிந்தது கொள்வே னவனுள் வழி

எ - து. அங்ஙனம் ‖கூறியவள், கேட்கக் கடவேமென்று தும்மிலே கூறி வந்து, ஏடீ! நீ என்ன வருத்தமுற்றாய்? யார்தான் நினக்கு இவ்வருத்தஞ் செய்தார்? நினக்கு உற்ற வருத்தத்தை எங்கட்கு உரையென்று சொல்லி என்னைக் கேட்கின்றவர்களே! அது வந்தவாற்றை என்பக்கலிலே தெளியக் கேண்மின்; ஒருவன் கொத்தான கூந்தலையுடையாய்! எனக்கு உற்ற வருத்தத்தை யான் நினக்கு வந்துரைக்குமளவும் என் இன்னுயிர் போகாமற் றங்கிற்றுக்காண் என்று இங்ஙனம் தன்னோடு யான் மருவுதலை உறுத்தி அம்மருவுதலையவன்மாறிப் போனஅக்காலந்தொடங்கி என்னெஞ்சு ÷எனக்கு அவன் மருவின இடத்தே அகப்பட்டு நின்றுவிட்டது; இனி அவனுள்ள இடமெங்குந் தேடித் தெரிந்து என்னெஞ்சினைக் கூட்டிக்கொள்வேன் என்று கூறினாள். எ - று.

உரைப்பனை, நிசைச்சொல்.

கஎ (உ)பொங்கிரு முந்நீ ரகமெல்லா ×நோக்கினை

க. "குரற் கூந்தல்" கலி. எஉ: உo, கூட: உஉ; என இந்நூலுள் வருதல் காண்க; குரலென்பது கூந்தற்கு அடையாய் வருதலன்றியும் மயிர் (கூந்தல்) என்னும் பொருட்டாயும், "குரலுற்றத் துற்ற, முடியுநிர் பூத்தாது" (கலி. அஅ: க - உ.) என்புழி வருதல் காண்க.

உ. (அ)கலக்கம்-மனங்கலங்குதல்; மேலே கலங்கி மொழிதலென்பது ஒருகாற் சொல்லின்கண் வந்து பெயர்வது; இது மனங்கலங்கி நிற்கு நிலையென்றுகூறி, "பொங்கிரு முந்நீர்.....தீராயெனின்" என்னும் பகுதியைப் பெருந்திணைக்குரிய கலக்கமென்னு மெய்ப்பாட்டுக்கு (தொல். மெய்ப்.சூ. உஉ. 'இன்பத்தை') மேற்கோள்காட்டினர் இளம்பூரணர்(ஐ) நச்சினார்க்கினியர் "பொங்கிரு முந்நீர்.....காட்டுமோ"

(பிரதிபேதம்) * செய்யாமோவென்று கூறினாள், † குரற் கூந்தல், ‡ நெஞ்சு தெரிந்தது, ‖ கூறியவர், ÷ எனக்குத்தான் மருவின × நோக்குபு.

(க)திங்களுட் *டோன்றி யிருந்த குறுமுயா
லெங்கே ளிதனகத் †துள்வழிக் காட்டுமோ
காட்டுயா யாயிற் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவ ருள்வழிச் செப்புவே னுட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
வென்னல்ல தீரா யெனின்

உசா என்றுங்கே, உண்ணின்ற வெவ்வ முரைப்ப மதியொடு
வெண்மழை யோடிப் புகுதி சிறிதென்னைக்
கண்ணோடி னுய்போறி நீ

எ - து: அங்ஙனங் கூறி, அந்திக்காலத்தே கையறவெய்தி உரைத்தவள் இனி ‡இக்காலத்துத் தன்னுற்றேடுதல் அரிதென்று கருதி, திங்களைக் கண்டு இதனோடு செறிந்த முயல் தேடிக் தருமெனக் கருதி, மிக்கு எழுகின்ற கரிதாகிய கடல்சூழ்ந்த உலகமெல்லாம் பார்த்துத் திங்களிலுள்ளே விளங்கி இருந்த குறிய முயலே! அறிவு வேறுபட்ட என்னுடைய நெஞ்சை யான் தேடிக் கூட்டிக்கொள்ளக் கருதின வருத்தத்தை நீ அதனைக் கூட்டித் தீராயின் யான் வாங்கிக் கொள்ளும்படி இவ்வுலகத்தில் எங்கேள்வன் இருக்கின்ற இடத்தைக் காட்டுவாய்; அவனிருக்கின்ற இடத்தைக் காட்டாயாயின், நினக்குப் பகையாகிய கோபத்தையுடைய நாயை நின்னிடத்தே கொளுத்துவேன்; அதுவன்றி வேட்டுவருள்ள இடத்தேசென்று ஒருமுயல் உண்டென்று கூறுவேன்; அதுவேயன்றி நீ அருளை யுறைகின்ற திங்களோடே நின்னை அலைத்துவிழுங்கும்படி மதிக்குப் பகையாகிய பாம்பைச்செலுத்துவேனென்று அவ்வந்திக்காலஞ் செல்கின்ற காலத்தே தன்னெஞ்சினின்ற வருத்தத்தைச்

என்னும் அடிகளை ஞாயிறுமுதல் நெஞ்சிருக் கூறியவையேயன்றி, பிறவும் கூறவனபோலவுங் கேட்பனபோலவும் கூறுமாறமையுமென் பதற்கு மேற்கோள் காட்டினார்; தொல். செய். சூ. உ00..

க. (அ) முயல் என்பது முயால் என விளியேற்றதற்கு, "திங்களுட் டோன்றி யிருந்த குறமுயால்" என்பது மேற்கோள்; தொல். விளி மரபு. சூ. கூ. நச். இ-வி. சூ. உகூ. (ஆ) இந்திரன் புத்தன்மேலுள்ள அன்பினாற் சந்திரமண்டலத்து முயல்பொறித்தானென்பதுபவுத்தநூற் றுணிபு. (இ) "குடைப்புறந் துஞ்சு மிகல - னிடைப்பொ லிந்த, திங்களிற் றோன்றும் குறமுயல்போற் செம்பியன், செங்கண் சிவந்த களத்து" கள. (ஈ) "குறமுய லொளிக்கு மரணினை, யிரவிரு ளகற்று நிலவினை" சிலப். கூ: கூஎ. உரை மேற்கோள். (உ) "நிலவு பொழியு முயற்கூடு" உத்தாகோக. பாயிரம். உடு.

(பிரதிபேதம்) * தோன்றவிருந்த, † உள்ளழி காட்டுமோ, காட்டிலையாயின், ‡ இக் காலத்தென்னும்.

சொல்ல, அது வெண்மேகத்தே மறைந்ததனைக்கண்டு, நீ மதியோடே வெண் மேகத்தே ஓடிச் சென்று புகாநின்றாய்; ஆகையினாலே சிறிதென்னைக் கண் ணோட்டஞ் செய்து நீ என்னைத் தேடிப்போகின்றாய்போலே இராநின்று யென்று கூறினாள். எ - று.

உஎ நீடிலைத் தாழைத் (க)துவர்மணற் கானலு
ளோடுவே ணெடி யொளிப்பேன் பொழிறொறு
நாடுவேன் கள்வன் கரந்திருக்கற் பாலன்கொ
லாய்பூ (உ)*வடும்பி னலர்கொண் டுதுக்காணெங்
கோதை புனைந்த வழி

க. "துவர்மணல்" என்ற தொடர் (கலி. கூஉ. உ) வந்துள்ளது.

உ. அடும்பென்பது அடம்பென்றும் சிலவிடத்து வழங்கப்படுகிறது; இது நெய்தனிலத்துக்கு உரியதொரு வார்கொடி; இக்கொடியிற் செந்நிற முடையதும் கருநிறமுடையது முண்டு; இதன் இலை கவடுடைமையால் அதற்கு மானடி உவமையாகக் கூறப்படுகிறது. இதன் பூ வெண்ணிற முடையதென்று செய்யுளால் அறியப்படுகிறது. அப்பூவுக்குத் தார் மணியும் கொட்டகமும் உவமையாக்கப்பட்டுள்ளன. இதனை மகளிர் கொழுதி விளையாடுவதும் வேறு மலரொடு விரவக்கட்டிச் சூடுவது முண்டு. இதன்கொடியைத்தலைவன்கேருருளை துணிப்பதாகக்கூறுவது பெருவழக்கு; இவையும் பிறவும் (அ) "கருங்கொடி யடம்பு" கலி. கஉ: கசு. (ஆ) "ஓங்குதிரை விரைபுதன், கரையம லடும்பளித் தாஅங்கு" (இ) "அடும்பிவ ணிணியெக்கர்" கலி. கஉஎ, உ0-உக, கநஉ: கஉ. (ஈ) "அடும்பாரணி கானற் சேர்ப்ப" (உ) "எக்க, ரடும்பலருஞ் சேர்ப்ப" பழ. கஉசு, உ9உ. (ஊ) "முதுநீ ரடைகரை, யொண்பன் மலர கவட்டிலை யடும்பின், செங்கேழ் மென்கொடி யாழியறுப்ப, வினமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ" அகம். அ0: எ-க0. (எ) "எர்கொடிப் பா சடும்பு" ஐங். க0க. (ஏ) "ஆய்கொடிப் பாசடும்பு" அகம். நஉ0: கசு. (ஐ) "கான லடும்பின் கவட்டிலைகண் - மானின், குளம்பேய்க்கு நன் னுடன்" நள. கலிதொடர். அஅ. (ஒ) "மானடியன்ன கவட்டிலையடும் பின், முர்மணி யன்ன வெண்பூக் கொழுதி, யொண்டொடி மகளிர் வண்ட லயரும்" தருநீ. உசஉ. (ஓ) "கொட்டக மலர்ந்த கொழுங் கொடி யடும்பி, னற்றுறை யணிநீர்ச் சேர்ப்ப" தொல். அகத். சூ. உசு. இளம். மேற். (ஔ) "இருங்கழி பொருத வீர வெண்மணல், மாக் கொடி யடும்பின் மாயித ழலரி, கூந்தன் மகளிர் கோதைக் கூட்டுங், காமர் கொண்கன்" நற். கசஅ: க-சு. (ஃ) "அடும்பி னுய்மலர் விரைஇ

(பிரதிபேதம்) * அடம்பின்.

௩உ உதுக்காண், சாஅய் மலர்காட்டிச் சால்பிலான் யாமாடும்
(க)பாவைகொண் டோடி யுழி

௪ச உதுக்கா[ணந்](ண்),தொய்யில் பொறித்த வழி

௩௫ உதுக்காண், தையா றேறெனத் தேற்றி யறனில்லான்
பைய முயங்கி யுழி

௩எ அளியவென் னுள்ளத் துயவுத்தே ரூர்ந்து
விளியாநோய் செய்திறந்த வன்பி லவனைத்
தெளிய விசும்பினு ஞாலத் தகத்தும்
வளியே யெதிர்போம் பலகதிர் ஞாயிற்
றொளியுள் வழியெல்லாஞ் சென்று முனிபெம்மை
யுண்மை நலனுண் டொளித்தானைக் காட்டீமோ
காட்டாயேன், மண்ணக மெல்லா மொருங்கு சுடுவேனென்
கண்ணீ ரழலாற் றெளித்து

௪௫ பேணான், துறந்தானை நாடு மிடம்விடா யாயிற்
(உ)பிறங்கிரு முந்நீர் வெறுமண லாகப்

நெய்த, னெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்த, லோரை மகளிர்" குறுந். ௪௦க. (அஅ) "அடும்புகொடி துமிய வாழி போழ்ந்தவர், நெடுந் தே ரின்னொலி யிரவுந் தோன்றா" நற். ௩௩அ: உ - ௩. (ஆஆ) "படிவ மகளிர் கொடிகொய் தழித்த, பொம்ம லடும்பின்" நற். உஎஉ: உ - ௩. என்பவற்றால் அறியலாகும். குந்தாணியென்று வழங்கும் கொடிக்கு இங்கே கூறிய இயல்புகளெல்லாம் இருத்தலால் இஃது அக்கொடி போலும்; அதிற் செம்பூவும் காணப்படுகிறது. (இஇ) "சுள்ளி சுனை நீலஞ் சோபா லிகைசெயலை, யள்ளி யளகத்தின் மேலாய்ந்து" (திணைமாலை. உ) என்புழி, சோபாலிகை யென்பதற்கு, அடுப்பலர் என்று கையெழுத்துப் பிரதிகளிற் பொருள் காணப்படுதலால், சோபாலிகையென்பதும் இதன் பெயரேயாம். இதற்கு அடுப்பென்று காணப்படும் பொருள் தவறென்று தோற்றுகிறது.

க. (அ) "வரிப்பந்து கொண்டொளித்தாய்" பு - வெ. பாடாண். ௫௦. (ஆ) "முற்றிலைப் பந்தைக் கழங்கைக்கொண் டோடினை" திருவேங் கடத்தந்தாதி. கூஎ. என வருபவை இதுபோல்வன.

உ. கலக்கமென்பது சொல்லத்தகாதன சொல்லுதலென்று கூறி அதற்கு, "பிறங்கிரு முந்நீர்.....யாகலுமுண்டு" என்பதனை (தொல். மெய்ப். சூ. உஉ) மேற்கோள்காட்டினர் பேராசிரியரும்; (இ - வி. சூ. ௫அ௦)

புறங்காலிற் போக விறைப்பேன் *முயலி
(க)னறம்புணை யாகலு முண்டு

சகூ துறந்தானை, நாடிக் தருகிற்பா யாயி னினக்கொன்று
பாடுவே †னென்னை யுரைத்து

ருக (உ)புல்லிய கேளிர் புணரும் பொழுதணரே
‡னெல்லியா கெல்லியென் ருங்கே பகன்‖முனிவ
னெல்லிய காலை யிரா ÷முனிவன் யாணுற்ற
வல்லல் களைவா ரிலேன் [தப்

ருஞ ஓகடலே, தெற்றெனக்(ங)கண் ணுள்ளேதான் றவிமையெடுத்
பற்றுவே னென்றியான் விழிக்குங்கான் மற்றுமென்
னெஞ்சத்து ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யு (ச)மறனில் லவன்

ருகூ ஓகடலே, (ரு)ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயு
ணீர்பெய்தக் காலே சினந்தணியு மற்றிஃதோ

இ - வி. நூலாரும் அவ்வாறே கூறினர். தலைவியின் கலக்கங் கூறுதற்கு, "பிறங்கிரு முந்நீர்.....விறைப்பேன்" என்பதனை (தீவக. ருகூஅ உரையில்) மேற்கோள்காட்டினர் இவ்வுரையாசிரியரும்.

க. (அ) அறநெறியே வெற்றிக்கு முதலென்றும் (ஆ) அறம் பொருந்தாத முயற்சி பயன்படாது கொலையுமென்றும் (இ) அறந்தலை நின்றூர்க்கழி வில்லை யென்றும் (ஈ) அறம் வெல்லும் பாவந்தோற்கு மென்றும் (உ) அறத்தினுலன்றி வெல்லலரி தென்றும் பெரியோர் கூறுவன இங்கே அறிதற்பாலன.

உ. அழிவில் கூட்டத்திற்குரிய பொருள்களுள் பொழுது மறுப்பாதலென் பதற்கு, "புல்லிய கேளிர்.....களைவா ரிலேன்" என்னும் பகுதி மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உஅ. 'தெய்வமஞ்சல்' இளம்.

ஙூ. (அ) "கனவினும், ரேன்றின ஞகத் தொடுத்தேன்மன் யான்றன் னினப், பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய, கையுளே மாய்ந்தான் கரந்து" கலி. கஅஉ: ஙஙூ - ஙூசு. (ஆ) "துஞ்சுங்காற் ரேண்மேல ராகி விழிக்குங்கா, னெஞ்சத்த ராவர் விரைந்து" குறள். கஉகஅ.

ச. (அ)"அறனிலி"(ஆ)"அறனில்லா வன்பிலி" கலி.சஉ:ச,அசு:ஙூ-ஙூச.

ஞ. (அ) "ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு, நீருட் குளித்து மூயலாகு-நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி, யொளிப்பினுங் காமஞ்

(பிரதிபேதம்) * முயலில், † என்னெவுரைத்த. ‡ அல்லியாகெல்லி. ‖ ÷முனிவேன்.

வீரமில் கேள்வ னுறீஇய காமத்தீ
நீருட் புகினுஞ் சுடும்

கூகூ ஓஓகடலே, (க)எற்றமி லாட்டியென் னேமுற்று ளென்றிங்கோ
யுற்றறியா தாரோ நகுக நயந்தாங்கே
யிற்று வறியின் முயங்கலேன் மற்றென்னை
யற்றத்திட் (உ)டாற்றறுத்தான் *மார்பு

எ - து: அங்ஙனங் கூறி, அது களிய மேகத்தே மறைத்து விடுதலின் அதனை நோக்கித் தேடுமாறு அதற்குங் கூறக் கருதி, அக்கள்வனைவன் மறைத்திருக்கக்கடவனே என்று †காட்டும்படி, யான் நீண்ட இலையினையுடைய தாழை நிற்கின்ற சிவந்த மணலையுடைய கானலிற் பொழில்கடோறும் தேடிச்

சுடும்" நாலடி. கூ0. (ஆ)"அளிக்கு மெய்யுயிர் காண்றழ லஞ்சினள், குளிக்கு நீருங் கொதித்தெழக் கூசுமால், விளிக்கும் வேலையை வெங்க ணனங்கனே, வொளிக்க லாமிடம் யாதெனவுன்னுமால்" கம்ப.சூர்ப்ப. எகூ. (இ)"உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற், கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத், தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினுற், கள்ளினுங் கொடியதுங் காமத் தீயதே" கந்த. மாயைநீங்கு. கக. (ஈ) "கடலின் மூழ்கினுங் குன்றிடை யொளிப்பினுங் காம, முடல் விராயுயிர் சுவதே போலும்" விநாயக. இந்திரன் சாபம். கூ.

க. (அ) எற்றமென்னு முரிச்சொல் தனிவாகிய குறிப்புணர்த்தற்கு, "எற்றமி லாட்டியென் னேமுற்றுள்" என்பது மேற்கோள்; தொல். உரிச். சூ. நகூ.நச். நன். உரி. சூ. கஅ. இரா. மேற்கூறிய இடக்களி லெல்லாம் இச்சொல், எற்றமென்று பதிப்பிக்கப்பெற் றிருத்தல் பிழையே. அது பிழையென்பதும் எற்றமென்றலே திருத்தமென்ப தும் தொல்காப்பியச் சூத்திரத்தை உய்த்துணர்வார்க்குப் புலனும். இதனை இவ்கே காட்டப்படும் சான்றோர்கள் ஆட்சியும் வலியுறுத்தும். (ஆ) "எற்றிவரைந்தானே" கலி. கசசு: கக. (இ) "எற்ற முடைமை யெதிர்கோளி னறிப" முதுமொழி. கடு. (ஈ)"எற்றமி லாள ராகி" திரு வானைக்காப். நைமிசப். உக.

உ. (அ) "அரும்பிடி நம்மை யாற்றறுத் தன்றுல்" (பெருங். (க) நகூ: எ) என்பதும் (ஆ) "ஆற்றறுப்பார்" (குறள். எகூஅ)என்பதன்விசேடவுரை யில், 'ஆற்றென்பது முதனிலைத் தொழிற்பெயர்; முன்னெல்லாம் வலியராவார் போன்று ஒழிதலின் வலியறப்பாரென்றார்' என்று பரிமேலழகர் எழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * மார்பு. தூங்கு கடலோடு.....பசப்பே. எ-து: அங்ஙனம் கூறி அது களிய, † காட்டக்கருதி யான்.

சென்று பார்ப்பேன்; அங்ஙனஞ் சென்று பார்த்துக் காணாமையின், ஓடிச் சென்று அவனை ஒளித்திருந்து காணக் கடவேனென்று கருதி ஒளித்திருப்பேன்; நீயும் இங்ஙனம் ஒளித்திருந்தே தேடென்று கூறினாள்; அங்ஙனங் கூறிப் பின்பு அவனிருக்கும் இடங்களுங் கூறக்கருதி, பூவினையுடைய * அடும்பின்மலரைக்கொண்டு எமக்குத்தருங் கோதையைக் கட்டின இடத்தை உவ்விடத்தே பாராய்; அமைதியில்லாதான் யாங் கொண்டு விளையாடுஞ் (க) சாய்ப்பாவையையும் மலர்களையுங் கொண்டுவந்து நமக்குக் காட்டி யான் தன்பின்னே செல்லும்படி அவற்றைக் †கொண்டோடிய இடத்தை உவ்விடத்தே பாராய்; எமக்குத் தானெழுதுந் தொய்யிலை எழுதிய அவ்விடத்தை உவ்விடத்தே பாராய்; மனத்தில் அறனில்லாதவன், தையால்! நின்னைப் பிரியேன்; நீ தெளியென்று தெளிவித்துப் பின்னர் மெல்ல முயங்கிய அவ்விடத்தை உவ்விடத்தே பாராயென்று கூறினாள்; அங்ஙனங் கூறின அளவிலே அம்முயல் ‡கருமேகத்து மறைந்தேபோதலின் அதனைக் கைவிட்டு இடையே தன்மேல் வந்துற்ற வளியை நோக்கி, வளியாகிய தெய்வமே! [நீ] திங்களின் ஒளி போலன்றி விசும்பிடத்தும் ஞாலத்திடத்தும் பரக்கும் பல கதிர்களையுடைய ஞாயிற்றின் ஒளியுள்ள இடமெல்லாஞ்சென்று நாடுதற்குரிய நீ ||உயவுத்தேரை ஊர்ந்துவந்து தன்னால் அளிக்கத்தக்க என்னுள்ளத்திடத்தே கெடாத காம நோயைச்செய்து என்னைக் கைவிட்டுப்போன அன்பிலாதவனை அந்நோய் நீங்கி என்மனந் தெளியும்படியாக எதிர்ப்படுவாய்; அங்ஙனம் எதிர்ப்பட்டு வேட்கை மிகுதியான் எம்முடைய இயற்கை நலத்தை நுகர்ந்து பின்பு எம்மை ஒரு காரணமின்றி வெறுத்து அவ்வியற்கை நலத்தைக்கொண்டு இம்மண்ணகத்தே ஒளித்தவனைக் கொண்டுவந்து காட்டுவாய்; காட்டாயாகில் என்கண்ணீரைத் தெளித்து அதன்கண் எழுகின்ற அழலாலே நின் மேனியெல்லாஞ் சேரச் சுடுவேனென்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறி அதனைப் பின்னர்க் காணாமையின், தான் அவனைத் தேடக்கருதி, கடலை நோக்கி, மிக்கு வருகின்ற கரிய கடற் றெய்வமே! என்னைப் பாதுகாவானாய்த்துறந்தவனை யான் தேடிக் காணுமிடத்தை நீ விட்டுப் போகாமல் எறுவாயாயின் நின்னிடமெல்லாம் வெறுமணலாம்படி என் காற்புறத்தாலே நின்னுடைய நீரெல்லாம் போம்படி இறைப்பேன்; அது முடியுமோவெனின், அங்ஙனம் ÷முயலின் அதற்கு அறக்கடவுள் உதவியாதலு முண்டாயிருக்குமென்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறி, ஓதம் வடிந்ததனைக் கண்டு என்னைக் கைவிட்டுப்போனவனை நீ தேடிக் கொண்டு வந்து தருவையாயின் அதற்குக் கைம்மாறாக என்னோயைச்சொல்லி

க. சாய்ப்பாவை – தண்டான் கோரையைக் கிழித்துச்செய்த பொய்ம்மை; (அ) "சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்கோ" (கலி. எசு: எ) என்பதும் அதனுரையும் (ஆ) "பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே" (ஐங். கருரு) என்பதும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * அடம்பின், † கொண்டாடியவவிற்றை உவ்விடத்தே, ‡ கருத்தமேகத்து, || உரவுத்தேரை, ÷முயலுவேன் அதற்குக் கடவுள்.

நினக்கு ஒரு பாட்டினைப் பாடுவேனென்றுங் கூறினள்; அங்ஙனங் கூறிப் பாடுகின்றவள் என்னைக் கூடின கேளிர் வந்து கூடுங் காலம் இரவோ பகலோ என்றறியேன்; ஆதலால் என்னை வருத்தும் பகற்பொழுதுபோய் இராப் பொழுதாவதாக என்று கருதிப் பகற் பொழுதை வெறுப்பேன்; அதுபோய் இராவான காலத்திடத்து அவ்விராக்காலத்தை * அப்பொழுதேவெறுப்பேன்; அப்படியே ஓ! யான் உற்ற வருத்தத்தைக் கடலே! நின்னை ஒழியப் போக்கு வாரை வேறுடையேனல்லேனென்றுங் †கூறினள்; அங்ஙனங் கூறிப் பின்னும், கடலே! அறனில்லாதவன் தெளிய என் கண்ணுள்ளேநின்று தோன்றுகையினாலே கூடின இமையை விழித்துப் பிடித்துக் கொள்வே னென்று கருதி யான்விழிக்கப் பின்னையும் ஓடிப்போய் என்னெஞ்சத்துள்ளே மறைந்துநின்று அப்பொழுதே யான் துயிலாத காமநோயைத் தாராநிற்கும்; கடலே! ஊரையெல்லாந் தனக்குள்ளாக்கிக்கொண்டு காந்துங் கடியதெருப்புத் தன்னை அவிக்குநீரைச் சொரியச் (க) ‡இனமாறும்; அதுபோலன்றி அருளில் லாத என்கேள்வன் என்னை உறுத்திய இந்தக் காமமாகிய நெருப்புத் தனக்குப் பகையாகிய நீருள்ளே புகினுமோ வேமாறு சுடாநிற்கும்; கடலே! தன் மனத்து ஒரு துணிவில்லாதாள் என்ன பித்தேறினளென்று கூறி, இக்காம நோயுற்றறியாதவர்களோ என்னை இகழ்ந்து சிரிக்க; இக்காமநோய்க்குத் துணை யாவதோர் ஆளறிதியிலே பின்னை என்னை யிட்டுவைத்து என்வலியை அறுத் தவன் ||மார்பினை யான் விரும்பின அக்காலத்தே பின்பு இத்தன்மைத்தாக வருத்துமென்று அறியின் முயங்கேன்; அக்காலத்து அறிகிலேன்காணென்றுங் ÷கூறினள். எ - று.

ஓ, வருத்தக்குறிப்பு. ஓகாரம், பிரிநிலை. ஆற்றல், ஆற்றென விகார மாயிற்று.

ஆங்கு, அசை.

சுஅ கடலொடு புலம்புவோள் கலங்கஞர் தீரக்
கெடலருங் காதலர் துணைதரப் பிணிநீங்கி
யறனறிந் தொழுகு மங்க ளைனைத்
(உ)திறனிலா தெடுத்த தீமொழி யெல்லா
நல்லவை யுட்படக் கெட்டாங்
கில்லா கின்றவ ளாய்நுதற் பசப்பே

க. இனம் - வெம்மை. இந்நூற்பக்கம் கஉ: ங - ஆம் குறிப்புப் பார்க்க.

உ. "ஐயற் காங்கினங் கோளரி யறிவிலா னனைந்த, பொய்யிற் போம்படி போக்கினன் கடிதினிற் புக்கான்" கம்ப. பிரமாத்திர. எ0.

(பிரதிபேதம்) * அப்பொழுதென்றுவெறுப்பேன். †கூறினள். ஓ, வருத்தக்குறிப்பு.. அங்ஙனங் கூறி, ‡ இனமாறுவதுபோலன்றி, || மார்பினையே யான், ÷ கூறினள். ஓகாரம் பிரிநிலை. ஆற்றல் விகாரம் 'ஆங்கசை, அங்ஙனம் கடலோடே.

எ - து: அங்ஙனங் கடலோடே வருந்திக் கூறினவளுடைய மனங்கலங்கும் வருத்தந் தீரும்படி அவள் காதலர் விரைந்து வரக் கெடுதலரிய காமநோய் நீங்கி, இவளுடைய அழகிய நுதலிற் பசப்பு, அறநெறியறிந்து நடக்குங் கண்ணோட்டமுடையவனை அத்திறமில்லாதார் உண்டாக்கிச்சொன்ன * தீயமொழிகளெல்லாம் நன்மக்கள் இருக்கின்ற அவைக்குள்ளே ஆராய்ச்சிப்பட அவை கெட்டாற் போல, இல்லையாகாநின்றது; என்னவியப்போவெனக் கண்டார் கொண்டு கூறிற்றாக உரைக்க. எ - று.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

† 'மருவழிப் பட்டதென் னெஞ்சு' என்னுந் துணையுங் கூறத்தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'அறம்புணை யாகலு முண்டு' எனத் தன்னுடம்பும் உயிரும் வருந்திய நிலைதோன்றக் கூறுதலாற் கலக்கமெய்தியவாறுங் காண்க.

இஃது 'எங்குந் தெரிந்தது கொள்வே னவனுள் வழி' என ஓஞ்சீரான் ஒன்றும் ‡ 'உதுக்காண், தொய்யில் பொறித்த வழி' என ஓரடியான் ஒன்றும் வருதலிற் கலிவெண்பாவின் வேறுபட்ட பாநிலைவகைக் கொச்சகம். (உஎ)

(௧௪௫.) துணையுநர் விழைதக்க சிறப்புப்போற் கண்டார்க்கு
நனவினு ளுதவாது நள்ளிருள் வேறாகுங்
கனவி னிலையின்றாற் காம மொருத்தி
யுயிர்க்கு முசாஅ முலம்வரு மோவாள்
௫ கயல்புரை யுண்க ணரிப்ப வரிவாரப்
பெயல்சேர் மதிபோல வாண்முகந் தோன்றப்
பலவொலி கூந்தலாள் பண்பெல்லாந் துய்த்துத்
துறந்தானை யுள்ளி யழூஉ மவனை
மறந்தாள்போ லாலி நகூஉ மருளுஞ்
௧௦ சிறந்ததன் னாணு நலனு நினையாது
காம முனைஇயா ளலந்தாளென் றெனைக்காண
நகான்மின் கூறுவேன் மாக்காள் மிகாஅது
மகளிர், தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலு
நீள்சுரம் போகியார் வல்லைவந் தளித்தலு
௧௫ மூழ்செய் திரவும் பகலும்போல் வேறாகி
வீழ்வார்கட் டோன்றுந் தடுமாற்ற ஞாலத்துள்
வாழ்வார்கட் கெல்லாம் வரும்;
௧௮ தாழ்பு, துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கான
மிறந்தெரி நையாமற் பாஅய் முழங்கி

(பிரதிபேதம்) * தீமொழிகள். † அருவழிப், ‡ உதுக்காணந் தொய்யில்.

வறந்தென்னை செய்தியோ வானஞ் சிறந்தவென்
கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து;

உக நமக்கெவன் போலுமோ வூரீ ரெமக்குமெங்
கண்பாயல் கொண்டுள்ளாக் காத லவன்செய்த
பண்பு தரவந்த வென்றொடர் நோய்வேது
கொள்வது போலுங் கடும்பகன் ஞாயிறே
யெல்லாக் கதிரும் பரப்பிப் பகலொடு
செல்லாது நின்றீயல் வேண்டுவ னீசெல்லிற்
புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக்
கொல்லாது போத லரிதா லதனெடியான்
செல்லாது நிற்ற லிலேன்;

ஙஉ ஒல்லையெங், காதலர்க் கொண்டு கடவூர்ந்து காலைநாட்
போதரிற் காண்குவேன் மன்றே பனியொடு
மாலைப் பகைதாங்கி யான்;

ஙடு இனியனென், றேம்படுப்பன் ஞாயி றினி;

ஙசு ஒள்வாளை யோடத் துறந்து துயர்செய்த
கள்வன்பாற் பட்டன் றெளித்தென்னை யுள்ளிப்
பெருங்கடல் புல்லெனக் கானல் புலம்ப
விருங்கழி நெய்த லிதழ்பொதிந்து தோன்ற
விரிந்திலங்கு வெண்ணிலா வீசும் பொழுதினன்
யான்வேண் டொருவனென் னல்ல லுறீஇயான்
றுன்வேண்டு பவரோடு துஞ்சுங்கொ றுஞ்சாது
வானு நிலனுந் திசையுந் தழாவுமென்
னனப் படர்மிக்க நெஞ்சு;

சஞ ஊரவர்க் கெல்லாம் பெருநகை யாகியென்
னருயி ரெஞ்சும னங்குநீ சென்றி
நிலவுமிழ் வான்றிங்கா ளாய்தொடி கொட்ப
வளிபுற மாறி யருளான் றறந்தவக்
காதலன் செய்த கலக்குறுநோய்க் கேதிலா
ரெல்லாருந் தேற்றார் மருந்து;

௫க வினைக்கொண்டென் காமநோய் நீக்கிய வூரீ
ரெனைத்தானு மெள்ளினு மெள்ளலன் கேள்வ
னினைப்பினுங் கண்ணுள்ளே தோன்று மனைத்தற்கே
யேமரா தேமரா வாறு;

௫௫ கனையிருள் வானங் கடன்முகந் தென்மே
லுறையொடு நின்றீயல் வேண்டு மொருங்கே
நிறைவளை கொட்பித்தான் செய்த துயரா
லிறையிறை பொத்திற்றுத் தீ;

௫௬ எனப்பாடி;

நோயுடை நெஞ்சத் தெறியா வினைபேங்கி
யாவரு மெங்கேள்வற் காணீரோ வென்பவட்
கார்வுற்ற பூசற் கறம்போல வெய்தந்தார்
பாயல்கொண் டுள்ளா தவரை வரக்கண்டு
மாயவன் மார்பிற் றிருப்போல் பவள்சேர
ஞாயிற்று முன்ன ரிருள்போல மாய்ந்ததென்
னாயிழை யுற்ற துயர்.

(க)இதுவுமது. இதற்கும் (உ) முன்னர்க் கூறிய உரையைக் கூறிக் கொள்க.

இதன் பொருள்.

துனையுநர், விழைதக்க சிறப்புப்போற் கண்டார்க்கு
*நனவினு ளுதவாது நள்ளிருள் வேறாகுங்
(௩)கனவி னிலையின்றாற் காம மொருத்தி
யுயிர்க்கு †முசாஅ முலம்வரு மோவாள்
௫ கயல்புரை யுண்க ணரிப்ப வரிவாரப்
பெயல்சேர் மதிபோல வாண்முகந் தோன்றப்

க. இச்செய்யுளும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந் திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. க௩. நச்.

உ. இந்நூற்பக்கம் அஅ௫-அஅ௬. பார்க்க.

௩. "கனவினா னெய்திய செல்வத்தனையதே" (கலி. ௬அ: உச) என்பதும் அதன்குறிப்பும் "கண்படைகொண் டமர்வாழ்வும் பொய்யாகிக்கனவு கண்ட கதையாயிற்றே" கந்த. காமதகன. க௦௬. என்பதும் நோக்குக.

(பிரதிபேதம்) * நனவினுதலாது. † உயாஅம்.

பலவொலி கூந்தலாள் பண்பெல்லாந் துய்த்துத்
துறந்தானை யுள்ளி யழூஉ மவனை
மறந்தாள்போ லாலி நகூஉ (க)மருளுஞ்
கo (உ)சிறந்ததன் ஞணு நலனு நினையாது
காம முனைஇயா * ளலந்தாளென் (ங)றெனைக்காண
நகான்மின் கூறுவேன் மாக்காண் † மிகாஅது
மகளிர், தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர (ச)நீத்தலு
நீள்சுரம் போகியார் ‡ வல்லிவந் தளித்தலு
கந மூழ்செய் (ஞ)திரவும் பகலும்போல் வேறாகி
வீழ்வார்கட் டோன்றுந் தடுமாற்ற ஞாலத்துள்
வாழ்வார்கட் கெல்லாம் ‖ வரும்

எ - து: மக்கள் விரைந்தனராய் விரும்புதல் தக்கதொரு தலைமைபோலே இருக்கின்ற காமமானது நள்ளிருட்கண்ணே கண்டவர்களுக்கு நனவின்கண் உதவாதே வேறுபட்டுப் போந் தனவினும் நிலைபெறுதல் இன்றாயிருந்தது ; எவ்வாறெனிற் பலவாய்த்+தழைகின்ற கூந்தலையுடையாளாகிய ஒருத்தி தன் குணங்களை யெல்லாம் நுகர்ந்து தன்னைக் கைவிட்டவனை நினைத்து கெட்

க. மருளுமென்பதற்கு உரை காணப்படவில்லை.

உ. (அ) "உயிரினுஞ் சிறந்தன்று நாணே" தொல். கள. சூ. உஉ. (ஆ) "உயிரினுஞ் சிறந்ததன், ஞண்யாது மிலளாகி" கலி. கசள: அ - கூ. (இ) "நாணுக் குறைவில ணங்கைமற் றெங்மரும்" பரி. கஉ: சகூ. (ஈ) "நாண்முதற் பாசந் தட்ப" (உ)"நாண்சுமக் கலாத நங்கை" சீவக. சஎo, உசசகூ. (ஊ)"எண்பாலோவா நாண்.....தம், பூண்பாலாகக் காண்பவர் நல்லார்" கம்ப. கைகேயி. நூக.

ங. "யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார், யாம்பட்ட தாம்படா வாறு" குறள். கூகசo.

ச. (அ) "புணர்வும் பிரிவு, நன்பக லமையமு மிரவும் போல, வேறுவே றியல வாகி மாறெதிர்ந், தளவென வுணர்ந்தனை யாயின்" என் பது ஒப்புநோக்கற்பாலது ; அகம். நூஉ: க-ச.

ஞ. "உவக்காணெங் காதலர்" என்பதன் உரையில் (குறள் கூகஅஞ) 'அவர் செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின் செலவும் வரவும்போல்வ தறிந்து வைத்து அறியாதாய் போல நீ சொல்லுகின்ற தென்னை யென்பதாம்'என்று பரிமேலழகர்எழுதியிருப்பது ஈண்டறிதற்பாலது.

(பிரதிபேதம்) * அல்லாந்தாள், † மிகா அது தோள்சேர்ந்தமர்ந்தார்த்தயர், ‡ வல்லவந்தளித் தலும், ‖ வரும் தாழ்பு எ - து: மக்கள், ÷ தழைக்கின்ற.

மிர்ப்புக் கொள்ளும்; அவனோடு கூடுமாற்றினைச் சிலரோடுசாவும்; நெஞ்சு * சுழலும்; பெய்கின்ற மழையைச் சேர்ந்த மதிபோலே தன்முகந் தோன்றும் படியாகக் கயலையொக்குந் தன்கண்களினின்றும் †அரித்துவிழுகின்ற நீர் முகத்தே வடியும்படி ஒழியாளாய் அழாநிற்கும்; அவனை மறந்தானைப்போலே ஆரவாரித்து இடையே நகுவதுஞ் செய்யும்; ஆகையினாலே தனக்குச் சிறந்த தன் (க) நாணையும்‡மற்றுமுள்ளநன்மைக்குணங்களையும் நிலைபெறநினையாதே காமமொன்றையுமே(உ)நினைத்தவள் அலமந்தாளென்று இங்ஙனம் இகழ்ந்துகூறி, எல்லாருங்காணஎன்னைச்சிரியாதேகொள்ளும்;(ங)ஐயறிவினையுடையவர்களே! சுருங்கையான் அதன்றன்மை கூறவேன்; கேண்மினென்று கூறுகின்றவள், மகளிர் தோளைச்சேர்ந்தஆடவர் அவர்கள்வருத்தம்மிகும்படி பிரிதலும் பின்னர் நீண்ட சுரத்தைப்போனவர்கள் விரையவந்து அருள்செய்தலுமாகிய இரண்டும் இரவும் பகலும் போலே முறைமைசெய்து வேறாய் ஒருவரை ஒருவர் விரும்புவாரிடத்துத் தோன்றும்; இன்பம் நிலையில்லாமையான தடுமாற்றமாயிருக்குமது தனக்கேயன்றி உலகத்துக்கூடியிருந்து வாழ்வார்களுக்கெல்லாம் வருவதுஞ் செய்யுமென்று || அதன்றன்மை கூறினாள். எ – று.

க. "நாணுவரை நில்லாக் காமம்" அகம். உ०அ: உ०.

உ. மூனைதலென்பதற்கு நினைதலென்னும் பொருள் வேறெங்கும் காணப்படவில்லை.

ங. (அ) "மாவு மாக்களு மையறி வினவே" (ஆ) "மக்க டாமே யாறறி வுயிரே" தொல். மரபு. சூ. ஙஉ, ஙஙு. (இ) "அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு, மிகைமக்க ளான்மதிக்கற் பால- நயமுணராக், கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும், வையார் வடித்தநூ லார்" நாலடி. கசுங. (ஈ) "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" (குறள் சுஉ०) என்பவைகளும் (உ) "தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ, தகன்பய மெய்திய வளவை மான" (பொருந. கூக. கூஉ) என்புழி, மாக்களென்பதற்கு, 'மக்களென்னுது மாக்களென்றார்; வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்' என்றும் (ஊ) "பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்" (முல்லை.ஙடு) என்புழி, மாக்களென்பதற்கு, 'அறிவில்லாதோர்' என்றும் (எ)"மூவறு பாடை மாக்களால்" (சீவக. கங.) என்புழி, மாக்க ளென்பதற்கு, 'மிலேச்சராதலின் ஐயறிவிற் குறிய மாக்களென்னும் பெயராற் கூறினார்' என்றும் (ஏ) "மையலங் கோயின் மாக்கள்" (சீவக. கஉஎஅ) என்புழி, மாக்களென்பதற்கு, 'மக்கட்குரிய மனனின்றி அறிவு கெட்டமையின், ஐயறிவுடையாரென்று மாக்களென்றார்' என்றும் இவ்வுரையாசிரியர் எழுதியிருக்கும் விளக்கங்களும் (ஐ) "நடவாமடிசி" என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில் 'கையறியா மாக்கட்கன்றி நாலியற்றும் அறிவினையுடைய

(பிரதிபேதம்) * உழலும், † மறித்த, ‡ மற்றுள்ள, || அதனது தன்மை கூறினாள். எனத்த.

கஅ தாழ்பு; துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கான
(க)மிறந்(உ)தெரி னையாமற் பாஅய் முழங்கி
வறந்தென்னை செய்தியோ வானஞ் சிறந்தவென்
கண்ணீர்க் கடலாற் (ங)கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து

எ - து: அங்ஙனங் கூறி அவர் நக்கதனுல் யாம் இங்ஙனமாயினே மென்று கருதி அழுகின்றவள் ஆண்டெழுந்த வெண்மேகத்தைநோக்கி, வான மே! நீ பெய்யாதே வறந்து என்னைகாரியஞ் செய்கின்றுய்? நின் இனத் தோடே கூடி என் கண்ணீராற் சிறந்த கடலிலே முகந்து பரந்து முழங்கி முன்னர் என்னிடத்தே தாழ்ந்து பின்னர் என்னைத் துறந்து *செருகுந் (ச)தொடியை உட்பட நெகிழ்த்தவன் போகிய கானத்தினே நெருப்பு மிக்குச் சுடாமற் செறிந்த துளியை வீசாயோ? வீசென்று மழையை நோக்கிக் கூறி னன். எ - று.

உங நுமக்கெவன் போலுமோ வூரீ ரெமக்குமெங்
(ஞ)கண்பாயல் கொண்டுள்ளாக் † காத லவன்செய்த

மக்கட்குப் பலகலைக்குரிசில் பவணந்தியென்னும் புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான் உலகமலையாமை யுள்ளிட்ட பத்தழ கோடும் பிறந்து நின்றது இச் சூத்திரமென்று உணர்க' என்று (நன். பத. சூ.கo.சங்கர.விருத்தி) காணப்படுவதும்(ஏ)"தக்கவின்ன தகாதன வின்னவென், றெறுக்க வுன்னல ராயி னுயர்ந்துள, மக்களும் விலங்கே" (கம்ப. வாலி. ககஉ) என்பதும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "வியப்பிறந்தன்றே" புறம். உகள: கூ. (ஆ) "இறப்பச் சிறிதென் னுது" (இ) "இறப்ப நினையுங்கால்" (ஈ) "இறப்பவே தீய செயினும்" நாலடி. ககூ; களச; உஉங. (உ) "இன்ப மிறந்ததே" சீவக. கூஏo. (ஊ) "இறப்பப் புகழ்ந்தன்று" பு - வெ. கைக். ஆண். எ. என்பவற் றிலும் இறத்தலென்பது, மிகுதலென்ற பொருளில் வருதல் காண்க.

உ. (அ) "கோடெரி னைப்பவும்" பொருந. உஙச. (ஆ) "எரிகானனைப்ப" நற். களஎ: க. (இ) "ஒள்ளெரி னைப்ப" புறம். உசo: கo.

ங. (அ)"கனைதுளி" (ஆ)"கனைபெயற் றண்டுளி" கலி. கசு: எ; கo: உ.

ச. இந்நூற்பக்கம் அசo: க-ஆம் குறிப்பும் இச்செய்யுள் சள-ஆம் அடியும் இங்கே அறிதற்பாலன.

ஞ. (அ) "கண்பாயல் கொண்டு" (ஆ) "கண் பாயல் கொள" (இ) "கண் பாயல் பெற்றபோல்" கலி. எo: அ; அள: கசு; ககங: ஞ.

(பாடபேதம்) * நெருக்குந் தொடியை, † காதலவன் செய்பண்பு.

பண்பு தரவந்த வென்றொடர் நோய்(௧)வேது
கொள்வது போலுங் (௨) கடும்பகன் ஞாயிறே
யெல்லாக் கதிரும் பரப்பிப் பகலொடு
செல்லாது *நின்றீயல் வேண்டுவ னீசெல்லிற்
(௩)புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக்
கொல்லாது போத லரிதா லதனொடியான்
செல்லாது நிற்ற லிலேன்

௩௨ ஒல்லையெங், காதலர்க் கொண்டு கடலூர்ந்து காலைநாட்
போதரிற் (௪) காண்குவேன் மன்னோ பனியொடு
மாலைப் பகைதாங்கி †யான்
இனியனென், றோம்படுப்பன் ஞாயி றினி

எ-து: அங்ஙனங் கூறி, மீண்டும் அவ்வூரிலுள்ளாரை நோக்கி, ஊரிலுள்ளீர்! இக்கடும்பகல் எமக்கு எங்கண் (௫)ணுறக்கத்தைக் கைக்கொண்டு எம்மை நினையாத காதலையுடையவன் என்னிடத்துச் செய்த குணங்கள் தருகையினாலே வந்த என்னுடைய இடையறாத நோயான் வருங் குளிரை ‡ வேது கொள்வதுபோலே இராநின்றது; இது நுமக்கு என்போலே இருக்கின்றது ||கூறுமினென்றாள்; அங்ஙனங் கூறி, இங்ஙனம் வேதுகொண்டு என்னைக் காக்குங் + கடும்பகல் ஞாயிறே! நீ எல்லாக் கதிர்களையும் பரப்பி இப்பகற் பொழுதோடே போகாது நிற்றலை விரும்பாநின்றேன்; அதற்குக் காரணம் என்னெனில், நீ போகிற் புற்கென்ற மயக்கத்தைத் தரும் மாலைக்காலம் இன்று வந்து என்னைக்கொல்லாமற்போத லரிது; அதனோடே யான் உயிர் போகாநிற்குந் தன்மையையுடையேனல்லேன்; ஆதலாற் × காணென்றாள்; என்று பின்னும் ஞாயிறே! நீ எங்காதலரை விரையக் கொண்டு கடன்மேலே வந்து நாட்காலையிலே இவ்வுலகிலே போதுவாயாயின், யான் என்னோயின் நடுக்கத்தோடே மாலையாகிய பகையையும் பொறுத்து, நின்னிடத்து அவன்

---

௧. "வேதுகொண் டொற்றியே" கலிங்க. கடை. ௧௩.

௨. கடியென்னு முரிச்சொல் விளக்கமென்னுங் குறிப்புணர்த்தி வருதற்கு, "கடும்பகன் ஞாயிறு" என்பது நச். உரையிலும் "கடும்பகல்" என்பது சேனா. உரையிலும் மேற்கோள்; தொல். உரிச். சூ. அஎ.

௩. "புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல், வன்கண்ண தோ நின்றுணை" குறள். ௧௨௨௨.

௪. 'காண்குவேன் கொல்லோ' என்று உரையிலுள்ளது.

௫. இந்நூற்பக்கம் ௧௫௬: ௩-ஆம் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * நின்றீதல் வேண்டு வேனீ செல்லிற், † யான். எ - து. அங்ஙனங் கூறி, ‡ வேதுகோளது போலே, || கூறுமினென்றாள். உம்மை யிசை நிறை. அங்ஙனங்கூறி, ÷ கடும்பகலையுடைய ஞாயிறே, × காணேனென்றாள்.

இனியன்; அவனை நீ துனித்திராதேகொள்ளென நெஞ்சினைப்பாதுகாப்பதுஞ் செய்வேன்; அங்ஙனம் பாதுகாத்துப் பின்னர் அவனைக் காண்பேன்கொல்லோ; என்று*கூறினாள். எ – று.

உம்மை, இசைநிறை. நின்றீயல், தொழிற்பெயர்த்திரி†சொல்.

௩௬ ஒள்வளை யோடத் துறந்து துயர்செய்த
கள்வன்பாற் பட்டன் றொளித்தென்னை யுள்ளிப்
பெருங்கடல் புல்லெனக் கானல் புலம்ப
விருங்கழி (க)நெய்த லிதழ்பொதிந்து தோன்ற
விரிந்திலங்கு வெண்ணிலா வீசும் பொழுதினான்

க. நெய்தலென்பது ஒரு நீர்ப்பூங்கொடி; இதனானே கடல் சார்ந்த நிலம் நெய்தனிலமெனப்பட்டதென்பார் ஒருசாரார். (தொல் அகத். சூ. ௫. இள. நச். நாற்கவி. அகத். சூ. சு. உரைபார்க்க.) இக்கொடி திரண்ட தாளையும் பசிய இலையையும் நறுமணமுள்ள பூவையுமுடையது; இதன் இலை யானைக்கன்றின் காதிற்கும், இதன்முகிழ் மாணாக்கர்குடுமிக்கும், இதன் பூவிதழ் வேலுக்கும் உவமையாய் வந்துள்ளன. இதற்கு விடியற்காலத்தில் மலர்தலும் மாலைக்காலத்திற் குவிதலும் இயல்பாம். இம்மலரால் நெய்தனிலமகளிர் தழையும் மாலைமுதலியனவும் செய்தணிதலும் சிற்றில் முதலியவற்றுக்குப் புனைதலும் உண்டென்று பண்டைநூல்கள் கூறும். இம்மலரிற் கருநிறமுடைய சாதி கருநெய்தலென்றும் வெண்ணிறமுடையசாதிவெண்ணெய்தலென்றும் வழங்கப் பெறும். இவற்றுட் கருநெய்தற் பூவுக்கு நீலமணியும் அதனிதழுக்கு மகளிர் கண்ணும் உவமையாக வருகின்றன. மகளிர் கண்ணுக்கு இவ்விதழும் உவமையாம். (இந் நூற்பக்கம் அகூ௩: க ஆம் குறிப்புப் பார்க்க.) இவையும் பிறவும் (அ) "கணைக்கா னெய்தல்" பெரும்பா. உகூ; நற். கூஅ: சு; குறுந். கூ; அகம். ௩௬௦: ச. (ஆ) "சிறுபாசடைய நெய்தல்" நற். உஎ: கக. (இ) "கமழ்நறு நெய்தல்" நற் உஅ௩: உ. (ஈ) "நெய்தல், கட்கமழ்ந் தானாத் துறைவற்கு" ஐங். கரிக. (உ) "இரும்பிடி.....நெய்தலம் பாசடை புரையு மஞ்செவிப், பைதலங் குழவி தழீஇ" நற். ௪எ: க – ச. (ஊ) "நெய்தன் முகிழ்த் துணைய வாங்குடுமி" சிறுபஞ்ச. ௩௦. (எ) "நெய்த லிடையிடை வாளை பிறழ்வனபோ, லைதிலங் கெஃகி னவி ரொளிவா டாயினவே" களவழி. ௩௩. (ஏ) "வைகறைக், கட்கமழ் நெய்த லூதி யெற்படக், கண்போன் மலர்ந்த காமர் சுனைமல, ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும், குன்று" முருகு. எ௩–எஎ. (ஐ) "வைகறை மலரு நெய்தல் போலத், தகைபெரி துடைய காதலி கண்ணே" ஐங்குறு. கஅஅ.

(பிரதிபேதம்) * கூறினாள், நின்றீயல். † சொல். இனியனென்றோம்படுப்பன் ஞாயிறினி யொள்ளனை.

யான்வேண் டொருவனென் னல்ல லுறீஇயான்
றான்வேண்டு பவரோடு துஞ்சுங்கொ றுஞ்சாது
வானு நிலனுந் திசையுந் *துழாவுமென்
னானாப் படர்மிக்க நெஞ்சு

(ஒ) "வள்ளிதழ் நெய்தல் கூம்ப.....புலம்பொடு வந்த புன்கண் மாலை" (ஓ) "நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுக" நற். ககஎ : ௩-எ ; கஅஎ : க. (ஔ) "தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற், கடும்பகல் வருதி கையறு மாலை, கொடுங்கழி நெய்தலுங் கூம்பக், காலை வரினுங் களைஞரோ விலரே" ஐங். கஅ௩. (ஃ) "நெய்த, னுண்டா துண்டு வண்டினந் துறப்ப,.....வந்தமாலை" அகம். ௩௬௦ : ௪ - ௬. (அஅ) "புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணே போற், றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா, லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள், வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ" சிலப். எ : ௩௩. (ஆஆ) "நெடுங்கா னெய்த, லம்பகை நெறித்தழை யணி பெறத்தை இ" நற். ௬௬ : எ--அ. (இஇ) நெய்தற், பூவுட னெறிதரூஉத் தொடலை தைஇ" நற் க௩அ : ௬-எ, (ஈஈ) "நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையா, ருடலகங் கொள்வோ ரின்மையிற், றொடலைக் குற்ற சிலபூ வினரே" ஐங். கஅஎ. (உஉ) "நெய்த, னெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்" குறுந். ௪௦க. (ஊஊ) "ஒண்ணுதன் மகளிர்..... நெய்த, லகல்வரிச் சிறுமனை யணியுந் துறைவ" நற். உஅ௩ : க - ௩. (எஎ) "மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தற், பாசடைப் பனிக்கழி" பதிற். ௩௦: உ-௩. (ஏஏ) "மணிநிற நெய்தல்" ஐந்திணை யெழு. ௬௦. (ஐஐ) "கண்ணே ரொப்பின் கமழ்நறு நெய்தல்" நற் உஅ௩ : உ. என்ப வற்றால் அறியலாகும். பிங்கல முதலிய நிகண்டுகளையும் உரைகளையும் நோக்க, கருநெய்தலும் நீலமும் ஒன்றோ வென்ற ஐயமுறுமாயினும், (ஒஒ) "கட்கமழு நறுநெய்தல், வள்ளிதழவிழ்நீலம்" மது. உ௫௦-உ௫க. (ஓஓ) "பல்லிதழ் நீலமொடு நெய்த னிகர்க்குந், தண்டுறை யூரன்" ஐங். உ. என்பவற்றால் இவை வேறுவேறென்பது விளக்கமாகும். இங்கே கூறிய ஐங்குறுநூற்றுச் செய்யுளின் விசேட்வுரையில், (ஔஔ) 'சிறப் புடைய கருங் குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்க்கும் ஊர னென்றது, குலமகளிருடனே பொதுமகளிர் இகலுமூரன்' என்று எழுதியிருப்பதும் உற்றுநோக்கற் பாலது. (ஃஃ) "சிறுமா ணெய்தல்" புறம். ௬க : உ. எனவருவதும் நோக்குக. (அஅஅ) "நீணறு நெய்தல்" குறிஞ்சி. எக. (ஆஆஆ) "தண்ணறு நெய்தற் றளையவிழ் வான்பூ" ஐங். ககஉ. என வெண்ணெய்தலும் சிலவிடத்துக் கூறப்படுகிறது. வெண் ணெய்தலும் ஆம்பலும்ஒன்றாயின் அதுவும்பயின்று வருவதென்னலாம்.

(பிரதிபேதம்) * துழவு மென்.

எ - து: அங்ஙனம் ஞாயிற்றை நோக்கிக் கூறின அளவிலே மாலைக்கால முந் திங்களும் * வந்தன; அவற்றான் வருத்தம்மிக்கு, என்னுடைய அமையாத வருத்தமிக்க நெஞ்சு முன்பே ஒள்ளிய வளை கழலும்படி என்னைக் கைவிட்டுப் பின்பு வருத்தஞ்செய்த கள்வளை உள்ளி என்னை ஒளித்துப்போய் அவன்பாற் பட்டது; அது தான் மீண்டுவந்து பெருங்கடல் தன்னிறந் தோன்றாமற் புற்கெனக் கானல் பறவைகள் முதலியனவின்றித் தனிப்பக் கழியின்நெய்தல் இதழ்குவிந்துதோன்ற வந்த † மாலைப் பின்னர் விளங்குகின்ற வெண்ணிலாப் பரக்கும்பொழுதின் கண்ணே விசும்பையும் நிலத்தையுந் திசைகளையும் அவனைத் தேடித் (க) துழாவாநிற்கும்; இங்ஙனம் என்னை அல்லலுறீஇயினவன், தான் விரும்பாமல் யான் விரும்பப்பட்டான் ஒருவன்; அவன் தன்னை விரும்புகின்ற என்னோடே துயிலாது தனியே துயில்கொள்ளுமோ கொள்ளானோ என்று கூறினாள். எ - று.

வேண்டுபவர் என்றாள், தன்னைப் பிறர்போல.

சரு (உ) ஊரவர்க் கெல்லாம் பெருநகை யாகியென்
(௩) னாருயி ரெஞ்சும னங்குநீ சென்றீ
நிலவுமிழ் வான்‡ றிங்கா ளாய்தொடி கொட்ப
வளிபுற மாறி யருளான் றுறந்தவக்
காதலன் செய்த கலக்குறுநோய்க் கேதிலா
ரெல்லாருந் தேற்றார் மருந்து

எ - து. அங்ஙனங் கூறி, எழுந்த திங்களை நோக்கி, நிலவைக் கான்ற திங்களே! தோள்மெலிந்தகாலத்துச் செருகலாமென்று ஆராய்ந்த தொடி உட்படச்சுழலும்படி அளித்தலை என்னிடத்து மாறி, பின்னர் என்னை || அருள் செய்யாதே கைவிட்ட அக்காதலன் செய்த, மனக்கலக்கம் உறுகின்ற காம நோய்க்கு நின்னை ஒழிய அயலிலுள்ளார் எல்லாரும் [அதற்கு] ஒருமருந்தைத் தெளிவித்துக் கூறார்; ஆதலால் ஊரவர்க்கெல்லாம் பெரியதோ—ரிகழ்ச்சி யுண்டாம்படி என் அரிய உயிர் போகாநிற்கும்; இதனை நோக்கித் திங்களாய

க. "கவிழ்ந்து, நிழறுழாம் யானை" தண்டி. சூ. உக: மேற்கோள்; "சிறு குரங்கின் கையாற் றுழா" பழ. ௫க.

உ. "ஊர்க் கெல்லாஞ் சாலும், பெருநகை யல்க ளிகழ்ந்தது" கலி. ௬௫. க - உ.

௩. (அ) "ஆருயி ரெஞ்சும், வகையினால்" (ஆ) "ஆருயி ரெஞ்ச" கலி: கஙகூ: உசு-உஎ; கசஙூ: கக.

(பிரதிபேதம்) * வந்தென அவற்றான். † மாலையின்னர். ‡ திங்களாய்தொடி. || அருளே செய்யாதே. ÷ இகட்சி.

புத்தேளே! நீ (க) அவன்பாற் * சென்று என் குறை முடிப்பாயாக என்று கூறினள். எ - று.

ஆகி, ஆக.

நக வினைக்கொண்டென் காமநோய் நீக்கிய வூரீ
ரெனைத்தானு †மெள்ளினு மெள்ளலன் கேள்வ
னினைப்பினுங் கண்ணுள்ளே தோன்று மனைத்தற்கே
யேமரா தேமரா வாறு

எ - து; அங்ஙனங் கூறிய திங்கள் போகா நிற்றலின் அதனைக் கைவிட்டு இன்னும் நம் வருத்தமுணர்ந்து வினவிய ‡ ஊரிலுள்ளாரே நம் வருத்தந் தீர்த்தற்குரியரென்று கருதி, ஊரீர்! நீர் என்னை இகழ்ந்திருக்கினும் என்கேள்வன் சிறிதுமென்னை இகழ்ந்திரான்; அதற்குக் காரணமென்னெனில், மெய்யுற்றுப்புணர்ந்து யான் பரிகாரப்படாததொரு நெறியிலே நின்று நெஞ் சால் நினைப்பிடத்துத்தோன்றுதலினுங் காட்டிற்||கண்ணினிடத்தேதோன்றும்; அவ்வளவு அருள்செய்தற்கு என்னெஞ்சு தான் பரிகாரப்படுகின்றதில்லே; இதனை நும்முடையதோர் தொழிலாக ஏறட்டுக்கொண்டு எனது காம நோயை நீக்குதற்கு நல்ல ×காலமென்று கூறினள். எ - று.

நநு கனையிருள் (உ)வானங் கடன்முகந் தென்மே
லுறையொடு நின்றியல் வேண்டு மொருங்கே
நிறைவளை கொட்பித்தான் செய்த தியரா
லிறையிறை (ஊ)பொத்திற்றுத் தீ

எ - து: அங்ஙனங் கூறி, அவனைத் தந்து + இவர் இந்நோயை நீக்கு மளவும் செறிந்த இருளையுடைய மேகமே! நிறைந்த வளை சுழலப் பண்ணின வன் செய்த வருத்தத்தாலே எனக்குச் சந்துதொறுஞ் சந்துதொறும் காமத்தீ மூண்டது; இதன் வெம்மை ஆறும்படி கடலிலே முகந்து என்மேலே சோர இடைவிடாமற்பெய்யுந் துளியோடே நிற்றலைச் செய்தல் ∴ வேண்டும்; என்று கூறினள். எ - று.

க. 'ஈங்கு முதலியன தன்மைக்கண்ணும் ஆங்கு முதலியன படர்க்கைக் கண்ணும் அடக்கப்பட்டன' (தொல். இளவி. சூ. உஅ. நச்) என்பது இங்கே அறிதற்பாலது.

உ. "கார்தலைக் கொண்டு பொழியினுந் தீர்வது, போலாதென் மெய்க் கனலு நோய்' கலி கசஉ: உச-உடு.

ஊ. "எரிபொத்தி" (கலி. ஊஉ. கக) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * சென்றேதுறை, † எள்ளினுமெள்ளிலன், ‡ ஊரிலுள்ளாரே அவனே நம் வருத்தந் தீர்த்தற்குரியானென்று கருதினீர்? நீரென்னை, || கண்ணிடத்தே, × காணமென்று + அவன் இந்நோயை, ∴ வேணுமென்று.

நிகூ எனப்பாடி

நோயுடை நெஞ்சத் தெறியா வினைபேங்கி
யாவிரு மெங்கேள்வற் காணீரோ வென்பவட்
கார்வுற்ற பூசற் கறம்போல வெய்தந்தார்
பாயல்கொண் டுள்ளா தவரை வரக்கண்டு
மாயவன் மார்பிற் * றிருப் போல் பவள்சேர
(க)ஞாயிற்று முன்ன நிருள்போல மாய்ந்ததென்
ஞயிழை யுற்ற துயர்

எ - து: †என்று அங்கு அங்ஙனஞ்சொல்லிக் காமநோயையுடைய நெஞ்சி லே அடித்துக்கொண்டு வருந்தி அழுது, நீங்கள் எல்லீருந் தேடிச் சென்றும் எங்கணவரைக் காணப் பெற்றிலீரோ என்று கூறுகின்றவட்கு உற்ற வருத்த மானது; தன் துயிலெவாங்கிக்கொண்டு தன்னைநினையாதவரைத் தன்னிடத்தே வரக்கண்டு அவர் மார்பிடத்தே மாயவன் மார்பில் திருச்சேர்ந்தாற்போலே அவள்சேர ஞாயிற்றின்முன் இருள் கெடுமாறு போலக் கெட்டது; ஆதலால், இவ்வாயிழை பசப்புற்ற வருத்தத்திற்(கு அறக்)கடவுள் உதவித் தீர்த்தாற்போல அவரும் உதவித் தீர்த்தாரென்று கண்டார் வியந்து தம்மிற் கொண்டுகூறிற்றாக உரைக்க. எ - று.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'நோய்வேது கொள்வதுபோலுங் கடும்பகல்' என்னுந்துணையும் கூறத் தகாதன கூறலின்‡ மடனிறந்தவாறும் 'பனியொடு மாலைப்பகை தாங்கியான்' எனத் தன் வருத்தந் தோன்றுமற் கூறலின் வருத்தமிறந்தவாறும் 'கண்ணீர்க் கடலால்' என்றதனையும் 'வானுநிலனுந் திசையுந் துழாவுமென்.....னெஞ்சு' என்றதனையுந் தான் வியவாமையின் ‖மருட்கையிறந்தவாறும் 'எங்கண்பாயல் கொண்டு' என்றும் 'ஒன்வளையோட' என்றும் வனப்பு மிகுதி கூறலின் மிகுதி யிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடிவந்த தரவும் ஐஞ்சீரடுக்கிய குறவெண்பாட்டும் ஓரடியா னொன்றும் பெற்றுக் கலிவெண்பாவின் வேறுபட்ட பாநிலவகைக் கொச்சகம்.

(கசஉ) உரைசெல வுயர்ந்தோங்கிச் சேர்ந்தாரை யொருநிலையே
வரைநில்லா விழுமமுறீஇ நடுக்குரைத்துத் தெறன்மாலை
யரைசினு மன்பின்றுங் காமம் புரைதீர

க. "ஞாயிற்று முன்ன நிருள்போல மாய்ந்ததென், ஞயிழை மேனிப் பசப்பு" (கலி. சஉ: கூக-கூஉ) என்பதும் அதன் குறிப்பும் ஒப்பு நோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * திருப்போலவள்சேர † என்றவ்வனம் ‡ மதனிறந்தவாறும் ‖ மருட்கை பிறந்தவாறும்.

வன்னமென் சேக்கையு ளாரா தளித்தவன்
௫ றுன்னி யகலத் துறந்த வணியளாய்
நாணு நிறையு முணர்கல்லா டோண்ஞெகிழ்பு
பேரம ருண்க ணிறைமல்க வந்நீர்தன்
கூரெயி றாடிக் குவிமுலைமேல் வார்தரத்
தேர்வழி நின்று தெருமரு மாயிழை
கூறுப கேளாமோ சென்று;
௧௧ எல்லிழாய், எற்றி வரைந்தானை நாணு மறந்தாளென்
றுற்றனிர் போல வினவுதிர் மற்றிது
கேட்டீமி னெல்லீரும் வந்து;
௧௪ வறந்தெற மாற்றிய வானமும் போலு
நிறைந்தென்னை மாய்ப்யதோர் வெள்ளமும் போலுஞ்
சிறந்தவன் றாவற நீப்பப் பிறங்கிவந்
தென்மே னிலைஇய நோய்;
௧௮ நக்கு நலனு மிழந்தா ளிவளென்னுந்
தக்கவிர் போலு மிழந்திலேன் மன்னோ
மிக்கவென் னாணு நலனுமென் னுள்ளமு
மக்கா லவனுழை யாங்கே யொழிந்தன
வுக்கா ணிஃதோ வுடம்புயிர்க் கூற்றாகச்
செக்கரம் புள்ளித் திகிரி யலவனொடியா
னக்கது பன்மா ணினைந்து;
௨௫ கரைகாணா நோயு ளழுந்தா தவனைப்
புரைதவக் கூறிக் கொடுமை நுவல்வீர்
வரைபவ னென்னி னகலா னவனைத்
திரைதரு. முந்நீர் வளாஅக மெல்லா
நிரைகதிர் ஞாயிற்றை நாடென்றேன் யானு
முரைகேட் புழியெல்லாஞ் செல்வேன் புரைதீர்ந்தான்
யாண்டொளிப் பான்கொல்லோ மற்று;
௩௨ மருள்கூர் பிணைபோன் மயங்கவெந் நோய்செய்யு
மாலையும் வந்து மயங்கி யெரிநுதி
யாமந் தலைவந்தன் றாயி னதற்கென்னோய்
பாடுவேன் பல்லாருட் சென்று;

௩௬ யானுற்ற வெவ்வ முரைய்பிற் பலர்த்துயிற்றும்
யாமநீ துஞ்சலை மன்;
௩௮ எதிர்கொள்ளூ ஞாலந் துயிலாரா தாங்கண்
முதிர்பென்மேன் முற்றிய வெந்நோ யுரைப்பிற்
கதிர்கண் மழுங்கி மதியு மதிர்வதுபோ
லோடிச் சுழல்வது மன்;
௪௨ பேரூர் மறுகிற் பெருந்துயிற் சான்றீரே
நீரைச் செறுத்து நிறைவுற வோம்புமின்
கார்தலைக் கொண்டு பொழியினுந் தீர்வது
போலாதென் மெய்க்கனலு நோய்;
௪௬ இருப்பினு நெஞ்சங் கனலுஞ் செலினே
வருத்துறும் யாக்கை வருந்துத லாற்றே
னருப்ப முடைத்தென்னு ளெவ்வம் பொருத்திப்
பொறிசெய் புனைபாவை போல வறிதுயங்கிச்
செல்வேன் விழும முழந்து;
௫௧ எனவாங்குப் பாட வருளுற்று;
வறங்கூர் வானத்து வள்ளுறைக் கலமரும்
புள்ளிற் கதுபொழிந் தாங்கு மற்றுத்தன்
னல்லெழின் மார்பன் முயங்கலி
னல்ல றீர்ந்தன் றாயிழை பண்பே.

(௧) இதுவுமது. இதற்கும் (௨) முன்னங் கூறிய உரையைக் கூறிக்கொள்க.

இதன் பொருள்.

உரைசெல வுயர்ந்தோங்கிச் சேர்ந்தாரை யொருநிலையே
வரைநில்லா விழுமமுறீஇ நடுக்குரைத்துத் தெறன்மாலை
யரைசினு மன்பின்றாங் காமம் புரைதீர
(௩)வன்னமென் சேக்கையு ளாரா தளித்தவன்

---

௧. இச்செய்யுளும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந்திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. கஙூ. நச்.

௨. இந்நூற்பக்கம் அஅஇ-அஅசு. பார்க்க.

௩. (அ)"தூவி யன்னமென் சேக்கையுள்" (கலி. கஙூ: கஇ) என்பதும் (ஆ) "இணைபட.....துணைபுண ரன்னத்தின் றூவிமெல் லணை" (கலி. எஉ: க-உ) என்பதும் (இ) அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

௫ றுன்னி யகலத் துறந்த வணியளாய்
நாணு நிறையு முணர்கல்லா டோண்ஞெகிழ்பு
(க)பேரம ருண்க ணிறைமல்க வந்நீர்தன்
கூரெயி(உ)றாடிக் குவிமுலைமேல் *வார்தரத்
தேர்வழி நின்று தெருமரு மாயிழை
கூறுப கேளாமோ† சென்று
௧௧ எல்லிழாய்,(௩)எற்றி வரைந்தானை நாணு மறந்தாளென்
‡றுற்றனிர் போல வினவுதிர் மற்றிது
கேட்டீமி னெல்லீரும் வந்து
௧௪ வறந்தெற மாற்றிய வானமும் போலு
நிறைந்தென்னை மாய்ப்பதோர் வெள்ளமும் போலுஞ்
சிறந்தவன்(௪)றாவற நீப்பப் பிறங்கிவந்
தென்மே னிலைஇய நோய்

எ-து: ||அரசன் தனக்குப் புகழ் உயர்ந்து நடக்கும்படியாகத் தம்மறிவான் மிக்குச் சேர்ந்த (௫) அமைச்சரை முன்னர் நடுக்கமான மொழிகளைக் கூறிப் பின்னர் ஒரு படியிலே எல்லையில்லாத இடும்பைகளை உறுவித்துக் கொல்லுதலை இயல்பாகவுடைய கொடுங்கோலரசனிலுங்காட்டில், × கணவர்க்கு மகளிர்க் குண்டாகிய காமத்தாலும் அவர்மேல் நிகழும் அன்பு இல்லையாமாயிருந்தது; எங்ஙனேயென்னில் அவ்வாயிழை தன்றலைவன் அன்னத் தூவியாற் செய்த மெல்லிதாகிய சேக்கையிலே அளித்து இராக்காலத்தேவந்து துன்னிக் கூரிய எயிற்றினீரை நுகர்ந்து குற்றந் தீரத் தலையளிசெய்து நீங்குகையினாலே அத் தலையளியால் ஆராமல் தன்னை நீங்கின அணிகளை யுடையளாய்த் தனக்கியல்பாகிய நாணையும் நிறையென்னுங் குணத்தையும் தாங்குதல் + வேண்டுமென்று அறியாளாய்த் தன் தோள் மெலிந்து பெரிய அமர்த்த

க. "பேரம ருண்கணின் றோழி" கலி. ௬௦: ௧௬.

உ. ஆடுதலென்பதற்கு நுகர்தலென்னும் பொருள், "நெய்தற்றா தமர்ந் தாடி" (கலி. எ௪: உ) என்றவிடத்தும் கூறப்பட்டிருக்கிறது.

௩. இந்நூற் பக்கம ௬௧௫: க-ஆம் குறிப்புப் பார்க்க.

௪. இந்நூற் பக்கம் எ௪எ: ௫-ஆம் குறிப்புப் பார்க்க.

௫. "புரைதவப் பயனோக்கார் தம்மாக்க முயல்வாரை, வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணோடா துயிர்வௌவு, மரைசினுந் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ" (கலி. அ: ௧௫-௧எ.) என்பதும் இந்நூற் பக்கம் ௫௪: க-ஆம் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * வாராகத்தேர்வழி, † சென்று எற்றி, ‡ உற்றறிவீர்போல, || அரைசன்' × மகளிர்க்குண்டாகிய காமத்தாலுங் கணவர்க் கவர்மே னிகழுமன்பு' + வேணுமென்று.

உண்கண் நீர்நிறைகையினாலே அந்நீர் தன் குவிந்த முலைமேலே வடியாநிற்க அவனைத் தேடுவதோர்கூற்றிலே நின்று மனம் சுழலாநிற்கும்; இனி யாம் இவளிடத்தே சென்று இவள் கூறுவனவற்றைக் கேளாது * இருப்பேமோ? கேட்கக்கடவேமென்று நும்மிலே கூறி என்னிடத்தே வந்து எல்லிழாயென்று என்னை விளித்து, பிரியேன் என்று பிரிதலை வரைந்தவனைப் பிரியானெனத் துணிந்து அவன் பிரிதலின் நாணையும் மறந்தாள் என்று கூறி எனக்கு அன்புற்றீர்போல நீ என்னுற்றனை என்று வினவுகின்றவர்களே! பின்னை இவ்வருத்தத்தை எல்லீருங் கேட்பீராக என்று கூறுகின்றவள், (க) எனக்குச் சிறந்தவன் என்வலியறும்படி என்னைக் கைவிடுகையினாலே பெருகிவந்து என்மேல் நிலைபெற்ற இக் காமநோய், கோடை(உ)உலகத்தைச் சுடும்படியாகப் (௩)பெய்யாமற்போன மேகம் வருத்துமாற்றையும்போலும்; பெருகி என்னுயிரைப் (௪) போக்குவதோர் நீர் வெள்ளம் வருத்துமாற்றையும் போலும்; என்றுகூறினாள். எ – று.

கஅ நக்கு நலனு மிழந்தா ளிவளென்னுந்
தக்கவிர் போலு மிழந்திலேன் மன்னோ
† மிக்கவென் னாணு நலனுமென் னுள்ளமு
மக்கா லவனுழை யாங்கே யொழிந்தன
(௫)வுக்கா ணிஃதோ வுடம்புயிர்க் கூற்றாகச்
(௬)செக்கரம் புள்ளித் திகிரி யலவனொடியா
னக்கது ‡பன்மா ணினைந்து

க. "சிறந்தானை வழிபடீஇ" (கலி. கூ: உ௩) என்பதும் அதன் உரையும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "வானந், துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின், னளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே" (கலி. உ௫: உஎ-உ௯) என்பதும், (ஆ) அதன் குறிப்பும் (இ) "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத், துண்ணின் றுடற்றும் பசி" (குறள். க௩.) என்பதும் நோக்குக.

௩. (அ) "கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்.....எல்லாவுயிர்க்கு மில்லால் வாழ்க்கை" புறம். உ௦௩: க-௩; (ஆ) "பெயற்பான் மழைபெய்யாக் கண்ணும்.....என்னையுலகுய்யுமாறு" நாலடி. ௯எ.

௪. (அ) "நீர்மிகிற் சிறையு மில்லை" புறம். ௫க: க; (ஆ) "நீர்மிகி னில்லை சிறை" பழ. ககூ௦; (இ) "சிறையு முண்டோ செழுமபுனன் மிக்குழீஇ" மணி. ௫: ககூ; (ஈ) "சிறையென்ப தில்லை செவ்வே செம்புனல் பெருகுமாயின்" ஆளா. கல்யாண. க௫௫.

௫. இந்நூற் பக்கம் ௫௩அ: ௫-ஆம் குறிப்பும் "இவ்விருந்த சான்றீர்" கலி. க௩கூ: ௩-௪ என்பதும் இங்கே அறிதற்பாலன.

௬. "செக்கர் ஞெண்டின்" அகம். உ௦: ௪.

பிரதிபேதம்) * இருப்போமோ, † மிக்கவே நாணும், ‡ பன்மானினைந்து.

எ - து: அங்ஙனங்கூறி, அவன் அன்பிலனாதலை அறியாதே அவனோடே புணர்ந்து தன் அழகினையும் நாணினையும் உள்ளத்தினையும் இவள் இழந்தாள் என்னுந் தகுதிப்பாட்டினை யுடையீர்போலே இருந்தீர் ; அவன் அன்பிலனல்லன்; அஃதென்னையெனில், அவன் இந்த * உடம்பினின்று போகின்ற உயிர்க்கு உறுதியாம்படி, சிவந்தநிறத்தினையும் புள்ளிகளையுமுடைய தேருருள் போன்ற ஆண்பால் அலவன் பெண்பால் அலவனோடே நிகழ்த்துகின்ற பல மாட்சிமைகளையும் யான் நின்னிடத்தே நிகழ்த்தும்படி நின்னெஞ்சாலே நினைந்து அவை நிகழ்த்துகின்றவற்றையும் அவ்விடத்தே பாராய் என்றான்; அதனால், அவனன்புடைமை யறிந்தே யான் அவனோடு(க)†நக்கது; அக்காலத்தே என்னாணும் என்னலமும் என்னுள்ளமும் புணர்ச்சியான் மிகுதியைப் பெற்றன; அவை அவன் நீங்கிய அப்பொழுதே அவனிடத்தே நின்று விட்டன; ‡ ஆதலாற்றான் நோயும் மிகவுறும்; அவற்றை இகந்த தன்மை யுடையேனல்லேனென்று கூறினாள். எ - று.

உரு கரைகாணா நோயு ளழுந்தா தவனைப்
புரைதவக் கூறிக் கொடுமை நுவல்வீர்
வரைபவ ||னென்னி னகலா (உ)னவனைத்
திரைதரு × முந்நீர் (௩)வளாஅக மெல்லா
நிரைகதிர் ஞாயிற்றை நாடென்றேன் யானு
முரைகேட் புழியெல்லாஞ் செல்வேன் புரைதீர்ந்தான்
யாண்டொளிப் பான்கொல்லோ மற்று

எ-து: அங்ஙனங் கூறி என்னைப்போல ஓர் எல்லைகாணாத காமநோயிலே மூழ்காதவனை உயர்ச்சி கெடும்படி அவன் பிரிந்து நாண்முதலியவற்றைத் தாராத கொடுமையை நாடி அவன் வந்த + காலத்தன்றே நீ இவை பெறுவது என்று கூறுகின்றவர்களே ! யான் நிரைத்த கதிர்களையுடைய ஞாயிற்றை நோக்கித் திரையைத் தருகின்ற கடல்சூழ்ந்த உலகமெல்லாந் தேடி அவனைக் கொண்டு வா என்றுஞ் சொல்லிவிட்டேன்; அதுவேயன்றி யானும் அவன்

க. நக்கது - புணர்ந்தது; இச்சொல் இப்பொருளில் வருதல் (அ) "அவர் நக்கதன் பயனே" "நக்கு நலனுமிழந்தாள்"(கலி. க௩எ: எ; க௪௬: கஅ) என்பவற்றினுரையாலும் துணியலாகும்.

உ. "ஆங்கெதிர் நோக்குவன் ஞாயிறே யெங்கேள்வன், யாங்குள னாயினுங் காட்டீமோ" கலி. க௪எ: உஎ-உஅ.

௩. (அ) "தெண்கடல் வளாகம்" புறம். கஅக: க; (ஆ) "கொங்கை முன்றிற் குங்கும வளாகத்து" சிலப். அ: உக; (இ) "நாமநீர் வரைப்பி னானில வளாகமும்" சிதம்பர மும்மணிக். க: உ.

(பிரதிபேதம்) * உடம்பினின்றும் போகின்ற, † நக்கவக்காலத்தே, ‡ ஆதலாலதனோவும் || என்னிலகலான், × முன்னீர்வளாகமெல்லா, + காலத்ததன்றோ.

இவ்விடத்தான் என்னும் வார்த்தை கேட்கலாம் இடமெல்லாஞ் சென்று தேடுவேன்; இங்ஙனந் தேடுமளவின் உயர்ச்சிதீர்ந்தவன் பின்னை எவ்விடத்தே ஒளித்திருப்பான்? அவனை அகப்படுத்திக் கொண்டு அந்நாண் முதலியன வாங்கியே விடுவேன்; என்னை நெஞ்சாலே வரைந்திருக்கின்றவன் என்னிடத்தினின்றுநீங்கான்; என்றுங் கூறினாள். எ - று.

கொல்லும் ஓவும், அசை.

நூஉ மருள்கூர் பிணைபோன் மயங்கவெங் நோய்செய்யு
மாலையும் வந்து மயங்கி யெரிதுதி
யாமந் தலைவந்தன் முயி னதற்கென்னைப்
பாடுவேன் பல்லாருட் சென்று

நூசு யானுற்ற *வெவ்வ முரைப்பிற் (க)பலர்த்துயிற்றும்
யாமநீ துஞ்சலை மன்

எ - து: அங்ஙனங் † கூறிய அளவிலே மாலையும் இரவும் வருகின்றதனை உணர்ந்து, மயக்கமிக்க மான்பிணைபோல யான் மயங்கும்படி வெவ்விய காம நோயை உண்டாக்கும் மாலைக் காலமும் ‡ வந்து அதனோடே மயங்கி எரியின் கொழுந்துபோற் கொடிய இராக்காலமும் ‖ அவ்விடத்தே வந்ததாயின், அதனிடத்தே யான் பட்ட வருத்தத்தை என்னைப்போல வருந்தும் பலமகளிருக்குள்ளே சென்றுகூறுவேன்; நினக்கு முறைப்பட்டுக்கூறிற் பலரையுந்துயிலப் பண்ணும் இராக்காலமே! நீ தானும் மிகவும் வருந்தித் × துயில்கொள்ளாய்; ஆதலால் என்னுயை நினக்குச் சொல்லேனென்றேனென்றும் கொடுமை நவல்கின்றவர்களை நோக்கிக் கூறினாள். எ - று.

நூஅ எதிர்கொள்ளு ஞாலந் ÷ துயிலாரா தாங்கண்
முதிர்பென்மேன் முற்றிய வெங்நோ யுரைப்பிற்
கதிர்கண் மழுங்கி மதியு மதிர்வதுபோ
லோடிச் சுழல்வது மன்

எ - து: அங்ஙனங் கூறியபின்னர்த் திங்கள் வருத்துமென் றுணர்ந்து ஞாலத்தி + லுள்ளாரால் அவ்விசும்பிடத்தே (உ) பிறையான் பருவத்தே எதிர்

க. "மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்குல்" (கலி. சுடு: நு) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "தொழுதுகாண் பிறையிற் றோன்றி" (ஆ) "பலர் தொழச், செவ்வாய் வான்த் தையெனத் தோன்றி, யின்னம் பிறந்தன்று பிறையே" தறுநீ. களஅ; நுஎ. (இ) "அப்பிறை, பதினெண் கணனு

(பிரதிபேதம்) * எவ்வழுறைப்பின். † கூறினவளவிலே. ‡ வந்தது; அதனோடே, ‖ இவ்விடத்தே வந்ததால் யான் தன்னிடத்தே பட்ட, × துயில்கொள்ளாயென்று என்னுயைச் சொல்லுவேனென்றும், ÷ துயிலாதார் தாம், + உள்ளார் அவ்.

கொள்ளப்பட்டுப் பின்பு முதிர்ந்து யான் துயிலாராமல் என்மேல் வந்து வீளைத்த மதியும் யானுற்ற வெவ்வியநோயை முறைப்பட்டுக்கூறின் தன்கதிர்கள் ஒளி மழுங்கி நடுக்குவதுபோலே ஒடி மிகவுஞ் சுழன்று திரியும்; ஆதலான் நமக் கன்றி அதற்கும் என்னுயிரைக் கூறேனெல் றும் கூறினுள். எ - று.

சஉ பேரூர் மறுகிற் பெருந்துயிற் சான்றீரே
நீரைச் (க்)செறுத்து நிறைவுற வோம்புமின்
(உ)கார்தலைக் கொண்டு பொழியினுந் தீர்வது
போலாதென் மெய்க்கனலு நோய்

எ - து: அங்ஙனங் கூறி, பெரிய ஊரில் தெருவிலே யான் உறுகின்ற வருத்தத்திற்குப் பரிகாரஞ் செய்யாமற் பெரிய உறக்கத்தைக் கொள்ளக் கருதிய சான்றீரே! என்மெய்க்கண் நின்று எரியுங் காமநோய் மழையெல்லாம் என்னிடத்தே நின்று பெய்யினும் ஆறுவது * போல இருக்கின்றதில்லை; இது தணியும்படி உலகத்துள்ள நீரை என்னிடத்தே நிறையும்படி அடைத்து வைத்து என்னுயிரைப் பாதுகாப்பீராக என்றும் கூறினுள். எ - று.

சஙு இருப்பினு நெஞ்சங் கனலுஞ் செவிநே
வருத்துறும் யாக்கை வருந்துத லாற்றே
(ங)னருப்ப முடைத்தென்னு ளெவ்வம் பொருத்திப்
பொறிசெய் புனைபாவை போல வறிதுயங்கிச்
செல்வேன் விழுமம் முழந்து

மேத்தவும் படுமே" புறம். க: கூ-கo. (ர) "ஒள்ளிழை மகளி ருயர்பிறை தொழூஉம், புல்லென் மாலை" அகம். உருகூ: கூ-கo.

க. "செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்" நாலடி. உஉஉ.

உ. "கனையிருள் வானங் கடன்முகந் தென்மே, லுறையொடு நின்றீயல் வேண்டு மொருங்கே,நிறைவளை கொட்பித்தான் செய்த துயரா, லிறை யிறை பொத்திற்றுத் தீ" கலி. கசடு: ஒடு-டுஅ.

ங. அருப்பம் - அருமை ; இது பண்பாகு பெயராய் அரிய அரணை உணர்த் திற்று; இது (அ) "வேட்டுப் புழை யருப்ப மாட்டி" முல்லை. உசு. (ஆ) "அம்புமி ழயிலருப்பம்" மது. கூள. (இ) "அரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய" மலை. ஙஎஅ. (ர) "வீங்கு சிறை வியலருப்பம்" (உ) "அருப்பம் பேணு தமர்கடந்ததூஉம்" புறம். கஎ: உஅ; உஉசு: க. என்புழியும் இப்பொருளில் வருதல் காண்க. இச்சொல்லை, திட்பம், ஒட்பம், நுட்பம், செப்பம், வெப்பம், கறுகட்பம் என்பவற்றொடு ஒப்பு நோக்குக. அருப்பம், நிண்மை யென்பாருமுளர்.

(பிரதிபேதம்) * போலே.

எ-து: அங்ஙனங் கூறிப் பின்னர்த் தன் ஞெயின் செய்தி கூறுகின்றவள், அவன் என்னெஞ்சிடத்தே விடாமலிருப்பினும் அதனல் அமையாது தான் காந்தா நிற்கும்; அவன் ஒருகாற்போனின் தான் அதற்கு வருத்தமுறுகிற்கும்; *அங்ஙனம் என்னெஞ்சு †வருந்துதலே ஆற்றேனெய்ப் (க) பலவுறுப்புக்களையுங் கூட்டி இயங்குவதோர் பொறியாகச் செய்த புனைந்த பாவைபோல, இடும்பையிலே அழுந்தி மயங்கிய யாக்கையோடே ‡ நிறுதுசெல்வேன்; அதனல் தணியாத என்னிடத்து உண்டாகிய எவ்வமானது பிறரால் அழித்தற்கு அரிய அரணின் றன்மையையுடைத்து; இவ்வரணை அழிக்கலாவதோர் உபாயம் நாடுவீராக; என்றும் கூறினள். எ - று.

நுக எனவாங்குப் பாட வருளுற்று
வறங்கூர் வானத்து(உ)வள்ளுறைக் || கலமரும்

க. "பல்கிழி யும்பயி னுக்துகி னூலொடு, நல்லரக் கும்மெழு குங்கலுஞ் சான்றன, வல்லன வும்மமைத் தாங்கெழு நாளிடைச், செல்வதொர் மாமயில் செய்தன னன்றே." என்பது நோக்குக; சீவக. உகூ.

உ. வானம்பாடியின் இயல்பை (அ) "தளிநசை வேட்கையான் மிசை பாடும் புள்ளிற்றன், னளிநசைஇ யார்வுற்ற வன்பினேன் யானெ" (கலி. சுசு : உ0-உக) என்பதனலும் (ஆ) அதன் குறிப்பாலும் (இ) "வானம் பாடி வறங்களைந் தாஅ, தழிதுளி தலைஇய புறவில்" ஐங். சுகஅ. (ஈ) "பொறிவரி, வானம் வாழ்த்தி பாடவு மருளா; துறை துறந் தெழிலி நீங்கலின்" அகம். சுள: க-ஙூ. (உ) "நீடிம்பை, புள்ளி னு னோங்க லறியும்" நாண்மணி. கூசு. (ஊ) "துளியுண் பறவைபோற் செவ்வனேர்ப் பாரும்" பழ. உஅள; (எ) "தற்பாடு பறவை பசிப்பப் பசையற, நீர்சூல் கொள்ளாது மாறிக் கால்பொரச், சீரை வெண் டலைச் சிறுபுன் கொண்மூ, மழைகா லுண்டு.....கொடுங்கோல் வேந்தன் காக்கு நாடே" ஆசிரியமாலை. (ஏ) "சாதக முரல் குரல் வாய்மடை திறப்ப.....எழுந்தகார்" கல். கூஅ: கள-ஙூ0. (ஐ) "வானத்தின் றுள்ளி யல்லால் வருந்தினும் விரும்பல் செல்லா, மானத்தை யுடைய புள்ளின்" மேரு. கடக. (ஒ) "கொண்டல்பே ரொலியினுற், ருவிலா மகிழ் வறுஞ் சாதகத் தன்மையாய்" (ஓ) "கொண்டல் கண்டிடு சாதகம் போலுளங் குளிர்ந்தார்" கந்த. திருவவ தார. ஙூ0; அக்கினிமுகா. உஉச. (ஔ) "துன்னிய சாத கம்போற் சூழ்ந்துநோக் குநர்கட் கெல்லாங், கன்னியந் துழாய்மி லுக்க கரு முகில் கடைக்க ணேக்கான், மன்னிய கருணை வெள்ள மழைனனி வழங்கு மென்பார்" பாகவதம். (க) கண்ணபிரான் றுவரை. ஙூ0. (ஃ) "மழையை நோக்கிய, சாதக மெனத்தரை யாளு மன்னவன், போதன தடிமலர் புந்தி நாடுபு, காதலிற் பூசையுங் கண்டு வந்தனன்" போதன தடிமலர் புந்தி நாடுபு, காதலிற் பூசையுங் கண்டு வந்தனன்"

(பிரதிபேதம்) * இவ்வனம், † வருத்தலே, ‡ நிறுதே நிற்பேன், || அலம்வரும்.

புள்ளிற் கதுபொழிந் தாஅங்கு மற்றுத்தன்
னல்லெழின் மார்பன் முயங்கலி
னல்ல நீர்ந்தன் முயிழை பண்பே

எ - து: என்று அவ்விடத்தே சொல்லாநிற்க, கோடைக்கால மிக்க வானத்திடத்தே மேகத்தினது வளவிய துளியைப் பெறுதற்குச் சுழன்று திரியும் வானம்பாடிக்கு அம்மேகம் பெய்தாற்போலத் தன்னுடைய நல்ல அழகையுடைய மார்பன் அருளுதலுற்று வந்து முயங்குகையினாலே ஆயிழையுடைய அல்லலாகியகுணம் போயிற்று; என்று கண்டார் வியந்து தம்மிற் கொண்டுகூறிற்றாக உரைக்க.

இது, கண்டார்க்கு அவராக்கம் கண்டு மருட்கை பிறந்தது.

'என்மே னிலேஇய நோய்' என்னுந் துணையும் கூறத் தகாதன கூறலின் மடனிறந்தவாறும், * 'இழந்திலேன்மன்னே' என வருத்தந் தோன்றுமற் கூறலின் வருத்தமிறந்தவாறும் 'ஞாயிற்றை நாடென்றேன்' என்றதனைத் தான் வியவாமையின் மருட்கையிறந்தவாறும் 'என்னுணு நலனும்' என்றும் மான் பிணைபோன்ற யான் இப்பொழுது 'மருள்கூர் பிணைபோன் மயங்க' என்றும் வனப்புமிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடிவந்ததரவும் ஐஞ்சீரடுக்கிய இடைநிலைப்பாட்டும் 'என வாங்குப்பாடவருளுற்று' என முச்சீரான் வந்த சொற்சீரடியும் வந்து ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற கலிவெண்பாட்டு. (உக)

(கசஎ.) ஆறல்ல மொழிதோற்றி யறவினை கலக்கிய
தேறுக ணறவுண்டார் மயக்கம்போற் காமம்
வேறொருபாற் முனது கொல்லோ சிறடிச்
சிலம்பார்ப்ப மியலியா னிவண்மன்னே வினிமன்னும்
புலம்பூரப் புல்லென்ற வனப்பினுள் விலங்காக
வேனுதி யுறநோக்கி வெயிலுற வருருந்தன்
றேனல முண்டானைக் கெடுத்தாள்போற் றெருவிற்பட்
டேன்யாது மிலளாகி யுயிரினுஞ் சிறந்ததன்
னுண்யாது மிலளாகி நகுதலு நகூஉ மாங்கே
பெண்மையு மிலளாகி யழுதலு மழூஉந் தோழியோ
சொண்ணுத லுற்ற துணைச்சென்று கேளாமோ;

விநாயக. மகோற் கடர். எகக. (அஅ) "மழைமுகி லடுப்பச் சாதகக் குருகு வாஞ்சையிற் றுளிமடித் தாங்கு" த்நவாணக்காப். தீர்த்த. கூ. என்பவற்றாலும் அறிக.

(பாடபேதம்) * இழிந்திலேன்.

கூ இவ்யாவ ரேமுற்றூர் கண்டூரே யோஎ
வமையுந் தவறிலீர் மற்கொலோ நகையின்
மிக்கதன் காமமு மொன்றென்ப வம்மா
புதுநலம் பூவாடி யற்றுத்தாம் வீழ்வார்
மதிமருள நீத்தக் கடை;

கள என்னையே மூசிக் கதுமென நோக்கன்மின் வந்து;

கஅ கலிஇய கண்புருவந் தோணுசுப் பேளர்
சிலமழைபோ ருழ்ந்திருண்ட கூந்த லவற்றை
விலைவள மாற வறியா தொருவன்
வலியகப் பட்டதென் னெஞ்சு;

உஉ வாழிய கேளிர்;

உங பலவுஞ்சூ டேற்றித் தெளித்தவ னென்னை
முலையிடை வாங்கி மூயங்கின னீத்த
கொலைவனைக் காணேன்கொல் யான்;

உசு காணினு மென்னை யறிதிர் கதிர்பற்றி
யாங்கெதிர் நோக்குவன் ஞாயிறே யெங்கேள்வன்
யாங்குள னுயினுங் காட்டூமோ காட்டாயேல்
வானத் தெவன்செய்தி நீ;

கூ0 ஆரிரு ணீக்கும் விசும்பின் மதிபோல
நீருள்ளுந் தோன்றுதி ஞாயிறே யவ்வழித்
தேரை தினப்பட லோம்பு;

கூங நல்கா வொருவனை நாடியான் கொள்வனைப்
பல்கதிர் சாம்பிப் பகலொழியப் பட்டூமோ
செல்கதிர் ஞாயிறே நீ;

கூசு அருஅ லின்றரி முல்கைக் கொட்கும்
பருஅப் பருந்தின்கட் பற்றிப் புணர்ந்தான்
கருஅ வெருமைய காடிறந்தான் கொல்லோ
வுருஅத் தகைசெய்திவ் வூருள்ளான் கொல்லோ
செருஅ துளனுயிற் கொள்வே னவனைப்
பெருஅதியா னேவே னவனையெற் காட்டிச்
சுருஅக் கொடியான் கொடுமையை நீயு
முருஅ வரைசநின் னேலிக்கட் கொண்டூ

மருஅ வரைசநின் மாலையும் வந்தன்
றருஅ தணிகவிந் நோய்;
சசு தன்னெஞ் சொருவற் கினிவித்தல் யாவர்க்கு
மன்னவோ காமநின் னம்பு;
சஅ கையாறு செய்தானைக் காணிற் கலுழ்கண்ணுற்
பையென நோக்குவேன் முந்தானை பற்றுவே
னையங்கொண் டென்னை யறியான் விடுவானே
லொய்யெனப் பூச விடுவேன்மன் யானவனை
மெய்யாகக் கள்வனே வென்று;
நிக வினவன்மி னூரவி ரென்னையெஞ் ஞான்று
மடாஅ நறவுண்டார் போல மருள
விடாஅ துயிரொடு கூடிற்றென் னுண்கண்
படாஅமை செய்தான் றொடர்பு;
நிஎ கனவினற் காணிய கண்படா வாயி
னனவினுன் ஞாயிறே காட்டாய்நீ யாயிற்
பனையீன்ற மாவூர்ந் தவன்வரக் காமன்
கணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு;
எனவாங்கு;
சுஉ கண்ணினீபு கலுழ்பேங்கின
டோண்ணெகிழ்பு வளைநெகிழ்ந்தன
ளன்னீயோ வெல்லீருங் காண்மின் மடவரன்
மென்னடைப் பேடை துணைதரத் தற்சேர்ந்த
வன்னவான் சேவற் புணர்ச்சிபோ லொண்ணுதல்
காதலன் மன்ற வவனை வரக்கண்டாங்
காழ்துயர மெல்லா மறந்தனள் பேதை
நகையொழிந்து நாணுமெய் நிற்ப விறைஞ்சித்
தகையாகத் தையலாள் சேர்ந்தா ணகையாக
நல்லெழின் மார்ப னகத்து.

(க) இதுவுமது. இதற்தும் (உ) முன்னங் கூறிய உரையைக் கூறிக்கோள்க.

க. இச்செய்யுளும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந் திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. கஉ. நச்.

உ. இந்நூற்பக்கம் அஅடு-அஅசு. பார்க்க.

இதன் பொருள்.

ஆறல்ல மொழி*தோற்றி யறவினை கலக்கிய
தேறுக ணறவுண்டார் மயக்கம்போற் காமம்
வேறொரு† பாற் றுனது கொல்லோ சீறடிச்
சிலம்பார்ப்ப வியலியா னிவண்மன்னே வினிமன்னும்

ரு புலம்பூரப் புல்லென்ற வனப்பினுள் விலங்காக
வேனுதி யுறநோக்கி வெயிலுற வுருகுந்தன்
(க)ரோணல முண்டாரைக் கெடுத்தாள்போற் ‡ றெருவிற்பட்
டேய்யாது மிலளாகி (உ)யுயிரினுஞ் சிறந்ததன்
ணெய்யாது மிலளாகி (ங) நகுதலு நகூஉ மாங்கே

கo பெண்மையு மிலளாகி யழுதலு மழூஉந் தோழியோ
ரொண்ணுத லுற்ற துணைச்சென்று கேளாமோ

கஉ இவர்யாவ ரேமுற்றூர் கண்டூரே யோஒ
வமையுந் தவறிலீர் மற்கொலோ நகையின்
மிக்கதன் காமமு மொன்றென்ப வம்மா
புதுநலம் பூவாடி யற்றுத்தாம் வீழ்வார்
மதிமருள நீத்தக் கடை

கள என்னையே மூசிக் (சு) கதுமென நோக்கன்மின் வந்து

எ-து: தோழி! அறநெறியல்லாத தீமொழிகளைத் தம்மிடத்தே தோற்றுவித்து அறமாகிய தொழில்களைத் தம்மிடத்துத் தோன்றுமற் கலக்கவேண்டித் தெளியுங்(ரு)கள்ளையும் நறவையும் உண்டவர்களுடைய உலகியல் கெட்ட மயக்கம் போல (சு) நன்மக்கள் ஆற்றுகின்ற காமம் உலகியல் தப்பி வேறோர்

க. "தோணல முண்டு துறக்கப் பட்டோர்" (கலி. உங: அ.) என்பதும் அதன் குறிப்பும் ஒப்பு நோக்குக.

உ. (அ) "சிறந்ததன் ணெய்யும்"(கலி. கசஞ: கo)என்பதும்(ஆ)அதன்குறிப்பும் (இ) "உயிரினுஞ் சிறந்த நாணு நனிமறந்து" நற். கள: அ. என்பதும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலன.

ங. "உண்ணலு முண்ணேன்" (கலி. உங: எ.) என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ச. இந்நூற் பக்கம் சஉஉ: எ-ஆம் குறிப்புப் பார்க்க.

ஞ. "கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து, மெய்யறி யாமை கொளல்" குறள். கூஉஞ.

சு. "காமமீ ராழி, யடக்குமா றுள்ளத் தவன்" நள. சயம். எசு.

(பிரதிபேதம்) * தேற்றி யறவினைக்கலக்கிய. † பாலாற்றுனது, ‡ தெருவுன்பட்டு.

பகுதியாய் விட்டதோ? அதற்குக் காரணமென்னெனில் இப்பொழுது மிகவும் தன் கணவனில்லாத தனிமைபரக்கையினுலே பொலிவழிந்தழகினையுடையளாகிய இவள் வேனுதி செய்யுங் கொடுமையையுறும்படி எதிரேநோக்காதே விலங்குதலுண்டாக நோக்குகையினுலே நெஞ்சருகுங் கணவனைக் கெடுத்தாள் போலே தெருவிலே புறப்பட்டு வெயில் தன்மேலே உறும்படி தன் சிறிய அடியிற் சிலம்பு ஒலிப்ப எங்குந் திரிதரும் நிலைமையளாயினுள்; அதுவேயன்றி ஊண்சிறிதுமிலளாய் மேனி மெலிந்து உயிரினுஞ் சிறந்த நாணும் சிறிதுமிலளாய் நகுதலையுஞ் செய்யாநிற்கும்; அப்பொழுதே பெண்டன்மையுமிலளாய் அழுதலையுஞ் செய்யா நிற்கும்; இதனை நெஞ்சாலே ஓர்ந்துபார்; அங்ஙனம் ஓர்ந்து பார்த்து இவளுற்ற வருத்தத்தை யாம் இவ்விடத்தே சென்று கேளாமோ? கேட்போம் என்று கூறி மொய்த்துக் கடுகவந்து என்னைப் (க) பாராதே கொள்ளுங்கோள்; நுமக்கு முன்னே வந்து என்னைச் சூழ்ந்துநின்ற இவரைக் கண்டீரே; ஒஒ! இவரே சூழ்ந்துநிற்க அமையும்; நீர்தாம் இதற்கு முன்பு *மிகவும் யானுற்றதவறடையீரல்லீர்போலேயிருந்தது, நுமக்கும் ஒருகாலத்தே உண்டாம்; இனி யான் கூறுவதனைக் கேட்பீராக; தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமும் ஒருகாமம் என்று (உ) நூல்களிலே கூறவர்கள்; ஆதலால் அதனையுற்றுநின்ற என்னை இகழாதே கொள்ளுங்கோள்; ஈண்டு எழுற்றுரியார் யாரீதேமுற்றதென்று தாம் விரும்பப்பட்ட ஆடவர் தம்மதி மயங்கும்படி கைவிட்டவிடத்து அவர்பெற்ற நலங் கெடுகின்ற தன்மை (ங) பூ வண்டு நுகர்ந்து தன் புதிய நலம் சிறிது கெட்ட நிலைமைத்து; காணுங்கோளென்று கூறினுள். எ - று.

(ச) நறவு, தேறுற் †சமைத்தமைத்தது. ஆற்றுதல் - நடத்துதல்.

நோக்கி என்ற எச்சம், காரண காரியப்பொருட்டு. தோள் நலத்தைப் ‡புணர்ந்தவன், ஒருபெயர் மாத்திரையாய் நின்றது. இவரை என்னும் இரண்டாவது ‖ "ஒழியாது வருதலும்" (ஞ) என்பதனுன் ஒழிந்தும் நின்றது. ஒ, இரக்கக் குறிப்பு.

க. "புறப்பற்றுத், தள்ளுங்கோ ளூரவிற் ரூமோ தான்பள்ளி, கொள்ளுங்கோ ளூர்மருவுங் கோன்" நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி. ஞஅ.

உ. "தேறுத லொழிந்த காமத்து மிகுதிற, மிக்க காமத்து மிடலொடு தொகைஇச், செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே" தொல். அகத். சூ. ஙக.

ங. இந்நூற்பக்கம், உஙஅ: ச-ஆம் குறிப்பில் இவ்விடத்துக்குப் பொருந்துபவை ஒப்பு நோக்கற்பாலன.

ச. நறவென்பது கள்ளின் பொதுப் பெயராயும் வரும்.

ஞ. தொல். தொகைமரபு. சூ. கஞ.

(பிரதிபேதம்) *மிகவுமயரினுற்ற, †சமைத்தது, ‡தகர்ந்தவன்ஒரு, ‖ ஒழியாதென்பதனுல்.

௧௮ கலைஇய கண்புருவந் தோணுசுப் பேளர்
சிலமழைபோ றாழ்ந்திருண்ட கூந்த லவற்றை
விலைவள மாற வறியா தொருவன்
வலையகப் பட்ட தென் னெஞ்சு

௨௨ வாழிய கேளிர்

௨௩ பலவுஞ்சூ டேற்றித் தெளித்தவ னென்னை
முலையிடை வாங்கி முயங்கின னீத்த
(௧) கொலைவனைக் காணேன்கொல் யான்

௨௪ காணினு மென்னை யறிதிர் கதிர்பற்றி
யாங்கெதிர் நோக்குவன் (௨) ஞாயிறே யெங்கேள்வன்
யாங்குள னாயினுங் காட்டீமோ காட்டாயேல்
வானத் தெவன்செய்தி நீ

௩௦ ஆரிரு ணீக்கும் விசும்பின் மதிபோல
நீருள்ளுந் தோன்றுதி ஞாயிறே யவ்வழித்
தேரை தினப்பட லோம்பு

௩௩ நல்கா வொருவனை நாடியான் (௩) கொள்வனைப்
பல்கதிர் சாம்பிப் பகலொழியப் பட்டீமோ
செல்கதிர் ஞாயிறே நீ

எ-து: அங்ஙனங் கூறி, அவனோடே கலந்த கண் புருவம் தோள் நுசுப்புச் சிலமழைபோலே நீண்டிருண்ட கூந்தல் என்கின்றவற்றின் அழகைப்பெறும் விலையின் வளப்பத்தை அறிந்து கொடுத்தவனிடத்து உள்ளவற்றைக் கொள்ளுதல் அறியாதே ஒருவன் கூறிய (௪) பொய்யாகிய வலையிலே என் நெஞ்சு அகப்பட்டுவிட்டது ; என்றுகூறி, பின்னும் (௫) கேளீர்! வாழ்வீராக ; என

---

௧. "கொலைவன் சூடிய" (கலி. ௧௦௩: ௧௫.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௨. "அவனைத், திரைதரு முந்நீர் வளாஅக மெல்லா, நிரைகதிர் ஞாயிற்றை நாடென்றேன்" கலி. ௧௪௬ : ௨௭ - ௨௯.

௩. 'உரைப்பனை' என்பதற்கு, 'உரைக்கும் அளவும்' என்று பொருளும், 'உரைப்பனை, திசைச்சொல்' என்று விசேடக் குறிப்பும் எழுதியிருப்பதை நோக்குக; கலி. ௧௪௪: ௧௩.

௪. "பொய்வலைப் படூஉம் பெண்டு" ஐங்குறு. ௨௮௩.

௫. 'இர்' ஈறு ஈராய் விளியேற்கு மென்பது, தொல். விளி. சூ. ௧௨. நச். உரையால் அறியலாகும்.

அவர்க்கு முகமன்கூறி அவன் இயற்கைப் புணர்ச்சியிலும் பல சூளுறவாலும் என்மனத்தைத் தேற்றிப் * பின்னுந் தெளிவித்தவன் என்னை அணைத்து முலையிடத்தே முயங்கினான்; அங்ஙனம்(க)முயங்கிப் பின்னர்த் தெளிவு பொய்யாம்படி கைவிட்ட கொலைத்தொழிலை வல்லவனை யான் தேடிக் காணேனோ? அவன் என்னைக் கண்டானாயினும் அவனால் யான் பெறும் பொலிவை அறியமாட்டீர்; என அவரை நோக்கிக் கூறி, அவர் மறுமொழி கொடாமையின், ஞாயிற்றை நோக்கி, ஞாயிறே! போக்கற்கு அரிய இருளைப்போக்கும் விசும்பிடத்து † மதி தோன்றுமாறுபோல நீயும் நீருள்ளேயுந் தோன்றுவை; அங்ஙனந் தோன்றினவிடத்து ஆண்டு வாழுந் தேரை இரை என்று தின்னப்படுதலைப் பரிகரித்துக் கொள்; என அதற்கு முகமன்கூறி, ஞாயிற்றை வானிடத்தே இருந்து எவ்விடமுங் காண்கின்ற நீ எனக்கு என்ன காரியஞ் செய்வை? ஒன்றுஞ் செய்யாயாயினும் இப்பொழுது எங்கேள்வன் யாதோரிடத்தே இருந்தானாயினும் எனக்குக் ‡ கொண்டுவந்து காட்டுவாய்; நீ காட்டாயாயின், யான் நின் கதிர்களைப் பிடித்துக்கொண்டு அவ்விசும்பிலே ஏறி அவனைப் பார்ப்பேன்; அதற்கு நீ செய்யுங்காரியம் எனக்கு அருளாத ஒப்பிலாதானை நாடி யான் பிடித்துக் கொள்ளுமளவும் ஞாயிறே! நீ குவிந்துசெல்லும் பலகதிர் பகற்காலத்தோடே இவ்விடத்தே நிற்கச் சிலகதிரோடே படுவாயாக; என்றுகூறினாள். எ - று.

அறிதி ரென்றது, அறியமாட்டீர் என்ற இகழ்ச்சிக்குறிப்பு.

௩௬ அறாஅ லின் (உ) றரி (௩) முன்கைக் கொட்சும்
பறாஅப் பருந்தின்கட் பற்றிப் புணர்ந்தான்
கறாஅ வெருமைய காடிறந்தான் கொல்லோ
‖ வுறாஅத் தகைசெய்திவ் வூருள்னான் கொல்லோ
செறாஅ துளனாயிற் கொள்வே னவனைப்
பெறாஅதியா னோவே னவனையெற் காட்டிச்
சுறாஅக் + கொடியான் கொடுமையை நீயு
முறாஅ × வரைசநின் னோலைக்கட் கொண்டீ

க. (அ) "கொலையொக்குங் கொண்டுகண் மாறல்" நான்மணி. அ; (ஆ) "கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது" முதுமொழிக். ௩௭.

உ. 'அரிமுன்கை' என்பதற்கு இவ்வுரையாசிரியர் (அ) 'அழகினையுடைய முன்கை' என்றும் (ஆ) 'மெல்லிய முன்கை' என்றும் முன்பு (கலி. ௫௪: ௩, ௫௬: ௪.) பொருள் கூறியிருக்கிறார்; ஈண்டு அத்தொடரில் அரியென்பதைப் பண்பாகு பெயராகக் கொண்டு 'ஐதாகிய மயிர்' என்று பொருள் கூறுகிறார் போலும். (இ) "அரிமயிர் முன்கை" (பொருந. ௩௨.) (ஈ) "அரிமயிர்த் திரண் முன்கை" (புறம் ௧௧: ௧) என வருதல் இப்பொருளோடு ஒப்பு நோக்கற்பாலன.

௩. "வளைமுன்கை பற்றி நலிய" கலி. ௫௧: ௧௦.

(பிரதிபேதம்) * பின்னும் என்னைத் தெளிவித்தவன் என்னை, † திங்கணீருட்டோன்றுமாறு போல, ‡ கொடுவந்து, ‖ அறுத்தகை, + கொடியாய் கொடுமையை, × அரசாரின்.

மறாஅ * வரைசநின் மாலையும் வந்தன்
றறாஅ தணிகவிந் நோய்
௪௬ தன்னெஞ் சொருவற் கினைவித்தல் யாவர்க்கு
மன்னவோ காம நின் †னம்பு

எ - து: உலகத்தார் வேண்டிக்கொண்ட காரியங்களை மறாத ஞாயிறே! என் கையினின்று நீங்குதலின்றாய் ஐதாகிய மயிரினையுடைய என் முன் கையிலேகிடந்து சுழலும் வளையிடத்தைப் பிடித்துத் தெளிவித்துக் கூடினவன், பாற்பயன் கோடற்குச் சிலகாட்டிக் கறக்கப்படாத காட்டெருமைகளை யுடையவாகிய காட்டைக் கடந்துபோயினானோ? அன்றியே என்னோடு அன் புறாததோர் தகைமையை எனக்குச் செய்து இவ்வூரிடத்தே இருந்தானோ? இரண்டும் அறிகின்றிலேன்; ‡ அவனைக் கூடப்பெறாதே நோவா நின்றேன்; அதற்குமேலே நீ உண்டாக்கும் மாலைக்காலமும் வந்தது; இனி இந்நோய் என்னிடத்தினின்று நீங்காது; அவன் இவ்விடத்துளனாயின் அவனை எனக்குக் காட்டுவாய்; காட்டினால் அவனைக் கோபியாதே மனத்தாலே கைக்கொள் வேன் என்றாள்; அது காட்டாமற்படுதலின் அதனைக்கைவிட்டு (க) நடுவுநிலைமை செய்தலன்றி ஒருபாலுறாத கூற்றமே! சுறாக்கொடியையுடைய இக்காமன் செய்கின்ற கொடுமைகளை நீயும் நின் ஓலையிடத்தே || எழுதிவைத்துக்கொண்டு தண்டிப்பை; அவன் + எமக்கு(உ) வழிபடுதெய்வமாதலின் அவனைத் தண்டியாமற் றணிவாயாக என்று கூறினாள்; அங்ஙனங் கூறி, காமனை எதிர்பெய்து கொண்டு, காமா! நின்னுடைய அம்புகள் தனக்கு உரியதாகிய நெஞ்சினைத் தன்மேல் அன்பிலாதானொருவன் பொருட்டு வருத்துவித்தல் சிலர்க்கே யன்றி எல்லார்க்கு × மாந் தன்மையையுடையவோ அல்லவோ? என்றுங் கூறி னாள். எ - று.

க. இந்நூற் பக்கம் ௬௧௪: உ-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ) நாலாயிர. நாச்சியார் திருமொழி. க-ஆவது 'தையொரு திங்கள்' என்பதிலுள்ள ௧௦ பாசுரங்களும் (ஆ) "காமவேள் கோட்டந் தொழு தார் கணவரொடு, தாமின் புறுவர்" சிலப். ௬: ௬௦-௬௧; (இ) "தாமரைச் செங்கட் செவ்வாய்த் தமனியக் குழையினாயோர், காமமிங் குடையேன் காளை சீவக னகலஞ் சேர்த்தின், மாமணி மகர மம்பு வண் சிலைக் கரும்பு மான்றேர், பூமலி மார்ப வீவ லூரொடும் பொலிய வென் றாள்" சீவக. உ௦௫௭; (ஈ) "பதுமா பதியெனும் பைந்தொடிக் கோமகள், கன்னி யாயந் துன்னுபுசூழ, மதிற்புறங் கவைஇய புதுப்பூங் காவின், மகர வெல்கொடி மகிழ்கணைக் காமற்கு, நகரங் கொண்ட நாளணி விழவினு, ளெழுநா டோறுங் கழுமிய காதலொடு, வழிபா டாற்றிய போதரும்" பெருங். (௩) ௫: உ௭-௩௩ என்பவைகளும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * அரைசாநின், † மார்பு, ‡ யான் அவனைக், || எழுதிக்கொண்டு வைத்துத் தண்டிப்பை, + நமக்கு வழி, × அத்தன்மையை.

ஓகாரம், எதிர்மறை. பறாப்பருந்து, ஈண்டுக்(க)குருகென்பதனை உணர்த்தி நின்றது. மறாவரைசன், *வரோதயனென்னும் பொருட்டு. (?)

௪௮ கையாறு செய்தானைக் காணிற் †கலுழ்கண்ணாற்
(உ) பையென நோக்குவேன் றாழ்(ங)தானை பற்றுவே
னையங்கொண் டென்னை யறியான் ‡விடுவனே
(௪) லொய்யெனப் பூச லிடுவேன்மன் ||யானவனை
மெய்யாகக் கள்வனோ வென்று

எ - து: அங்ஙனங் கூறி, இனி வருகின்ற இராக்காலத்து நின் அம்புகள் இறந்துபடுவியாமல் யான் உயிர்கொண்டிருக்கும்படி அருளுமாயின், அவசத்தாற் சிறிது துயிலேற்றுக் கலங்கின கண்ணாலே எனக்குக் கையாற்றைச் செய்தவனைக் கனவிலே கண்டேனாயின், அக்கண்ணைக் கடுக விழித்துப் பாராதே மெத்தெனப் பார்ப்பேன்; +பார்த்தபின் தப்பிப்போகாதபடி தாழ்ந்து கிடந்த துகிலைப் பிடித்துக்கொள்வேன்; பிடித்துக்கொண்டு என் (ரு) மேனி வேறு பாட்டினைக் கண்டு இவள் நந்தலைவியோ × அல்லளோ வென்று ஐயத்தை நெஞ் சிடத்தே கொண்டு என்னை அறியாதே கைவிடுவனாயின் என் (௬) நாண் முதலிய குணங்களையும் மேனிநலத்தினையும் மெய்யாகக்கைக்கொண்டு ∴போன கள்வனென்று எல்லாருங் கேட்கும்படி § விரையக் கூப்பிடுவேன் என்று காமனை நோக்கிக் கூறினாள். எ - று.

ஓ, அசை.

க. குருகு - வளையல்.

உ. "பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய, கையுளே மாய்ந்தான் கரந்து" கலி. ௧௪உ: ௩௫-௩௬.

ங. "அரிவே யுண்க ணவன்பெண்டிர் காணத், தாருந் தானையும் பற்றி" அகம். உஎ௬: ௮-௯.

௪. ஒய்யென வென்பது விரைய வென்னும் பொருளில் வருவதோர் இடைச்சொல்; கலி. ௩எ: ௧௮, ௧உ௧: ௯; சீவக. ௮௦௦, ௮௬௬, ௯௫உ, ௧௮௩௩, ௧௮௩௮. இவற்றில், 'ஒய்யென' என்பதன் உரை நோக்குக.

௫. "நெஞ்சம்.....தொன்னல னிழந்தவென் பொன்னிற நோக்கி, யேதி லாட்டி யிவளெனப், போயின்று கொல்லோ" நற். ௫௬: ௫-௧௦.

௬. "உள்ளங் கொண்டா ரிவரென் றுணர்த்திடப், புள்ள வாங்கணை வேளிடைப் போதல்போ, லள்ளி லைச்செழுஞ் சோலையி லன்பரைக், கள்ளுண் கோதையர் கைப்பிடித் தேகினார்" நைடத. போதுகொய். உ.

(பிரதிபேதம்) * வரோதையன், † கலிழ்கண், ‡ விடுவானேல், || யான்றன்னை, + அப் பார்த்தவன் தப்பி. × அல்லவோ, ∴ போனவென கள்வன், § விரைவாய்க்.

௫௩ வினவன்மி *னூரவி ரென்னையெஞ் ஞான்று
மடாஅ (க) நறவுண்டார் போல மருள
விடாஅ துயிரொடு கூடிற்றென் னுண்கண்
படாஅமை செய்தான் றொடர்பு

எ - து: அங்ஙனங் கூறி, ஊரிலுள்ளீர்! எங்களைநோக்கிக் கூறுகின்ற நீர் ஞாயிற்றையுங் காமனையும் நோக்கிக் கூறியதற்கு அவை என்செய்யுமென்று என்னைக் கேளன்மின்; எந்நாளும் என்கண் துயிலாமையைச் செய்தவன் தந்த நட்பின் உண்டான நோய் மடாநறவை யுண்டாரைப்போல மயங்கும்படி விடாதே உயிரைப்பொருந்துந் தன்மையோடே கூடிவிட்டது; இனி இவ்வுயிரைக் † காக்கும்வழி உண்டாயிற் காப்பீராக என்றும் கூறினாள். எ - று.

௫௭ (உ) கனவினாற் காணிய ‡கண்படா வாயி
னனவினான் ஞாயிறே காட்டாய்நீ யாயிற்
(௩) பனையீன்ற மாவூர்ந் தவன்வரக் காமன்
க்ணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு

எ - து: அதற்கு அவர் மறுமொழி கொடாதுநிற்றலின், முற்கூறிய ஞாயிற்றையுங் காமனையுமே பின்னும் நினைந்து, வருகின்ற இராக்காலத்துக் கனவின்கண்ணே அவனைக் கண்டு ஆற்றுதற்குக் காமன்கணை செய்கின்ற கொடுமையாலே கண் துயிலாவாயின், || ஞாயிறே! (௪) எப்பொருளையுங் காட்டுகின்ற நீ நனவின்கண் வந்தாகிலும் அவனைக் காட்டாயாயில், இவ்வாறே வருத்தமுற்றுப் பனையீன்ற குதிரையையேறி (௫) அவன் என்பால் தானே வரும்படியாக அக்காமன்காலைக் கட்டிக்கொண்டு நின் அம்புகளை எனக்குத் தர + வேண்டுமென்று காமனை இன்னும் இரந்துகொள்வேன்; என்றும் × கூறினாள். எ - று.

க. "நறவுண்டார் மயக்கம் போல்" கலி. கசஎ: உ.

உ. (அ) "கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க், குயலுண்மை சாற்றுவேன் மன்" (ஆ) "நனவினா னல்கா தவரைக் கனவினாற், காண்டலி னுண்டென் னுயிர்" (இ) "நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற், காதலர் நீங்கலர் மன்" குறள். கஉகஉ, கஉகஙு, கஉகசு.

௩. "பனையீன்ற மாவும்" கலி. கஙஅ: கஉ.

௪. "கண்பயங் கெடப் பெயர" (கலி. கசஅ: ௩) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௫. "சொற், றோற்று வந்தென் சிலம்படி கைதொழ, நோற்பன்" சீவக. அகூகூ.

(பிரதிபேதம்) * ஊரீரென்னை, † காக்கலாம் வழி, ‡ கண்படாயாயின், || ஞாயிறே! நீ வந்தாலும் எப்பொருளையுங் காட்டுகின்ற நீ நனவின்கண் அவனைக், + வேண்டுமென்று, × கூறினாள் ஆங்கசை.

எனவாங்கு

எ - து: எனச்சொல்லி. எ - று.

ஆங்கு, அசை.

கூஉ கண்ணினீபு * கலுழ்பேங்கின
டோண்ணெகிழ்பு வளைநெகிழ்ந்தன
ளன்னையோ வெல்லீருங் காண்மின் மடவரன்
மென்னடைப் (க)பேடை †துணைதரத் தற்சேர்ந்த
வன்னவான் சேவற் புணர்ச்சிபோ லொண்ணுதல்
காதலன் மன்ற வவனீ வரக்கண்டாங்
காழ்துயர மெல்லா மறந்தனள் பேதை
நகையொழிந்து நாணுமெய் நிற்ப விறைஞ்சித்
தகையாகத் தையலாள் சேர்ந்தா ணகையாக
நல்லெழின் மார்ப னகத்து.

‡எ - து: இவ்வொண்ணுதல் (உ) அன்னையோ !! என்று இனைந்து கண் கலங்கி அழுதாள்; தோண்மெலிந்து வளைநெகிழ்ந்தாள்; இப்பேதை, மடப்பம் வருதலினையும் மெல்லிய நடையினையுமுடைய அன்னப்பெடை விரைந்து செல்ல, அதனைச்சேர்ந்த அன்னச்சேவலின் கூட்டம்போலே, பின் தன் காதலன்வர ||அங்கே அவனைக்கண்டதான் அழுந்தின் துயரமெல்லாம் அறுதியாக +மறந்தாள்;மறந்து,இத்தையலாள் பின்னர்ஊரிலுள்ளார் நகைத்தநகையையும்

க. (அ) "அன்னத் தன்ன மென்னடை யன்னத்துப், புணர்வி னன்ன தண்டாக் காதல்" பெருங். (ச) கக: அ0-அக. (ஆ) "ஆதரம் பெருகு கின்ற வன்பிலு லன்ன மொத்தும்" சீவக. கஅக. (இ) "தாவிவான் பெடைதுணை துறந்த கொல்லென, வாவிவா யிளவன மயங்கு மென்ப வே" சூளா. நகர. கக. (ஈ) "தானுயி ருறத்தனி தழுவும் பேடையை, யூனுயிர் பிரிந்தெனப் பிரிந்த வோதிமம்' கம்ப. பம்பை. கஞ. (உ) "அஞ்சியோடின ரன்னமுஞ் சேவலு மென்ன" பிரமோத்தா. உருத்திராக்க. சஉ.

உ. 'அன்னையோ' என்பது ஈண்டு வருத்தத்தைக் காட்டி வந்ததோர் இடைச் சொல்; (அ) "அம்மனை யோவென் றஞ்சிப், பனிக்குநண் ணுசுப்பிற் பாவை" (ஆ) "அம்மனை யோவெனைத், தண்ணெ னெஞ் சின னாய்" சீவக. எசடு, எசo. என்புழி, 'அம்மனையோ' என வருதலுங் காண்க; இஃது அச்சம் காட்டி வந்ததென்றலுமாம்.

(பிரதிபேதம்) * கலிழ்பு, † தணைதர, ‡ எ - து: எனச்சொல்லி இவ்வொண்ணுதல், || ஆங்கே. + முன்னர் மறந்தாள்.

போக்கி, போன (க) ரணமும் தன் மெய்யிடத்தே வந்து சிற்கையாலே தலையிறைஞ்சி, தன்மெய்யிடத்தே அழகுண்டாக மனத்திடத்தே ரகையுண்டாக அந்நல்லெழின் மார்பனிடத்தே சேர்ந்தாள்; இம்மகிழ்ச்சியையும் எல்லிருங் காண்பீராகவெனக் கண்டார்வியந்ததம்மிற்கொண்டு கூறிற்றாக உரைக்க.எ-று.

இது, கண்டார்க்கு * அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'கொலைவனைக் காணேன்கொல் யான்' என்னுந்துணையும் கூறத் தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'செறுஅ துளனுயிற் கொள்வேன்' என்றதனால், தன் வருத்தந் தோன்றுமற் கூறலின் வருத்தமிறந்தவாறும் 'காமன்கணை யிரப்பேன்' †என்றதனால் அவனை வருத்துவேன் என்று‡அவனெவியவாமையின் மருட்கையிறந்தவாறும் 'கலைஇய.....புருவம்' || என்று உறுப்பான் வனப்பு மிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடி வந்த தரவும் நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரான் வந்த ஓரடியானென்றும் நெடுவெண்பாட்டும் இருசீரானென்றும் குறுவெண்பாட்டும் × நெடுவெண்பாட்டும் இரண்டு குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் மூன்று நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் வஞ்சியடியிரண்டுமுன்னர்விரவி யாப்பின் வேறுபட்ட கொச்சகவெண்பாவும் பெற்ற கொச்சகக்கலி. (கூ0)

(கசஅ.) தொல்லியன் ஞாலத்துத் தொழிலாற்றி ஞாயிறு
வல்லவன் கூறிய விணைதலை வைத்தான்போற்
கல்லடைபு கதிரூன்றிக் கண்பயங் கெடப்பெயர
வல்லது கெடுப்பவ னருள்கொண்ட முகம்போல
மல்லனீர்த் திரையூர்பு மாலிருண் மதிசேப்ப
வில்லவ ரொழுக்கம்போ லிருங்கழி மலர்கூம்பச்
செல்லுமென் னுயிர்ப்புறத் திறுத்தந்த மருண்மாலை;
அ மாலை நீ;
இன்புற்றூர்க் கிறைச்சியா யியைவதே செய்தாய்ம
னன்புற்று ரழநீத்த வல்லலுட் கலங்கிய
துன்புற்றூர்த் துயர்செய்த றக்கதோ வினக்கு;

க. (அ) "வதுவை யயர்தல் வேண்டுவல்.....இவள், வதுவைநா ணெடுக் கமுங் காண்குவல் யானே" (கலி. நுஉ: உந-உடு) என்பதும் (ஆ) அதன் குறிப்பும் (இ) "வதுவைநாட் கலிங்கத்து ளொடுங்கிய..... மடந்தை" (கலி. சுசு: நட-ச) என்பதும் (ஈ) அதன் குறிப்பும் (உ) இந் நூற்பக்கம் அகவ: நட-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * அவர்களாக்கம். † என்றதனை. என்றுணவினை. ‡ அதனெவிய. || என்று முறுப்பாக. × நெடுவெண்பாட்டுமிரண்டும் இரண்டுகுறு.

௧௨ மாலை நீ;

கலந்தவர் காமத்தைக் கனற்றலோ செய்தாய்ம
னலங்கொண்டு நல்காதார் நனிநீத்த புலம்பின்க
ணலந்தவர்க் கணங்காத றக்கதோ நினக்கு ;

௧௬ மாலை நீ;

எங்கேள்வற் றருதலுந் தருகல்லாய் துணையல்லை
பிரிந்தவர்க்கு நோயாகிப் புணர்ந்தவர்க்குப் புணையாகித்
திருந்தாத செயினல்லா லில்லையோ நினக்கு ;

எனவாங்கு;

௨௧ ஆயிழை மடவர லவல மகலப்
பாயிருட் பரப்பினைப் பகல்களைந் ததுபோலப்
போயவர் மண்வெளவி வந்தனர்
சேயுறை காதலர் செய்வினை முடித்தே.

இது "வெளிப்படை தானே கற்பினொ டொப்பினு, ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக, வரையாது பிரிதல் * கிழவோற் கில்லை" (க) என்பதனான் அரசன் மண்கோடற்கு ஏவுதலின் வாளாணைதிரும் பிரிவின் கண், தலைவன் வரைவிடைவைத்து வேந்தற்குற்றுழிப் பிரிந்துழி அவள் வருத்தமிகுதி கண்டார் கூறியது.

இதன்பொருள்.

தொல்லியன் ஞாலத்துத் தொழிலாற்றி ஞாயிறு
வல்லவன் கூறிய வினைதலை வைத்தான்போற்
கல்லடைபு கதிரூன்றிக் (உ) கண்பயங் கெடப்பெயர
(௩) வல்லது கெடுப்பவ னருள்கொண்ட முகம்போல
மல்லனீர்த் திரையூர்பு மாலிருண் மதிசீப்ப

---

௧. தொல். கள. சூ. ௫௦.

௨. (அ) "மலர்தலை யுலகத் திருளெறி விளக்கு, மன்னுயிர் விழிக்கக் கண்ணிய கண்ணும்.....பரிதிவா னவனே" கல். ௩௩:௨௩-௩௧; (ஆ) "இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தா லன்றிக், கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரிதாம்" திருக்குற்றாலப். நூற்பயன். ௧.

